
அன்பில்
விளைந்த
ராகமே!
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அன்பில் விளைந்த ராகமே! |
| ஆசிரியர் | : அமுதவல்லி கல்யாணசுந்தரம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : செப்டம்பர், 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 268 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# அன்பில் விளைந்த ராகமே!

# அன்பில் விளைந்த ராகமே!

## 1

'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை, இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை, நந்தி மகன் தனை ஞான கொழுந்தனை, புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே!' என்று முணுமுணுத்த சரண்யா தன் முன் நெற்றி யில் இரண்டு கரங்களாலும் மென்மையாகக் குட்டி, சந்தனக் காப்பு அலங்காரத்தில் ஜொலித்த அந்த சாலை யோர விநாயகருக்குக் காட்டப்பட்ட ஆரத்தியினைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

தூணிலும் துரும்பிலும் இறைவன் இருப்பார் என்று சொல்வதை, ஆற்றங்கரை ஓரத்திலும், அரசமர அடி யிலும், சாலை முனையிலும் வசித்து நிரூபிக்கிறார் என்று புன்னகையுடன் எண்ணியவள் சில்லரையை அர்ச்சகரின்

தட்டில் போட்ட வினாடியில் அவளின் மொபைல் போன் அழைத்தது.

''ஹாய்ம்மா, பொண்ணை அதுக்குள்ளே தேடிடுச்சா? பத்திரமா இருக்கேன். ரூமுக்கு வந்துட்டே இருக்கேன்'' என்று சொல்ல எதிர்முனையில் சிரித்தார் இந்திராணி.

''அது பல் முளைக்காத பாப்பா இல்லை. காணாமல் போக வாய்ப்பு இல்லை. மணியாச்சு. மாப்பிள்ளை அழைப் புக்குப் போகலை என்றால் அக்கா, மாமா கோபிச்சுக்க மாட்டாங்களா?''

''உங்களுக்கும் உங்க அக்காக்கும் வேறே வேலை இல்லை. நான் மதுரை மல்லிகை உருண்டையா கட்டின சரம் வாங்கிட்டு தான் வருவேன் என்று சொன்னேனே? பக்கத்துல ஒரு பிள்ளையார் கோவில் இருக்கு என்று சொன்னாங்க. அங்கே நான் நினைச்ச மாதிரி பூ கிடைக் கலை. அதுக்காக விடுறதாவும் இல்லை...''

''கல்யாண வீட்டுல கிடைக்காத பூவா? அங்கே உதிரி பூ இருக்கும். நானே உனக்கு நெருக்கமா கட்டி தரேன். இதுக்காக நீ ரோடு ரோடா அலைய வேண்டாம். நீ பூ வாங்க போய் இருக்கிறாய் என்று உங்க அப்பாவிடம் சொன்னால் நான் அவ்வளவு தான். உங்க அப்பா குளிச் சுட்டார். சீக்கிரம் ரூமுக்கு வந்து சேர்...''

''ஏன்மா அப்பாவுக்கு இந்த பயம் பயப்படுறீங்க? அவர் என்ன சிங்கமா புலியா? அவரை சரிக்கட்ட அவ ரோட செல்லப் பிள்ளை விக்ரம் இருக்கான் இல்ல. அவன் பார்த்துப்பான். அவன் என்ன சொன்னாலும் மறு வார்த்தை சொல்ல மாட்டாங்க அப்பா. நீங்க கவலைப்படாமல் அந்த போனை அப்படியே பிடிச்சு, நூறுல இருந்து



ரிவர்ஸ்ல எண்ணுங்க. நீங்க ஒன்று சொல்லும்போது நான் வாசலில் இருப்பேன்.''

''அண்ணனை அவன் இவன் என்று சொல்லாதே என்று எத்தனை முறை சொல்வது? அதுவும் நாளைக்குக் கல்யாண மாப்பிள்ளை வேறே.''

''அவன் அண்ணனா? ரெண்டு வருஷம் முன்னாடி உங்க அக்காவுக்குப் பிறந்ததனால் அவன் அண்ணன் அவ்வளவுதான்...''

''அடிப் பாவி, ரெண்டு வருஷமா? முழுசா ஆறு வருஷம்...''

''பதிலுக்கு பதில் மடக்கி கணக்கு டீச்சர் பொண் டாட்டி என்று நிரூபிக்கணுமாக்கும்?''

''சென்னை பல்கலைக்கழகத்தில் கணிதத் துறை தலைவரா இருக்கவரை பார்த்து கணக்கு டீச்சரா?''

''கணக்கு சொல்லிக் கொடுப்பவங்க கணக்கு டீச்சர். நம்ம இங்க்லீஷ் டீச்சர் அப்படிதான் சொல்லிக் கொடுத் தாங்க. சரண்யா கவுண்டிங் ஸ்டார்ட். நூறு... தொண் ணூற்றி ஒன்பது...''

''சரண்யா கவுண்டிங்கா? பெரிய ரஜினிகாந்த் என்று நினைப்பு...''

''பெரிய ரஜினி இல்லைம்மா. சின்ன ரஜினி என்று சொல்லணும். என்ன இருந்தாலும் அவர் சீனியர் இல்லையா?''

''உன்னிடம் பேசி நான் ஜெயிக்கவா? சும்மா பேசுவது போதாது என்று ஜர்னலிசம் வேற படிக்கிற. கேட்கவா வேண்டும்? அது சரி பூ வாங்கிட்டாயா இல்லையா?''

''வாங்கிட்டேன். ஆனால் கட்டுன பூ இல்லை. உதிரி மல்லிகை. காரில் போகும்போது நெருக்கமா கட்டித் தாங்க. அப்பத்தான் நீங்க மதுரைக்கார பொண்ணு என்று நான் ஒத்துக் கொள்வேன்...''

''நீ ஒத்துக் கொண்டாலும், ஒத்துக் கொள்ளாவிட்டாலும் இனிமேல் எனக்கு ஒண்ணும் ஆகப் போற தில்லை...''

''லிஃப்ட் வந்தாச்சு... எண்பது... எழுபத்தி ஒன்பது...''

''கணக்கு டீச்சர் பொண்ணு ஒழுங்கா கணக்குப் போடுவியா?''

''கணக்குக்கும் நமக்கும் கொஞ்ச தூரம். அதனால தானே ஜர்னலிசம் பக்கம் போனது. ஒழுங்கா கணக்குப் போட முயற்சி பண்றேன். நீங்களும் எண்ணுங்க...'' என்று அம்மாவிடம் போனில் கொஞ்சியபடி மூன்றாம் தளத்திற்கான பொத்தானை அழுத்தினாள்.

''அல்ஜீப்ரா தெரியலை என்றால் பரவாயில்லை. ரூம் நம்பர் பார்த்து வாசிக்கத் தெரியுமா? இல்லை கீழே வரட்டுமா?''

''பதிலுக்கு நக்கல் அடிக்க ஆசைதான். ஆனால் அது நம் திறமையைக் குறைச்சலா காட்டுமே! கதவைத் திறந்து வைத்து ரெடியா இருங்க. நான் லிஃப்ட்ல வந்துட்டே இருக்கேன். முப்பது.. இருபத்தி ஒன்பது...'' என்ற சரண்யா லிஃப்ட் கதவு திறந்ததும் வெளியே வந்தாள்.

* * *

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பங்களையும், அதைக் கண்டு ரசிக்கும் வெளிநாட்டுப் பயணிகளின் பேட்டிகளையும் பதிவு செய்து கொண்டு இருந்த



தீபக்கிற்கு, மதியம் மூன்று மணி அளவில் சென்னை தலைமை அலுவலகத்தில் இருந்து வந்த போன் எரிச்சலை அளித்தது. ஈரோட்டில் இருந்து வந்த போன் அந்த எரிச்சலை அடக்கி குளிர வைத்தது.

''ஹாய் அண்ணா! ஊர் ஊரா சுத்திச் சுத்தி வருகிறாய் போல? இன்னிக்கு எந்த ஊருல இருக்க?'' என்று மதுமதியின் குரல் கேட்டதுமே சில நிமிடங்கள் முன்பு தோன்றிய எரிச்சல் அப்படியே அடங்கியது.

''மது, இப்பதான் உன்னை நினைச்சேன். திங்க் ஆப் டெவில்...'' என்று சிரித்தான் தீபக்.

''அட பாவி! நான் டெவிலா? சரி போ. அண்ணனாச்சே என்று சும்மா விடுறேன். இப்ப எங்கே இருக்கிறாய்? எப்போ வீட்டுப் பக்கம் வருவாய்?'' என்று கேள்விகளை அடுக்கினாள் மதுமதி.

''ஆலய தரிசனம் என்ற ஆன்மீக மலருக்காக கோவில் களைப் போட்டோ எடுத்துக் கட்டுரை எழுதிக் கொண்டு இருக்கிறேன். இன்னும் மூன்று நாட்கள் வேலை இருக்கும். இந்த வார இறுதிக்கு ஈரோடு வர முயற்சி செய்கிறேன். அம்மா அப்பா எப்படி இருக்காங்க?''

''நீ இல்லாமல் ரொம்ப நிம்மதியா இருக்காங்க. உனக்கு என்ன வயசாகுது? இந்த வயசுல கோவில் கோவிலா போய், அழகான பொண்ணுங்களை சைட் அடிக்கலாம். ஆன்மீகக் கட்டுரை எழுதலாமா?''

''ஆன்மீகக் கட்டுரை எழுதுவது நான் இல்லை. அதுக்கு வேறே ஆள் இருக்காங்க. நான் போட்டோ மட்டும் தான் எடுக்கிறேன்...''

''ஓஹோ! அப்ப பொண்ணுங்களை சைட் அடிக்கிற?''

''ம...து! நான் உங்க அண்ணன்...''

''ஹும்! அதை வெளியே சொல்லவே வெட்கமா இருக்கு...''

''அப்பா இல்லையா? இப்படி வாயடிக்கிற?''

''டேய் அண்ணா, சொல்ல மறந்துட்டேனே! அப்பாக்கு சீக்கிரமே ப்ரமோஷன் வரும். அடுத்த வாரம் சென்னை வருவாங்க. நீ சென்னைக்கு அதற்குள் போய் விடுவாயா?''

''ம்ம், போய்டுவேன். அப்பாவோடு நீயும் அம்மாவும் சேர்ந்து வர வேண்டியதுதானே? ஒரு வாரம் அங்கே இருந்துட்டு வரலாமே?''

''ப்ரமோஷன் வந்தால் சென்னையில் தான் போஸ்டிங் இருக்கும் என்று சொன்னாங்க. ஏப்ரலில் எக்ஸாம் முடிந்த பிறகு அங்கேயே நிரந்தரமா வந்து விடுவோம். அது வரைக்கும் அப்பாவும் பிள்ளையும் ஹோட்டலில் சாப்பிடுங்க. நானும் அம்மாவும் இங்கே ஜாலியா இருப்போம்...''

''நீங்க இல்லை என்றால் எங்களுக்கு வீட்டுச் சாப்பாடு கிடைக்காதா? நான் ஒரு சூப்பர் பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிறேன். அப்புறம் நாங்களும் வீட்டுச் சாப்பாடு சாப்பிடுவோமில்ல...''

''ஏற்கனவே பொண்ணு பார்த்துட்டியா? இவ்வளவு நம்பிக்கையா சொல்ற?''

''எத்தனை நாளைக்கு நல்லவங்க மாதிரியே நடிப்பது? நாங்களும் சைட் அடிப்போமில்ல...'' என்று தீபக் சிரித்தான்.



''இப்பதான் என்னைப் பார்த்துக் கொஞ்சம் கொஞ்சமா பேசக் கற்றுக் கொள்கிறாய். மதுரை பாஷை வேறு எட்டிப் பார்க்குது. அது சரி, போன் பண்ணிய உடனே எதுக்கு என்னை நினைத்தேன் என்று சொன்னாய்?''

''தேங்க்ஸ் மது. உன்னிடம் பேசினால் ஜாலியா இருக்குது. எந்தக் கஷ்டமும் தெரியல...''

''என்னண்ணா! ஆபீசில் யாராவது கடிச்சாங்களா?''

''இல்லைடா. நமக்கும் அரசியலுக்கும் ரொம்ப தூரம் ஒரு பெரிய அரசியல் கட்சி தலைவர் இங்கே ஒரு கல்யாணத்துக்கு வராராம். அதை படம் பிடித்து அனுப்ப சொல்லி உத்தரவு. ப்ச்! எனக்குப் பிடிக்கலை...''

''வேலைக்குப் போறதுக்கு முன்னாடியே ஏன் சலிச்சுக்கிற? அங்கே உனக்குப் பிடிச்ச மாதிரி ஏதாவது ரெண்டு விஷயம் கண்ணுல படாமலா போய்டும்? நிச்சயமா இன்று இரவே போன் பண்ணி மது, இங்கே இந்த விஷயம் எனக்கு ரொம்பப் பிடிச்சது என்று சொல்வாய். நான் ப்ளஸ் பண்றேன்...''

''சரிங்க பாட்டி, உங்க ஆசீர்வாதம் அப்படியே பலிக்கட்டும். மணியாச்சு மது. நைட் பேசறேன் பை...'' என்று போனை வைத்தவன் உற்சாகமான மனநிலையுடன் 'அஞ்சு நிமிஷம் கழித்து காபி கொண்டு வரச் சொல்லி விட்டு, குளிக்கப் போனான்.

* * *

''மூன்றாம் தளத்தில் இறங்கி, அம்மாவுடன் போனில் பேசியவாறே, முன்னூற்றி ஒன்பதாம் எண் அறைக்கு வந்தவள் கதவு சாத்தி இருக்கக் கண்டு இடுப்பில் கை வைத்து முறைத்தாள்.

''அ..ம்..மா..! நான் என்ன சொன்னேன்? ரிவர்ஸ்ல நூறு எண்ணினால் ஒன்று சொல்லும்போது ரூம் வாசலில் இருப்பேன் என்று சொன்னேனா இல்லையா?''

''ஆமா! அதுக்கென்ன? நான் இன்னும் ஒன்று சொல்லவே இல்லையே?''

''உங்களுக்கு ஒண்ணு ரெண்டு சொல்லத் தெரியவில்லை. நான் ரூம் வாசலுக்கு வந்து விட்டேன்'' என்று கேலியாகச் சொன்னவள் அழைப்பு மணியை அடித்தாள்.

''ஆமா எனக்குத் தெரியலை நீ வந்து சொல்லிக் கொடு...''

''எதுக்கு கதவைப் பூட்டி வச்சு இருக்கீங்க? ரூம்ல ரெண்டு பேர் இருக்கும்போது சும்மா சாத்தி வச்சால் போதாதா? காபியோ ஜூஸோ கொண்டு வரும் ஹோட்டல் பணியாளருக்கு எழுந்து வந்து கதவைத் திறப்பாங்க போல? அதையும் இவ்வளவு வேகமாகச் செய்றாங்க'' என்று பல்லைக் கடித்தவள் விரல்கள் இன்னும் கூடுதல் நேரம் அழைப்பு மணியை அழுத்தியது.

''கமிங்... கமிங்... ப்ளீஸ் வெயிட்...'' என்ற ஒலித்த குரல் அவள் காதுகளில் விழவே இல்லை.

''நீ கன்னா பின்னாவென்று நகையைக்கூட ஒழுங்கா எடுத்து வைக்காமல் அப்படி அப்படியே போட்டுட்டு அப்பாவிடம் என்னைத் திட்டு வாங்க வை...'' என்று இந்திராணி போனில் முணுமுணுக்க அவள் எரிச்சலோடு, ''கதவை முதலில் திறந்தால் நேரில் திட்டலாம் இல்லையா?'' என்று எரிச்சலோடு சொன்னவள் விரல்கள் அழைப்பு மணியை விடாமல் அழுத்த, கதவு அவசரமாகத் திறந்தது.



''இந்தாங்க மல்லிகை பூ. நல்லா நெருக்கமா கட்டி...'' என்று கவரை கதவைத் திறந்த கைகளில் திணித்தவள் திகைத்தாள்.

தலையில் ஷாம்பூ இன்னும் முழுமையாக கழுவப் படாமல், தண்ணீர் சொட்டச் சொட்ட, இடுப்பில் வெறும் டவலுடன் பாதிக் குளியலில், அரை குறை ஆடையில் ஓடி வந்து கதவை திறந்த 'அவன் யார்? இவன் எங்கே இங்கே வந்தான்? ஹய்யோ! அறை மாறி விட்டதா என்ற குழப்பத்தோடு அவள் நிற்க, அவளின் முகம் காட்டிய ஆயிரம் பாவனைகளை வேடிக்கை பார்த்தவனும் திகைத்துப் போய் பேச்சிழந்து தான் நின்றான்.



## 2

தங்கையுடன் நேரம் போனது தெரியாமல் கதை அளந்து விட்டு, மணியானதை உணர்ந்து, தீபக் குளிக்கப் போன சில நிமிடங்களிலேயே அழைப்பு மணி அடிக்க அவன் வியப்படைந்தான். மூன்றாம் மாடிக்கு லிஃப்டில் வரவே ரெண்டு நிமிஷம் ஆகுமே! சொல்லி ரெண்டே நிமிஷத்துல காபி எடுத்துட்டு வந்துட்டானே? ஹோட்டல் சர்வீஸ் என்ன ஸ்பீடு என்று மனதிற்குள் வியந்தான். மணியை அடித்துவிட்டுக் காத்திருப்பான் என்று அவன் எதிர்பார்த்ததற்கு நேரெதிராக, மணி விடாமல் அழுத்தப்பட, இது ரூம் சர்வீசாக இருக்க வாய்ப்பு இல்லை என்பது புரிந்தது.

''கமிங்...'' என்று சொன்னவன் அவசரமாக முகத்தைக் கழுவினான். ஆனால் வினாடிக்கு வினாடி, அழைப்பு

மணியில் வைத்து அழுத்திய விரலின் அழுத்தமும், மணிச் சத்தமும் கூடிக் கொண்டே போக, 'பக்கத்து அறையில் இருப்பவர்களுக்கு ஏதேனும் எமர்ஜென்சியாக இருக்கலாம்' என்ற எண்ணம் தோன்றி அவசரமாகக் குளியலை முடிக்காமலே டவலுடன் வந்து வேகமாகக் கதவைத் திறந்த தீபக் எதிரே நின்ற அந்த அழகு தேவதையைப் பார்த்துத் திகைத்தான்.

வெள்ளி ஜரிகைகள் கோலமிட்ட ஆகாய நீல வண்ண டிசைனர் பட்டுப் புடவையில், உச்சியில் ஒரு சின்னக் கொண்டையும், அதன் கீழே இடையைத் தாண்டி தொங்கிய நீண்ட பின்னலும், புடவைக்குப் பொருத்தமான, உயர் ஜாதி வைரங்களால் ஆன, கழுத்தை ஒட்டிய கல் நெக்லசும், நெக்லசுக்குப் பொருத்தமாக வைரதோட்டுடன் ஒட்டி உறவாடி, காதோரத்தில் ரகசியம் பேசிய ஜிமிக்கியும், கற்கள் பதித்த வளையல்களும், விழாவிற்குத் தயாராக இருக்கிறாள் என்பதை மட்டுமின்றி, அவளின் செல்வச் செழிமையையும் பறை சாற்றியது.

கவரைத் தன் கையில் திணித்தபடி ஏதோ சொல்ல முயன்ற அவள் கண்ணிலோ முகத்திலோ எந்தப் பதட்டமும் இல்லை. யாருக்கும் எந்த உடனடி ஆபத்து இல்லை. பின்னே இவ்வளவு அவசரமாகக் கதவைத் தட்ட வேண்டிய அவசியம் என்ன?

''இது முன்னூற்றி ஒன்பது இல்லையா? நீங்க... இங்கே...'' என்று அந்த அழகு சிலை வாய் திறந்து பேச ஆரம்பித்த வினாடியில், தீபக்கின் தியானம் கலைந்தது.

''நீங்க கண்ணாடி போடும் பழக்கம் உடையவரா மேடம்.''

''இல்லை ஏன் அப்படிக் கேட்கறீங்க?''



''இது முன்னூற்றி ஆறு. முன்னூற்றி ஒன்பது இல்லை'' என்று கதவைப் பார்த்த தீபக்கின் விழிகள் குழம்பியது. அவனின் பார்வையைத் தொடர்ந்து பாதி திறந்து இருந்த கதவை சரண்யாவின் விழிகளும் ஆராய அடுத்த வினாடி, ஆறாம் எண் முழுமையாகக் கதவில் ஒட்டாமல் தலைகீழாகத் தொங்கி ஒன்பது என்ற தோற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

''ஐம் ஆம் சாரி மிஸ், இது என்னுடைய தவறில்லை...''

''ஐ ஆம் சாரி சார், இது என்னுடைய தவறும் இல்லை...'' என்று சரண்யா அவனை மாதிரியே திருப்பிச் சொன்ன வினாடியில் இருவருக்குமே அந்த பாவனையில் சிரிப்பு வர, பக்கென்று சிரித்தனர்.

''சரண்யா, அங்கே ஏன் நிற்கிறாய்?'' என்று இரண்டு அறைகள் தள்ளி நின்ற இந்திராணியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சரண்யா.

''சாரி சார், நீங்க உங்க வேலையைத் தொடருங்க'' என்று சொல்லி அவன் கையில் இருந்த கவரைப் பிடுங்கிக் கொண்டு திரும்பி நடந்தாள் சரண்யா. யார் இவன்? பெயர் கூடக் கேட்கவில்லை. அவசரமாகக் கிளம்பிக் கொண்டு இருந்தானோ? எவ்வளவு பொறுமையாக பதில் சொன்னான்? அதே இடத்தில் அப்பா இருந்திருக்க வேண்டும். உனக்குக் கண் இல்லையா? அறிவு இல்லையா? விசாரித்து வர மாட்டாயா? என்று வானத்திற்கும் பூமிக்கும் துள்ளிக் குதித்து இருப்பார்.

இவன் பாதிக் குளியலில் சம்பந்தம் இல்லாதவர் தொந்தரவு செய்தபோது கூடச் சிரிப்பு மாறாமல் பதில்

சொன்னானே? அவனை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற உணர்வினைக் கட்டுப்படுத்தி அறைக்குச் செல்ல சிரமப்பட்டாள் சரண்யா.

''இவ்வளவு நேரம் எங்கே போனாய்?'' என்று அதட்டலான அப்பாவின் குரலில் கனவில் இருந்து மீண்டாள் சரண்யா.

''பூ வாங்கப் போனேன்பா! நான் என்ன சின்னக் குழந்தையா கூட்டத்தில் தொலைந்து போவேனா? இல்லை வழி தவறி விடுவேனா? இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க? இப்ப என்ன ஆச்சு?'' என்ற சரண்யாவின் அலட்சியமான தோள் குலுக்கலைப் பார்த்து முறைத்தார் ராமலிங்கம்.

''சின்னக் குழந்தையை மட்டுமில்லை. வயசு பெண்ணையும் புது இடத்தில் வெளியே அனுப்ப யோசிக்கணும். உங்க அம்மாவுக்குத் தெரியாவிட்டால், உனக்கு எங்கே போச்சு புத்தி?''

''அப்பா, அவங்களை இழுக்காதீங்க. அம்மா வேண்டாம் என்று தான் சொன்னாங்க. நான் தான் பக்கத்துல போனேன்...''

''நல்லா பதிலுக்கு பதில் வாய் பேச கற்று வைத்து இருக்கிறாய். ஒரே பெண் என்று உனக்கு செல்லம் கொடுத்தது ரொம்பத் தப்பாப் போச்சு. அம்மாவும் பொண்ணும் சேர்ந்து லேட் ஆக்குங்க. ஆனால் அங்கே உங்க பாட்டி பெரியம்மா எல்லோரும் ஏதோ நான் தான் உங்களைக் கல்யாண வீட்டுக்குச் சீக்கிரம் போகக்கூடாது என்று தடுத்து நிறுத்தி வைத்து விட்டதாகவும் அவங்களை மதிக்கலை என்றும் குறை பேசுவாங்க. எனக்குத் தேவையா?'' என்று எரிச்சலாக முணுமுணுத்தார்.



''அவங்களோடு நீங்க சுமுகமா பேசி, சந்தோஷமா இருந்தால் எதுக்குப் பேசறாங்க? அவங்க என்னவோ தீண்டத் தகாதவங்க மாதிரியும், நீங்க என்னவோ வானத்துல இருந்து வந்த தேவதூதன் மாதிரியும் பேசினால்... அப்புறம் அவங்களுக்கு எரிச்சல் வராதா?'' என்று மடக்கிய மகளை இந்திராணி தோளில் அழுத்தித் தடுத்தார்.

''அம்மா தாயே! அவரை நானே சிரமப்பட்டுக் கல்யாண வீட்டுக்கு இழுத்துட்டு வந்து இருக்கேன். நீ எதையாவது சொல்லி அவருக்கு மூட் அவுட் ஆக்கி விடாதே'' என்று முணுமுணுத்தார்.

''நீங்க வேறேம்மா, விக்ரம் கல்யாணத்திற்கு வராமல் அப்பா இருந்துடுவாங்களா? அவன் விட்டு விடுவானாக்கும். சும்மா உங்களைச் சீண்ட அப்படி வர மாட்டேன் என்று சொல்றார். அது புரியாமல் நீங்க டென்ஷன் ஆகிட்டு இருக்கீங்க...'' என்று சர்வ அலட்சியமாகச் சொன்ன மகளை முறைத்தார்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? உங்களுக்கும் உங்க மாமனாருக்கும் ஏதாவது பிரச்னை என்றால் அதுக்கு அம்மாவை எதுக்கு நடுவில் படுத்துறீங்க? பெரியம்மா நமக்கு முடிஞ்ச வரைக்கும் நல்லது தான் செஞ்சு இருக்காங்க. ஒவ்வொருத்தர் கையிலும் கழுத்திலும் கிலோ கணக்கில் நகை போட்டுட்டு வராங்க. நீங்க கல்யாணத்துக்கு வரும்போது கூட ஒரு செயின் போட்டுக்க மாட்டேங்கறீங்க? அம்மா எத்தனை தடவை சொல்றாங்க? ஒரு தடவையாவது கேட்கறீங்களா?''

''ஷ்! சரண்யா சும்மா இருக்க மாட்டியா நீ?'' என்று இந்திராணி அதட்ட, ராமலிங்கம் திரும்பி முறைத்தார்.

''அதெல்லாம் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, நடந்த கதை. அதில் இருக்கும் நியாயம் அநியாயம் உனக்குச் சொன்னால் புரியாது...''

''கணக்கு வாத்தியாரா இருக்கீங்க. புரியாது என்று சொன்னால் எப்படி? பெற்ற பொண்ணுக்குப் புரியற மாதிரிச் சொல்லணும் இல்லையா?'' என்று சொல்ல வேறு புறம் திரும்பிப் புன்னகை செய்த இந்திராணியைப் பார்த்ததும் கோபம் கூடியது.

''விட்டால் உன் பொண்ணு பேசுவதை விடிய விடிய கேட்டு ரசித்துக் கொண்டே இருப்பாய். கிளம்பலாமா? விலை உயர்ந்த சாமான்களைத் தனியா எடுத்துப் பூட்டி விட்டால் சாவி எடுத்துக்கொள். கார் வந்து இருக்கும்'' என்று கிளம்பிய ராமலிங்கத்தை சரண்யாவும் இந்திராணியும், பின் தொடர்ந்தனர்.

* * *

''சரண்யா...'' என்று அந்த அம்மா அழைத்த பெயரை மீண்டும் ஒரு முறை மென்மையாக உச்சரித்துப் பார்த்தான் தீபக். நாவில் மட்டுமில்லாமல் நெஞ்சிலும் இனித்தது. துறுதுறுவென்று உருண்ட கண்கள் இன்னும் அவள் தன் முன்னால் நிற்பதைப் போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தியது.

''சார், பாத்ருமில் தண்ணீர் வரலையா சார்?'' என்ற பேரரின் குரல் அவனை கனவுலகத்தில் இருந்து மீட்டு வந்தது.

''யாரோ பெல் அடித்த மாதிரி இருந்தது. காபி வச்சுடுங்க. நான் எடுத்துக்கறேன். தேங்க்ஸ்...'' என்று விலகி அவருக்கு வழி விட்டவன் புன்னகை மேலும் விரிந்தது.



அவள் போன பின்பும் அப்படியே கதவைச் சாத்தாமல் நின்று இருந்த தன் நிலையை நினைத்து அவனுக்கே சிரிப்பு பொங்கியது. அவனுக்கு என்ன ஆச்சு?

பேரர் அறையில் இருந்து வெளியேறிய பின்பு கதவைச் சாத்திவிட்டு, திரும்பியவன் கண்களில் கீழே சிந்தி இருந்த மல்லிகைப் பூக்கள் கண்ணில் பட்டது. அவள் தன் கையில் இருந்து பிடுங்கிய கவரில் இருந்து கீழே விழுந்து இருக்க வேண்டும். எடுத்து முகர்ந்து பார்த்தான். மதுரை மல்லிகைக்கே வாசனை அதிகம். இந்த பூக்களுக்கு அவள் கை பட்டதால் இன்னும் கூடுதலாக வாசனை வந்ததோ என்று எண்ணம் தோன்ற தீபக்கிற்கு சிரிப்பு வந்தது.

'வேலைக்குப் போகும் முன்பே சலித்துக் கொள்ளாதே தீபக். எனக்கு போன் பண்ணி, ஹேய் மது, இந்த விஷயம் எனக்கு ரொம்பப் பிடித்தது என்று சொல்வாய் பாரேன்...' என்ற தங்கையின் குரல் மீண்டும் ஒலித்தது.

அந்த விஷயத்தில் இது சேருமா? இந்த வேலை வந்து இருக்கா விட்டால், அவன் மாலைப் பொழுதில் ஹோட்டல் அறைக்கு வந்து இருக்க வாய்ப்பே இல்லை. அதனால் இது சேரும் என்று மனம் குரல் கொடுக்க அவன் தலையை உலுக்கிக் கொண்டான். 'சலனங்களை ஒதுக்கி வை' என்று தனக்குள் அறிவுறுத்திக் கிளம்பினான்.

அவன் கிளம்ப நினைத்ததை விடத் தாமதம் ஆகி விட்டது. இரண்டு இரண்டு படிகளாகத் தாவி இறங்கி, வரவேற்பறையில் சாவியைக் கொடுத்தவன் கண்களில் போர்டிகோவில் அவள் அம்மா அப்பாவோடு நிற்பது பட்டது. தோளில் தொங்கிய காமராவுடன், அங்கே

இருந்த பத்திரிகைகளை பார்வையிட்டபடி, ஓரக்கண்ணால் அவளை ஆராய்ந்த தீபக்கின் மனம் உற்சாகத்தில் மிதந்தது.

சரண்யா என்பதை தவிர வேறு ஒன்றுமே தெரியாமல், அவளை ரசிக்கும் மனதை என்ன செய்வது? ''தீபக்! மனதை அடக்கு. சலனங்களுக்கு இடமில்லை'' என்று அறிவுறுத்திக் கொண்டவன் கால் டாக்சி பிடித்து குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தான்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்த பின்பு, வழக்கம் போல தாமதமாக வந்த அரசியல் கட்சி பிரமுகருக்காக மீண்டும் மேடையில் மணமக்களை வைத்து போட்டோவிற்கு போஸ் கொடுத்ததைத் தன் காமராவில் பல்வேறு கோணங்களில் படம் பிடித்தான் தீபக். நல்ல கோணங்களில் இருக்கும் சிறந்த படங்களை, தேர்ந்தெடுத்து இரவு பத்து மணிக்குள் அனுப்பினால்தான் காலை பேப்பரில் வரும். அவசரமாகத் தான் படம் பிடித்தவற்றை காமராவில் மீண்டும் ஓட விட்டுச் சரி பார்த்தான்.

இந்தப் புடவை முந்தானை 'அந்த சரண்யா', கட்டி இருந்தது அல்லவா? இவளும் இங்கே இந்தத் திருமண விழாவிற்கு தான் வந்து இருக்கிறாளா? பெண்ணுக்கு அருகில் இருந்த பிரமுகரிடத்தில் கூடுதல் கவனம் செலுத்தி படம் பிடித்ததில், மாப்பிள்ளையின் மறுபுறம் நின்று இருந்த அவளை இவ்வளவு நேரம் கவனிக்கவில்லையே? மணவறைக்குத் திரும்பிய பார்வை அங்கே நிலைத்து நின்றது.

மணவறையில் மாப்பிள்ளையின் அருகே நின்று அவருக்குக் குடிக்க ஏதோ கொடுத்துக் கொண்டு இருந்த



சரண்யாவை பார்த்த வினாடியில் தீபக்கின் உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

இவளைப் பற்றி இனி நினைக்கக் கூடாது என்று இரண்டு மணி நேரம் முன்பு ஹோட்டல் ரிசப்ஷனில் முடிவெடுத்தது என்ன? இப்போது இவளை இங்கே கண்ட வினாடியில் பரவசம் பெருகுவதென்ன? தன் மனமே தான் சொல்லும் பேச்சைக் கேட்காது போல இருக்கிறதே என்று தலையைப் பெருமூச்சோடு உலுக்கி விட்டுக் கொண்டான் தீபக்.

இந்தக் கல்யாண மண்டபத்தையும், அதில் இருக்கும் விருந்தினர்கள் கூட்டம். அவர்களின் ஆடை ஆபரணங்களைப் பார்த்தாலே, தனக்கும் அவர்கள் செல்வ நிலைக்கும் இருக்கும் தூரம் மிக எளிதாகப் புரிந்தது.

'அவளைத் தானாகப் போய் பார்ப்பதோ, பேசுவதோ கூடாது. வந்த வேலை முடிந்து விட்டது. உடனே இந்த இடத்தை விட்டுக் கிளம்பு' என்று மூளை ஆணையிட்டதை மனம் கேட்பதாக இல்லை. அவளைப் பார்ப்பதற்காக நான் இங்கே இல்லை. அமைச்சர் வெளியேறியதும் நானும் கிளம்பி விடுவேன் என்று ஆயிரம் சமாதானங்கள் சொல்லியபடி கால்கள் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தது.

நான் அவளைப் பார்க்கவில்லை என்று மனதிற்குள் சொல்லியபடி காமராவில் எடுத்த முப்பதுக்கும் மேற்பட்ட புகைப்படங்களில் தொண்ணூறு சதவிகிதம் அவள் இருந்தாள்.

அமைச்சரையும் மணமக்களையும், சேர்த்து நல்ல கோணத்தில் எடுக்கப்பட்ட ஷார்ப்பான புகைப்படங்கள் என்று தேர்ந்தெடுத்து அவன் மெயிலில் பத்திரிகை

அலுவலகத்திற்கு அனுப்பிய ஐந்து புகைப்படங்களில், நான்கில் அவளும் இருந்தாள்.

மறுநாள் பத்திரிகையில் வெளிவந்த அமைச்சர் கலந்து கொண்ட திருமண விழா புகைப்படத்தில் இருந்த சரண்யாவைப் பார்த்ததும், உச்சி முதல் உள்ளங்கால் வரை இருந்த செல் ஒவ்வொன்றிலும், ஒரே வினாடியில் ஓராயிரம் பூக்கள் பூத்தது.



# 3

தன் சகோதரி மகனின் திருமணத்திற்கு சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்ற அவசரத்திலும், அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வரும்போதே, இந்திராணி தன் மகளிடம், 'சில நிமிடங்கள் முன்பு அவள் இரண்டு அறைகள் தாண்டி நின்று இருந்தது ஏன்?' என்பதை மெல்லிய குரலில், ராமலிங்கம் அறியாமலே **விசாரித்தார்.**

''இந்தக் கேள்வி என்னைக் கேட்காதீங்க. சரியான டுபாக்கூர் ஹோட்டல் பார்த்து புக் பண்ணின உங்க அக்காவைக் கேட்கணும்...''

''ஒரு நம்பரை ஒழுங்கா பார்த்து வாசிக்க உனக்குத் தெரியவில்லை என்றால் எதற்கு எங்க அக்காவை டுபாக்கூர் என்கிறாய்?''

''உங்க அக்காவை நான் டுபாக்கூர் என்று சொல்லவில்லை. ஹோட்டலைச் சொன்னேன். உங்களுக்குக் காது கேட்காதா? கண் ஒழுங்காத் தெரியுதா என்று பார்ப்போமா?'' என்று கண் சிமிட்டியவள் தீபக்கின் அறை முன்பு நின்று கதவை கண்ணால் சுட்டிக் காட்டினாள்.



''ஹய்யோ! இதென்ன இங்கே ஒரு முன்னூற்றி ஒன்பது இருக்கு?'' என்ற இந்திராணியின் குரல் சற்றே உயர அவள் புன்னகை விரிந்தது.

''அது முன்னூற்றி ஆறு. அந்த ரூமில் இருப்பவர் தவம் செய்யச் சொல்லி விட்டதால், அந்த நம்பர் அப்படி தலை கீழா நின்று கொண்டு இருக்கிறது. வரம் தான் என்னவோ தெரியலை...'' என்று சிரித்தபடி சொன்னவளின் கண்கள் அந்த அறையில் இருந்தவனைத் தேடியது.

ராமலிங்கம் வரச் சொல்லி இருந்த காரின் டிரைவர் அப்போதுதான் டீ சாப்பிட வெளியே போய் இருக்க. அவனை மொபைலில் அழைத்துத் தாங்கள் கீழே போர்ட்டிகோவில் ஏற்கனவே வந்து காத்து இருப்பதைச் சொல்லி அவனை வரவழைப்பதில். மேலும் பத்து நிமிடங்கள் கரைந்தது.

''சாரி சார். ரெண்டே நிமிஷத்துல வந்து விடுகிறேன்'' என்று சொல்லி விட்டு ஓட்டமாக ஓடி உள்ளே போன டிரைவர் பார்க்கிங் ஏரியாவில் இருந்து காரை வெளியே கொண்டு வந்து போர்ட்டிகோவில் நிறுத்த மேலும் ஐந்து நிமிடங்கள் ஆகி இருந்தது.

அந்த இருபது நிமிடங்களும் அப்பாவின் முகத்தில் ஏற்பட்டுக் கொண்டு இருந்த கோப மாறுதல்கள் குறித்து அம்மாவிடம் மென்குரலில் சின்னச் சின்ன கமெண்டுகள் சொல்லி ரசித்துச் சிரித்துக் கொண்டு இருந்தவளின் பேச்சு, மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டு இருந்த

'அவனை'க் கண்டதும் ஒரு வினாடி நின்று பின் இயல் பாகத் தொடர முயன்றது.

மூன்றாவது மாடியில் இருந்து இறங்கி வருகின்றானா? லிஃப்ட் பயன்படுத்தவில்லையா? ம்ம்ம். நான் கூட இறங்குவேன். ஏறுவாரா என்று கேட்டால் தானே தெரியும்? யார் கண்டா? ஏறுவேன் என்றும் சொல்லலாம். தோளில் காமரா. போட்டோக்ராபரா? பேர் என்னவாக இருக்கும் என்று அவனை ஓரக் கண்ணால் பார்த்தவாறே மனசுக்குள் பட்டி மன்றம் நடத்திக் கொண்டு இருந்த சரண்யா, அம்மா பேசியதை கவனிக்கவில்லை.

''எப்பப் பார்த்தாலும், அப்படி என்னதான் அம்மாவும் பொண்ணும் ரகசியம் பேசுவீங்களோ? காரில் ஏறுங்க'' என்ற ராமலிங்கத்தின் அதட்டலைத் தொடர்ந்து காரில் ஏறினாள்.

இவ்வளவு நேரம் அவனை எதற்கு ஓரக்கண்ணால் ஆராய்ச்சி செய்தாள்? நிமிர்ந்த பார்வை நேர் கொண்ட நடை என்று தானே இதுவரை இருந்து அவளுக்குப் பழக்கம்? இதுவரை அப்படி யாரையும் பார்த்ததே இல்லையே என்ற குழப்பம் திருமண மண்டபத்தை அடையும் வரை மட்டுமே இருந்தது. அங்கே இருந்த கலகலப்பான சூழலில் குழப்பம் மறைந்து குதூகலம் மீண்டு விட்டது.

''விக்ரம். நான்தான் நாளைக்கு உன் கல்யாணத்துல பொண்ணு மாப்பிள்ளைக்குப் பிறகு இருக்கும் முக்கியமான ஆள். நான் விளக்குப் பிடித்து நாத்தனார் முடிச்சுப் போடாவிட்டால் கல்யாணமே முடிந்த மாதிரி அர்த்தம் கிடையாது தெரியுமா? அதுக்கு சன்மானமா என்ன தரப் போகிறாய்?'' என்று அண்ணனை வம்பிழுப்பதிலும்,



''எப்படி அண்ணி இவ்வளவு பொறுமையா மெஹந்தி போட்டீங்க? அண்ணனுக்கும் பொறுமைக்கும் ரொம்ப தூரம் தெரியுமா? உங்க இரண்டு பேருக்கும் ரொம்பப் பொருத்தம் தான் போங்க...'' என்று வரப்போகும் அண்ணியை கேலி செய்வதிலும்,

''என்ன பெரியப்பா, ரிட்டையர்மெண்டுக்குப் பிறகு அரசியலில் நுழையத் திட்டமா? அமைச்சரைக் கல்யாணத்திற்குக் கூப்பிட்டுக் கலக்குறீங்க...''

''பாட்டி, நைட் டின்னர் உங்க மெனுதானே? எனக்குப் பிடிச்ச பாசந்தி இருக்கும் போதே நீங்க தான் இதைச் சொல்லி இருக்கணும் என்று நினைத்தேன்...'' என்று பாட்டியைக் கொஞ்சுவதிலும் நேரம் பறந்தது.

அமைச்சர் வரும்வரை மணவறையிலே சுற்றிக் கொண்டு. அங்கே இருந்த ஒவ்வொருவரையும் தன் கேலிப் பேச்சினால் சிரிக்க வைத்துக் கொண்டு இருந்த சரண்யா. ஒரு அரசியல்வாதியின் கூடவே பின் தொடர்ந்த கூட்டத்தைக் கண்டதும் மணவறையில் இருந்து இறங்கி விட்டாள்.

''இவங்களைக் கொஞ்சம் சாப்பாட்டுப் பந்தியில் இடம் பார்த்து உட்கார வைத்து விடு. சரண்யா'' என்ற பெரியம்மாவின் வேண்டுகோளுக்கு செவிமடுத்தது.

''வேர்க்குது. கொஞ்சம் டிஷ்யூ எடுத்துட்டு வரீங்களா?'' என்று கேட்ட வரப்போகும் அண்ணி தர்ஷினிக்கு மேக்கப் கலையாமல் ஒற்றி எடுத்து உதவியது.

''சரண் கொஞ்சம் ஜில்லுன்னு ஏதாவது ஜூஸ் எடுத்துட்டு வா. என் சிறுகுடல் பெருங்குடலைச் சாப்பிடுது...'' என்று கேட்ட விக்ரமிடம், ''நியாயமாப்

பார்த்தால் பெருங்குடல் தானே சிறுகுடலைச் சாப்பிடணும்'' என்று வம்பிழுத்தது. என்று அவ்வப்பொழுது மணவறைக்கு வந்து போய்க் கொண்டு இருந்தாள் சரண்யா.

இரவு உணவு முடிந்து படுக்கப் போக வெகு நேரம் ஆனதாலும், மறுநாள் திருமணம் ஒன்பது - பத்தரை என்பதாலும், ''ஏழு மணிக்கு முன்னாடி என்னை எழுப்பக் கூடாது. பதினைந்தே நிமிடத்தில் நான் கிளம்பி விடுவேன். நீங்க ரெண்டு பேரும் குளிச்சு முடிச்சுட்டு என்னை எழுப்பினால் போதும்'' என்று அம்மாவுக்கு ஆர்டர் போட்டு விட்டுப் படுக்கப் போனாள் சரண்யா.

அதற்கு நேர் மாறாக, காலை ஐந்து மணிக்கு எழுந்து வாக்கிங் போய் விட்டு, ஆறு மணிக்கு நியூஸ் பேப்பர் வாங்கி வந்த ராமலிங்கம் அறைக்குள் நுழையும் போதே மகளை எழுப்பினார்.

''நைட் தூங்க ஒரு மணியாச்சே? ஏன் அவசரமா எழுப்புறீங்க? அவள் மெல்ல எழுந்துக்கலாமே?'' என்று சொல்லிப் பார்த்த இந்திராணியும் அவர் காண்பித்த செய்தித் தாளைப் பார்த்ததும் விழி விரித்தார்.

''சரண்யா, இந்த பேப்பரைப் பாரேன்! ஒரே ராத்திரியில நீ பாப்புலராகி விட்டாய்'' என்று கணவருடன் சேர்ந்து எழுப்பினார் இந்திராணி.

''ப்ச்! என்னம்மா தூக்கத்துல டிஸ்டர்ப் பண்ணாதீங்க. முதலில் அந்த ஸ்க்ரீனை இழுத்து விடுங்க. கண்ணு கூசுது'' என்று சொல்லியவாறே மறுபுறம் திரும்பி படுத்தாள்.

''சரண்யா, ஹிண்டுல இரண்டாம் பக்கத்துல உன் போட்டோ வந்து இருக்கு... எழுந்து பாரேன்...'' என்ற



அப்பாவின் குரல் அவள் தூக்கத்தைக் கலைக்க கண் விழித்தாள்.

''விளையாடாதீங்கப்பா. எழுப்பணும் என்பதற்காக இல்லாதது பொல்லாததை சொல்லக் கூடாதுப்பா...'' என்று செல்லமாக மிரட்டியபடி கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

''அதெல்லாம் உங்க அம்மா வேலை. நிஜமா தான் சொல்றேன். நீயே பாரு...'' என்று அவளிடம் போட்டோ இருந்த பக்கத்தைப் பிரித்து நீட்டினார் ராமலிங்கம்.

முதல் பார்வையில் நடுநாயகமாக நின்று இருந்த விக்ரம் - தர்ஷினி ஜோடி கண்ணில் பட. ''வாவ்! விக்ரம் அண்ணா பெரிய அரசியல்வாதி மாதிரி அமைச்சரோடு போஸ் கொடுக்கிறான் பா. சூப்பரா இருக்கு'' என்று சிலாகித்தாள்.

''அவன் அமைச்சரோடு நிற்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை சரண்யா. அதே போட்டோல நீயும் நிற்கிறாய். அதைப் பார்க்கலையா?'' என்ற இந்திராணியின் குரல் கேட்ட பின்பே விக்ரமைத் தாண்டி இடது புறம் பார்வையை ஒட்டியவளின் விழிகள் விரிந்தது.

''நானா? என் போட்டோ எப்படிப்பா வந்தது? ஆச்சரியமா இருக்கே?'' என்று நம்ப முடியாமல் கண்களை அகல விரித்துப் பார்த்தாள் சரண்யா.

''நீயும் இருக்கிறாய் என்று சொல்லித் தானே கொடுத்தேன். என்னை நம்பலையா நீ?'' என்று ராமலிங்கம் திருப்பி கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''இல்லைப்பா. நீங்க ஜோக் அடிக்கிறீங்க என்று நினைத்தேன்...'' என்று வாய் அனிச்சையாக அப்பாவின்

வருத்தம் உணர்ந்து மன்னிப்பு கேட்டாலும், அவளின் சிந்தனை அங்கே இல்லை.

இந்த போட்டோ எடுத்த மாதிரி நினைவு அவளுக்கு இல்லை. இதை யார் எப்போ எங்கே எடுத்தார்கள்? அல்லது இரண்டு போட்டோக்களை சேர்த்து இணைத்து இருக்க வேண்டும். அப்படி என்றால் அதைச் செய்தது யார்? முன் தினம் முன்னூற்றி ஆறாம் எண் அறையில் பார்த்த 'அவன்' முகம் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அவன் காமரா வைத்து இருந்தானே! அது எப்படி இந்த பேப்பரில் வந்தது? அவன் ஹிந்து ரிப்போர்ட்டரா? நேற்று திருமணத்திற்கு வந்தானா? எப்போது இந்தப் படம் எடுத்தான்?

அமைச்சர் இன்று ஏதோ கும்பாபிஷேக விழாவிற்குப் போவதனால்தான் நேற்றே வந்தார் என்று சொன்னாங்க. இன்று அவர் வரவில்லை என்றால் அவனும் வர மாட்டானோ? முதலில் இந்தப் போட்டோவை எடுத்தது அவன் தானா என்று எப்படிக் கண்டு பிடிப்பது? அவனை எங்கே பார்ப்பது? கேள்விகளின் பட்டியல் நீண்டது.

நியூஸ் பேப்பரைப் பார்த்துவிட்டு உற்சாகத்தில் துள்ளிக் குதிப்பாள் என்று எதிர்பார்த்த ராமலிங்கமும், இந்திராணியும், அவளின் யோசனையைப் பார்த்து வியப்படைந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''சரண்யா, என்ன இன்னும் தூக்கம் கலையலையா? இதுவும் கனவோ என்று இருக்கியா?'' என்று கேலியாக விசாரித்த இந்திராணியின் குரல் கேட்டதும் நிமிர்ந்தாள்.

''அப்படி எல்லாம் இல்லை. இதுல நான் சாதிச்சேன் என்று சொல்ல ஒன்றும் இல்லையே? காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதை. அமைச்சர் வந்ததால் விக்ரம்



கல்யாண போட்டோ பேப்பரில் வந்தது. பக்கத்தில் நானும் நிற்கிறேன். அப்படி இல்லாமல் நானே சாதித்தது ஏதாவது போட்டோ பேப்பரில் வந்தால் சந்தோஷப் பட வேண்டியதுதான்'' என்று சாதாரணமாகச் சொல்லி விட்டு எழுந்தாள்.

''ஒரு நல்ல ஜர்னலிஸ்ட்டா வருவதற்கு இது முக்கிய மான தகுதி. இப்படித்தான் இருக்கணும். ஆனால் உன் போட்டோ பேப்பரில் வருவதற்கும் சந்தர்ப்பம் இருக்கு சரண்யா. உன்னிடம் இருக்கும் திறமைகளை முதலில் வெளிக்கொண்டு வர வேண்டும். உன் ஓவியங்களை எல்லாம் வைத்து ஒரு கண்காட்சி நடத்த ஏற்பாடு பண்ண னும்'' என்று ராமலிங்கம் உற்சாகமாகப் பாராட்டுத் தெரிவிக்க, 'இவளுக்கு என்ன ஆச்சு? இவள் இந்த மாதிரி தத்துவம் பேசும் ஆள் இல்லையே?'' என்று யோசனை யுடன் ஆராய்ந்தார் இந்திராணி.

அம்மா அப்பாவுடன் கல்யாணத்திற்குக் கிளம்பும் வழியில், முன்னூற்றி ஆறாம் எண் அறையைக் கடக்கும் வேளையில் அனிச்சையாய் கண் அந்தப் பக்கம் பாய்ந்தது. கதவு திறந்து இருந்தது. முக்கியமாக ஆறு என்ற எண் சரியாகப் பொருத்தப்பட்டு இருந்தது. கீழே போர்ட்டிகோவை சென்ற பிறகு நினைவு வந்தவளாக, ''அம்மா ரூம் சாவி கொடுங்க. என் போன் எடுக்க மறந்து விட்டேன்...'' என்று கை நீட்ட அம்மா அப்பா இருவருமே முறைத்தனர்.

''என்னப்பா நீங்க! தேவைப்பட்ட நேரத்துல எனக்கு கரெக்டா ஞாபகம் வந்துச்சா இல்லையா? ரெண்டே நிமிஷத்துல வந்து விடுவேன். இது ஒரு வழிப் பாதை தானே? நீங்க சிக்னலில் போய் திரும்பி வருவதற்குள்

நான் எதிர் சாரியில் நின்று இருப்பேன். நீங்க கிளம்புங்க'' என்று அப்பாவிடம் சொல்லி விட்டு அம்மாவிடம் இருந்து சாவியைப் பிடுங்கி விட்டு லிஃப்டை நோக்கி ஓடினாள் சரண்யா. தன் அறைக்குச் சென்று மொபைல் போனை எடுத்துக் கொண்டு கிளம்பியவள், ஒரு வினாடி தயங்கி, இண்டர்காம் அருகே நின்றாள்.

போகும்போதும் வரும் போதும் அலசிய பார்வையில் அவன் அங்கே இல்லை என்பது தெரிந்தாலும். அவன் யார் என்பதற்கான க்ளூ கிடைக்கிறதா என்று பார்க்க, ''முன்னூற்றி ஆறாம் எண் அறைக்கு கனெக்ஷன் கொடுக்க முடியுமா?'' என்று விசாரித்தாள் சரண்யா.

''இப்ப தான் பத்து நிமிஷம் முன்னாடி அறையைக் காலி செய்துவிட்டுக் கிளம்பிட்டாங்க'' என்று வந்த பதிலில் லேசாக மனம் வாடியது ஒரு கணம் மட்டுமே. ''இது என்ன பெரிய சமாச்சாரமா? விக்ரமிடம் சொன்னால் ஹிந்து ரிப்போர்ட்டர் யார் என்று விசாரித்துச் சொல்லி விடப் போகிறான். அவனைப் பார்க்கணும் என்று விதி இருந்தால் தானா நடக்கும். நேற்று மாதிரி...'' என்று அடுத்த வினாடியே, அலட்சியமாகத் தோளைக் குலுக்கி விட்டுப் படிகளில் குதித்து இறங்கியவளின் உதடுகள் சூப்பர் ஸ்டார் வசனத்தை முணுமுணுத்தது.

'கிடைக்கறது கிடைக்காமல் இருக்காது. கிடைக்காதது தலைகீழா நின்றாலும் கிடைக்காது' என்று அவரை மாதிரியே ஸ்டைலாகச் சொல்லி அலட்சியமாகத் தோளைக் குலுக்கியவளின் கன்னங்கள் 'முன் தினம் மாலை கண்ட காட்சியின் நினைவில்' சிவந்ததை அவளே அப்போது அறியவில்லை.





# 4

சரண்யாவை மீண்டும் பார்க்கக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவிர்ப்பதற்காக. மதுரையில் இருந்த அந்த நட்சத்திர ஹோட்டலில் இருந்து அறையைக் காலி செய்து, திருப்பரங்குன்றம் வந்து அங்கே ஒரு சிறிய லாட்ஜ் ரூம் போட்டுத் தங்கி விட்டான் தீபக்.

அன்று முழுவதும், திருப்பரங்குன்றம் கோவில், மலை சுற்றி வரும் பாதை. முருகன் அவதாரம் எடுத்ததாகச் சொல்லப்படும் 'சரவணப் பொய்கை' என்ற குளம் எல்லாவற்றையும் படம் பிடித்து அங்கே வந்தவர்களிடமும் பல தகவல்களை விசாரித்துத் தெரிந்து கொண்டு, பிற்பகல் அறையில் ஒரு தூக்கம் போட்டான்.

மாலை நான்கு மணி அளவில் பால்கனி கைப்பிடிச் சுவற்றில் காமராவை வைத்துவிட்டு, சூடான டீயை அருந்தியபடி, கோவிலுக்குப் போவோர் வருவோரின் முக பாவனைகளை, டாலர், கயிறு, சுவாமி படம் உள்ளிட்டப் பொருட்களை, சுற்றுலாப் பயணிகளிடம் தள்ளி விட முற்றுகையிட்ட வியாபாரிகளை, பூஜைப் பொருட்களை விற்கப் போட்டி போட்டவர்களை, வேடிக்கைப் பார்த்தபடி நின்று இருந்தான் தீபக்.

டீ கப்பை எடுக்க வந்த ஹோட்டல் பணியாளர் குரல் கொடுக்க, அறைக்குள் சென்றான். ''சார் நீங்க ப்ரஸ் ரிப்போர்ட்டர். கோவில் பற்றி எழுதப் போறீங்க என்று இப்பதான் தெரியும். ஒரு தகவல் சொல்லட்டுமா?'' என்று கேட்க அவன் புன்னகை செய்தான்.

''சொல்லுங்க. ஆனால் இது முதல் படை வீடு. இங்கே முருகன் பிறந்தார். இங்கே கல்யாணம் நடந்தது, போன்ற எல்லோருக்கும் தெரிஞ்ச தகவல் வேண்டாம். அதிகம் பேருக்குத் தெரியாத, சிறப்பான தகவல் இருந்தால் சொல்லுங்க.''

''இங்கே எல்லோரும் முருகனைப் பற்றி தான் சொல் வாங்க. ஆனால் நான் 'ஜுரதேவர்', பற்றிச் சொல்லட்டுமா?'' என்று கேட்க ஆர்வமாகத் தலை அசைத்தான் தீபக்.

''இங்கே முருகன் கோவிலில் சனீஸ்வரனுக்குத் தனி சந்நிதி இருக்கு. அங்கே நிறைய பேர் விளக்குப் போடு வாங்க. அது சாதாரணம். ஆனால் அதற்குப் பக்கத்தி லேயே ஜுரதேவர் சந்நிதி இருக்கு. வயதானவர்கள், ரொம்ப நாட்களாகப் படுக்கையில் இருந்து, கடுமையான நோயினால் அவதிப் படுபவர்கள் ஆத்மா நிம்மதியாக இந்த உலகை விட்டுப் பிரிய, இந்த சந்நிதியில் விளக்குப் போட்டால், நல்லது நடக்கும் என்று சொல்வார்கள். இது நிறையப் பேருக்குத் தெரியாத தகவல். மரணத்தைப் பற்றிய தகவல் என்பதனால் சொல்லப் பலர் யோசிக்க லாம். எனக்குச் சொல்லணும் என்று தோணுச்சு. சொல் லிட்டேன்...''

''ஜனனமும் மரணமும் வாழ்க்கையின் இரு பக்கங்கள் தானே? இரண்டுமே இந்த உலகத்தில் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கும். நாங்க தகவலும் போட் டோவும் கொடுத்தாலும் எடிட்டர் தான் இறுதி முடிவு எடுப்பாங்க. வித்தியாசமான தகவல் சொல்லி இருக் கீங்க. நன்றி'' என்று கை குலுக்கி விடை பெற்றான்.



ஆறு மணிக்கு திருச்செந்தூர் போக இருந்தான். அதற்குள் இவர் சொன்ன ஜுரதேவரைப் பார்த்து விட்டு வரலாம் என்று காமராவை எடுத்தபோது அது வீடியோ மோடில் காட்சிகள் பதிவு பண்ணுவதைக் கவனித்தான். தவறாக கை பட்டு இருக்குமோ, என்று அதை மாற்ற கையைக் கொண்டு போனவன், இவ்வளவு நேரமாக என்ன படம் பிடித்து இருக்கிறது என்ற குறுகுறுப்புடன் பார்க்கும் போதே, அவன் கண்கள் விரிந்தது.

கோவில் வாசலில் கூட்டமாக இருந்ததால், நூறு மீட்டர் தள்ளியே நின்று விட்ட அந்த டூரிஸ்ட் வாகனம் 'அந்த சரண்யாவின்' பயண வாகனம். கோல்டன் கலர் டாடா இண்டிகா நேற்றே அவனுக்கு ஆச்சரியம் தான்: டூரிஸ்ட் வாகனங்கள் பொதுவாக வெள்ளையில் தானே இருக்கும் என்று நேற்றே நினைத்தான். அது இங்கே எப்படி?

மதுரைக்கு வருபவர்கள் அங்கிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் இந்தக் கோவிலுக்கு வர மாட்டார்களா? அவளைத் தவிர்த்து நினைத்துக் கிளம்பி வந்தாலும், அவள் தேடி வந்து காட்சி தருவதை நினைத் தால் என்ன சொல்வது என்று புரியவில்லை.

மணமானவளா? ச்சே ச்சே! பார்த்தால் அப்படித் தெரிய வில்லை. அவளுக்குத் திருமணம் ஆகி இருந்தால் என்ன செய்யப் போகிறாய்?

கடவுளே! இரண்டு தடவை, சில நிமிடங்கள் மட்டும் பார்த்த ஒரு பெண்ணை, அவள் யார் என்று தெரியாம லேயே, அவளை எப்போது திருமணம் செய்வது, அதில் உள்ள சாதக பாதகங்கள் பற்றி ஆலோசித்துக் கொண்டு இருக்கிறான். அவனுக்குப் பைத்தியம் தான் பிடிக்கப்

போகிறது, என்று தலையை உலுக்கி விட்டுக் கொண்டான்.

''நான் அவளைப் பார்க்கப் போவதில்லை. கோவிலுக்கு, அதுவும் அந்த ஜுரதேவரின் சந்நிதிக்கு மட்டும் தான் போகப் போகிறேன்'' என்று தனக்குத் தானே பல தடவை அறிவுறுத்திக் கொண்ட தீபக் முகம் கழுவி உடை மாற்றிக் கிளம்ப எடுத்துக் கொண்ட நேரம் முப்பது நிமிடங்கள். அவன் சாதாரணமாகக் குளித்துக் கிளம்ப எடுத்துக் கொள்ளும் நேரத்தை விடவும் இரண்டு மடங்கு நேரம்.

* * *

சுவாமி தரிசனம் முடித்த பின்பு கோவிலில் உட்காரும் சம்பிரதாயத்திற்காக ராமலிங்கம், இந்திராணி, சரண்யா மூவரும் அமர்ந்தனர்.

''அப்பா, அந்த ப்ரசாத கடையில் இருக்கும் அதிரசம் அம்மாவுக்கு வேண்டுமாம். அவ்வளவு தூரம் போவதனால் எனக்கும் ஒரு லட்டு, வாங்கிட்டு வரீங்களா?'' என்று அப்பாவியாகக் கேட்க அவர் சிரித்தார்.

''உனக்கு லட்டு வேண்டும் என்று கேட்கிறாய் சரி. அதென்ன அம்மாவுக்கு அதிரசம் கேட்கிறாய்? அவள் உன்னிடம் கேட்டாளா?''

''ஆமாப்பா! முகூர்த்த நேரம். இன்றே தாலி பிரிச்சுக் கட்டணும் என்று ரொம்ப பிசியா அடுத்தடுத்து வேலை செய்து கொண்டே இருந்ததனால் மதியம் அம்மா சாப்பிடவே இல்லை. பசிக்குது தெரியுமா?'' என்று சரண்யா கதை அளக்க, இந்திராணி அவசரமாக இடையிட்டார்.

''ஹேய்! நான் எங்கே பசிக்குது என்று சொன்னேன்?''



''ஹையோ! இந்தும்மா நான் பேசறதே உங்களுக்குப் புரியலை. எனக்குப் பசிக்குது என்று சொன்னேன். உங்களுக்குச் சாப்பிடலை என்று தான் சொன்னேன். இரண்டு பேருக்குமே...'' என்று அவள் நீட்டி முழக்கி முடிக்கும் முன்பே அவர் எழுந்தார்.

''சரி சரி. வாங்கிட்டு வரேன் இருங்க...'' என்று சொல்லி நகர அவரைப் புன்னகையோடு பார்த்தபடி இருந்தாள் சரண்யா. ஒன்று.. இரண்டு.. ஐந்து.. நிமிடங்கள் அப்பாவை ஆளைக் காணோம்!

''ப்ச்! என்னம்மா இது? உங்க வீட்டுக்காரருக்கு சாமர்த்தியமே போதலை. கண் முன்னால் இருக்கும் கடைக்குப் போய் காசு கொடுத்து லட்டு வாங்கி வர அரை மணி நேரமா?'' என்று சலித்துக் கொண்டாள்.

''உனக்கு அங்கே நிற்கிற கூட்டம் கண்ணில் படலையா?'' என்று இந்திராணி விளக்கம் சொல்ல, 'உங்க வீட்டுக்காரரை விட்டுக் கொடுக்க மாட்டீங்களே' என்றவள் பார்வையில் அப்பா வருவது பட்டது.

அப்பாவுக்கும் தனக்கும் இடையே இருந்த சுமார் நூறு அடி தூரத்தைக் கடக்கும்போது, அவள் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே அப்பாவின் கால் தவறுதலாக அங்கே தூக்கி எறியப்பட்ட வாழைப்பழத் தோலில் பட்டு, சறுக்கி வினாடியில், பதட்டத்தோடு 'அப்பா...' என்ற கூச்சலோடு எழுந்து ஓடினாள்.

ஆனால் அவள் அவரைச் சென்று அடைவதற்கு முன்பே, அவர் கீழே விழாமல் யாரோ அவரின் இடுப்பைப் பிடித்துத் தடுத்து நிறுத்தித் தோளோடு சேர்த்து அணைத்து இருந்தார்கள்.

''அப்பா ஆர் யு ஓகே?'' என்று அவரின் முன்னால் நின்று, அவரின் கன்னத்தைப் பற்றி, பதட்டத்தோடு விசாரித்த சரண்யாவைப் பார்த்த வினாடியில் தீபக்கின் மனம் துள்ளிக் குதித்தது. மு..ரு..கா! என்னை மேலும் குழப்பத்தானே இவளை மறுபடியும் என் கண்ணில் காட்டினாய்? இவர் இவளின் அப்பாவா?

''ஹேய் குட்டி! பயப்பட ஒன்றும் இல்லை, கால் ஸ்லிப் ஆகிடுச்சு. அதான் விழறதுக்கு முன்னாடி சார் பிடிச்சுட்டாரே. தேங்க்ஸ்'' என்று அவன் புறம் திரும்பி கை நீட்டிப் புன்னகைத்தார் ராமலிங்கம்.

''தீபக், ஹிண்டு ரிப்போர்ட்டர்'' என்று அவரின் கை பற்றிக் குலுக்கினாலும் பார்வை 'சரண்யா குட்டியின்' மேல் இருந்தது. ''தீபக்'' என்று அவளின் இதழ்கள் மீண்டும் ஒரு முறை உச்சரித்ததை அவனால் உணர முடிந்தது.

அவளிடம் பேச வாய் எடுக்கும் முன்பே, இந்திராணி அந்த இடத்திற்கு வந்து, ''ஹிந்து ரிப்போர்ட்டரா? இன்னிக்குக் காலையில் பேப்பரில் வந்த போட்டோ நீங்க எடுத்ததா? நேற்று மாலை அமைச்சர் வந்த விக்ரம் - தர்ஷினி கல்யாணத்திற்கு நீங்க வந்து இருந்தீங்களா?'' என்று ஆர்வமாக விசாரித்தார் இந்திராணி.

''நேற்று அமைச்சரின் வருகையைக் கவர் பண்ண அந்தத் திருமண விழாவிற்கு வந்து இருந்தேன்'' என்று பதில் அளித்தான் தீபக்.

''காலையில் அமைச்சரின் வருகை குறித்த ஹிந்து கவரேஜ் நல்லா இருந்தது. உங்க எடிட்டர் ராஜேந்திரன் என்னுடைய பிரண்ட். அந்தக் கல்யாண மாப்பிள்ளை அப்பாவிற்குக் கூட தூரத்துச் சொந்தம். விசாரித்தேன் என்று சொல்லுங்க...'' என்று தன் பங்கிற்குச் சரளமாகப் பேசினார் ராமலிங்கம்.



கணவன் கீழே விழாமல் தடுத்து நிறுத்தியவன் என்ற நன்றியில் இந்திராணி இருக்க, பத்திரிகையாளன் என்ற மதிப்பில் ராமலிங்கம் இருக்க, அவனின் புன்னகை பூத்த முகத்தை ரசனையோடு சரண்யா பார்த்தது, தீபக்கைத் தவிர வேறு யார் கண்ணிலும் படவில்லை.

தன்னை ஆர்வத்தோடு விழுங்கிய அவளின் பார்வை அவனுக்குப் புரிந்தது. பிடித்தது. ஆனால் இது சரி வராது என்ற எண்ணம் மேலும் அழுத்தமாக தீபக்கின் மனதில் பதிந்தது.

''ராஜேந்திரனிடம் நான் விசாரித்ததைச் சொல்லு'' என்பதற்கு ஆமாம் என்றோ இல்லை என்றோ தீபக் பதில் சொல்லாதது ராமலிங்கத்திற்கு வித்தியாசமாகத் தோன்ற, ''நீங்க சென்னையில வேலை பார்க்கறீங்களா? இங்கே இருக்கிறீர்களா? உங்களுக்கு அவரைத் தெரியுமா?'' என்று சந்தேகத்துடன் விசாரித்தார்.

இவர் பேசுவதைப் பார்த்தால், இவர்களும் சென்னை யில் இருந்து இந்தத் திருமணத்திற்காக வந்தவர்கள் போலத் தோன்றுகிறது. நம்மைப் பற்றிய விவரங்கள் தெரிய வேண்டாமே! ''எனக்கு ஊர் ஊரா சுற்றும் வேலை தான் சார். ஒரு இடம் இல்லை. கிளம்பறேன்'' என்று சொல்லிவிட்டு தீபக் நகர முயன்றாலும் இந்திராணி விடுவதாக இல்லை.

''நாங்க காபி சாப்பிடப் போறோம். சாமி தரிசனம் ஆகி விட்டது என்றால். நீங்களும் வாங்க, ஒரு கப் காபி சாப்பிடலாம்'' என்று மரியாதை நிமித்தம் அழைப்பு விடுத்தார்.

''அவர் நம்மை மாதிரி கோவிலை சுத்திப் பார்க்க வரவில்லை. ஆபீஸ் வேலையா வந்து இருக்கிறார்'' என்று அவனைத் தவிர்க்க நினைத்த ராமலிங்கத்தின் மனதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

''ஆபீஸ் வேலையாகத்தான் வந்தேன். ஆனால் சாமி பார்ப்பதிலும் தப்பு இல்லையே சார். ஜுரதேவர் சந்நிதி பற்றி ஒரு கட்டுரை எழுதணும். நான் அங்கே போகி றேன். வேலை இருக்கு நீங்க கிளம்புங்க'' என்று இரு வருக்குமே பதில் கொடுத்து கவனமாக சரண்யாவின் புறம் திரும்பாமல் விடை பெற்றான் தீபக்.

''சரி மிஸ்டர் தீபக். சந்தர்ப்பம் நேர்ந்தால் மீண்டும் சந்திக்கலாம். வாழ்த்துக்கள்'' என்று வழி அனுப்பிய ராமலிங்கம், மனைவி மகளுடன் கிளம்பினார்.

அவர்கள் செல்வதைக் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்து ரசித்த தீபக். 'இவளை பார்க்கக் கூடாது. பேசக்கூடாது என்று தனக்குத்தானே எத்தனை முறை தடை விதித்துக் கொண்டாலும், ஒவ்வொரு முறையும் தானே முன் வந்து அதை மீறுவது சரி இல்லை' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு, கோவிலுக்கு வந்த வேலையைப் பார்க்கத் திரும்பினான்.



## 5

மதுரையில் நடைபெற்ற விக்ரம் திருமணத்திற்குச் சென்று விட்டுச் சென்னைக்குத் திரும்பி இருந்த சரண்யா ஒரு மாதம் கழித்து காலை ஏழு மணி அளவில் ஹால் சோபாவில் அமர்ந்து ஹிந்து பேப்பரில்



அடையார் ரோட்டரி க்ளப் சார்பில் நடக்கும் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தொடர்பான ஓவியப் போட்டி குறித்த விபரங்களை கவனமாகப் படித்துக் கொண்டு இருந்தபோது வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, 'கதவு திறந்து தானே இருக்கு. கம் இன்...' என்று பேப்பரில் இருந்து பார்வையை விலக்காமலே சொன்னாள் சரண்யா.

அவளின் அனுமதிக்குப் பிறகும் அழைப்பு மணி விடாமல் ஒலிக்க, 'யார் இந்த செவிடு? ஒரு தடவை சொன்னால் புரியாதா?' என்று கேட்டபடி எரிச்சலோடு நிமிர்ந்தவள், வாசலில் பெட்டியோடு நின்று இருந்த விக்ரமைப் பார்த்ததும் மலர்ந்தாள்.

''ஹேய் அண்ணா! வா வா. நல்லா இருக்கியா? அண்ணி கூட வரலையா? எப்படி இருக்காங்க? நாலே வாரத்தில அவங்கள தனியா விட்டுட்டு நீ மட்டும் கிளம்பி வந்து விட்டாயா? அண்ணிக்கு நான் கொஞ்சம் பயிற்சி கொடுக்கணும் என்று நினைக்கிறேன்'' என்று விக்ரமை உற்சாகமாக வரவேற்றாள்.

''சரண்யா, என்னை அண்ணா என்று சொன்னாயா? கேட்கவே காதுல தேன் வந்து பாயுதே? ஆனால் என்ன விஷயம்? எதுக்காவது சித்தப்பாவிடம் பெர்மிஷன் வாங்கணுமா?'' என்று மடக்கியவனைப் பார்த்து தன் நெற்றியிலேயே செல்லமாகத் தட்டிக் கொண்டாள்.

''உன் புத்தி உன்னை விட்டு எங்கே போகும்? நல்லா மரியாதையா பேசணும் என்று நான் நினைத்தால் கூட நீ விட்டுடாதே. உனக்கு இந்த வா போ தான் சரி. நீயே கேட்டு விட்டாய். அதனால் சொல்றேன். பத்து மணிக்கு அடையார்ல, ஒரு ஓவியப் போட்டி இருக்கு. அதுக்கு

லிஃப்ட் கொடேன்'' என்று தன் காரியத்தைச் சாதிக்க முயன்றாள் சரண்யா.

''இதுதான் ஒரிஜினல் சரண்யா. காரியம் சாதிப்பதில் மகா கில்லாடி. அது சரி, இன்று நான் வருவதே உனக்குத் தெரியாதே! நான் வரவில்லை என்றால் என்ன செய்து இருப்பாய்?''

''ப்ச்! அப்பாவிடம் லிஃப்ட் கேட்டு இருப்பேன். அவர் சொல்லும் அறிவுரைகளை எல்லாம் கேட்டபடி பதினஞ்சு நிமிஷம் பயணம் பண்ணனும். இப்ப அதுல இருந்து எஸ்கேப்.''

''ஏன் உன் டூ வீலர் என்ன ஆச்சு?'' என்று கேட்டவனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

''என்ன விக்ரம் நீ? டூ வீலர்ல வெயிலில் போனால் வேர்க்கும். புடவை கட்டிட்டு, வண்டில போனால், சரியாய் வராது. அங்கே எனக்கு பரிசு இருக்குப்பா. நான் அழகா டிரஸ் பண்ணிட்டுப் போய் அம்சமா பரிசு வாங்கினால் தானே, நாளைக்கு நியூஸ் பேப்பர்ல, இன்னாருடைய தங்கை இந்த ஓவியப் போட்டியில் முதல் பரிசு வாங்கினாள் என்று பெரிசா நியூஸ் வரும்'' என்று பெருமையாக அளந்தாள் சரண்யா.

''என் கல்யாணம் அன்று ராஜேந்திரன் அங்கிளிடம் சொல்லிப் போட்ட மாதிரி நானே காசு கொடுத்து உன் படத்தை பேப்பர்ல போட்டால் தான் உண்டு. இதைத் தவிர உனக்கு வேறு சான்ஸ் இருக்க மாதிரி எனக்குத் தெரியலை'' என்று கேலியாகச் சிரித்தான்.

''ஹய்யோ! உங்களுக்கு மட்டும்தான் பேப்பர்ல தெரிஞ்சவங்க இருப்பாங்களா? நாளைக்கு உன் இன்ஃப்ளுயன்ஸ்



இல்லாமல் என் போட்டோ பேப்பரில் வருது. அதை நீ பார்க்கத்தான் போகிறாய்...'' என்று சவால் விட்டவளுக்கு 'அந்த தீபக்கின் முகம்' கண்ணில் தோன்றியது. அவன் இப்போது எங்கே இருப்பான்?

''நினைப்பு தான். கவலைப்படாதே. அடுத்த மாசம் உன் பிறந்த நாள் வரும்போது அரை பக்க விளம்பரம் உன் போட்டோவோடு கொடுத்து விட்டுப் பணத்தை சித்தப்பாவிடம் வசூல் பண்ணிக் கொள்கிறேன்'' என்று பதிலுக்குக் காலை வாரிவிட்டு, விழா நடக்கும் இடத்தில் அவளை இறக்கி விட்டான்.

''அதைக்கூட நீ செலவு பண்ண மாட்டாயா கஞ்ச மகா பிரபு...'' என்று கேட்டுச் சிரித்தபடி இறங்கி உள்ளே நடந்தவளின் கண்கள் அங்கே நின்று இருந்த தீபக்கைக் கண்டதும் திகைத்தது.

''நினைத்தேன் வந்தாய் நூறு வயது. கேட்டேன் தந்தாய் ஆசை மனது...'' என்று துள்ளலுடன் வாய் விட்டுப் பாடியவள் இரண்டாவது வரியைச் சொல்லும் போது அதன் அர்த்தம் புரிய, திடுக்கிட்டு பாட்டை நிறுத்தினாள்.

* * *

காலையில் படுக்கையில் இருந்து எழுந்து காலண்டரைக் கிழிக்கும் போதே ஜனவரி மூன்று என்ற தேதி கண்ணில் பட்டது. மதுரையில் இருந்து வந்து நாலு வாரங்களாகி விட்டது.

மதுரை ஹோட்டலிலும், திருப்பரங்குன்றம் கோவிலிலும், அவளைப் பார்த்தது காலப் போக்கில் மறந்து விடும் என்று தான் தீபக் முதலில் எண்ணினான். சில

நிமிடம் பார்த்து, பத்து வார்த்தைகள் பேசிய ஒரு பெண் தன் வாழ்வை இப்படி ஆட்டிப் படைப்பாள என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

பார்த்த சில நிமிடங்களில், அவளின் உடை, அணி கலன்கள், அவளின் அம்மாவின் காதில், கழுத்தில், கைகளில் மின்னிய வைர ஆபரணங்கள் அவர்களின் வசதியை பறைசாற்ற, முதல் சில மணி நேரம் இருந்த மயக்கத்தை முயன்று விலக்கி வைத்தான்.

அரசு பணியில் இருக்கும், உயர் மத்திய தரக் குடும் பத்திற்கு அவளை நினைப்பது சரி வராது. அனாவசிய மாக அவளை நினைத்து, தன்னையும் சிரமப்படுத்தி, அவளையும் கஷ்டப்படுத்தக் கூடாது என்ற முடிவிற்கு அன்றே வந்து விட்டான்.

ஆனால் இந்த நாலு வாரமாக, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்தில், அவளின் நினைவு வந்து விடும். மதுரைக்குச் செல்லும் பேருந்தைப் பார்க்கையில், இளம் பச்சை வண்ணத் துப்பட்டாவைப் பார்க்கையில், டாட்டா இண்டிகா டூரிஸ்ட் வண்டியைப் பார்க்கையில், யாராவது தன் குழந்தையை குட்டி என்று கொஞ்சு கையில், வாழைப்பழத் தோலைக் குப்பைத் தொட்டியில் போடுகையில் கூட அவளின் நினைவு வந்தது.

வழக்கம் போலத் தோன்றிய அவளின் நினைவை வழக்கம் போல ஒதுக்கி, அலுவலகத்திற்கு வந்தபோது பொறுப்பாசிரியர் அவனுக்காகக் காத்து இருந்தார்.

''தீபக்! அடையார் ரோட்டரி க்ளப் சார்பில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் கொண்டாடுறாங்க. அதில் ஓவியப் போட்டி இருக்கு. என்னோட பிரெண்ட்



பொண்ணு தகவல் கொடுத்தா. முடிந்தால் அவள் இருக்கிற மாதிரி ஒரு போட்டோ எடுத்துட்டு வா. பேர் சரண்யா. எம்.ஏ. ஜர்னலிசம் படிக்கிறாள். நன்றாக வரை வாள்...'' என்று அவர் நீளமாக அறிமுகம் கொடுத்தது எதுவுமே. சரண்யா என்ற பெயரைக் கேட்ட பின் அவன் காதுகளுக்குள் ஏறவே இல்லை.

அவர் நீட்டிய அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டு, அவன் அந்தப் போட்டி நடக்கும் இடத்திற்குச் சென் றடைந்த பத்தாவது நிமிடம். காரில் இருந்து அழகு தேவதையாக இறங்கிய சரண்யாவைக் கண்ட தீபக்கின் மனம் உற்சாக வானில் சிறகடித்துப் பறந்தது.

சிம்பிளான ஆர்ட் சில்க் புடவைதான். புடவையின் அழகை விட, அவள் கட்டி இருப்பதால் தான் புடவை அழகாய்த் தெரிகிறதோ என்ற எண்ணம் வந்தது. இள மஞ்சள் நிறத்தில் அடர்நீல நிறப் பூக்கள் குட்டிக் குட்டி யாய் விரவி நிற்க, முந்தானையில் பல வண்ண பூங் கொத்து ஒன்று மலர்ந்து மணம் பரப்பியது.

''ஹலோ... தீபக்...'' என்று கை அசைத்தபடி அவனை நோக்கி வந்த சரண்யாவுக்கும் அவனுக்கும் இடையில் இருபதடி தூரம் இருக்கும் வேளையில் ஒரு மத்திய வயது பெண்மணி குறுக்கே வந்தார்.

''ஹாய் சரண்யா! வா வா... பரிசு வாங்கும் நீயே இவ்வளவு லேட்டா வந்தால் எப்படி? அப்பா வரவில் லையா?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தது அந்த ஓவியப் போட்டியின் ஒருங்கிணைப்பாளராக இருக்கலாம். அவர் சொன்ன 'அப்பா' என்ற வார்த்தை அவனைப் பல அடிகள் பின்னோக்கி நகர வைத்தது.

தன்னோடு இணைந்து ஒரு காபி சாப்பிட விரும்பாத அவளின் அப்பா ராமலிங்கம், காவல் துறையில் நேர்மை யான அதிகாரி என்று பெயர் வாங்கிய தன் அப்பா இருவரின் நினைவுமே வந்து, அவனை அந்த இடத்தில் இருந்து மறைய வைத்தது.

விழா ஏற்பாடுகளை நிர்வகிப்பவரிடம், தன்னுடைய அடையாள அட்டையைக் காட்டி, பரிசு பெறுபவர்களின் பட்டியல், கலந்து கொண்டவர்களின் விவரம், வெற்றி பெற்றவர்கள் வரைந்த ஓவியங்கள், ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு, அவளின் கண்ணில் படாமல் அவசர மாக வெளியேறினான் தீபக்.

போட்டி நடைபெறும் இடத்திற்குக் காரில் வந்து இறங்கியபோது அவனைப் பார்த்தது சரண்யாவிற்கு நன் றாக நினைவு இருந்தது. ஆனால் அடுத்த சில நிமிடங் களில் ஆளையே காணோம். அருகில் போய் இருக்கலாம் வந்து விடுவான் என்று அவள் வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தது தான் மிச்சம். அவன் விழா முடியும் வரை வரவே இல்லை.

திருப்பரங்குன்றம் கோவிலில் ராஜேந்திரன் தன் உறவினர் என்று அப்பா தீபக்கிடம் சொன்ன ஞாபகம் வர அவரை அழைத்தாள்.

''அங்கிள் வணக்கம். நான் சரண்யா...''

''சரண்யா? நீ ஏதோ ஓவியப் போட்டியில் பரிசு வாங்கப் போகிறாய் என்று விக்ரம் சொல்லி தீபக் என்று ஒரு ரிப்போர்ட்டரை அனுப்பினேனே? விழா முடிந்து விட்டதா? போட்டோ வருதோ இல்லையோ, நியூஸ் வரும். போதுமா?'' என்று ராஜேந்திரன் உறுதி அளிக்க, நன்றி சொல்லி போனை வைத்தாள்.



போனை வைத்த நிமிஷம், சலிப்போடு இருந்தாலும், மறுநாள் காலையில் வெளி வந்த நியூஸ் பேப்பரில் நாலாவது பக்கத்தில், அவளுடைய ஓவியம் வண்ணப் படமாக வெளிவந்து இருந்ததைப் பார்த்த வினாடியில் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள்.

அருகே இருந்த கட்டுரையை ஆர்வத்துடன் படித்துக் கொண்டே வந்தவள், இறுதியில் இருந்த, 'புகைப்படம் மற்றும் கட்டுரை ஆக்கம் தீபக்' என்று இருந்ததைப் பார்த்த வினாடியில் கண்கள் வியப்பில் விரிந்தது.

கற்பனை செய்து எழுதும் நிகழ்வு இது இல்லை. வந்து இருந்த சிறப்பு விருந்தினர்கள், பங்கேற்ற மாணவர்கள் என்று எல்லா விபரங்களோடும் கட்டுரை இருக்கே? விழா நடக்கும் நேரம் முழுவதும் அவன் அங்கேயே இருந்து இருக்க வேண்டும். ஆனால் தன் கண்ணில் படவில்லை. ஏன்? நேற்று மட்டுமில்லை. விக்ரம் கல்யாண வீட்டிலும் இதே கதை நடந்து இருக்கிறதே? உள்ளுக்குள் குறு குறுத்தது.

அன்று பேப்பரில் வந்த போட்டோ ஒரிஜினல் இல்லை என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். அதை மார்பிங் பண்ண வேண்டிய அவசியம் என்ன? அவனைப் பற்றிய எண்ணங்கள் நினைவுகள். இந்த ஒரு மாதத்தில் அவ்வப்போது வந்து போவதை மறுப்பதற்கில்லை. அவனைத் தான் முதன் முதலாகக் கண்ட காட்சியை இப்போதும் கண் முன் தோன்றி கன்னத்தைச் சிவக்க வைத்தது. இந்தக் கனவுக்கு அவனிடம் எதிரொலி இருக் கிறதா? அன்றைய வகுப்புகள் முடிந்த உடனே வீட்டிற்கு வராமல் ஹிந்து பத்திரிகை அலுவலகத்திற்குச் சென் றாள் சரண்யா.



# 6

மதுரையில் இருந்து திரும்பிய போதே சரண்யாவின் நினைவு அலைக்கழித்துக் கொண்டு இருக்க, அவளை சென்னையில் தான் அலுவலகப் பணியாகச் சென்ற இடத்தில், அழகு தேவதையாய், காட்சி தருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவளின் கண்ணில் படாமலேயே வேலையை மட்டும் பார்த்து விட்டு வந்து விட்டான் என்று சொல்லிக் கொண்டாலும், அவன் செய்த கூடுதல் வேலைகள், தனி ஆல்பத்தில் இருக்கிறதே?

அவள் பரிசு வாங்கும் போது எடுத்த புகைப்படம் ஒன்று, அவள் சிறப்பு விருந்தினருக்கு பூங்கொத்துக் கொடுத்தது ஒன்று, மேடையில் பேசும்போது எடுத்த படம் ஒன்று, அதற்கு முன்னால் திருமண வீட்டில் எடுத்த புகைப்படங்கள் இருபதுக்கும் மேலே அவனின் தனி ஆல்பத்தில் இருப்பது எதற்காக என்று மூளை எழுப்பிய கேள்விக்கு அவனிடம் பதில் இல்லை.

'இப்ப என்ன? உடனே அழித்து விடுகிறேன்' என்று காமராவில் இருந்த அவள் சம்பந்தப்பட்ட புகைப்படங் களைப் பார்த்து அழித்துக் கொண்டு இருக்கும்போது, ''சார் எடிட்டர் உங்களைக் கூப்பிடுகிறார்'' என்ற அழைப்பு வந்தது. ஒற்றை விரலால் கதவைத் தட்டி அனுமதி பெற்று உள்ளே நுழைந்தவன் மேலும் திகைத்துப் போனான். உள்ளே இருந்தது சரண்யா!

''வா தீபக். என்ன அங்கேயே நின்று விட்டாய். உள்ளே வா'' என்று வரவேற்றார் ராஜேந்திரன். இவளை



வைத்துக் கொண்டு தன்னை ஏன் அழைத்தார்? என்ன கேட்கப் போகிறார்? திகைப்புடன் நின்றவனை, ஆசிரி யரின் குரலும், அவரின் குரலைக் கேட்டுத் திரும்பிய அவளின் மலர்ந்த விழிகளும், இந்த உலகத்திற்கு அழைத்து வந்தது.

சரண்யாவின் முகத்தில் இருந்த மலர்ச்சி அவனை என்னவோ செய்தது. சிரிக்கலாமா? ஏற்கனவே தெரிந்த தாகக் காட்டிக் கொள்வதா வேண்டாமா என்ற குழப்பத் தில் இருந்த தீபக், அளவான புன்னகையோடு மெல்ல நடந்து வந்தான்.

''கட்டுரை யார் எழுதினா என்று என்னை உலுக்கி னாயே? இவர் தான். வேலைக்குச் சேர்ந்தது ஆறு மாதம் ஆகிறது. அளவான பேச்சு, புன்னகையோடு பொறுமை யாக எல்லோரையும் கையாளும் திறன், ஆங்கில மொழி யில் அதீதமான புலமை, என்று எல்லாரையும் கவிழ்த்து விட்டார். அவனோட புகைப்படங்கள் பாலுமகேந்திரா படம் மாதிரி இருக்கும்'' என்று அறிமுகப்படுத்த, அவன் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

சரண்யாவின் புன்னகையும், ''ஏன் அன்று என்ன பார்க்காமல் வந்து விட்டாய்?'' என்று வார்த்தையால் இல்லாமலேயே கேள்வி கேட்ட கண்களும், அவனுக் குள் விளைவித்த ரசாயன மாற்றங்களை மறைத்து, பார்வையை அவளிடம் இருந்து அவசரமாய்த் திருப்பி, ''சார் கூப்பிட்டீங்க என்று சொன்னாங்க...'' என்று அவரிடம் விசாரித்தான்.

''உட்கார். இது சரண்யா. குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு சம்பந்தமான அவளோட ஆர்ட் பேப்பரில் வந்ததே? அதுக்கு நன்றி சொல்ல வந்து இருக்கிறாள்.

யார் கட்டுரை எழுதியது என்று கேட்டாள். ரோட்டரி க்ளப்ல எடுத்த புகைப்படத்தில், அவளின் முகம் தெரிய வில்லையாம். உன்னிடம் எதாவது புகைப்படம் இருக்கா என்று கேட்க வரச் சொன்னேன்'' என்று விளக்கினார் ராஜேந்திரன்.

''இல்லை சார். நம்ம கிட்ட பரிசு பெற்ற ஓவியங்கள் மட்டும் தான் சார் இருக்கு. பரிசு வழங்கும்போது நான் இல்லை சார். அங்கே இருந்து கொட்டிவாக்கம் கிரிக்கெட் போட்டிகளை கவர் பண்ணக் கிளம்பி விட்டேன் சார்'' என்று முடித்தான் தீபக்.

இவனுக்கு என்ன ஆச்சு? ஏன் தன்னைத் தவிர்க் கிறான்? அவன் தன்னைப் பார்க்காததனாலேயே அவன் மேல் தன் ஆர்வம் மேலும் அதிகரிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாத குழந்தை அல்லவே அவள்? அவ னிடம் நேருக்கு நேர் கேட்க வேண்டும்.

''அங்கிள், நான் கிளம்பறேன். நாளை மறுநாள் அம்மா அப்பாவோட வெட்டிங் அனிவர்சரி, வாழ்த்துச் செய்தி போட மறந்துடாதீங்க அங்கிள்.''

''விளம்பரம் இல்லையா? காசு வாங்கி விட்டு மறப் போமா? கட்டாயம் போட்டு விடுவோம். கவலைப் படாதே. அம்மா அப்பா போட்டோ மட்டும் போதுமா? கீழே உன் போட்டோவையும் சேர்த்து போடட்டுமா?'' என்று வழி அனுப்ப எழுந்தவர் அவளின் தோளில் தட்டிச் சிரித்தார்.

''இது நல்ல ஐடியாவா இருக்கே? உங்க பாலு மகேந் திரா சாரை என்னை அழகா ஒரு போட்டோ எடுக்கச் சொல்லிச் சேர்த்துப் போட்டு விடலாமா?'' என்று அவ



ரிடம் கேள்வி கேட்ட சரண்யாவின் கண்கள் தீபக்கிடம் வேறு விஷயம் பேசியது.

''சரி, நீ உள்ளே போய் முகம் கழுவி டச் பண் ணிக்கோ'' என்ற அனுப்பினார் ராஜேந்திரன். அவள் முகம் கழுவி வந்தபோது, அவளின் துப்பட்டாவை சோபாவில் போட்டு விட்டு வந்து விட்டாள். அவளை நிற்க வைத்து மூன்று படங்கள் எடுத்து, காட்டி அவளிடமே ஒன்றைத் தேர்வு செய்து ஒப்புதலும் வாங்கிய பின், கிளம்பிய தீபக்கின் பின்னாலேயே அவளும் வந்தாள்.

தன்னுடைய உயர் அதிகாரியின் முன்பு, அவளை முன்பே தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், கருமமே கண்ணாக இருந்த தீபக்கை மனதிற்குப் பிடித்த அதே நேரம் சரண்யாவிற்குக் கோபமும் வந்தது. இவ னைப் பார்த்தால் அழுத்தம் மாதிரியும் தெரியவில் லையே? முதல் சந்திப்பில், அவனின் இனிய எளிய குணம் தெரிந்ததே? தன் அப்பா என்று தெரியாமலேயே யாரோ என்ற நிலையிலும் தானாக முன் வந்து உதவி செய்ய முடிந்ததே? பின்னே ஏன் இப்படி இருக்கிறான்?

தன்னை மூன்று முறை நேருக்கு நேர் பார்த்து இருக்கிறான். தனக்குத் தெரியாமலும் சில தடவைகள் பார்த்து இருக்க வேண்டும். ஆனாலும் தன்னை அடை யாளம் தெரியாத மாதிரி ஏன் நடிக்கிறான் என்று சரண்யா விற்குப் புரியவில்லை. ஒருவேளை நிஜமாகவே நினை வில்லையா? பொறுப்பாசிரியரிடம் விடை பெற்று தன் இருக்கைக்குச் செல்லும்போது பின் தொடர்ந்து வந்தாள்.

தன் சீட்டில் அமரும்வரை, அவள் பின் தொடர்வதை அறியாத மாதிரி நடித்தவன். அவளைப் பார்த்ததும், ''எஸ் மேடம். சொல்லுங்க'' என்று எழுந்து நின்றான்.

''என்னை இதுக்கு முன்னாடி எங்கேயாவது பார்த்த ஞாபகம் இருக்கா?'' என்று கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு கம்பீரமாய் அவனைப் பார்த்து, நிதானமாகக் கேட்டாள் சரண்யா.

''என்ன மேடம் இப்ப தானே சார் ரூமில் உங்களைப் பார்த்தேன்?'' என்று அவனும் நிதானமான குரலில் பதில் சொன்னான்.

''நான் இன்று பார்த்ததைக் கேட்கவில்லை. நேற்று அடையாரில் பார்த்ததையும் கேட்கவில்லை. ஆறு ஏழு வாரத்துக்கு முன்னாடி வெளியூரில் சந்தித்து இருக்கோமா என்று கேட்டேன்'' என்று கோபத்தில் முகம் லேசாகச் சிவக்க ஒவ்வொரு வார்த்தையாக அழுத்தமாக உச்சரித்துக் கேட்டாள் சரண்யா.

''நாம் இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கிறோமா?'' என்று லேசாக நெற்றியில் இரண்டு விரல்களால் சில கணங்கள் தடவியவன், உதட்டைப் பிதுக்கினான்.

''சாரி மேடம், ப்ரஸ் ரிப்போர்ட்டர் பாருங்க. தினமும் பிரயாணம் ஒரு நாளைக்கு குறைந்தது நூறு பேரையாவது சந்திக்கிறோமா? அதனால் நினைவில்லை. தப்பா நினைச்சுக்காதீங்க. சாரி...''

'சாரி மேடம்' என்று அவன் பேச ஆரம்பிக்கும்போதே, அவன் மீது பாய்ந்து, 'பொய் சொல்லாதே ராஸ்கல்' என்று பிடித்து உலுக்கத் தோன்றிய எண்ணத்தைக் கட்டுப்படுத்தத் திணறிய சரண்யா, ''லையர்'' என்று கடித்த பற்களுக்கு இடையே வார்த்தைகளைத் துப்பி விட்டு நகர்ந்தாள். அவள் போன பின்பு, இருக்கையில் சரிந்து அமர்ந்த தீபக்கிற்கு, அதுவரை கடைப்பிடித்த நிதானமும் அழுத்தமும், காணாமல் போனது.



''குட்டி, உன்னைப் பார்த்ததை என்னால் மறக்க முடியுமா? ஒவ்வொரு நொடியும் பொக்கிஷமாய் இதயப் பெட்டகத்தில் வைத்து இருக்கிறேன்'' என்று உயரமான கட்டிடத்தின் மேல் நின்று உலகிற்கேக் கேட்கும்படி கத்தத் தோன்றியது. அப்புறம் என்ன ஆகும் என்ற எண்ணம் அவனது வாயை கட்டிப் போட்டது.

வெகுநேரம் சுய இரக்கத்தில் கழிக்க முடியாமல், அலுவலக பணியாளர். ''மேடம் சார் ரூமில் இந்தத் துப்பட்டாவைப் போட்டுட்டுப் போய்ட்டாங்க. இங்கே இருப்பாங்க கொண்டு போய் கொடுத்துவிடு என்று சொன்னார். மேடம் எங்கே?'' என்று விசாரித்தான்.

''இங்கே தான் பக்கத்தில் பிரெண்டைப் பார்க்கப் போய் இருக்காங்க. பத்து நிமிஷத்தில் வந்து விடுவாங்க. நான் கொடுத்து விடுகிறேன்'' என்று வாங்கியவன், அதை அவளிடம் கொடுக்கவில்லை.

சரண்யா பத்திரிகை அலுவலகத்தில் இருந்து வெளியே வரும்போது பொங்கிய கோபம் சில நிமிடங்களிலேயே காணாமல் போய் விட்டது. வாசல் வரை வந்தவள், ஸ்கூட்டி சாவியைத் தேடிய போது கைப்பை அங்கிளின் அறையில் இருப்பது நினைவு வந்தது. திரும்பி உள்ளே சென்றபோது தீபக் தன் மேஜையில் கவிழ்ந்து படுத்து இருந்தது கண்ணில் பட்டது.

கைப்பையை எடுக்க அறைக்குள் போன போது அவளைப் பார்த்து, ''உன்னோட ஷால் தீபக் டேபிளுக்கு அனுப்பினேனே வாங்கிக் கொண்டாயா? இப்ப என்ன மறந்து போனாய்?'' என்று விசாரித்தார்.

முன்பு அமர்ந்து இருந்த நாற்காலிக்கு அருகில் தரையில் இருந்த தன்னுடைய கைப்பையை எடுத்துக்

கொண்டு, ''நான் வாங்கிக்கறேன் என்று வெளியே வந்தவள் கண்ணில் அவன் ஷாலை வாங்கி மேஜை இழுப்பறையில் பத்திரப்படுத்துவது பட்டது.

தன்னைத் தெரியாத மாதிரி அவன் நடித்தான் என்ற எண்ணம் சரிதான் என்பதற்குச் சான்று கிடைத்த கோபம் முதல் வினாடி தோன்றினாலும், அதற்கான காரணம் புரிந்து விட்டதால், 'அவனின் தயக்கம் விலகக் காத்து இருக்கலாம். அதற்குள் படிப்பை முடித்து விடலாம்' என்ற எண்ணத்தில் அவளும் உற்சாகத்தில் மிதந்தபடி வீட்டுக்குள் வந்தாள்.



# 7

அம்மா அப்பாவின் இருபத்தி ஐந்தாவது திருமண நாள் என்பதால், பேப்பரில் அவர்களுக்குத் தெரியாமலே விளம்பரம் கொடுத்து இருந்த சரண்யா அதிகாலையில் எழுந்து ஆர்வத்தோடு பார்த்தாள். கோபுரப் பின்னணியில் அம்மா அப்பாவின் உருவம், தொங்கும் விளக்கில் எரியும் சுடராய், தன் புகைப்படம். கீழே, வாழ்த்து பாடல்.

**இரு மனம் இணைவது காதலில்...**

**இரு இல்லங்கள் இணைவது கல்யாணத்தில்...**

**காதலோடு இணைந்த கல்யாணங்கள்...**

**இரு தலைமுறைகளை இணைக்கும் இனிய பாலங்கள்...**

**அன்பில் சிறந்த வாழ்வில், அருமையாய் இணைந்த நீங்கள்,**

**பல்லாண்டு வாழ வாழ்த்த வயதில்லை. வணங்குகிறேன்...**

அவள் அம்மா அப்பாவின் போட்டோவும் பணமும் கொடுத்தாள். ஆனால் இந்த மாதிரி டிசைன், கச்சிதமாகப்



பொருந்திய வாசகம் கொடுக்கவில்லை. விளம்பரத்தில் மாற்றங்கள் செய்வதில்லையே? ஒரு வேளை அங்கிளே வாசகம் எழுதி இருப்பாரோ? அவரின் எண்களை அழுத்தினாள்.

''குட்மார்னிங் அங்கிள், விளம்பரம் ஜொலிக்குது பார்த்தீங்களா? உங்க கைவண்ணமா?'' என்று உற்சாகமாகக் கேட்டாள் சரண்யா.

''நேற்று மாலை திருச்சிக்கு பத்திரிகையாளர் சந்திப்புக்குக் கிளம்பி விட்டேன். தீபக்கிடம் கொடுத்து விட்டு வந்தேன். நல்லா இருக்கா?''

''ரொ...ம்...ப ந...ல்...லா இருக்கு. தேங்க்ஸ் சொல்லிடுங்க'' என்று போனை வைத்த வினாடியில் இருந்து, பெருகிய சந்தோஷம், அவளுக்குக் குறையவே இல்லை.

வாழ்த்துச் செய்தியைப் பார்த்து உற்சாகமாகத் தன்னைக் கட்டி அணைத்து அம்மா முத்தமிட்டது, 'குட்டி இவ்வளவு வளர்த்து விட்டாயா?' என்று பெருமையாய் அப்பா சிரித்தது, 'வர வர அரசியல்வாதி ரேஞ்சுக்கு வந்துட்ட' என்று விக்ரம் கேலி செய்தது. எதுவுமே அவளின் சந்தோஷ ஊற்றிற்குத் தடை போடவில்லை.

அன்றைய தினம் விதம் விதமான கனவுகளில் மூழ்கி, தரையில் கால் பாவாமல் நடந்த சரண்யா, மாலையில் பல வண்ண மலர்கள் கொண்ட பூங்கொத்தோடு தீபக் வந்தபோது, விண்வெளியில் பறந்தாள்.

ஓடத் துடித்த கால்களைக் கட்டுப்படுத்தி, வாசலுக்கு வந்து, ''ஹாய், வெல்கம்'' என்று கை குலுக்க தன் கரத்தை நீட்டியபோது, அவன் தயக்கத்துடன், ''இது

மிஸ்டர் ராமலிங்கத்திற்கு...'' என்று சொல்ல அவளுக்கு சிரிப்புப் பீறிட்டது.

''ராமலிங்கம் எங்க அப்பா தான். அவர் முன்னே பின்னே தெரியாதவங்க கிட்டே பொக்கே வாங்க மாட்டார். என்னிடமே கொடுங்க'' என்று கேலியாகச் சொன்னாள்.

அவன் இன்னமும் தயங்க, ''சரி அதை நீங்களே வச்சுக்கோங்க. விளம்பர வாசகமும் டிசைனும் நீங்க தான் பண்ணீங்களாமே! ராஜேந்திரன் அங்கிள் சொன்னார். சூப்பரா இருந்தது. எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது'' என்று சந்தோஷமாகச் சொன்னாள்.

''தேங்க்ஸ் சொல்ல வேண்டியது எங்க லே-அவுட் டிசைனருக்குத்தான். இதை ராஜேந்திரன் சார் கொடுக்கச் சொன்னார். நீங்களே உங்க அப்பாவிடம் கொடுத்துடுங்க. கிளம்புகிறேன்.''

''நான் என்ன நீங்க வச்ச வேலையாளா? பார்ட்டி நடப்பது தெரியலையா? பிரண்ட்ஸ் வந்து இருக்காங்க. நிறைய வேலை இருக்கு. நீங்களே எங்க அப்பாவைப் பார்த்துக் கொடுத்துட்டு போங்க'' என்று ஸ்டைலாகச் சொல்லிவிட்டு உள்ளே போவதை ஒரு கணம் ரசித்து விட்டு, ''ஹலோ மேடம்...'' என்று அழைத்தபோது விக்ரமின் கரங்கள், அவனின் தோளில் அழுத்தமாகப் படிந்தது.

''யார் மேன் நீ? உனக்கு இங்கே என்ன வேலை? அதுவும் வசதியான வீட்டு பொண்ணு என்றால் வரிஞ்சு கட்டிட்டுக் கிளம்பிடுவீங்களே! நான் என்னுடைய கல்யாணத்திலேயே நீ அவளைச் சுத்திச் சுத்தி வந்ததைப் பார்த்தேன். இப்ப வீட்டிற்கே வந்தாச்சா? இன்னொரு முறை நீ அவளோடு பேசுவதைப் பார்த்தேன்.



பார்த்த இடத்திலேயே தொலைச்சுடுவேன்'' என்று மிரட்டலாகச் சொன்னான் விக்ரம்.

''நான் அவளோடு பேசுவதைத் தடுக்க நீ யார்?'' என்று எதிர்கேள்வி கேட்கத் திமிறிய மனதை அடக்கினான்.

''சாரி சார். நான் அவங்களைப் பார்க்க வரவில்லை. ராஜேந்திரன் சார் இந்த பூங்கொத்தை மிஸ்டர் ராமலிங்கத்திடம் கொடுக்கச் சொல்லி என்னை அனுப்பினார். அவர் ஊரில் இல்லை. அதனால் நான் வந்தேன். நீங்களே கொடுத்துடுங்க. நான் வரேன்'' என்று நிதானமான குரலில் சொல்லி விட்டுத் திரும்பினாலும், அவன் மனம் ஆறவில்லை.

ராஜேந்திரன் சார் தன்னை நேரில் போகச் சொல்லவில்லை. பிளவர் ஷாப்பில் போன் பண்ணிச் சொல்லி இருந்தால் கொண்டு வந்து கொடுத்து இருப்பார்கள். இவளைப் பார்க்க வேண்டும் என்ற தன் ஆசை தான் இந்தத் தேவை இல்லாத திட்டுக்குக் காரணம். இனி இந்தத் தப்பைச் செய்யக்கூடாது என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான் தீபக்.

* * *

இன்று சரண்யாவின் பிறந்தநாள். எப்போதும் அம்மா வீட்டில் செய்யும் ஸ்வீட். கோவிலில் ஒரு அர்ச்சனை. புதிய ஆடை. ஒரு சின்ன நகை பரிசு என்ற ரீதியில் செல்லும் பிறந்த நாளை எதிர்பார்த்துக் காத்து இருந்தவளுக்கு அப்பா சொன்ன தகவல் ஆச்சரியத்தை அளித்தது.

''உன் ஓவியங்களை எல்லாம் கண்காட்சியாக நடத்த ஏற்பாடு செய்யும்படி விக்ரமிடம் சொல்லி இருந்தேன்.

ஹோட்டல் மூன்லைட்டில், ஒரு ஆர்ட் எக்சிபிஷனுக்கு ஏற்பாடு செய்து இருக்கிறானாம். கூட தர்ஷினியிடம் நேற்றே வந்து பார்ட்டிக்கும். ப்ரஸ் கவரேஜ்க்கும் ரெடி பண்ணி இருக்கிறாள். அதோடு இன்னொரு சர்ப்ரைசும் இருக்கு என்று சொல்லி இருக்கான்...'' என்று உற்சாகமாக அறிவித்தார் இராமலிங்கம்.

''அப்பா, உங்களுக்கு இப்படி எல்லாம் சர்ப்ரைஸ் கிப்ட் கொடுக்கத் தெரியும் என்று எனக்கு முன்பே தெரியாமல் போய் விட்டதே? இந்த விக்ரம் கூட மூச்சே விடலை பாருங்களேன்...'' என்று உற்சாகத்துடன் சொல்லி, அவரைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள் சரண்யா.

அப்பா சொன்ன தகவல்களில் அவளுக்கு ரொம்பப் பிடித்ததே. அந்த ப்ரஸ் கவரேஜ் தான். அதற்காகவே கூடுதல் கவனத்துடன் கிளம்பி, ஆர்ட் எக்சிபிஷன் நடக்கும் இடத்தில், காத்திருந்தாள் சரண்யா. அவளின் கண்கள் தீபக்கின் வருகைக்காக வலைவீசி தேடிக் கொண்டு இருந்தது. அவனைக் கடைசியாகப் பார்த்தே மூன்று வாரம் ஆகி விட்டதே!

ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து, ராஜேந்திரனுக்கு போன் பண்ணி, ''என்ன அங்கிள், நீங்க வருவீங்க என்று பார்த்தேன். வேலைம்மா என்று சொல்வீங்க. அட்லீஸ்ட் உங்க ரிப்போர்ட்டரைக் கூட அனுப்ப மாட்டீங்களா?'' என்று சிணுங்கினாள்.

''சந்தீப் அங்கே இருப்பானே? அவன் காலையிலேயே வந்து இருப்பான். இந்நேரம் வேலை முடிந்து அங்கிருந்து கிளம்பிக்கூட இருக்கலாம்'' என்று சொல்ல, அவளுக்கு சப்பென்று ஆனது.



''சந்தீப்பா? ஏன் அங்கிள், தீபக் இல்லையா? அவர் வருவார் என்று நினைத்ததால் தான் கண்ணில் படவில்லையே என்று கேட்டேன்...''

''தீபக் மூணு நாளா லீவும்மா அவங்க அப்பாவிற்கு ப்ரமோஷன் வந்து இருக்காம். அதுக்காக செலிப்ரேஷன்...'' என்று அவர் ஏதோ சொல்ல, தீபக்... லீவு... என்ற வார்த்தைகளுக்குப் பிறகு அவர் சொன்னது எதுவுமே அவளுக்குக் காதில் விழவில்லை.

தீபக் வரப் போவது இல்லை என்று ராஜேந்திரன் சொன்ன தகவல், சரண்யாவின் பிறந்த நாளுக்கு என்று வீட்டில் இருந்த ஒவ்வொருவரும் கொடுத்த அக்கறை யான பரிசுகள் தந்த மகிழ்ச்சியைக் காணாமல் போக்கி விட்டது.

அவளின் முக வாட்டத்தை கவனித்த விக்ரம், ''என்ன சரண், உடம்பு சரி இல்லையா? ஏதாவது குடிக்க எடுத்து வரச் சொல்லவா?'' என்று அக்கறையாக விசாரித்தான்.

''தலை வலிக்குது விக்ரம். கொஞ்ச நேரம் தோட்டத் தில் உலவினால் சரியாகிடும்...''

''பகல் பனிரெண்டு மணி வெயிலில் தோட்டத்தில் உலவுவதா? தனியா வெளியே போக வேண்டாம். சித்தி யோடு போ. இல்லை என்றால் தர்ஷினியை அழைத்துக் கொண்டு போ...'' என்று அதட்ட அவள் தலை அசைத்து மறுத்தாள்.

''விட்டால் நூற்றி எட்டுக்கு போன் பண்ணி ஆம் புலன்சில் ஏற்றி விடுவாய் போல. எனக்கு ஒன்றும் இல்லை விக்ரம். முடிஞ்சா நாளைக்கு நல்ல ப்ரஸ் கவரேஜ் வர ஏற்பாடு பண்ணு, அது போதும்...'' என்று சொல்ல அவன் புன்னகைத்தான்.

''பெர்த்-டே பேபிக்கு இது கூடச் செய்ய மாட்டேனா? சித்தி சித்தப்பாவின் கல்யாண நாள்-க்கு அரைப் பக்க விளம்பரம் கொடுத்தோம். சரண்யாவின் பிறந்த நாளை முன்னிட்டு, எல்லா பேப்பரிலும் முழுப் பக்க விளம்பரம் கொடுத்து விடுவோமா?'' என்று கேலிச் சிரிப்போடு கேட்டான் விக்ரம்.

''விளம்பரம் என்றால் காசு செலவு பண்ணனும்! நான் சொல்றது செலவில்லாத விளம்பரம். பத்திரிகை ஆட்களை நல்ல விதமா எழுத வைப்பது. புரியுதா?'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்த சரண்யாவிற்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை.

வெளியே வரவேற்பு மேஜையின் முன்னால் நின்று தீபக்கும், அவனுடன் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும் பேசிக் கொண்டு இருக்க, அவர்களின் அருகே சென்று, ''ஹலோ அங்கிள், ஹலோ தீபக், எங்கே இவ்வளவு தூரம்?'' என்று உற்சாகமாக விசாரித்தாள்.

''நேற்று இங்கே ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணி இருந்தோம். அதுக்கான பில் செட்டில் பண்ண வந்தோம். நீங்க'' என்று இழுத்த கருணாகரனின் பார்வை தீபக்கையும் சரண்யாவையும் மாறி மாறிப் பார்த்தது.

''முக ஜாடையையும், இந்த மெஜஸ்டிக் லுக்கையும் பார்த்தால் சார் தீபக்கோட அப்பா. ஐ.பீ.எஸ். ஆபீசர். என் ஊகம் சரிதானே அங்கிள்?'' என்றவளைப் பார்க்க கருணாகரனின் வியப்பு மேலும் கூடியது.

''ஆமா, லஞ்ச ஒழிப்புத் துறை கண்காணிப்பாளரா சென்னையில் மூன்று நாட்களுக்கு முன் பதவி ஏற்றுக் கொண்டேன். நீங்க...''



''நீங்க வேண்டாம் அங்கிள். நீ என்றே சொல்லலாம். உங்களுக்கு ப்ரமோஷன் வந்தது என்று சொன்னாங்க! கங்கிராட்ஸ் அங்கிள்'' என்று சரண்யா வாழ்த்துச் சொல்ல, தீபக் விழித்தான்.

''இதெல்லாம் உங்களுக்கு எப்படி...'' என்று தீபக் தடுமாற, அவள் அதற்குப் பதில் சொலலாமல், ''நான் யார் என்று அங்கிள் கேட்கறாங்க இல்லை. அறிமுகப் படுத்துங்க ரிப்போர்ட்டர் சார்...'' என்று சொன்ன சரண்யாவின் கண்கள் 'அவன் தன்னை எப்படி அறிமுகப் படுத்தப் போகிறான்?' என்பதைக் காணக் காத்திருந்தன.

''அப்பா, மேடம் சரண்யா. எங்க எடிட்டர் ராஜேந்திரன் சாருக்கு சொந்தம். அவங்க அம்மா அப்பாவோட இருபத்தி ஐந்தாவது திருமண நாள் விழாவிற்கு வாழ்த்து விளம்பரம் போடச் சொல்லி எங்க அலுவலகத்திற்கு வந்து இருக்காங்க. அப்ப பார்த்து இருக்கிறேன்...'' என்று சாதாரணமான குரலில் அறிமுகப்படுத்த சரண்யாவிற்கு வியப்பாக இருந்தது.

''ஆமா தீபக். அலுவலகம் வந்த அன்று சரியாகப் பேச முடியவில்லை. உங்களுக்கும் வேலை வந்து விட்டது. என்னுடைய ஆர்ட் எக்சிபிஷன் இங்கே நடக்குது. உங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருந்தால், பார்க்கலாமே?'' என்றதும் முகம் மாறினான்.

''கிளம்பலாம்பா. எனக்கு வேலை இருக்கு.''

''லீவில் இருக்கிறேன் என்று சொன்னாய்? அப்படி என்ன அவசரமான வேலை?'' என்று கருணாகரன் கண்ணில் கூர்மையுடன் விசாரிக்கும் போதே அவன் அலைபேசி அழைத்தது.

''எடிட்டர் கூப்பிடுகிறார். போகலாம்ப்பா'' என்று அப்பாவின் பதிலை எதிர்பாராமல் சரண்யாவிடம் விடை பெறாமல் வெளியே நடந்தான்.

''எங்கே இருக்கிறாய்?'' என்ற எடிட்டரின் கேள்விக்கு தன்னை அறியாமல் உண்மையே பதிலாக வந்துவிட, அவர் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தார்.

''ஹேய்! நல்லதாப் போச்சு, அங்கே சரண்யா அவளோட ஆர்ட் எக்சிபிஷன் இருக்கு. சந்தீப்பைப் போகச் சொல்லி இருந்தேன். சந்தீப் பைக் ரிப்பேராம் நாளைக்கு நியூஸ் வரலை என்றால் அவள் என்னைப் பின்னிடுவா. இன்னைக்கு அவளோட பிறந்த நாள் வேறு. பத்து நிமிஷம் செலவு பண்ணி, அதை ஒரு பார்வை பார்த்து விட்டு, நைட் எனக்கு ரிப்போர்ட் கொடேன்'' என்று அவர் முடிக்கும்போது, அவன் வாய், ''சரி சார்'' என்ற வார்த்தையை உதிர்த்து இருந்தது.



# 8

சரண்யாவின் கண்ணில் படாமல், வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணத்தில், கூட்டத்தின் நடுவிலேயே சரண்யா இருக்கும் திசைக்கு எதிர்ப்புறமே சுற்றி வந்து, படம் பிடித்துக் குறிப்புகள் சேகரித்தாலும், கண்கள் அவ்வப்போது அவளைப் பார்க்கத் தவறவில்லை.

தான் பேசிக் கொண்டு இருக்கும் போதே தீபக் போய் விட்டான் என்று ஏமாற்றத்துடன் வந்த சரண்யாவின் மனநிலை சந்தோஷமும் வருத்தமும் கலந்து இருந்தது. அவனை இன்று பார்க்க முடியாதோ என்ற நிலை மாறி,



பார்க்க வைத்த விதியின் மேல் சந்தோஷமும், தன்னைக் கண்டாலே காத தூரம் விலகி ஓடும் தீபக்கின் மேல் தோன்றிய எரிச்சலும் என்ற கலவையான மனநிலையுடன் கண்காட்சி அரங்கைச் சுற்றி வந்தவள் கண்கள் விரிந்தது.

.இவன் இன்னும் போகலையா? திருட்டு ராஸ்கல். அங்கே தன்னிடம் கதை சொல்லி ஓடிவிட்டுப் பின்னாலேயே வந்து லுக் விடறியா? உன்னை என்னடா செய்றது என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள். இன்னும் எத்தனை நாள் தாக்குப் பிடிப்பாய் என்று பார்க்கிறேன் என்று மனதிற்குள் நினைத்தவள், கருணாகரனிடம் வந்து நின்றாள்.

''அங்கிள், உங்களை மாதிரி ஆபீசர் என்னுடைய கண்காட்சிக்கு வந்தது ரொம்ப சந்தோஷம். ஆர்ட் எப்படி இருக்கு?'' என்று விசாரிக்க, கருணாகரனின் பார்வை அவளை எடை போட்டது.

''தானாக வலிய வந்து பேசுறாளே? இதை எளிமை என்று எடுத்துக் கொள்வதா? இல்லை வேறு ஏதாவது சமாச்சாரமா?'' என்று எண்ணி முடிக்கும் முன்பே மூச்சு வாங்க ஓடி வந்து அருகில் நின்றான் தீபக்.

''தீபக், நீங்க இன்னும் போகலையா? உங்க ஆபீசில் இருந்து சந்தீப் வருவதாகச் சொன்னாரே அங்கிள் அவர் வரவில்லையா?''

''அவர் வரவில்லை. எடிட்டர் இப்பதான் போன் பண்ணிச் சொன்னார்'' என்று சரண்யாவிடம் அரை குறையாக பதில் சொன்னவன், அப்பாவிடம் திரும்பி, ''கிளம்பலாமா?'' என்றான்.

''இருங்க தீபக், போகலாம். குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் தொடர்பா நடந்த ரோட்டரி க்ளப் கவரேஜ் ரொம்ப நல்லா பண்ணி இருந்தீங்க. அதே மாதிரி இதையும் செய்வீங்க என்று நம்பிக்கை இருக்கு. நீங்க வந்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்று சரளமாகப் பேச, கருணாகரனின் புலன்கள் கூர்மை பெற்றது.

''தேங்க்ஸ் மேடம். அப்பா கிளம்பலாமா?'' என்று தீபக் அவரை நகர்த்துவதிலேயே குறியாக இருக்கக் காவல் துறை மூளை மேலும் கூர்மை அடைந்தது.

''என்னுடைய பிரெண்ட்சுக்கு ஹோட்டலில் லஞ்ச் இருக்கு. நீங்க அதுல கலந்துக்கலாமே?'' என்று அழைப்பு விடுத்தாள் சரண்யா.

''பரவாயில்லை மேடம், எங்களுக்கு வேலை இருக்கு. உங்க எக்சிபிஷன் பற்றிய கட்டுரை நாளைக்கு நியூஸில் வரும்'' என்று சொல்லியபடி காமராவைக் கழட்டி பைக்குள் வைத்தான் தீபக்.

''அங்கிள் நீங்க சொல்லுங்க, இன்னைக்கு இவர் லீவு தானே? மணி இப்போதே பனிரெண்டரை ஆச்சு. உங்களுக்கு இருக்கிற வேலையை சாப்பாட்டுக்கு அப்புறமா பாருங்க. இன்று என்னுடைய பிறந்த நாள் வேறு. இந்த கண்காட்சியே, எங்க அண்ணனோட பிறந்த நாள் பரிசா தான். அதோ, அந்த ஸ்கை ப்ளூ ஷர்ட் போட்டு உயரமா இருப்பது தான் எங்க அண்ணன். அவரை வேணும்னா இன்வைட் பண்ணச் சொல்லட்டுமா?'' என்று சரண்யா வற்புறுத்த தீபக் நெளிந்தான்.

ஏற்கனவே அவன் தன்னை நேரிடையாக ஒரு முறை எச்சரித்து இருக்கிறான். அவன் விருந்துக்கு தன்னை



அழைப்பானா? இவளுக்கு எப்படி அதை எல்லாம் புரிய வைப்பது? சரண்யாவின் உரிமையும், தீபக்கின் விலகலும், கருணாகரனின் கண்ணில் பட்டு கேள்விகள் எழுப்பியது. தனக்காக நடிக்கிறானோ என்ற சந்தேகம் வந்ததும், துப்பு துலக்க முடிவு பண்ணி சரண்யாவிடம் தலை அசைத்தார்.

''என்னுடைய மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள் மிஸ் சரண்யா'' என்று அவளிடம் சொல்லிவிட்டு, ''தீபக், நீ எனக்கு வாங்கி தந்த பென் செட் எங்கே?'' என்று அவனிடம் கேட்டார் கருணாகரன். அதை அவளுக்குப் பரிசாகக் கொடுக்க எண்ணுகிறார் என்பது புரிந்ததால், மறுப்பை தன் கண்களில் கட்டினான் தீபக்.

நீ எனக்குக் கொடுத்ததை நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னால் என்ன செய்ய முடியும் என்ற பாவனையில், அவரே அவன் கையில் இருந்த பையைத் திறந்து, உள்ளே இருந்த சின்ன ஆரஞ்சு வண்ணக் காகிதம் சுற்றிய பார்சலை எடுத்தார்.

'அப்பா, அது வேண்டாம்' என்று சொல்ல முயன்று, கருணாகரனின் முறைப்பில் முகத்தைத் திருப்பி, தலையை அழுந்தக் கோதிக் கொண்டான் தீபக். அவன் என்ன நினைக்கிறானோ, அதற்கு நேர் மாறாய் இன்னொன்று நடக்கிறது? அவர் எடுத்த பார்சல், பேனா இல்லை. அது தங்கை மதுவிற்கு வாங்கிய பிரேஸ்லெட். மதுவின் பேர் இல்லாமல், ''வித் லவ் தீபக்'' என்று கார்ட் இருக்கு. கடவுளே!

அவளையும் இரண்டடி தூரத்தில் வைத்துக் கொண்டு, ''பிறந்த நாள் என்று சொல்லி, தன்னுடன் மதிய உணவு உண்ண அழைக்கும் அவளுக்குப் பரிசு கொடுக்க

வேண்டாம்'' என்று அப்பாவிடம் வாக்குவாதம் நடத்த விருப்பம் இல்லாததால், அவன் முகத்தை திருப்பிக் கொள்ள, ''காட் ப்ளஸ் யூ'' என்று சொல்லி, அந்த பார்சலை அவளிடம் கொடுத்தே விட்டார் கருணாகரன்.

''உங்க பரிசுக்கு நன்றி அங்கிள், ஆனால் உங்க பைய னுக்கு இதில் இஷ்டம் இல்லை போல'' என்று சொல்ல முடியாமல், சின்ன இடைவெளி விட்டு, ''பரவாயில்லை அங்கிள், உங்களுடைய வாழ்த்தே எனக்குப் போதும்'' என்று அதை அவள் வாங்க மறுக்க, கருணாகரன் தீபக்கின் புறம் திரும்பினார்.

''ஹேப்பி பொர்த் டே மேடம், வாங்கிக்கோங்க'' என்று அவன் சொன்ன அந்த வார்த்தை போதுமானதாக இருக்க, அவள் சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டாள்.

அடுத்து கிடைத்த தனிமையில், பிரித்துப் பார்த்த சரண்யாவிற்கு, பரிசைப் பார்த்ததும் 'திக்' என்று இருந்தது. அவன் இங்கே வருவதாக இல்லை. தனக்காக பரிசு வாங்கி வைத்து இருக்க முடியாது, வித் லவ் என்ற அட்டை யுடன், ப்ரேஸ்லெட் வாங்கியது யாருக்காக?

வேறு ஆளுக்கு என்றால், அதைத் தனக்குக் கொடுக்க அவன் எப்படி ஒத்துக் கொண்டான்? விலைமதிப்புள்ள இந்தப் பரிசை, அவன் விருப்பமில்லாமல் தான் வைத்துக் கொள்வது சரி இல்லை. அவனிடமே கொடுத்து விட லாம் என்று அவனை நெருங்கினாள்.

''இந்த பரிசு நீங்க வேற யாருக்காகவோ வாங்கி வச்சு இருக்கீங்க போல. கஷ்டத்துடன் கொடுத்த மாதிரி இருந்தது. நீங்க ஒரிஜினலா ப்ளான் பண்ணினவங் களிடமே கொடுத்துடுங்க. எனக்கு பரிசு வேண்டாம்'' என்று அவனிடமே கொடுத்தாள் சரண்யா.



அப்பா கொடுக்க நினைத்தபோது தயங்கியவன், இப்போது அவளே திருப்பிக் கொடுக்கும் போது அதை வாங்கிக் கொள்ள மனம் வரவில்லை.

''அவங்களுக்கு நான் வேற வாங்கிக் கொடுத்துக்கறேன். அது எங்க அப்பா உங்களுக்காக கொடுத்த பரிசு. வச்சிக் கோங்க'' என்று திரும்பி அவளின் கையில் திணித்தான்.

''இவ்வளவு காஸ்ட்லியான கிப்ட். அதுவும் வித் லவ் வாழ்த்தோடு...'' என்று அவள் மீண்டும் தயங்கினாள். ''யாருக்கு'' என்று கேட்க முடியாமல் இழுத்த சரண்யா வின் மனநிலை அவனுக்குப் புரிந்தது.

''எனக்கு வேண்டியவங்களுக்குத்தான்'' என்று நிறுத்தி, அவளின் முகத்தில் தோன்றிய, அதிர்ச்சியைப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் தொடர்ந்தான் தீபக்.

''மது என்னோட சிஸ்டர், B.B.A. ஃபைனல் இயர் படிக்கிறாள். அவளுக்கு வாங்கினேன்'' என்று சொல்லி விட்டு, அவளின் கோடி சூரியனின் பிரகாசம் ஒன்றாக பூத்த அந்த மலர்ந்த முகத்தை இமைக்காமல் பார்த்தபடி நின்றதை, அங்கே நடந்த இரண்டு நிமிட முழு நாட கத்தை, கருணாகரன் மட்டுமின்றி, விக்ரமும் கவனித்த தால், அவன் முகத்தில் எரிச்சலும், அருகில் இருந்த தார்ஷினி முகத்தில் குழப்பமும் நிலவியது.

''இந்த இடியட் இங்கேயும் வந்து விட்டானா? எத் தனை தடவை சொன்னாலும் அறிவே இருக்காது போல'' என்று முனகிய விக்ரமன் தோளில் கை வைத்து அழுத்தி னாள் தார்ஷினி.

''யாருங்க இவன்? உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா? இவனோட சரண்யா இப்படிச் சிரிச்சு சிரிச்சுப் பேசிட்டு இருக்கிறா?''

''தெரியும் தர்ஷினி. ஒரு பிரஸ் ரிப்போர்ட்டர்...''

''இன்று இரவு பார்ட்டிக்கு லஷ்மிகாந்தன் இவளைப் பார்க்க மலேசியாவில் இருந்து வருகிறான். அவங்க அம்மா அப்பாகிட்டே சொல்லிட்டீங்களா இல்லையா?''

''இன்னும் சொல்லலை. ஒரு சர்ப்ரைஸ் என்று சொல்லி இருக்கேன்...''

''நீங்க மாப்பிள்ளை பற்றிய விபரம் உங்க சித்தப்பாவிடம் சொல்வதற்குள்ள அவங்க கல்யாணமே முடிச்சுடுவாங்க போல. உங்க சித்தப்பாவிடம் நானே சொல்றேன்...'' என்று நடந்தாள் தர்ஷினி.

''தர்ஷினி... நில்லு... சித்தப்பா கொஞ்சம் ஷார்ட் டெம்பர்ட். நேரம் பார்த்துச் சொல்லணும். நானே சொல்றேன்...'' என்று பின் தொடர்ந்த விக்ரமைப் பார்த்து புன்னகை செய்தாள்.

''யாரிடம் எப்படிப் பேசணும் என்று எனக்குத் தெரியும். அவங்க குடும்பத்து மேலே நாம் வச்சு இருக்கும் அக்கறையினாலே தானே சொல்றோம். நான் பார்த்துக்கறேன்...'' என்று அவன் வாயை அடைத்து விட்டு ராமலிங்கத்திடம் சென்றாள் தர்ஷினி.

''வாம்மா தர்ஷினி. கண்காட்சியும் மதிய விருந்தும் பிரமாதமா ஏற்பாடு பண்ணி இருக்கிறாய். நானே உன்னைப் பாராட்டணும் என்று நினைத்தேன். நீயே வந்து விட்டாய். சாப்பிட்டாயாம்மா?'' என்று அக்கறையாக மலர்ந்த முகத்துடன் விசாரித்தார்.

''என்ன மாமா, நம்ம வீடு. நம்ம சரண்யா. அவளுக்கு ஒரு காரியம் என்றால் நான் செய்யாமல் வேறே யார் செய்வா? நீங்க சாப்பிட்டீங்களா மாமா? சாப்பாடு எப்படி



இருந்தது?'' என்று சொல்ல ராமலிங்கம் மேலும் குளிர்ந்தார்.

''சாப்பாடு பிரமாதமா இருந்தது. அதைவிட, நம்ம வீடு. நம்ம சரண்யா என்று நீ பேசுவதைக் கேட்க ரொம்பப் பிரமாதமா இருக்கு தர்ஷினி. விக்ரம் அவங்க வீட்டுக்கு மட்டுமில்லை எங்க வீட்டுக்கும் செல்லப் பிள்ளை. அவனை மாதிரியே நீயும் வித்தியாசம் பார்க்காமல், சரண்யா மேலே அக்கறை காட்டுறது ரொம்ப சந்தோஷமா இருக்கு. எதிர்காலத்தில் எங்களுக்குப் பிறகும் இதே மாதிரி அக்கறையும் பாசமும் தொடரணும்'' என்று பெருமையாகச் சொல்ல முறுவலித்தாள்.

''நான் நினைச்சேன். நீங்க சொல்லிட்டீங்க. ஏற்கனவே உங்க பையன் உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் இருக்கு என்று சொன்னாராமே? அது என்ன என்று தெரியுமா மாமா?''

''தெரியலையேம்மா! நீதான் சொல்லேன்...''

''எங்க மாமா பையன் மலேஷியாவில இருக்கார். அவங்க யாருமே கல்யாணத்திற்கு வரலை. எங்க கல்யாண வீடியோ அனுப்பி இருந்தேன். அதுல நம்ம சரண்யாவைப் பார்த்துட்டு, இந்த பொண்ணு யார் என்று மாமா விசாரித்தார். அவருக்கு சரண்யாவை தன் பையனுக்குக் கல்யாணம் பண்ண ஆசை. அவரும் அவர் பையனும் சென்னைக்கு வராங்க. நம்ம சரண்யா பெர்த்டே பார்ட்டி டின்னருக்கும் வரச் சொல்லி இருக்கேன். பாருங்க. பேசுங்க. உங்களுக்குப் பிடிச்சு இருந்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்...''

''ஓ! சரண்யா இன்னும் படிப்பையே முடிக்கலை. அதுக்குள்ளே வரன் வர ஆரம்பிச்சுடுச்சா? கொஞ்சம் தள்ளிப் போடலாமேம்மா...''

''எங்க காலத்துக்குப் பிறகும் ஒற்றுமையா இருக்கணும் என்று சொன்னீங்களே! அதுக்காக தான் இந்த மாதிரி ஒண்ணுக்குள்ளே ஒண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக் கொண்டால் நல்லா இருக்குமே என்று நினைத்தேன். நீங்க முதலில் பையனைப் பாருங்க. பிடிச்சு இருக்கா என்று சொல்லுங்க. மிச்சம் அப்புறம் பேசிக்கலாம்'' என்று அவள் சொன்னது ராமலிங்கத்தின் மனதைக் குளிர்வித்தது.

''விக்ரம் மாப்பிள்ளையைப் பார்த்து இருக்கானா?'' என்று விசாரித்தவரின் குரலில் லேசான தயக்கம் தெரிந்தது.

''பார்த்தது இல்லை மாமா. ஆனால் போனில் பேசி இருக்கார். அவர் பிசினஸ் விபரம் தெரியும். நீங்கதான் நேரிலே பார்க்கப் போறீங்களே. நீங்க சொல்றதுதான் ஃபைனல் மாமா'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல அவர் தெளிந்தார்.

''நீ சொன்னால் சரியாத்தான் இருக்கும் தர்ஷினி. பார்த்துப் பேசி முடிச்சுடலாம்'' என்று அவர் சொன்ன வினாடியில் தர்ஷினியின் முகம் மலர்ந்தது.

* * *

மலேஷியாவில் வசித்தாலும், தன் மகனுக்கு இந்திய கலாச்சாரத்தை மதிக்கும் தமிழ் பெண்ணை மருமகளாக்க ஆசைப்பட்டு, சென்னைக்கு மகனை அழைத்து வந்தார் கோபாலகிருஷ்ணன்.

பார்ட்டி, க்ளப், என்று மூதாதையர்கள் சேர்த்து வைத்த சொத்தைக் கரைப்பதில் தன் நேரத்தைச் செலவழிக்கும் தன் மகனை, ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த தைரிய



மான புத்திசாலியான பெண் தான் வழிக்குக் கொண்டு வர முடியும் என்று முடிவெடுத்தார். தர்ஷினி திருமண வீடியோவில் பார்த்த சரண்யாவை, அவளின் பிறந்த நாள் விழாவில் பெண் கேட்க மகனோடு சென்னை விஜயம் செய்து இருந்தார்.

''டேய். இந்தப் பெண்ணை உனக்குப் பார்க்கலாம் என்று முடிவு பண்ணி இருக்கிறேன். உன்னுடைய வேண்டாத சகவாசங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு நல்ல பையனா நடக்க பாரு...'' என்று மகனுக்குச் செய்த உபதேசங்கள் விழலுக்கு இறைத்த நீராகியது.

அப்பா திருமணம் பற்றி அவனுக்கு கோடி காட்டிய போது அவனுக்கு அதில் ஆர்வம் இல்லை. சீனத்து பாணி பெண்களைப் பார்த்தவனுக்கு, ஒரு மாறுதலுக்குக் கொஞ்சம் தமிழ் பெண்களைப் பார்க்கலாம் என்ற ஆசையினால், அப்பாவுடன் பயணித்த லஷ்மிகாந்தனுக்கு, ''தத்து பித்துன்னு எதையாவது அந்தப் பெண்ணிடம் உளறி வைக்காதே...'' என்ற ரீதியில் அப்பா விடாமல் பேசிய வசனங்கள் சலிப்பூட்ட அறையில் இருந்து வெளியே வந்தான்.



## 9

காலை முதல் நடைபெற்ற கண்காட்சியில் எளிமையான உடையில் இருந்த சரண்யா, அதே ஹோட்டலில் நடைபெற இருந்த விருந்திற்காக அங்கேயே தனக்கென பதிவு செய்யப்பட்டு இருந்த தனி அறையில், தயாராகிக் கொண்டு இருந்தாள். 'சீக்கிரம் வா' என்று இரண்டு முறை அம்மாவிடம் இருந்து அழைப்பு வந்து விட்டது.

அம்மாவின் விருப்பத்திற்காக, தாமரைப் பூ வண்ண உடலில் வெள்ளி ஜரிகைகள் கோலமிட்ட அழகான பட்டுப் புடவை அணிந்து, பொருத்தமான நகைகளுடன் கிளம்பியவள் கைகளில் மதியம் தீபக் கொடுத்த ப்ரேஸ்லெட் கொலுவிருந்தது. அவசரமாகக் கிளம்பி, லிஃப்டில் ஏற வந்தவளிடம் இருந்து வந்த இதமான வாசனை, அப்பாவின் அறுவையில் இருந்து தப்பித்து வந்த லஷ்மிகாந்தனை ஈர்த்தது.

'ஹேய் பியூட்டி...' என்று உல்லாசமாக அழைத்தான்.

அவனின் அந்த அழைப்பும், கண்களில் தெரிந்த ஆசையும் அவன் யார் என்று தெரியாமலே சரண்யா விற்கு எரிச்சலை உண்டு பண்ணியது. முன் பின் தெரியாதவர்களிடம், எதற்கு வம்பு என்ற எண்ணத்தில், ''வரீங்களா?'' என்று கேட்டாள் சரண்யா.

நாகரீகம் கருதி சரண்யா சொன்ன வாசகத்தை தப்பாக அர்த்தம் செய்து கொண்டவன், ''நீ கூப்பிட்ட பிறகும் வராமல் இருப்பேனா?'' என்று லிஃப்டில் வந்து சேர்ந்து கொண்டான்.

எதற்கு சொன்ன வார்த்தையை எப்படி அர்த்தம் செய்து கொள்கிறான்? இடியட் என்று வசைமொழிப் பொழிந்தவள் கண்கள் தீபக் தந்த பரிசில் பதிந்தது. கூடவே அவன் சொன்ன, 'பரவாயில்லை வச்சுக்கோங்க...' என்ற மரியாதையான வார்த்தைகளும் நினைவு வந்தது.

இவனானால் மரியாதை என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பான் போல? மூன்று தளங்களை கடக்கத் தேவையான முப்பது விநாடிகளைக் கடக்க வேண்டுமே என்று இழுத்து ஒட்ட வைத்த புன்னகை



யுடன், அவன் புறம் திரும்பாமலே, லிஃப்டின் ஒரு ஓரத்தில் தவிப்பாக நின்றாள் சரண்யா.

மூன்றாம் நபர் கடைப்பிடிக்க வேண்டிய நாகரீகமான இடைவெளி குறித்த எந்தக் கவலையும் இன்றி அவளை உரசுவது போல நின்று, 'உன் போட்டோக்கள் உனக்குக் கொஞ்சமும் நியாயம் செய்யவில்லை ஸ்வீட் ஹார்ட்' என்று காதுக்குள் ரகசியம் பேச அவளுக்கு மூச் சடைத்தது.

''மிஸ்டர் யார் நீங்க? என்ன உளறல் இது? முதலில் கொஞ்சம் தள்ளி நின்று பேசுங்க'' என்று ஒரு கையால் அவளை தள்ளி விட்ட போது லிஃப்ட் கதவு சொர்க்க வாசல் போல திறந்து சரண்யாவை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தது.

தன்னைத் தள்ளி விட்ட அவளின் கையை இறுக்க மாக பற்றி, தன் நெஞ்சோடு வைத்து அழுத்தியபடி லிஃப்டை விட்டு வந்த காட்சி சற்று தொலைவில் இருந்த விக்ரம் - தர்ஷினி கண்களில் பட்டது.

''நாம் அறிமுகப்படுத்தி வைப்பதற்கு முன்பே அவர்கள் அறிமுகமாகி விட்டார்கள் பார்த்தீர்களா?'' என்ற தர்ஷினியின் முகத்தில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

''வந்து இரண்டு மணி நேரம் தானே இருக்கும். அதற் குள் எப்படி...?'' என்று கேட்ட விக்ரமிற்கு ஏதோ நிரடியது.

''அதான் அண்ணனோட சிறப்பு ரொம்ப ஜோவியல் தெரியுமா?''

''தர்ஷினி, சரண்யா சித்தப்பா பொண்ணு என்று கம்மியா நினைத்து விடாதே. எனக்கு தங்கை. உங்க அண்ணன் எப்படி?'' என்று இழுத்தான்.

''நல்லவன் தான். நல்ல குடும்பம். இன்னிக்கே கல்யாணம் முடிக்கப் போவதில்லை விக்ரம். இரண்டு குடும்பமும் முடிவு பண்ணி தானே கல்யாணம் நடக்கப் போகுது. நாம் பிள்ளையார் சுழி போட்டோம். அது நல்லபடியா முடியட்டும் என்ற ஆசைதான்'' என்று சொல்ல, ஒப்புதலாக தலை அசைத்த விக்ரமின் பார்வையில், சரண்யாவிடம் பேசிக் கொண்டு இருந்த லஷ்மி காந்தன் பட்டதும் சிரிப்பு நின்றது.

''ஹாய் சரண்யா, உனக்கு லஷ்மிகாந்தன் சாரை ஏற்கனவே தெரியுமா?'' என்று விசாரித்தபடி அருகில் வந்த விக்ரமைக் கண்டதும் சரண்யாவிற்கு குழப்பம் வந்தது.

''விக்ரம், இவரைத் தெரியுமா?''

''தர்ஷினிக்கு ரிலேடிவ்மா. உன்னைப் பார்க்க மலேசியாவில் இருந்து வந்து இருக்கிறார்'' என்ற பதிலில் அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

''பார்ட்டிக்கு வந்து இருக்கிறார் போல. அண்ணி கெஸ்ட் என்றால் நல்லா கவனிச்சு அனுப்பு'' என்று பட்டும் படாமல் சொல்லி விட்டு அந்த இடத்தில் இருந்து சரண்யா நகர, விக்ரம் அவளைத் தொடர்ந்து சென்று விடாமல் விசாரித்தான்.

''இங்கே பாரு சரண். கல்யாணம் என்பது ரொம்ப பெரிய விஷயம். அதற்குரிய ஆளை தேர்ந்தெடுக்கும் முன்னால், அவனைப் பற்றி பல முறை யோசிக்கணும். அவன் நல்லவனா இருக்கும் பட்சத்தில் நானே சித்தப்பாவிடம் உனக்காகப் பேசுவேன். வெறும் ஈர்ப்புக்கும், காதலுக்கும் உரிய வித்தியாசத்தை உணர்ந்த பிறகு சொல்லு...''



''விக்ரம் நான் டீன் ஏஜ் பெண் இல்லை. காதலுக்கும் ஈர்ப்புக்கும் இருக்கும் வித்தியாசம் எனக்கும் தெரியும். அதை விட முக்கியம். நல்ல மனம் படைத்தவர்களுக்கும், வழியுறவங்களுக்கும் இருக்கும் வித்தியாசம் எனக்கு ரொம்ப நல்லாவே தெரியும்...''

''சரண், நீ புத்திசாலிதான். ஆனாலும் உலக அனுபவம் போதாது. பார்த்து இரண்டு மணி நேரத்தில், ஐ லவ் யூ என்று கதை விடும் ஆட்களையோ, சும்மா உன்னைச் சுத்திச் சுத்தி வந்து, பூ பொருள் என்று சின்னச் சின்ன பரிசுகளைக் கொடுத்து உன்னை வளைக்க நினைக்கும் ஆட்களை எல்லாம் காதலிக்கவோ, கல்யாணம் பண்ணிக் கொள்ளவோ தேவை இல்லை'' என்று தீபக், லஷ்மிகாந்தன் இருவரையுமே மனதில் வைத்து அழுத்தமான குரலில் சொன்னான் விக்ரம்.

''விக்ரம், என்மேலே வைத்து இருக்கும் அக்கறையில் சொல்கிறாய் என்பது புரியுது. ஆனால் எனக்கும் கொஞ்சம் ஆட்களை எடை போடத் தெரியும். தனி மனிதர்களின் குணாதிசயங்களை விட. அவர்களின் குடும்பம் எப்படி என்று பார்த்துத்தான் கல்யாணம் போன்ற முக்கியமான முடிவை எடுக்க வேண்டும் என்பதும் புரியும்...''

''அதை தான் நானும் சொல்ல வந்தேன். கல்யாண விஷயத்தை நீ சித்தப்பா சித்தியிடம் விட்டு விடு. அவசரப்பட்டு நீயாக எந்த முடிவும் எடுத்துவிட வேண்டாம்...''

''எனக்கு அப்பா அம்மா மேல நம்பிக்கை இருக்கு. அவங்க எனக்கு எப்போதும் நல்ல வழி காண்பிப்பாங்க என்ற உறுதி இருக்கு. அவங்களை மீறி நான் எப்போதும்

யார் பின்னாலும் செல்ல மாட்டேன். நீ அனாவசியமா கவலைப்படாதே'' என்று முடிவாகச் சொல்லி விட்டு நகர்ந்தாள் சரண்யா.

பிறந்த நாள் விழா முடிந்து காரில் விக்ரம் - தர்ஷினியையும் உடன் அழைத்துக் கொண்டு, மனைவி மகளுடன் வீட்டிற்குத் திரும்புகையில், ''பார்ட்டி நல்லா போச்சா?'' என்று மகளை விசாரித்தார் ராமலிங்கம்.

''சூப்பரா இருந்ததுப்பா. நிறைய பிரெண்ட்ஸ், நிறைய பரிசுகள். விக்ரம் கொடுத்த சர்ப்ரைஸ் கிப்ட்...'' என்று சந்தோஷமாகச் சொன்னாள் சரண்யா.

விக்ரம் கொடுத்த கிப்ட் என்று ஓவிய கண்காட்சியை சரண்யா சொல்ல, அதை லஷ்மிகாந்தன் என்று நினைத்த ராமலிங்கம், ''விக்ரம், தர்ஷினியோட மாமா பையன் அந்த லஷ்மிகாந்தன் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று விசாரித்தார்.

''எ..ன்..ன..ப்..பா கேட்கறீங்க?''

''சரண்யா, அந்த பையனையும், அவங்க அப்பாவையும் பார்த்தேன். பேசினேன். நல்ல குடும்பம் மாதிரி தெரியுது. உனக்கு ஓகே என்றால் கல்யாணம் பண்ணலாமா என்று யோசிக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'' என்று மகளிடம் கேட்டார் ராமலிங்கம்.

பார்த்த உடனே திருமணம் வரை அப்பா பேசுவார் என்பதை சரண்யா எதிர்பார்க்கவில்லை. தர்ஷினியின் உறவினர் என்பதால் அவள் மனம் நோகும்படி அவளின் முன்னிலையிலேயே செல்ல வேண்டாமே!

''கல்யாணத்திற்கு இப்ப என்னப்பா அவசரம்? படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் இருக்கே! அப்புறமா பார்க்கலாம்பா...''



''படிப்புக்கும் கல்யாணத்திற்கும் சம்பந்தம் இல்லை சரண்யா. உனக்காக அவர் சென்னைக்கே நிரந்தரமாக வரவும் தயாராக இருக்கிறார். அதை அவரே என்னிடம் சொன்னார். உன்னை அவருக்கு அவ்வளவு பிடித்து இருக்காம்'' என்று பெருமையாகச் சொல்ல, அதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் விழித்தாள் சரண்யா.

''இந்து, நீ என்ன நினைக்கிறாய் என்று சொல்லு'' என்று மனைவியிடம் கவனத்தை திருப்பினார் ராமலிங்கம்.

''இதெல்லாம் ஓடும் காரில் பேசும் விஷயம் இல்லை. எல்லோரும் களைப்பா இருப்பாங்க. நாளைக்கு நிதானமா பேசலாமே?'' என்று தள்ளிப்போட, பேச்சு அப்போதைக்கு நின்றாலும், வீட்டிற்கு வந்த உடனே அவர்களின் தனி அறையில் தொடர்ந்தது.

''காரில் பேச வேண்டாம் என்று சொன்னாய், விட்டு விட்டேன். இப்ப சொல்லு அந்தப் பையனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று மீண்டும் ஆரம்பிக்க அவர் நிதானமாக கணவனை நோக்கினார்.

''இப்ப எதுக்கு அந்தப் பையன் பற்றி இப்படி நோண்டி நோண்டிக் கேட்கறீங்க? என்ன விஷயம்?''

''அந்தப் பையனை சரண்யாவுக்கு பண்ணனும் என்று தர்ஷினி ஆசைப்படுகிறாள்...'' என்ற ராமலிங்கத்தின் குரலில் கோபம் இருந்தது.

அந்தக் கோபமே இந்திராணிக்கு எரிச்சல் மூட்ட, ''தர்ஷினி ஆசைப்பட்டால் போதுமா? பொண்ணு மாப்பிள்ளை விருப்பம் தேவை இல்லையா?'' என்று வேகமாகக் கேட்டார்.

''என்ன பேச நினைக்கிறாயோ அதை நேரே சொல்லு. இப்படி ஊரைச் சுத்தி வளைக்காதே. எனக்குப் புரியாது. பிடிக்காது...''

''எனக்கு அந்தப் பையனைப் பார்த்தால் அல்ட்ரா மாடர்ன் போலத் தோன்றியது. ரொம்ப பவ்யமா கூழைக் கும்பிடு போட்டதும் எனக்குத் திருப்தி இல்லை. நடிக் கிறானோ என்ற சந்தேகம் வந்தது...''

''ப்ச்! உன் பெண்ணைப் பிடித்ததனால், உன்னிடம் கனிவாகப் பேசினால், அதை உடனே கூழைக் கும்பிடு என்பாயா? உன்னிடம் நடித்து அவனுக்கு என்ன ஆகப் போகிறது? சொல்லு பார்க்கலாம்...''

''நீங்க எப்போதுமே பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்று பேசும் ஆள். உங்களிடம் என்னால் விவாதம் செய்ய முடியாது. ஆனால் பொண்ணு கல்யாணம் அவள் இஷ்டப்படி, அவளின் சம்மதத்துடன் தான் நடக்கணும். இதுல தர்ஷினி விக்ரம் மட்டும் இல்லை. நம்ம ரெண்டு பேருக்குக் கூட தலையிட உரிமை இல்லை'' என்று தீர்மானமாகச் சொன்னார் இந்திராணி.

''இவ்வளவு வேகமா மறுக்கிறாய்! உன் பொண் ணுக்கு, நீ வேறே மாப்பிள்ளை பார்த்து வைத்து இருக் கிறாயா?''

''ஏங்க உங்க புத்தி இப்படி எல்லாம் குறுக்கே வேலை செய்கிறது? இந்த இருபத்தி அஞ்சு வருஷத்தில், உங் களை மீறி ஏதாவது செய்து இருக்கேனா? இனிமேலும் செய்ய உத்தேசம் எனக்கு இல்லை. ஆனால் நமக்கு இருப்பது ஒரே பொண்ணு. அவளின் சந்தோஷம் முக் கியம். கௌரவம், உறவு, நட்பு, சொத்து, சுகம் என்று



எதைக் காட்டியும் அதை கெடுத்து விடக் கூடாது என்பதைத்தான் சொல்ல வந்தேன். மற்றபடி நீங்களாச்சு. உங்க பொண்ணாச்சு. நல்ல மாப்பிள்ளையா பார்த்து முடிவு பண்ணுங்க. எனக்கு ஆட்சேபணை இல்லை...'' என்று முடித்து விட்டுப் படுத்து விட்டார் இந்திராணி.



# 10

சரண்யாவின் பிறந்த நாள் விழா முடிந்து ஹோட்டல் அறைக்குத் திரும்பிய கோபாலகிருஷ்ணன், அடுத்த இரண்டு தினங்களில், மலேசியாவிற்குத் திரும்ப விமான டிக்கெட் கிடைக்குமா என்று விசாரிக்க அவரை மறுத்து இடையிட்டான் லஷ்மிகாந்தன்.

''என்ன அவசரம்? இன்று தானே வந்தோம். மெல்லக் கிளம்பலாமே?'' என்று கேட்க அவரின் கண்கள் விரிந்தது.

''லஷ்மி, நிஜமாவா சொல்கிறாய்?''

சாதாரணமாக லஷ்மி என்று அழைத்தால் தன் மீது வெறி கொண்டு பாயும் மகன் இன்று அதைக் கண்டு கொள்ளாமல் ஒதுக்கி, ''எஸ் டாட். குறைந்த பட்சம் இன்னும் பத்து நாளாவது தங்கி விட்டுப் போகலாம்'' என்று சொன்னவன் கண்களில் சரண்யா பற்றிய மயக்கம் இருந்தது.

''என்ன இப்படி பிரமை பிடிச்ச மாதிரி நிக்கிறீங்க? நீங்க ஏற்கனவே சொன்னதை தானே திருப்பிச் சொன் னேன். தர்ஷினி மாமனாரிடம் பேசி, அந்தப் பெண்ணை

உ..ட..னே.. இந்த பத்து நாளிலேயே நிச்சயம் பண்ணிடுங்க. அவள் எனக்கு வேண்டும்'' என்று சொன்ன தொனியில் ஏதோ உறுத்தினாலும், சரண்யாவின் மேல் இருந்த நம்பிக்கை அவரைத் தலை அசைக்க வைத்தது.

மறுநாள் காலை எட்டு மணிக்கு ராமலிங்கத்திற்கு போன் பண்ணி, தன் மகனின் விருப்பத்தைத் தெரிவித்தார்.

''நேற்று இரவு நான் என் மனைவியிடம் பேசி விட்டேன். இரண்டு வாரம் சென்னையில் இருப்பீங்க தானே? என் மகளிடம் பேசி விட்டு உங்களுக்குச் சொல்கிறேன். தர்ஷினி உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள்'' என்று உறுதி அளித்த ராமலிங்கத்தின் குரல் சரண்யாவின் மனதில் முதன் முறையாக அச்சத்தை உண்டாக்கியது.

''என்ன சரண்! போனில் மிஸ்டர் கோபாலகிருஷ்ணன் தான் பேசினார். அவர் பையனுக்கு உன்னை கேட்கிறார். உனக்குப் பிடிச்சு இருக்கா என்று நீ தான் சொல்லணும்...'' என்று அவளின் அருகே வந்து அமர்ந்தார் ராமலிங்கம்.

''அப்பா... அது... எனக்கு இப்பக் கல்யாணம் வேண்டாம். நான் படிப்பை முடித்து விடுகிறேனே...'' என்று தடுமாறினாள் சரண்யா.

''நேற்று இந்தப் பேச்சை ஆரம்பித்த போது நான் கூட நீ சொன்ன இதே வாக்கியம் தான் சொன்னேன். தர்ஷினியும் விக்ரமும் தான், சந்தர்ப்பம் சரியா அமையும் போது, மிஸ் பண்ணிடக் கூடாது என்று சொன்னாங்க. உனக்கு அவரைப் பிடிக்கலையா...'' என்று குழப்பத்துடன் விசாரித்தார்.



''பிடிச்சு இருக்கு என்பதற்கும், கல்யாணம் பண்ணிக்கலாம் என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்குப்பா...''

''சரண்யா, சுத்தி வளைக்காமல் நேரடியா பதில் சொல்லு. நீ வேறே யாரையாவது கல்யாணம் பண்ணணும் என்று இருக்கிறாயா?''

''என்னப்பா, திடீர்னு இப்படிக் கேட்கறீங்க? என் மேலே நம்பிக்கை இல்லையாப்பா?'' என்று திணறியவளுக்கு தீபக் பற்றி அப்பாவிடம் பேச்செடுக்க இன்னும் தயக்கம் இருந்தது.

முதலாவது அவனிடமே இன்னும் தான் பேசவில்லை. இரண்டாவது அவன் தங்கை இன்னும் படிப்பை முடிக்கவில்லை என்று சொன்னான். வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு, காதல் திருமணத்திற்கு அவன் ஒத்துக் கொள்வதும் அவனின் குடும்ப சூழலை வைத்து பார்த்தால் சந்தேகமே! இன்னும் ஒரு வருடம் போகட்டும். அதற்குள் இன்னும் என்னென்னவோ நடக்கலாம்.

''நீ இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்லலை'' என்று அதே கேள்வியில் நின்று கணக்கு வாத்தியார் என்பதை நிரூபித்தார்.

''இப்போதைக்கு அந்த மாதிரி எண்ணம் எதுவும் இல்லைப்பா...'' என்று சொன்ன சரண்யாவிற்கு இந்தத் திருமணப் பேச்சை அந்த லஷ்மிகாந்தன் மூலமாக நிறுத்தினால் என்ன என்று தோன்றியது.

'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லும்போது யாராவது தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவார்களா?' என்று எண்ணிய சரண்யா

விற்கு. நான் சாதாரணமான ஆள் இல்லை என்று அவள் கல்லூரி வாசலில் நிரூபித்தான் லஷ்மிகாந்தன்.

''ஹாய் ஸ்வீட்டி, கிளாஸ் எப்படிப் போச்சு?'' என்ற கேள்வியுடன், அவனைக் கண்டதும் சரண்யாவிற்கு ஒன்றுமே புரியவில்லை.

இவன் எங்கே இங்கே வந்தான்? எதற்கு வந்து இருந்தாலும் சரி. தான் இவனிடம் சொல்ல நினைத்ததைச் சொல்லி விடலாம் என்று முடிவு செய்தவள். ''ஹலோ...'' என்று மட்டும் கூறினாள்.

''என்னைக் கண்டதும் அப்படியே பிரீஸ் ஆகி நின்று விட்டாய்? கனவா நனவா என்று தானே குழம்பிக் கொண்டு இருக்கிறாய்? நான் வேண்டுமானால் கிள்ளி... நோ... நோ... உன் பட்டு போன்ற சருமத்தைக் கிள்ளுவதா? வருடிக் காட்டட்டுமா?''

''என்ன விஷயமா வந்தீங்க?''

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். கிளாஸ்ல நடத்தின பாடம் எதுவுமே மனசுல பதிந்து இருக்காதே? கலர் கலரா கல்யாணக் கனவுகள் வந்ததா?'' என்றவன் கன்னத்தில் ஓங்கி ஒரு குத்துவிடத் தோன்றிய உணர்வை மறைத்தாள்.

''நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். அப்படி அந்த மரத்தடியில் உட்கார்ந்து பேசலாமா?''

''ப்ச்! நோ மை டியர். நீயும் நானும் பேசும் இடம் தனியா இருக்க வேண்டாமா?'' என்றவன் பார்வை தன் மேல் பதிந்த விதத்தில் சரண்யாவுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

''காண்டீன் போகலாமா?''



''நான் உன்னை ஸ்டார் ஹோட்டல் அழைத்துப் போகிறேன். என் அப்பா கூட உன்னிடம் பேசணும் என்று சொன்னாங்க. நேற்று உன் பிறந்த நாள் விழா நடந்த ஹோட்டலுக்கே போகலாமா? கம்...'' என்று கை பற்றி இழுத்தான்.

''கையை விடுங்க, நானே வருகிறேன்'' என்று விலக முயற்சித்தாலும், விடாமல் தான் வந்த காருக்கு கைபற்றி அழைத்துச் சென்றதை, பார்த்த அந்த வழியில் சென்ற கருணாகரன் ஜீப்பை அந்த வண்டியைப் பின் தொடரச் சொல்லி உத்தரவிட்டார்.

தீபக்கின் அன்பிற்குரிய ஒரு பெண். அவளுக்குப் பிடிக்காத ஒரு சம்பவம் நடப்பது தெரிந்த பிறகு, ஒரு காவல்துறை அலுவலராக வேடிக்கைப் பார்க்க முடியவில்லை. வாகனத்தைத் திருப்பச் சொன்னதும் அருகே அமர்ந்து இருந்த அபிராமியும் மதுமதியும் வியப்புடன் அவரைத் திரும்பிப் பார்த்தனர்.

''என்னப்பா? பீச்சுக்கு நேரே தானே போகணும்? ஏன் வண்டியைத் திருப்பச் சொல்றீங்க?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் மதுமதி.

''பக்கத்துல இருக்கும் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுகிறேன் மது. பஸ் பிடிச்சு பீச் போனாலும் சரி. இல்லை ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போனாலும் சரி. நான் அந்தக் காரை பின் தொடர்ந்து போகணும்'' என்று சொன்னவரின் குரலில் குழப்பம் இருந்தது.

''அந்தக் காரில் யார் இருக்காங்கப்பா?''

''நேற்று உனக்கு வாங்கிய ப்ரேஸ்லெட்டை, ஒரு பெண்ணுக்குப் பிறந்த நாள் பரிசா கொடுத்தேன்'' என்று சொன்னேனே...''

''ஓ! யா! யா! ஞாபகம் இருக்கு. ச..ர..ண்..யா... ஓவியர். தீபக்கிற்குப் பிடித்தவர். கரெக்டா...?'' என்று மதுமதி கேட்க அபிராமி இடையிட்டார்.

''மது சொல்றது எல்லாம் சரி. எங்களை பாதியில் இறக்கி விட்டுட்டு அந்தப் பெண்ணை நீங்க ஏன் பாலோ பண்றீங்க? யாராவது உங்களிடம் கம்ப்ளைன்ட் கொடுத் தாங்களா?'' என்று கணவனைக் கேட்டார் அபிராமி.

''கம்ப்ளைன்ட் கொடுத்தால் மட்டும் தான். நட வடிக்கை எடுக்கணும் என்று ஒரு நல்ல போலீஸ்காரன் கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியாது அபி. என்ன என்று எனக்கு சொல்லத் தெரியலை. ஆனால் ஏதோ சரியில்லை என்று உள்ளுணர்வு சொல்லியது...'' என்ற கருணாகரனைப் பார்க்க அபிராமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நாங்க ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போய் விடு வோம். ஆனால்...'' என்று தயங்கி நிறுத்தினார் அபிராமி.

''ஆனால்... என்ன?'' திருப்பிக் கேட்டார் கருணாகரன்.

''உள்ளுணர்வு சரியில்லை என்று சொன்னதால் அவர்களுக்கிடையே போய் மூக்கை நுழைக்க வேண் டாம். தேவைப்பட்டால் மட்டும் உதவி பண்ணுங்க...''

''நீ சொன்னதை கவனத்தில் வைத்துக் கொள்கிறேன். தீபக்கை போன் பண்ணி குவார்ட்டர்சுக்கு வரச் சொல்லி விடு. நானும் சீக்கிரம் வர முயற்சி செய்கிறேன்'' என்று மனைவியையும் மகளையும் இறக்கி விட்ட பின்பு, சரண்யா சென்ற காரை பின் தொடர்ந்து, 'மூன் லைட்' ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார் கருணாகரன்.

* * *



காபி ஷாப்பில் ஒரு ஒதுக்குப் புறமான மேஜையைத் தேர்ந்தெடுத்து அமர்ந்த அடுத்த வினாடியே, ''மிஸ்டர் லக்ஷ்மிகாந்தன். உங்களுக்கும் எனக்கும் திருமணம் செய்வதாக ஒரு பேச்சு ஓடுகிறதே? அது உங்களுக்குத் தெரியுமா?'' என்று பேச்சை ஆரம்பித்தாள் சரண்யா.

''அதெப்படி தெரியாமல் இருக்கும்? நான் சொல்லித் தான் எங்க அப்பா உங்க அப்பாவிடம் பேசினார். கல்யாணமே பண்ணிக் கொள்ள வேண்டாம் என்று இருந்த என்னை மாற்றி கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்து இருக்கிறாய் ஸ்வீட்டி...''

''ஸ்வீட்டி ஸ்வீட்டி என்று சொல்வதை நிறுத்துறீங் களா ப்ளீஸ்...''

''ஸ்வீட்டி வேண்டாம் என்றால் டார்லிங் ஓகேயா டியர்?'' என்று வழிந்தவனை என்ன சொல்லித் தடுப்பது என்று புரியாமல் ஒரு ஆத்திரப் பெருமூச்சை வெளி யேற்றினாள் சரண்யா.

''இங்கே பாருங்க. நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம்... ப்ச்! நீங்க எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்...''

''உதவியா? என்ன உதவி சொல்லு செஞ்சுடலாம். தமிழ்நாட்டை விட்டு வர இஷ்டம் இல்லை என்று சொல் கிறாயா? இல்லை இப்போதே இருவரும் மலேசியா பறந்து போய் விடலாம் என்று சொல்கிறாயா? ரெண்டுக் குமே நான் ரெடி.''

''அதில்லை மிஸ்டர்... என்னை...''

''ஹேய் மிஸ்டர் எதுக்கு? கால் மீ காந்தன். ஆனால் இந்த பேர் என்னை விட உனக்குத்தான் பொருத்தமா

இருக்கும் என்று தோன்றுகிறது...'' என்று குழைந்தபடி அவளின் கைகளைப் பற்ற முயல அவள் அவசரமாக விலக்கிக் கொண்டாள்.

''என்னைக் கொஞ்சம் பேச விடுறீங்களா? உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டம் இல்லை...''

''எங்க அப்பா கேட்டபோது எனக்குக் கூடத்தான் இஷ்டம் இல்லை. ஆனால் இப்போ...?'' என்று உல்லாசமாகச் சிரித்தவன் கழுத்தை நெரிக்க வேண்டும் போல இருந்தது.

''அது உங்க கவலை சார். எனக்கு உங்களைப் பிடிக்கலை. உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. அவ்வளவுதான்...'' என்று எரிச்சலோடு சொன்ன வினாடியில் அவன் முகம் சுருங்கியது.

''உனக்கு என்னை ஏன் திருமணம் செய்து கொள்ள இஷ்டம் இல்லை என்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''நான் வேறு ஒருத்தரை விரும்புகிறேன்...'' என்ற முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு சொன்னாள் சரண்யா.

''அதனால் என்ன? நான் கூட பல பெண்களுடன் பழகி இருக்கிறேன். அவர்களில் நிறைய பேரை எனக்கு ரொம்பப் பிடித்து இருந்தது'' என்று லஷ்மிகாந்தன் சொல்லத் திகைத்துத் திரும்பினாள் சரண்யா.

''ஹேய் என்ன அப்படிப் பார்க்கிறாய்? விருப்பம் என்றால் எந்த அளவுக்குப் போனது? நீ இவ்வளவு யோசிப்பதைப் பார்த்தால் ஒருவேளை மேட்டர் எல்லாம் முடிஞ்சுடுச்சோ...'' என்ற வாக்கியத்தை அவன் முடிக்கும்



முன் சரண்யாவின் கரங்கள் அவனின் கன்னத்தைப் பதம் பார்த்து இருந்தது.

''யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னாய் இடியட்? எல்லோரையும் உன்னை மாதிரியே நினைப்பாயா? சீ, உன் முகத்தில் விழிப்பது கூட பாவம். உன்னுடன் பேச வந்த என் புத்தியை செருப்பால் அடிக்கணும்'' என்று ஆத்திரமாகச் சொன்னவளால் அவனின் இறுக்கமான பிடியில் இருந்து தன் கைகளை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

''டியர். நீ ஏன் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்கிறாய்? எதுவும் நடக்கவில்லை என்றால் ஓ.கே. அப்படி ஏதாவது நடந்து இருந்தாலும் அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்பதைத் தான் சொல்ல வந்தேன். சரி உட்கார். நம் எதிர்காலத்தைப் பற்றி பேசலாம்'' என்று அவளை அமர வைக்க முயன்றான்.

''சீ. கை விடுடா. நான் இனிமேல் உன்னுடன் பேசத் தயாராக இல்லை'' என்று விலக முயற்சித்தவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

''உனக்கு இன்னொரு சலுகை தரட்டுமா? உனக்கு எப்போதும் எல்லாம் அவனைப் பார்க்க வேண்டும் போல இருக்கோ. அப்போது எல்லாம் நீ பார்க்கலாம். அதே போல, எனக்கு வேறு பெண்களிடம் அப்படி ஒரு எண்ணம் தோன்றினால் நீ தலையிடாதே. ஓ.கே?''

''சை! நீ எல்லாம் ஒரு மனுஷனா? இப்ப நீ கையை விடா விட்டால் நான் சத்தம் போடப் போகிறேன். மரியாதையா விட்டுடு....'' என்ற சரண்யாவின் வாக்கியம் முடியும் முன்பே விடுதலை கிடைத்தது. தன்

கைகளை விடுவித்த அந்த காக்கிச் சட்டைக்குச் சொந்தக்காரரை நிமிர்ந்து பார்த்த சரண்யாவின் முகம் மலர்ந்தது. ''அங்கிள்...'' என்ற கூவலுடன் தாவி வந்து அவரின் தோளில் சாய்ந்து கொண்டவளைப் பார்க்க கருணாகரனுக்கு வியப்பாக இருந்தது.

நிம்மதிப் பெருமூச்சு, நன்றி கூறும் வார்த்தைகள் ஆகியவற்றை எதிர்பார்த்த கருணாகரனுக்கு, சரண்யாவின் பிரதிபலிப்பை நம்ப முடியவில்லை. ''சரண்யா ஆர் யு ஒகே?'' என்று விசாரித்தார்.

''எஸ் அங்கிள்'' என்று சொன்னதோடு மட்டுமில்லாமல், அவன் புறம் திரும்பிக் கூட பார்க்காமலேயே, அவரின் கை பற்றியபடி, வெளியே நடந்தாள் சரண்யா.

''உனக்குத் தெரிந்த ஆள் என்று அவனை சும்மா விட்டேன். தனியாக இந்த மாதிரி ஆட்களை நம்பி வெளியே வரலாமா? உன்னைப் பெற்றவர்கள் உன்னை நம்பித்தானே படிக்க அனுப்புகிறார்கள்?'' என்று முடிக்கும் முன்பே அவளுக்கு கண்ணில் நீர் கோர்த்தது. அக்கறையான வார்த்தை கேட்டதும், விழிகளில் நீர் வழிந்தது.

''தெரியாத ஆள் இல்லை அங்கிள். எங்க அண்ணியோட மாமா பையன். இவனுக்கும் எனக்கும்...'' என்று ஆரம்பித்து மேலே பேச முடியாமல் நிறுத்தினாள் சரண்யா.

''அழுவதால் எந்தப் பிரச்சனையும் தீரப் போவதில்லை. முதலில் கண்ணைத் துடை. உனக்குப் பிடிக்கலை என்றால் வீட்டில் சொல்ல வேண்டியது தானே?'' என்று அதட்டலாகச் சொன்னார் கருணாகரன்.



தன் மடத்தனத்தை எண்ணி, அவள் அமைதியாக இருக்க, ''சரி, உன் இஷ்டம். வீட்டில் விடட்டுமா?'' என்று அவரே மீண்டும் கேட்டார்.

''பரவாயில்லை அங்கிள். நான் பார்த்துக்கிறேன்'' என்று நகர்ந்த சரண்யாவை, ''ஒரு நிமிஷம்'' என்று நிறுத்தினார்.

அவளுக்கும் தீபக்கிற்கும் இடையே என்ன உறவு என்று தெரிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. அவனிடம் கேட்டால் ஒன்றும் இல்லை என்று சத்தியமே பண்ணி விட்டான். அலுவலக வேலையாகப் பார்த்து இருக்கிறேன். எங்க எடிட்டர் சாரோட பிரெண்ட் பொண்ணு. உங்களிடம் சொல்லிக்கிற மாதிரி ஒண்ணும் இல்லை என்று உறுதியாகச் சொல்லி விட்டான்.

மதுவிற்கு வாங்கிய பரிசை அவளுக்குக் கொடுத்தது அவருக்கு வித்தியாசமாக இருந்தது. 'பேனா இங்கே இருக்கு' என்ற பார்சலை மாற்றிக் கொடுக்க எவ்வளவு நேரம் வேண்டும்? அவன் மாற்ற விரும்பவில்லை. அவன் மனதில் நெருக்கமான இடம் கொடுத்து இருக்கிறானோ என்ற சந்தேகம் குறுகுறுத்தது.

''உ..ன..க்..கு.. ஏ..ன் அந்த பையனைப் பிடிக்கவில்லை?'' என்று தயக்கத்தை ஆர்வம் வெல்ல கேட்டே விட்டார் கருணாகரன்.

''நான் வே...று... ஒருத்தரை விரும்புகிறேன்.''

''அந்தப் பையனை வந்து உங்க வீட்டில் பேசச் சொல்ல வேண்டியது தானே? அதை விட்டுட்டு. நீ போய் இந்த மாதிரி ஆட்களிடம் தனியாகப் பேசுவது சரி இல்லை. முதலில் அந்த பையனிடம் பேசு. அப்புறம்

உன் பெற்றோர்களிடம் பேசு. அதுதான் எல்லோருக்கும் நல்லது ஜாக்கிரதையா போ'' என்று சொல்லிவிட்டு, தன் காரில் ஏறி கிளம்பி விட்டார்.

## 11

கருணாகரன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சரண்யா, அவர் கிளம்பிச் சென்ற பின் பல நிமிடங்கள் சிலையாக உறைந்து நின்றாள். அவர் சொன்னது உண்மை தானே? இந்த தடிமாட்டிடம் சொல்லத் துணிந்த தன் காதலைச் சொல்ல வேண்டியவனிடம் சொல்லி இருக்கலாமே!

பெற்றோரிடம் சொல்லத் தயங்கியதற்கு ஆயிரம் காரணம் இருக்கலாம். ஆனால், தீபக்கிடம் சொல்லத் தயங்குவதற்கு ஒரு காரணம் கூட இல்லை. ஆசைக்கும் தயக்கத்திற்கும் பெரும் போட்டி நடந்த பின், ஆசை வென்றது. தீபக் மனதில் என்ன இருக்கு என்று தெரிந்து கொள்வது அவசியம். உடனே முடிவெடுத்து, பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றாள் சரண்யா.

அலுவலகத்தில் சொல்லாமல் போய் நிற்பது சரியா? அங்கே ராஜேந்திரன் அங்கிள் பார்த்து விட்டால் என்ன சொல்வது? என்ற கேள்விகள் தோன்ற, உள்ளே போகாமல், அருகிலேயே பழச்சாறு ஒன்றை வாங்கி, அருந்துவது போலக் காத்து இருந்தாள்.

அவன் உள்ளே இருக்கிறானா என்பதே தெரியாமல் இங்கே காத்து இருப்பது சரியா? அவன் வந்தாலும், 



தன்னைப் பார்க்காமல் போய் விட்டால் என்ன செய்ய முடியும்? பார்த்துப் பேசினாலும் எடுத்த எடுப்பில் காதலைத் தன்னால் வெளிப்படையாகச் சொல்ல முடியுமா? சரண்யாவின் இதயத் துடிப்பு நொடிக்கு நொடி எகிற, அவளின் குழப்பத்திற்கு அவசியமே இல்லாமல், தீபக்கின் பைக் அருகே வந்து நின்றது.

''என்ன இவ்வளவு தூரம் வந்து இருக்கீங்க? உங்க எக்சிபிஷன் நியூஸ் வரவில்லை என்று விசாரிக்க வந்தீங்களா? வீட்டில் அம்மா அப்பா தங்கை இருப்பதனால் நேற்று இரவு முடிக்கவில்லை. இன்று கொடுத்து இருக்கிறேன். நாளை வரும்'' என்று சொன்னான் தீபக்.

''தேங்க்ஸ். நான் அதுக்காக வரவில்லை. உங்களைப் பார்க்க வந்தேன். கொஞ்சம் பேசணும்.''

''என்ன பேசணும்? நான் அப்பாவோடு இன்று வெளியே வருவதாகச் சொல்லி இருக்கிறேன்...'' என்றவனின் குரல் தடுமாற்றத்திலேயே, அவன் பொய் சொல்வதை உணர்ந்தவள், ''உங்க அப்பாவை எங்கே வரச் சொல்லி இருக்கீங்களோ அங்கேயே நாமும் போகலாம். அவர் முன்னிலையிலேயே பேசலாம்'' என்று சொல்ல அவன் விழித்தான்.

''நீங்க காந்தி சிலை அருகில் போங்க. நானும் அங்கே வந்து விடுகிறேன்'' என்று சொல்லி விட்டுச் சென்றான் தீபக்.

தன்னை பைக்கில் அழைத்துச் செல்ல விரும்பாமல், ''இந்த இடத்திற்கு வா'' என்று சொல்வதிலேயே அவனின் கண்ணியம் புரிந்தது. ஏற்கனவே இருந்த ஈர்ப்பு மேலும் கூடியது. இவன் எங்கே? நாலுக்கு ஆறடி இடம் இருந்தும் இரண்டே பேர் இருந்த லிஃப்டில் மேலே

விழாத குறையாக உரசிய அந்த தடிமாடு எங்கே? பெரு மூச்சோடு, அருகில் வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறினாள்.

பத்து நிமிடத்தில் அவளை வரச் சொன்ன இடத்திற்கு வந்து விட்ட தீபக்கிற்கு அவள் என்ன பேசப் போகிறாள் என்பதை ஊகிக்க முடிந்ததாலேயே பதட்டம் கூடியது. உன்னை விரும்பவில்லை என்று அவளின் கண்களைப் பார்த்துச் சொல்ல வேண்டும் என்று மனதிற்குள் உரு போட்டுக் கொண்டான்.

சில நிமிடங்களிலேயே வந்து சேர்ந்த சரண்யாவை, ''வாங்க மேடம்'' என்று வரவேற்றான். அவன் சொல்லிய மேடம் என்ற வார்த்தையைக் கேட்டு எரிச்சல் மூண்டாலும், அவன் நிலையில் அது சரி என்று தோன்ற மௌனத்தைக் கடைப்பிடித்தாள்.

''இப்படி உட்காரலாம். சொல்லுங்க மேடம். நான் என்ன செய்யணும்?''

''எனக்கு ஒரு உதவி... இல்லை இரண்டு உதவி செய்யணும்.''

''சொல்லுங்க மேடம். என்னால் முடிந்தால் கட்டாயம் செய்கிறேன்.''

''முதலில் இந்த மேடத்தைக் கொஞ்சம் விடுறீங்களா? எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை.''

''அது... அது... சரிங்க அடுத்ததைச் சொல்லுங்க'' என்று அவளை அனுப்புவதிலேயே குறியாகக் கேட்டான் தீபக்.

''நேற்று பிறந்த நாள் விழாவில், அண்ணியோட மாமா பையனுக்கும் எனக்கும்...'' என்று ஆரம்பித்து விட்டாலும், சரண்யாவால் தொடர முடியவில்லை.



''திருமண நிச்சயமா?'' சாதாரணமாக கேட்க நினைத்தாலும் குரல் வெளிவராமல் காற்று மட்டும் வந்தது. அடைத்த தொண்டையைச் சீர் செய்து, ''வாழ்த்துக்கள் மேடம்'' என்று தீபக் முடிக்கும் முன்பே ''ப்ச்!'' என்ற ஒலியுடன் சரண்யா எழுந்துவிட, அவனையும் அறியாமல் அவனின் கரம் நீண்டு, அவளின் கை பற்றி நிறுத்தி இருந்தது.

அவன் கரம் தன் கையைப் பற்றி இருப்பதை வியப்புடன் பார்த்தவளின் கேள்வி புரிந்த உடனே, அவசரமாக அவளின் கையை விட்டு விட்டு, ''சாரி மேடம், நா...ன்... நீ...ங்...க.. பா..தி பே..ச்..சி..ல்...'' திணறலாக நிறுத்தினான். அவனின் திணறலே அவனின் மனதை கோடி காட்ட, மலர்ந்த முகத்துடன் மீண்டும் அருகில் அமர்ந்தாள்.

''தீபக், நான் எம்.ஏ. ஜர்னலிசம் படிக்கிறேன். இன்னும் ஒரு வருஷம் கோர்ஸ் பாக்கி இருக்கு. அது உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஆர்வத்துடன் பேச்சை ஆரம்பித்தாள். உனக்கும் எனக்கும் இருக்கும் எத்தனையோ பொருத்தங்களில் இதுவும் ஒன்று என்ற அளவின் குதூகலம் அவனுக்குப் புரிந்து அவன் உதட்டில் மென்மையான முறுவலை வரவழைத்தது.

''நான் படிப்பை முடிச்ச பிறகு கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். படிப்புதான் முதலில் என்று இருந்ததால் உங்களிடம் ஒண்ணும் சொல்லவில்லை. நேற்று திடீர் என்று அப்பா திருமணப் பேச்சை ஆரம்பித்த உடனே எனக்கு என்ன செய்வது என்றே தெரியலை...''

''உங்க அப்பாக்கு நீங்க செல்லப் பொண்ணுதானே? நீங்க சொன்னால் அவர் மறுப்பாரா என்ன? உங்க

அண்ணன் வேற உங்களுக்கு சப்போர்ட்...'' என்று நிறுத்தினான் தீபக்.

''சாதாரணமா விக்ரம் நல்ல சப்போர்ட் தான். ஆனால் விக்ரமிற்கு உங்களைப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கு'' என்ற சரண்யாவைப் பார்த்து பிரமித்தான் தீபக். அண்ணன் பற்றிய அந்தரங்கத்தைப் பகிர்ந்து கொள்ள எப்படி நம்பிக்கை வந்தது?

''அது உங்க பெர்சனல் விஷயம். நீங்க என்கிட்டே ஏதோ பேசணும் என்று சொன்னீங்க மேடம்? அது என்ன என்று சொன்னால்...'' மனதில் ஓடிய எண்ணங்களுக்கு நேர் மாறாகப் பேச்சைத் தொடர்ந்தான் தீபக்.

''மறுபடியும் மேடமா? நீங்க என்ன பேசுகிறோம் என்று தெரிந்துதான் பேசுறீங்களா? எதுக்கு இப்படி ஒண்ணும் புரியாத மாதிரி நடிக்கிறீங்க? உங்க மனசுக்குள்ளே நான் இல்லையா? இல்லை என்று மறுபடி மறுபடி பொய் சொல்லாதீங்க...''

''பொய்யா? நானா...?'' என்று திகைத்து விழித்த தீபக்கை முறைத்தாள் சரண்யா.

''என்ன அப்படி முழிக்கிறீங்க? அன்று உங்க ஆபீசில் என்னை ஞாபகம் இல்லை என்று பொய் சொன்னீங்களே? அது எனக்குத் தெரியாது என்று நினைத்தீங்களா? இல்லை, நீங்க என்னோட துப்பட்டாவை ஒளிச்சு வச்சு இருக்கிறது தெரியாது என்று நினைத்தீங்களா?''

''ஹலோ, நீங்க என்ன சொல்றீங்க? உங்க துப்பட்டா என்னிடம் இருக்கு. அதுக்காக தேவை இல்லாமல் கண்டதையும் பேசாதீங்க. நாளைக்கே அதைக் கொண்டு வந்து தந்து விடுகிறேன். முதலில் நீங்க கிளம்புங்க.



போய் படிக்கிற வேலையைப் பாருங்க...'' என்று பேச்சை முடித்து அவளை அனுப்ப முயன்றான் தீபக்.

''ரொம்ப புத்திசாலித்தனமா பேசுவதா நினைப்பா? நீங்க சீனியர் ஜர்னலிஸ்ட் என்றால் நானும் வளரும் ஜர்னலிஸ்ட் தான். உங்களுக்கு இருக்கும் புத்திசாலித்தனத்தை விட அதிகமாகவே எனக்கு இருக்கு. எப்படி என்று நிரூபிக்கட்டுமா?'' என்று மிரட்டலாகக் கேட்ட சரண்யாவைப் பார்த்து விழித்தான் தீபக்.

''இரண்டு மாசம் முன்பு விக்ரம் கல்யாண போட்டோ பத்திரிகையில் வந்ததே, அது ஒரிஜினல் போட்டோ இல்லை என்று என்னால் எடிட்டர் ராஜேந்திரன் அங்கிளிடம் கம்ப்ளைன்ட் கொடுக்க முடியும். செய்யட்டுமா?'' என்று அவள் முடிக்கும் முன்பே அவனுக்கு திக் என்று இருந்தது.

இரண்டு போட்டோக்களை இணைத்து அதைச் செய்தது இவளுக்கு எப்படித் தெரியும்? இதில் தான் தப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும், அதை இவளுக்குத் தெரியாமல் செய்து இருப்பதை, இவள் நினைத்தால் பிரச்னையாக்க முடியும். இதில் பத்திரிகை தனக்கு ஆதரவாக வராது. அவன் முகத்தில் ஏறிய பதட்டத்தையும் குழப்பத்தையும் பார்த்தவளின் முகம் கனிந்தது.

''தீபக், எனக்கு உங்க மனசு தெரியும் என்பதற்காகத் தான் இதைச் சொன்னேன். கம்ப்ளைன்ட் கொடுக்கும் ஐடியா எனக்கு இல்லை. அப்படிக் கொடுப்பதாக இருந்தால் பேப்பரில் போட்டோ வந்த அன்றே கொடுத்து இருக்கணும். நான் ஒரு போட்டோவில் கூட அமைச்சருடன் நிற்கவே இல்லை. அது மார்பிங் போட்டோ

என்று அன்றே எனக்குத் தெரியும். அதன் காரணம் புரிய நாளாகி விட்டது'' என்று புன்னகை செய்தாள் சரண்யா.

''ஐ ஆம் சாரி. பத்திரிகை தர்மப்படி அப்படி செய்யக் கூடாது. நான்...''

''ஹேய்! அதை நானே பெரிசா எடுத்துக்கலை. நீங்க ஏன் சாரி சொல்றீங்க? அந்த போட்டோ மார்பிங் மட்டுமில்லை. பத்திரிகை ஆபீசில் தெரியாத மாதிரி நடித்தது. என் துப்பட்டாவை மறைத்து வைத்தது, எங்க அம்மா அப்பா அனிவர்சரிக்கு அழகான வாழ்த்துக் கவிதை எழுதியது. மாலையில் பூங்கொத்துக் கொண்டு வந்து விக்ரமிடம் மாட்டி டோஸ் வாங்கியது. ஓவியக் கண்காட்சியில் எனக்குத் தெரியாமல் போகத் துடித்தது. உங்க அப்பா ப்ரேஸ்லெட் பரிசாகக் கொடுக்கிறார் என்பது தெரிந்தாலும் அதைத் தடுக்காதது. இது மாதிரி இன்னும் எத்தனை சாட்சிகள் அடுக்கட்டும் தீபக்? இது எல்லாமே எனக்குத் தெரியும். என்னிடம் மறுப்பது இருக்கட்டும். இதுக்கு மேலும் உங்க மனசை உங்க கிட்டேயே மறைக்கப் போறீங்களா?'' என்று நிதானமாகக் கேட்ட சரண்யாவின் பேச்சில் தன் வசம் இழக்கத் துடித்த மனதை இழுத்துப் பிடித்தான் தீபக்.

''மிஸ் சரண்யா. அதெல்லாம் ஏதோ ஒரு வேகத்தில்... ஐ ஆம் சாரி, திருமணம் என்பது இப்படி சர்வ சாதாரணமாக இரண்டு பேர் பேசி முடிவு பண்ணும் விஷயம் இல்லை. இரண்டு குடும்பங்களின் சங்கமம் அது. தன் பெண்ணின், பையனின் திருமணம் எப்படி நடக்க வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் எத்தனை கனவு கண்டு இருப்பார்கள் தெரியுமா? நமக்குத் திருமணம் நடப்பது சரியா வராது...''



''நீங்க என்னைப் பார்க்க, என்னுடன் பேச எதுக்கு இவ்வளவு தயங்குறீங்க என்று எனக்குத் தெரியும் தீபக். என்னைப் பொறுத்தவரை, பணம் வாழ்க்கைக்கு அவசியம் தான். ஆனால், ஓரளவிற்கு மேல் அதற்கு பயன்பாடு இல்லை. நான் கண்ணை மூடிட்டு காதல் பண்ணலை. எங்க வீட்டை விட வசதி கம்மி என்றாலும், உங்க பொறுமையான அணுகுமுறை. மற்றவருக்கு உதவும் நல்ல மனசு, குடும்ப அமைப்பின் மேல் நீங்க வைத்து இருக்கும் ஆழமான மரியாதை கலந்த நம்பிக்கை. இதெல்லாம் தான் எனக்குப் பிடிச்சு இருக்கு. உங்க வீட்டில் நான் நிம்மதியா சந்தோஷமா இருப்பேன் என்று நான் நம்புகிறேன்...''

''சரண்யா சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்கக் கூடாது. கண்ணில் படாதது கருத்தில் நிற்காது. மூணு மாசம் என்னைப் பார்க்காமல் இருந்தால் எல்லாம் மாறி விடும்...''

''நான் சின்னக் குழந்தை இல்லை தீபக். வயசு வந்த பக்குவம் அடைந்த பெண். ஒரு பெண்ணின் மேல் கொண்ட ஆசைக்கும் காதலுக்கும் இடையே வித்தியாசம் கண்டு பிடிக்கத் தெரிந்த புத்திசாலி பெண். நீங்க மனசு வச்சால், எங்க வீட்டுல வந்து பேசினால், எல்லாம் நல்லபடியா முடியும். உங்க அனாவசியமான பயத்தினால், நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையும் வீணாக்கி விடாதீங்க சொல்லிட்டேன்'' என்று முடித்தாள் சரண்யா.

''சரண்யா, உங்க மனதை கலைப்பது மாதிரி நான் ஏதாவது செய்து இருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் உங்க கண்ணில்

படாமல் இருந்துக்கறேன். சீக்கிரம் என் முகம் மறந்து விடும்...''

''போதும் தீபக். இந்த உளறலைக் கொஞ்சம் நிறுத்துங்க. உங்க முகத்தை மறப்பதா?'' என்று அதட்டலாகச் சொன்ன சரண்யா, அவனின் அனுமதி எதிர்பாராமலேயே அவனின் பையைத் திறந்து உள்ளே இருந்த சின்ன நோட்டையும் பென்சிலையும் எடுத்தாள்.

அவனின் முகத்தை நிமிர்ந்து பாராமலேயே, துப்பட்டாவை எடுத்துத் தன் கண்களைக் கட்டி, அவன் வியப்போடு பார்க்கும் போதே வேகமாக வரைய ஆரம்பித்தாள்.

பத்து நிமிடங்கள் கழித்து, கண்களைச் சுற்றிக் கட்டி இருந்த துப்பட்டாவை அவிழ்த்து, வரைந்த படத்தைத் திருப்தியோடு பார்த்துவிட்டு, நோட்டை அவன் மடியில் போட்டு விட்டு எழுந்தாள்.

''இதை நல்லா பாருங்க. என்னால் உங்க முகத்தை மறக்க முடியுமா என்று யோசனை பண்ணுங்க. சனிக்கிழமை வரைக்கும் நல்லா யோசிச்சுட்டு நல்ல முடிவா இருந்தால் மட்டும் எனக்கு போன் பண்ணுங்க. இல்லை என்றால் பேசவே வேண்டாம். அப்புறம் என் தலையில் என்ன எழுதி இருக்கோ அது நடக்கட்டும். குட்பை'' என்று சொல்லி விட்டு வேகமாகச் சென்று விட்டாள் சரண்யா.

அவள் தன்னை மதுரை ஹோட்டலில் சில வினாடிகள் பார்த்த, அரை குறை குளியலில், டவலோடு கதவைத் திறந்த, அவளின் மனதில் அழுத்தமாய் பதிந்து போன அவன் தோற்றம் அவ்வளவு தத்ரூபமாய் இருந்தது.



அவன் முகம் மட்டுமில்லை. இடது விலாவில் இருந்த பெரிய மச்சம், கழுத்துக்குக் கீழே இருந்த தீ சுட்ட தழும்பு, எல்லாமே அந்தந்த இடத்தில் அமர்ந்து, கண்களைக் கட்டிக் கொண்டு சரண்யா வரைந்த அந்த படம், தத்ரூபமாய் இருக்க, அவள் போய் இரண்டு மணி நேரம் ஆகியும் தீபக்கால் அந்த இடத்தை விட்டு அசைய முடியவில்லை.



## 12

மூன்லைட் ஹோட்டலில் இருந்து சரண்யாவிடம் விடை பெற்ற கருணாகரன் வீட்டிற்கு நேரே சென்ற பின் இரண்டு மூன்று முறை தீபக்கின் அலைபேசிக்கு முயன்றும் எடுக்கப்படவில்லை. வேலை பளுவில் கவனிக்காமல் இருக்கலாம். அவனாக அழைப்பான் என்று அரை மணி நேரம் காத்திருந்த பின்பும் அவன் அழைக்கவில்லை.

அலுவலகத்தில் விசாரித்தால் அங்கிருந்து கிளம்பி விட்டான் என்ற தகவல் கிடைத்தது. மேலும் அரை மணி நேரம் இடைவெளி விட்டு கருணாகரன் மீண்டும் முயல இப்போது எடுத்தான்.

''அப்பா. சொல்லுங்கப்பா...''

''ஹேய் தீபக் எங்கே இருக்கிறாய்? ஒரு மணி நேரமா உன்னுடன் பேச முயற்சி செய்கிறேன். ஏன் போனை எடுக்கவில்லை?''

''பீச்சில் இருக்கேன்பா! எதுக்கு என்னைத் தேடினீங்க? ஏதாவது அவசரமா?'' என்று கேட்டதும் அவருக்கு

ஆச்சரியமாக இருந்தது. அவன் தனியாக பீச்சிற்குப் போக மாட்டானே? இரண்டு மணி நேரம் முன்பு மது அழைத்தபோது, தனக்கு வேலை இருப்பதாகச் சொன் னானே? இப்போது யாருடன் என்ன விஷயமாகப் போனான்?

''கூட யாரும் இருக்கிறார்களா தீபக்? நான் அப்புறமா பேசட்டுமா?''

''இப்ப யாரும் இல்லைப்பா. நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க'' என்றவன் குரலில் குழப்பம் இருந்தது. இப்ப யாரும் இல்லை என்றால், கொஞ்சம் முன்னால் யாராவது இருந்து இருக்க வேண்டும், அவரது ஊகம் சரி என்றால், கூட இருந்தது சரண்யா.

''தீபக், அம்மா கையால் நீ சாப்பிட்டு நாளாச்சு இல்லையா? இந்த ரெண்டு நாளும் அம்மா இருந்தாலும் வெளியே சாப்பிட்டாச்சு. அம்மாவை உனக்காக ஸ்பெஷலா சமைக்கச் சொல்லி இருக்கேன். நீ கிளம்பி என்னோட குவார்ட்டர்சுக்கு வா'' என்று சொன்னவர், மனைவியை அழைத்தார்.

''அபி, தீபக்கை இப்போ அங்கே வரச் சொல்லி இருக்கிறேன். கொஞ்ச நேரம் முன்பு ஹோட்டலில் சரண்யாவிற்கு சின்ன பிரச்னை என்று சொன்னேனே. அது சம்பந்தமா அவனிடம் பேச்சுக் கொடுத்து விபரம் தெரியுதா என்று பார்...'' என்று கிளம்பி தீபக் அறைக்குச் சென்றார்.

அவரது மேலோட்டமான ஆய்வில் சிக்கிய படங் களும், ஆவணங்களும், தீபக்கிற்கு சரண்யாவைப் பிடிக் குமோ என்ற சந்தேகத்தைத் தொண்ணூறு சதவிகிதம் உறுதி செய்தது.



அவனின் ஆடைகளுக்கு நடுவே ஒளிந்து இருந்த ஒரு இளமஞ்சள் வண்ண துப்பட்டா, சரண்யாவி னுடையதுதான். மேஜை டிராயரில் கிடந்த விக்ரம் - தர்ஷினி திருமணத்தில், மணமக்களுக்கும் மேலே சரண்யாவை முன்னிறுத்தி எடுக்கப்பட்டு இருந்த பல புகைப்படங்கள், இருந்தது எப்படி?

ஹிந்து பத்திரிகையில் சரண்யாவின் ஓவியம் பரிசு பெற்றது குறித்து வந்த புகைப்படங்கள் மற்றும் கட்டுரை, சரண்யா பெயரில் வெளியாகி இருந்த அவளின் பெற் றோர் திருமண ஆண்டு விழா குறித்த விளம்பர நகல்கள், அவை எல்லாம் அடுக்கி பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்தது எப்படி?

'இவ்வளவு நடந்து இருக்கிறது. தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை. அவள் வீட்டில் வேறு திருமண ஏற்பாடு செய்வது இவனுக்குத் தெரியுமா தெரியாதா? ஆண் பிள்ளையாய் லட்சணமாய் இவன் முன்னே சென்று எதையும் செய்யாமல் இருந்தால் பாவம் ஒரு பொண்ணு என்ன பண்ணுவாள் என்ற எரிச்ச லுடன் குவார்ட்டர்சுக்குத் திரும்பி வந்தார் கருணாகரன்.

* * *

கருணாகரன் வெளியே சென்ற சில நிமிடங்களி லேயே அவனின் பைக் வந்து சேர, தோட்டத்தில் இருந்த கொடி மல்லிகைப் பூக்களைத் தொடுத்துக் கொண்டு இருந்த அபிராமி, கை வேலையை வைத்து விட்டு வாசலுக்கே வந்து வரவேற்றார்.

''என்னம்மா, நீங்க ஏதோ கிச்சனில் எனக்கு பிர மாதமா விருந்து சமைச்சுகிட்டு இருப்பீங்க என்று எதிர் பார்த்து வந்தால், வாசலுக்கே வந்துட்டீங்க? பரபரப்பா

இருக்கிற மாதிரி வேறே இருக்கு?'' என்று விசாரித்தபடி பைக்கில் இருந்து இறங்கினான் தீபக்.

''ஆமா! நல்ல நியூஸ் தான் தீபக். நீ ஓகே சொன்னால் உடனே டும் டும் டும்தான்...'' என்று வந்த மதுவின் வார்த்தைகளைக் கேட்டு ஒரு வினாடி பிரமித்தான்.

''சம்மன் இல்லாமல் ஆஜராகிட்டியா? உன்னை யார் கூப்பிட்டவாங்க? எனக்குத் தெரிஞ்சு அம்மா இவ்வளவு சந்தோஷமா இருக்கணும் என்றால் அது உன்னை வைத்துத்தான் இருக்கணும். கரெக்டாம்மா?'' என்று கேட்க அபிராமி புன்னகையோடு தலை அசைத்தார்.

''ஆமா! மது படிப்பை முடிக்கும் முன்பே டிகிரி கொடுத்து விடுகிறேன் என்று சொல்லிட்டாங்க. அதான் நியூஸ்...''

''வேறே வழி? மூன்று வருஷ படிப்பை நீ தடவித் தடவி ஏழு வருஷம் படிச்சும் பாஸ் பண்ணலை என்றால் அவங்களும் என்ன பண்ணுவாங்க? இன்ஸ்டிடியூஷன் பேரைக் காப்பாற்றுவோம் என்று டிகிரி கொடுக்க முடிவு பண்ணிட்டாங்களோ என்னவோ?'' என்று முடிக்கும் முன்பே, ''ரொம்ப தான் கொழுப்பு உனக்கு. நான் தடவித் தடவி பாஸ் பண்றேனா?'' என்று அவன் முதுகில் ஒன்று வைத்தாள்.

''ஏய் மது...! இதென்ன பழக்கம் வாய் பேசும்போது கை பேசுவது? போ அவனுக்குக் காபி எடுத்து வா'' என்று அதட்டலோடு அபிராமி மகளை அடுக்களைக்கு அனுப்ப, அவன் அம்மாவை அழைத்துப் போய் ஹால் சோபாவில் அமர வைத்தான்.

''உங்களுக்குப் பூ கட்டத் தெரியுமாம்மா?'' என்று உள்ளே வந்த தீபக் ஹாலில் இருந்த பாதி கட்டப்பட்டு



இருந்த மல்லிகை சரத்தைப் பார்த்து வியப்பாகக் கேட்க அவர் அவனை ஆராய்ந்தார்.

''ஏண்டா, எனக்கு பத்து வயசாகும்போது கற்றுக் கொண்டேன். அதிசயமா இன்னிக்கு தான் நான் புதுசா பூ கட்டுற மாதிரி கேட்கிற? என்ன விஷயம்?'' என்று கேட்டார் அபிராமி.

''உங்களுக்குத் தெரிந்தால் நாமும் அதைக் கட்டத் தெரிந்து கொள்ளலாமே என்று தான் கேட்டேன்...'' என்று சொன்ன தீபக்கின் வாய் இங்கே பேசிக் கொண்டு இருந்தாலும் மனம், சரண்யாவின் முதல் கோரிக்கைக்குச் சென்று இருந்தது.

தீபக்கின் மனம் இங்கே இல்லை என்பதை ஒரு வினாடியில் கண்டு பிடித்தவர் காரணத்தையும் ஊகித்தார். கருணாகரன் சொன்ன விஷயமா? கேட்பதற்கு முன்பே அவனே ஆரம்பிக்கிறானே என்ற ஆச்சரியத்துடன் அவன் முகத்தை ஆராய்ந்த அபிராமிக்கு. அவன் முகத்தில் இருந்த சந்தோஷம் திருப்தியை அளித்தது.

''என்ன தீபக் பேசணுமா? அப்பாவும் வந்துடட்டுமா?'' என்று கேட்க அவன் மறுத்தான்.

''அம்மா ப்ளீஸ்... முதலில் உங்களிடம் சொல்லி விடுகிறேன். சில சமயம் அப்பா என்ன பேசுவார் என்று சொல்ல முடியாது. இந்த விஷயத்தில் மறுப்பு வரக் கூடாது. அப்பாவிடம் விவாதம் தவிர்க்க நினைக்கிறேன். நீங்க தனியா அப்பாவிடம் பேசுங்கம்மா ப்ளீஸ்...''

''ம்மா! தீபக் இப்படி குழைஞ்சு இத்தனை ப்ளீஸ் போடுவதைப் பார்த்தால் கன்பார்ம்ட். லவ் மேட்டர் தான். அப்பா சொன்னதுதான்...'' என்று மதுமதி உள்ளிருந்து குரல் கொடுக்க தீபக் திகைத்தான்.

''அப்பாக்கு எப்படித் தெரியும்? நான் இதுவரை யாரிடமும் எதுவுமே சொன்னதே இல்லையே?'' என்ற குழப்பத்துடன் விசாரித்தான் தீபக்.

''ஆமா... நான் ஒரு பெண்ணை லவ் பண்றேன்... அதை இன்னும் அவளிடமே சொல்லவில்லை. என்று அதான் உன் முகத்திலேயே எழுதி ஒட்டி இருக்கே...'' என்று கேலி செய்தபடி காபியுடன் வந்தவளை அபிராமி முறைத்தார்.

''மது. சின்னப் பொண்ணா லட்சணமா பேசு. இது கேலி பேசும் சமாச்சாரம் இல்லை. அமைதியா உட்கார்வது என்றால் இரு. இல்லை என்றால் ரூமிற்குப் போ. நானும் தீபக்கும் பேசிக்கிறோம்'' என்று சொல்ல அவள் ''சாரிம்மா...'' என்ற ஒற்றை வார்த்தையுடன் அறைக்குள் சென்று விட்டாள்.

''ஏன்மா... மது பாவம்...'' என்று தீபக் பரிந்து வந் தாலும், 'காதல் செய்வது கேலி பண்ணும் விஷயம் இல்லை தீபக். நீயே அப்பாவிடம் பேசத் தயங்கினது நினைவில்லையா? அவளுக்குத் தெரியக்கூடாது என்று நான் நினைக்கவில்லை. ஆனால்... சரி நீ சொல்லு... என்ன பேசணும்?'' என்று விட்ட இடத்தில் இருந்து தொடர்ந் தார் அபிராமி.

''நான் சொல்றதுக்கு முன்னாடி... அப்பா உங்களிடம் ஏற்கனவே ஏதோ சொல்லி இருக்கார் போல... அது என்ன என்று தெரிந்தால்...'' என்று முடிக்காமல் நிறுத்தி னான்.

''அப்பா என்ன சொன்னார் என்பது இருக்கட்டும். இந்த பொண்ணு வேண்டாம் என்று ஒரு வேளை அப்பா



சொல்லி விட்டால், அது உன் கல்யாண முடிவை எந்த விதத்திலாவது பாதிக்கப் போகுதா?'' என்று விசாரித்தார் அபிராமி.

''ஆரம்பத்திலேயே இப்படி அபசகுனம் பிடித்த மாதிரி கேள்வி கேட்டால் நான் என்ன சொல்வதும்மா?''

''நெருப்பு என்று சொன்னாலே வாய் சுட்டு விடாது. அதனால் ஒரு முக்கியமான முடிவு எடுக்கும்போது நல்லது கெட்டது ஆராயணும். நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு.''

''ஒரு வேளை அப்பா அப்படிச் சொல்லி விட்டால், அவரை எதிர்த்துக் கொண்டு இந்தக் கல்யாணம் நடக் காது. ஆனால்... என்னால் வேறு யாரையும்... கல்யாணம் பண்ணிக்க முடியாது. கடைசி வரை நான் இப்படியே தான் இருப்பேன். அதுல மாற்றம் இல்லை...''

''என்னடா... பூச்சாண்டி காட்டுறியா?''

''பூச்சாண்டி இல்லைம்மா. சத்தியமா சொல்றேன். நீங்க யார் அந்த பெண்? அவள் எப்படிப்பட்டவள் என்று எந்தத் தகவலும் இல்லாமலேயே அப்பா இப்படிச் சொல்லி விட்டால் என்று ஊகத்தில் ஒரு கேள்வி கேட் டீங்க. அதுக்கு நான் பதில் சொன்னேன். அவ்வளவு தான்...'' என்று விளக்கம் அளித்தான் தீபக்.

''அப்பா சரியாதான் உன்னை எடை போட்டு இருக் கார்'' என்று அபிராமி சிரிக்க அவனும் புன்னகைத்தான்.

''அப்பா என்ன சொன்னார் என்பதைச் சொல்லாமலே பில்ட் அப் கொடுங்க. அவர் என்ன சொன்னார் என்று தெரியாமல் அது சரியா இல்லையா என்று எப்படிச் சொல்ல முடியும்?''

''நீ லவ் பண்ற பொண்ணு பேர் சரண்யா என்று அப்பா சொன்னார். அவ கிட்டே நீ இன்னும் உன் காதலைச் சொல்லவில்லை என்று அப்பா சொன்னார். கூடவே, அவளுக்கு நீ ப்ரேஸ்லெட் பரிசு கொடுத்ததைச் சொன்னார். அவளுக்கு வேறு மாப்பிள்ளை பார்த்து இருப்பதைச் சொன்னார். இப்ப சொல்லு. அவர் சொன்னது சரியா? தப்பா?'' என்று அபிராமி கேட்க அவன் வாய் அடைத்துப் போனான்.

''ஹய்யோ அம்மா! இது எல்லாம்... அவருக்கு... எப்படி...''

''இப்படித் திணறித் திக்குகிறாய்? ஆனால் கொஞ்ச நேரம் முன்னால், இந்த வாய், இந்த பொண்ணு இல்லா விட்டால் காலம் முழுக்க பிரம்மச்சாரி தான் என்று மிரட்டியது தானே?''

''உங்களை நான் மிரட்டுவதா? அபச்சாரம். உங்களால் தான் இந்தக் காரியம் நடக்கணும் என்றபோது, உங்களை மிரட்டினால் எனக்கு எப்படிக் காரியம் நடக்கும்?'' என்று அவன் அம்மாவின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சிய போது உள்ளே வந்தார் கருணாகரன்.

''என்ன அம்மாவும் பிள்ளையும் ரொம்ப கொஞ்சிக்கிற மாதிரி இருக்கு. என்ன விஷயம்?'' என்று கேட்டார் கருணாகரன்.

''ஏன் எங்களைப் பார்த்துப் பொறாமை படுறீங்க? அவன் கேட்பதற்கு நீங்க ஓகே சொல்லி விட்டால் உங்களையும் கொஞ்சப் போகிறான்...'' என்று சமாதானமாகச் சொன்னார் அபிராமி.

''அப்பா, நானே என் மனசுல என்ன இருக்கு என்பதைச் சொல்றேன். நான் என் வாழ்க்கை துணையாக



சரண்யாவைத் தேர்ந்தெடுத்து விட்டேன். இந்தத் திருமணத்திற்கு உங்களின் சம்மதம் வேண்டும். ஆனால் திருமணத்திற்கு அவசரமில்லை. மதுவுக்கு முடிந்த பின் பார்த்துக் கொள்ளலாம்'' என்று இரத்தினச் சுருக்கமாய் மகன் சொன்ன வார்த்தைகள் அவரைப் பெருமிதம் கொள்ளச் செய்தது.

'எண்ணித் துணிக கருமம், துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்ற குறளின் எடுத்துக் காட்டு இவன். ஒரு காரியம் செய்வதற்கு முன்னால் ஆயிரம் முறை யோசனை செய்பவன். ஆனால் முடிவெடுத்து விட்டால், அதை எந்த நேரத்திலும் விடாமல் கடைபிடிப்பவன். இவன் என் மகன் என்ற பெருமிதம் அவர் முகத்தில் மிளிர்ந்தது.



## 13

தீபக்கை பீச்சில் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்த சரண்யாவிற்கு, மனதில் இருப்பதை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. விக்ரம் இங்கே தான் இருக்கிறான். தன் நலனில் அக்கறை உள்ளவன். அவனிடம் சொல்லலாம். ஆனால் அவனுக்கு தீபக்கைப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் வந்தது.

அம்மா அப்பாவின் திருமண நாள் விழாவில் அவனைக் கடுப்படித்தது. நேற்றைய மதிய விருந்தின் போது அழையா விருந்தாளி என்ற ஜாடையில் ஏதோ சொன்னது என்று அதற்கு இரண்டு சாட்சி இருக்கிறது. ஆனால் அந்த லக்ஷ்மிகாந்தனை மணப்பதற்கு சாத்தியம்

இல்லை. அதை நிச்சயம் அப்பாவிடம் தெரிவித்து விட வேண்டும். அதற்கு மட்டுமாவது விக்ரமின் உதவி இருந்தால் தர்ஷினியை சமாளிக்க ஏதுவாக இருக்கும்.

விக்ரம் அன்று தர்ஷினியின் வீட்டுக்குச் சென்று விட்டான் என்ற தகவல் கிடைத்ததும், 'இனி பேச்சை தள்ளிப் போடக்கூடாது' என்று அப்பாவின் அறைக்குச் சென்றாள்.

''வா சரண்யா. ஏன் அங்கேயே நின்று விட்டாய்?' என்று ராமலிங்கம் அழைக்க. கட்டிலில் அமர்ந்தவளின் முகம் சிந்தனையில் இருந்தது.

''என்ன சரண் அப்படி தீவிர யோசனை? கல்யாணம் பற்றி ஏதாவது சொல்லணுமா?'' என்று இந்திராணி கேட்க, அவள் நிமிர்ந்தாள்.

''ஆமாம்மா! இன்று மாலை, அண்ணியின் மாமா பையன், அந்த லக்ஷ்மிகாந்தன் என்னைப் பார்க்க காலேஜிற்கு வந்து இருந்தான்...''

''வயசல பெரியவங்க இல்லையா? அதென்ன அவன் இவன் என்று மரியாதை இல்லாமல் பேசுகிறாய்?''

''செய்யும் செயலைப் பொறுத்துதான் மரியாதை கிடைக்கும். தரக் குறைவான செயல்களைச் செய்றவங் களுக்கு இதுவே ரொம்ப ஜாஸ்தி...'' என்று சரண்யா சொல்ல, ராமலிங்கம் முறைத்தார்.

''கோபப்படாதீங்கப்பா ப்ளீஸ். நான் கேட்கும் கேள் விக்கு உண்மையா பதில் சொல்வீங்களா?''

''என்னைக் கேள்வி கேட்கிற அளவுக்கு வளர்ந்துட் டியா? கேளு...''



''லக்ஷ்மிகாந்தனைப் பற்றி நான் ஏதாவது சொன்னால், அதை நம்புவீங்களா?'' என்ற உடன் இருவரின் முகமுமே கவலையானது.

''நீ சொல்வதை நம்பாமல் இருப்போமா?'' என்று இந்தி ராணி கேட்க ராமலிங்கத்தின் மௌனம் தொடர்ந்தது.

''அப்பா இன்னும் பதில் சொல்லவில்லை! அப்பா விற்கு மகளை விட அண்ணியோட சந்தோஷம் தான் முக்கியமோ?'' என்று சொல்ல, கோபமாக இடைமிட்டார் ராமலிங்கம்.

''என்ன உளறல் இது? பெற்ற பிள்ளையை விட மற்ற வங்க எப்படி உசத்தியா இருக்க முடியும்? நீ என்ன சொல்ல நினைக்கிறாயோ சொல்லு. ஆனால் உண் மையைச் சொல்லு.''

''நான் ஏன்பா உங்களிடம் பொய் சொல்லணும்? உண் மையை தான் சொல்றேன். எனக்கு அந்த லக்ஷ்மிகாந் தனைப் பிடிக்கவில்லை. அவனோட கொள்கைகளுக் கும், என்னுடைய மனநிலைக்கும் ஒத்து வராது. எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். நான் படிச்சு முடிச்சப் புறம் பண்ணிக் கொள்கிறேன்...''

''காலையில் இதைப் பற்றிப் பேசும் போது கூடச் சும்மா இருந்தாய்? இப்ப என்ன புதுசா கதை சொல்ற? யாராவது சொல்லிக் கொடுத்து இந்த மாதிரிப் பேச கிறாயா?''

''நான் வளர்ந்த சுயமா யோசிக்கும் பெண் இல்லை யாப்பா? எனக்கு யாரும் சொல்லித் தர வேண்டிய அவசியம் இல்லை. நேற்று மாலை ஹோட்டலில் கூட அவன் அவ்வளவு சரியா பிகேவ் பண்ணலைப்பா.

அவங்களோட கலாச்சாரம் என்று முதலில் நினைத் தேன். ஆனால் இன்று மாலை...'' என்று ஆரம்பித்தவள். மடமடவென்று நடந்ததை, 'வேறு ஒருவரை விரும்பு கிறேன்' என்பதைத் தவிர்த்து அப்படியே சொல்லி முடித்த பிறகு, இருவரும் அமைதியாக இருக்க, சரண்யா விற்கு வருத்தமாக இருந்தது.

''அப்பா ஏன்பா பேச மாட்டேங்கறீங்க? என் மேலே கோபமாப்பா?'' என்று கேட்க, அவர் 'ஆம்' என்று தலை அசைத்தார். ''எனக்கு வேண்டும் என்பதை உங்களிடம் சொல்லாமல், என்ன பண்ணுவது?'' என்று கேட்டாள் சரண்யா.

''உனக்கு வேண்டியதை என்னிடம் தான் கேட்க வேண்டும் என்பது சரி. ஆனால் இந்த ஞானோதயம், லஷ்மிகாந்தனிடம் பேசிய பிறகு, இன்னொரு மூன்றா வது மனுஷன் உனக்கு அட்வைஸ் பண்ணிய பிறகு வந்து இருக்கு பாரு. அதான் எனக்குக் கோபம்...''

''அப்பா... அது வந்து... அங்கே... அவர் இருந்தத னால்... தற்செயலா...''

''இந்த நொண்டி சாக்கு எனக்குத் தேவை இல்லை. நினைத்ததைப் பேசும் அளவுக்கு நான் உனக்கு சுதந்திரம் கொடுக்கவில்லை என்று நினைக்கிறாயா? நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை?'' என்று கோபத்துடன் பேச அவரை அணைத்து, ''என்னை மன்னிச்சுடுங்கப்பா. ரொம்ப சாரி'' என்று வருத்தமான குரலில் திரும்பத் திரும்பச் சொன்னாள்.

''சரி பரவாயில்லை, இப்ப சொல்லு, நீ கல்யாணம் வேண்டாம் என்று சொல்வது லஷ்மிகாந்தன் குணம் சரி



இல்லை என்பதாலா? இல்லை வேறு காரணம் இருக்கா?'' என்று அவளை நேராகப் பார்த்துக் கேட்டார் ராமலிங்கம்.

அவர் கேட்டதும், தீபக் பற்றி சொல்லலாமா என்று தோன்றிய எண்ணம், அதே வேகத்தில் மறைந்தது. அவன் என்ன சொல்லப் போகிறானோ? அவனுடைய குடும்பச் சூழல் என்னவோ? அங்கே பிரச்னை ஏதாவது வந்தால், அதைத் தாண்டி வருவானோ மாட்டானோ, என்ற சந்தேகம் முளைக்க, இப்போதைக்கு இந்தத் திருமணம் நின்றால் போதும் என்ற முடிவிற்கு வந்தாள் சரண்யா.

''இல்லைப்பா, வேற காரணம் இல்லை'' என்று அழுத்த மான குரலில் சொல்ல, அவர் மகளைத் திருப்தியோடு அணைத்துக் கொண்டார்.

* * *

மகனின் ஆசையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று துடித்த கருணாகரன் அடுத்த நாள் காலை கல் லூரியில் இருந்த ராமலிங்கத்திற்கு போனில் அழைத் தார்.

''வணக்கம் மிஸ்டர் ராமலிங்கம். என் பேர் கருணா கரன், ஐ.பீ.எஸ். ஆபீசர். இப்போ சென்னைக்கு மாறுத லாகி, விஜிலன்ஸ் துறையில் சமீபத்துல வந்து சேர்ந்து இருக்கேன். நான் உங்களைப் பெர்சனலா பார்த்துப் பேசணுமே? எப்பப் பார்க்கலாம்?'' என்று கேட்டவரை இதற்கு முன் பார்த்ததாகவோ, பேசியதாகவோ, நினை வில்லை.

''என்ன விஷயமா பார்க்கணும்? நான் மாலையில் ஃப்ரீயா இருப்பேன். மாலை ஆறு மணிக்கு மேல் வாங்க

பேசலாம்'' என்று சுருக்கமாகச் சொல்லி போனை வைத்தார்.

ராமலிங்கம் சொன்ன நேரத்தில் கருணாகரன் வந்த போது, முதல் சில வினாடிகள் இருவரின் குடும்பம் பற்றிய தகவல்களைப் பரிமாறியபின், திருமண விஷயத்தை எப்படிப் பேசுவது என்று குழம்பி, ''உங்க வீட்டுல மேடம் இருந்தால் வரச் சொல்லுங்களேன். ஒரு முக்கியமான விஷயம் பேசணும்...'' என்று ஆரம்பித்தார்.

''உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் என்ன முக்கிய மான விஷயம் இருக்கு?'' என்று கேள்வியாக ராமலிங்கம் இழுத்தபோது கல்லூரியில் இருந்து வந்த சரண்யா, வாசலில் நின்ற கருணாகரனின் காரைப் பார்த்ததும் ஓடி வந்தாள்.

''அங்கிள், நீங்க எப்போ வந்தீங்க?'' என்று ஓடி வந்து அவரின் அருகில் நின்ற சரண்யா மூச்சு வாங்கக் கேட் கவும் ராமலிங்கத்தின் குழப்பம் மேலும் பெருகியது.

''சரண்யா, உனக்கு சாரைத் தெரியுமா?''

''தெரியும்பா. நேற்று ஹோட்டலில் சொன்னேனே, அங்கிள் தான் அங்கே வந்து...''

''ஓ! அப்படியா? மிஸ்டர் கருணாகரன். நேற்று இரவு சரண்யா உங்களைப் பற்றிச் சொன்னாள். ஆனால் நீங்க காலையில் பேசும்போதுகூட அதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே? நீங்க யாரோ என்று சரியாகக் கூட பேசவில்லை...'' என்று லேசான வருத்தம் கலந்த குரலில் சொன்னார் ராமலிங்கம்.

''அதனாலென்னங்க. நீங்க பிசியா இருந்திருப்பீங்க. என்ன பேச வருவாங்க என்றே தெரியாதபோது நீங்க



அப்படிப் பேசியதில் தப்பில்லை...'' என்று பெருந்தன்மை யாக ராமலிங்கத்திடம் சொன்னவர், சரண்யாவிடம் திரும்பினார்.

''என்ன சரண்யா, நேற்று நான் சொன்ன மாதிரியே செய்து விட்டாய் போல? உன்னுடைய வேகம் என்னை பிரமிக்க வைக்கிறது. முதல் வேலை செய்தாய். அதை நான் பார்த்தேன். எனக்கு ரொம்ப சந்தோஷம். அதே மாதிரி உன்னுடைய பெற்றோர்களிடமும் பேசி விட் டாயா?'' என்று ஆர்வமாகக் கேட்டார் கருணாகரன்.

'இன்னும் பேசவில்லையே...?' என்று மனதிற்குள் பதறி, அப்பாவை கலவரமாகத் திரும்பிப் பார்த்தபடி, ''தீபக் உங்களிடம் எல்லாம் சொன்னாரா அங்கிள்?'' என்று திணறலாக விசாரித்தாள் சரண்யா.

''எல்லாம் சொன்னான். நீ உன்னுடைய காதலை நிரூபித்த விதம் நான் பார்த்தேன். அதுக்கு மேலே மறு பேச்சே இல்லை. அந்த படவா ராஸ்கலும் பெர்மிஷன் கேட்கவில்லை. அப்பா எனக்கு இவள் தான் வேண்டும் என்று எனக்கு வெறும் தகவல் மட்டும்தான் சொன்னான் தெரியுமா?'' என்று சொல்லி, அட்டகாசமாய்ச் சிரித் தார்.

சாண்யா அவரின் பேச்சை நிறுத்த வழி வகை தெரி யாமல், அப்பாவின் முகத்தில் ஏறும் குழப்பம், மற்றும் கோபத்திற்கும், அம்மாவின் கேள்விகளுக்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நிற்க, அவர் பேச்சைத் தொடர்ந்து கொண்டே போனார்.

''என்னுடைய மனைவியும் மகளும் என்னோடு கூடவே வருவதாக இருந்தது. அப்புறம் தான், நான்

முதலில் பார்த்து பேசி, உங்க அப்பா அம்மாவின் சம்மதம் கேட்டுட்டு, அவங்களை நல்ல நேரம் பார்த்து அழைத்து வரலாம் என்று முதலில் நான் வந்தேன். உன்னோட வேகத்துக்கு நான் ஈடு கட்டி வர வேண்டாமா? சம்பந்தி நம் பிள்ளைகள் ரொம்ப அட்வான்ஸ்ட். அவங்க சொல்றதை நாம் கேட்கணும் தெரியுமா? உடனே, இவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வச்சால் நம்ம கௌரவம் காப்பாங்க...''

''கல்யாணமா? யாருக்கு?''

''என்ன சம்பந்தி? என் பையனுக்கும் உங்க பெண்ணுக்கும் தான் கல்யாணம். அவங்க ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர்...''

''சம்பந்தியா? என்ன பேசறீங்க நீங்க?'' என்று ராமலிங்கம் அதட்ட, இந்திராணி கணவரைச் சமாதானப் படுத்த முயன்றார். பெண்ணைக் கொடுப்பதும் கொடுக்க மறுப்பதும் வேறு விஷயம். ஆனால் ஒரு காவல்துறை உயர் அதிகாரியை மரியாதைக் குறைவாக நடத்துவதில் அவருக்குச் சம்மதம் இல்லை.

''பொண்ணு படிப்பை முடிக்கவில்லை. அதுக்குள்ளே என்ன அவசரம்? ஒரு வருஷம் போகட்டும். அப்புறம் மெல்ல செய்யலாமே என்று யோசிக்கிறாங்க. நாங்க பேசிட்டு அப்புறம் உங்களுக்கு தகவல் சொல்லி அனுப்புறோம்'' என்று இடையில் புகுந்து சமாதானம் செய்ய மனைவியை முறைத்தார் ராமலிங்கம்.

''நீயும் இவளுக்கு உடந்தையா?'' என்று கேட்ட கண்களுக்கு பதில் சொல்லும் வகை இந்திராணிக்குத் தெரியவில்லை. இப்போதைக்கு பேச்சு வார்த்தை



தடித்து விடாமல் வீட்டுக்கு வந்தவரை நல்லபடியாக அனுப்பி வைப்பது தான் முக்கியம்.

அவசரமாக அப்பாவின் கைகளைப் பற்றி, ''அ..ப்..பா.. சாரிப்பா, நான்...'' என்று சமாதானம் செய்யும் முயற்சியில் சரண்யா இறங்க, ஒரு பார்வையில் அவளின் கையை அவளே விலக்கிக் கொள்ளும்படி செய்தார் ராமலிங்கம்.

''உங்க பொண்ணு என்னோட பொண்ணு மாதிரி, நான் அவள் படிப்பதை உறுதி செய்கிறேன்'' என்று கருணாகரன் வாக்குறுதி கொடுக்க மேலும் எரிச்சலானார்.

எரிச்சலாக ஏதோ சொல்ல முயன்ற ராமலிங்கத்தை அவசரமாகக் கை பற்றி, ''என்னங்க, ஒரு நிமிஷம் உள்ளே வாங்க. சரண்யா அங்கிளுக்குக் குடிக்க ஏதாவது கொடும்மா...'' என்று சொன்னபடி கணவரை உள்ளறைக்கு அழைத்துச் சென்றார் இந்திராணி.

உள் அறைக்குச் சென்ற அம்மா அப்பாவையே திகைப்புடன் பார்த்தபடி நின்று இருந்த சரண்யாவின் தோளைத் தொட்டு, ''என்னம்மா? அப்படி திகைத்துப் போய் நிற்கிறாய்?'' என்று கருணாகரன் கேட்டதும் சரண்யாவிற்கு உரைத்தது.

''சாரி அங்கிள்... நான்... ஏதோ யோசனையில்...''

''சரண்யா, எனக்கு உன்னை அவ்வளவு பழக்கம் இல்லை என்றாலும் தீபக்கை நல்லா தெரியும். அவன் யாருக்கும் கெடுதல் நினைக்க மாட்டான். அவன் ஆசைப் பட்டது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு. இன்னும் அஞ்சு நிமிஷத்துல உங்க அப்பாவே

வந்து, சம்பந்தி கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம் என்று கேட்கப் போகிறார் பாரேன்...'' என்று தேற்றினார்.

''அங்கிள். எனக்குக் கல்யாணத்திற்கு இப்ப அவசரம் இல்லை...'' என்று ஆரம்பிக்கும்போதே அப்பா வரும் அரவம் கேட்க, பேச்சை பாதியில் நிறுத்திவிட்டு அவசரமாகத் திரும்பினாள்.

''உங்க பையன் யார், என்ன என்ற விபரம் சொன்னாங்க. அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யணத்தை வச்சுக்க ஏற்பாடு பண்ணிட்டுச் சொல்றேன்'' என்று சுருக்கமாக முடித்து கை குவிக்க சரண்யாவிற்கு திக் என்று இருந்தது. அப்பாவின் பின் வந்த அம்மாவின் முகம் அப்படி ஒன்றும் சந்தோஷமாக இல்லை. சரண்யாவின் குழப்பம் எதுவும் கருணாகரனை எட்டவில்லை.

''ரொம்ப சந்தோஷம். நீங்க இவ்வளவு சுலபமா சம்மதம் சொல்வீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சரண்யா விருப்பம் என்று சொன்ன பிறகு உங்களால் மறுக்க முடியுமா? உங்க பொண்ணைப் பற்றிய கவலையை விட்டுடுங்க. எங்க வீட்டு ராணி அவள். பிரமாதமா பார்த்துக் கொள்கிறேன். போதுமா?'' என்று சந்தோஷமாகக் கருணாகரன் வாக்குறுதி அளிக்க ராமலிங்கத்தின் மௌனம் தொடர்ந்தது.

உள்ளே இருந்து வந்த இந்திராணிக்கு, ராமலிங்கத்தின் கோபம் புரிந்தது. இவர் ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறார்? நேற்று நள்ளிரவு வரை அவ்வளவு நேரம் கதை பேசிக் கொண்டு இருந்தவள். இந்த தீபக் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. யாரோ ஒரு மூன்றாவது மனிதர், அந்த பையனுடைய அப்பாவாகவே



இருந்தாலும், சரண்யாவின் காதல் அவருக்குத் தெரிந்து இருக்கிறது. மகள் தன்னிடம் மறைத்து விட்டாள் என்பதை ராமலிங்கத்தால் ஜீரணிக்க முடியாது என்பது அவரை அருகிலேயே இருந்து பார்த்த இந்திராணிக்கும், சரண்யாவிற்கும் தெளிவாகப் புரிந்தது.

அவருடைய கோபம் தப்பவில்லை. அதுவும் அவரே முன் நின்று பேசிய சம்பந்தத்தை மகள் ஏதோ காரணம் சொல்லி நிராகரித்து விட்டாள். முதலில் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும், மகள் சொன்னதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார். ஆனால் இப்போதோ...

''என்ன மருமகளே, சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போய் விட்டாயா? பேச்சே காணோம்? அது சரி என்னிடம் என்ன பேசுவது? தீபக்கிடம் என்றால் பேசலாம். போய் பேசு. உன்னுடைய அழைப்பிற்காக அவன் காத்து இருக்கலாம். ஞாயிறு அன்று நேரில் பார்க்கலாம்'' என்று சரண்யாவிடம் கன்னத்தை வருடி விடை பெற, ராமலிங்கமும் இந்திராணியும், அதை வெறித்துப் பார்த்தனர்.



## 14

கருணாகரனை வழி அனுப்பிவிட்டு வந்த ராமலிங்கத்தை ''அப்பா...'' என்று கலக்கத்துடன் அழைத்தாள் சரண்யா. அவளின் அழைப்பை ஒதுக்கி, மனைவியிடம் பேசினார்.

''இந்து, அடுத்து வரும் முகூர்த்தத்திலேயே, அவளுக்கு திருமணம் முடித்து அனுப்பி விடலாம். இந்த அவசரக்

கல்யாணம் சம்பந்தமா எனக்கு நிறைய வேலை இருக்கு. யாரும் என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்'' என்று சுருக்கமாகச் சொல்லி விட்டு அறைக்குள்ளேயே போய் ராமலிங்கம் கதவை சாத்திய வேகத்தில் சரண்யா விற்கு அப்பா தன் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது.

''அம்மா...'' என்று கண்ணில் நீருடன் அழைக்க, இந்திராணி வருத்தத்துடன் பார்த்தார்.

''நீ ஏன் சரண்யா முன்னாடியே அப்பாவிடம் சொல் லலை...? நாங்க உனக்கு என்ன குறை வைத்தோம்? எப்படி சரண்யா உனக்கு எங்களை விட அவர் பெரிசா போயிட்டாரா? அவரிடம் முதலில் சொல்லி இருக் கிறாயே? இது நியாயமா?''

''அம்மா ப்ளீஸ்! ரெண்டு விஷயம் முதலில் புரிஞ்சுக் கோங்க. ஒண்ணு நான் அங்கிளிடம் எதுவுமே சொல் லலை. அவர் எனக்கு உங்களை விடவும் எந்த விதத் திலும் உசத்தியும் இல்லை. ரெண்டாவது இந்த நிமிஷம் வரை தீபக் என்னிடம் தன் முடிவைச் சொல்லாதபோது... நான் எப்படிம்மா... எந்த நம்பிக்கையில்... அப்பா விடம்...''

''தீபக் தன் பெற்றோரிடம் சம்மதம் வாங்கி விட்டு உன்னிடம் தெரிவிக்க நினைத்து இருக்கிறான். ஆனால் நீ...?'' என்று வேகமாக இந்திராணி திருப்பிக் கேட்ட போதுதான் சரண்யாவிற்கு தன் தவறு உறைத்தது. ஒவ்வொரு பெற்றோரும். தன் மகன் அல்லது மகளின் திருமணம் எப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்று பல கனவுகள் வைத்து இருப்பாங்க என்று இதை தீபக்குமே



நினைவூட்டினான். அவளின் மௌனம் நீள, இந்திராணி யின் ஆதங்கம் தொடர்ந்தது.

''.... அந்த வருத்தம் எங்களுக்கு இருக்காதா சரண்யா? என்னை விடு. அப்பாவிற்கு எப்படி இருக்கும் என்று கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா?'' என்று இந்தி ராணி கேட்டபோது மகளின் மேல் இருந்த வருத்தத்தைக் கோபம் மிஞ்சி இருந்தது.

''நான் இப்படி எல்லாம் நடக்கும் என்று கனவில்கூட நினைக்கலைம்மா. இரண்டு நாளில் என்னென்னவோ நடந்துடுச்சு. எனக்கு என்ன சொல்றது என்றே தெரியலை... சாரிம்மா...''

''வெறும் சாரி என்ற வார்த்தை போதுமா சரண்யா? பெற்ற பெண் என்று நான் என் மனசை தேற்றிக் கொண் டாலும், உங்க அப்பா...? தாத்தா ஏதோ விளையாட் டாகச் சொத்து பற்றி சொல்லி விட்டார் என்று அவர் எவ்வளவு வைராக்கியமா அந்த சொத்தை விரலால் கூட தொடக்கூடாது என்று கடந்த இருபத்தி ஐந்து ஆண்டு களாக இருக்கிறார் என்பது உனக்குத் தெரியாதா? அப்படி இருக்கும்போது, அவ்வளவு ஈஸியா... என்ன சரண்யா நீ... என்ன ஒன்றும் தெரியாத பச்சைக் குழந் தையா? அப்பாவை அருகில் இருந்து பார்க்கவில்லையா? ப்ச்! அவர் எவ்வளவு வைராக்கியமா இருப்பார் என்று உனக்குத் தெரியாதா?''

''தெரியும்மா. ஆனால் நேற்று மாலை தீபக்கிடம் சொன்னேன். அவர் இன்னமும் எனக்கு பதில் சொல்ல வில்லை. இன்று மாலை நான் காலேஜில் இருந்து வருவதற்குள் அங்கிள் இங்கே வந்து விட்டார். கண்

மூடித் திறப்பதற்கு முன்னால் நடந்து விட்டதும்மா...'' என்று திணறிய மகளைப் பார்க்க பாவமாக இருந்தாலும், மகளுக்கு சாதகமாக ராமலிங்கத்திடம் இது சம்பந்தமாகப் பேச முடியுமா?

''சரண்யா, எனக்கும் வருத்தம் இருக்கு. ஆனால் உங்க அப்பா அளவுக்குக் கோபம் இல்லை. தீபக்கை இரண்டு முறை பார்த்த வரையில் நல்ல பையனாகத் தெரிவதாலும், குடும்பமும் அனுசரணையாக இருப்பதாலும் இந்த வரன் பரவாயில்லை என்று நான் நினைக்கிறேன். உங்க அப்பாவிடமும் பேசிப் பார்க்கிறேன். ஆனால் என்ன பேசச் சொல்கிறாய்? அவர் இந்த திருமணத்திற்கு மறுத்தால் சம்மதிக்கச் சொல்லி வாதாடலாம். திருமணத்தை சீக்கிரம் முடித்து அவளை இந்த வீட்டில் இருந்து அனுப்பி வை என்று சொல்லும்போது என்ன பேசச் சொல்கிறாய்?'' என்று முடித்துவிட்டு கணவரைத் தேடி அறைக்குள் சென்றார் இந்திராணி.

மகளின் நிலையை கணவருக்கு விளக்க முயன்ற இந்திராணிக்குக் கிடைத்தது தோல்வியே. தன்னால் முடிந்த வரை முயன்று விட்டு, விக்ரமிற்குத் தகவல் சொல்லி வரவழைத்தார். வீட்டிற்கு வந்த விக்ரம் நடந்தவற்றை தெரிந்து கொண்ட போது, அவனுக்கு தீபக் மேலே இருந்த வெறுப்பு கூடிப் போனது.

''நீங்க ஏன் சித்தப்பா, யாரோ ஒருத்தர் சொன்னார் என்பதற்காக இந்தக் கல்யாணத்தை அவசரமா நடத்தணும்? சரண்யாவிடம் நான் பேசறேன். இன்னும் படிப்பு கூட முடிக்கவில்லை. அவள் புரியாமல் பேசுகிறாள் என்றால் அவளுக்கு எடுத்துச் சொல்வது நம் கடமை இல்லையா?'' என்று சண்டை போட்டான் விக்ரம்.



''நீ தாண்டா புரியாமல் பேசுற. நான் வேற யாரோ சொன்னாங்க என்பதற்காக இந்தக் கல்யாணத்தைச் செய்ய ஒத்துக் கொள்ளவில்லை. நம்ம வீட்டுப் பொண்ணு அவளோட கல்யாணத்தைப் பற்றி அடுத்த ஆளிடம் பேசுகிறாள் என்றால் என்ன அர்த்தம்?''

''அவனை நான் என் கல்யாண வீட்டிலேயே பார்த்தேன் சித்தப்பா. போட்டோ எடுக்கிறேன் பேர்வழி என்று அவளை நோட்டம் விட்டுகிட்டு தான் இருந்தான். அதுக்கு அப்புறம் உங்க வெட்டிங் ஆனிவெர்சரி, அப்புறம் சரண்யா பிறந்த நாள் பார்ட்டி, எல்லா இடத்திலும் வந்து அட்டை மாதிரி ஒட்டிகிட்டான். கால்குலேட் பண்ணி அவளைப் பின் தொடர்ந்து சாதித்து இருக்கிறான் சித்தப்பா. சரண்யா தப்பு பண்ணி விட்டாள் என்று பார்க்காமல் அவங்க அவளை மூளை சலவை செய்து விட்டார்கள் என்ற கோணத்தில் பாருங்க...''

''இருக்கட்டும். அவங்க இப்ப நல்லவங்களா இருக்காங்க. அவனை வேண்டாம் என்று சொன்னால் நாம் இப்ப வில்லனா மாறிடுவோம். நான் ஏன் கெட்டவனா மாறணும். சொல்லு? அவர் மேலே அவ்வளவு நம்பிக்கை வைத்து இருக்கிறாள் என்று அர்த்தம். அங்கேயே போய் சந்தோஷமா இருந்துக்கட்டும். இதுக்கு மேலே என்னிடம் இந்த கல்யாணம் சம்பந்தமா பேசாதே சொல்லிட்டேன்'' என்று முடித்தாலும் விக்ரம் விடாமல், சரண்யாவின் அறைக்கே சென்று விசாரித்தான்.

''சரண், உனக்கு இப்ப என்ன கல்யாணத்திற்கு அவசரம்? எதுக்கு தீபக்கை கல்யாணம் பண்ணிக்க ஒற்றைக் காலில் நிற்கிறாய்?''

''எனக்கு உடனே கல்யாணம் வேண்டும் என்று யார் சொன்னா? எனக்கு எந்த அவசரமும் இல்லை. அப்பா தான் என்னை தப்பாப் புரிஞ்சுகிட்டு, அவசரமா இந்தக் கல்யாணத்திற்கு ரெடி பண்றாங்க. நான் சொன்னால் கேட்க மாட்டேங்கிறாங்க, நீயாவது சொல்லு.''

''அப்ப அந்த கருணாகரன் எதுக்கு அப்பாவைத் தேடி வந்து அப்படி பேசிட்டுப் போறார்? ஐ.பீ.எஸ். ஆபீசர்னா கொம்பா முளைச்சு இருக்கு? யார்கிட்டே வேணும்னா என்ன வேணா பேசலாமா?'' என்று கேட்க சரண்யா விற்கு தலை சுற்றியது.

''அவரை ஏன் திட்டுகிறாய்? கல்யாணத்திற்கு தான் அவசரம் இல்லை என்று சொன்னேன். தீபக்கை எனக்குப் பிடிக்கும். அப்பா கோபமா, என்னைப் புரிஞ்சுக்காமல், என்னை இந்த வீட்டில் இருந்து வெளியே தள்ளி விடணும் என்று அவசரமாக இந்த கல்யாணம் பண்ணு வது தான் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று தெளிவாக விளக்கினாள் சரண்யா.

''யார் இந்த தீபக்? இவனை உனக்கு எத்தனை நாளா தெரியும்? அங்கே மதுரையில் பார்த்தது தானே? நிஜமா அவனை உனக்குப் பிடிச்சு இருக்கா? இல்லை மிரட்டி உன்னை இப்படிப் பேச வைக்கிறானா? சொல்லு, அவனை நான் பார்த்துக்கறேன்...''

''ஏண்டா இப்படி எல்லாம் பேசுகிறாய்? தீபக் ஒன்றும் என்னை மிரட்டலை. நான்தான் அவரை மிரட்டினேன் தெரியுமா?''

''சரண்யா நீ பணக்காரி. உன்னை பணத்துக்காக அவன் சுற்றி வருவதாக இருந்தால்...'' என்று விக்ரம் விளக்க முயன்ற வினாடி சரண்யா ஆவேசமானாள்.



''போதும்! இதுக்கு மேலே தீபக் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாதே. அவரோட பணத்தாசை பற்றி எனக்கு நல்லாவே தெரியும். எனக்கு உங்க பணமே வேண்டாம். இதை உங்க சித்தப்பாவிடமும் சொல்லி விடு. முடிந் தால் கல்யாணத்துக்கு வந்து அட்சதை போடு. இல்லா விட்டால் அதுவும் வேண்டாம்'' என்று அழுகையோடு சொல்லி விட்டு, குப்புற படுத்துக் கொண்டாள்.

படுக்கையில் படுத்தவளுக்கு கடந்த இரண்டு நாட்களில் எத்தனை குழப்பங்கள். இது நல்லதா? கெட்டதா? அப்பாவின் கோபத்தை எப்படிக் குறைப்பது என்று வருந்தியபோது, மொபைல் அழைத்தது. புது எண். தீபக்காக இருக்க வேண்டும். ''தீ...ப...க்..?'' என்று சொல்லும்போதே அவளின் குரலில் இருந்த கண்ணீரும் விம்மலும் அவனை எட்டிப் பதற வைத்தது.

''சரண்யா, என்ன ஆச்சுடா? நான் உங்க வீட்டுக்கு வரலை என்று கோபமா? ஐஆம் சாரிம்மா. அப்பாதான் உங்க வீட்டுல எப்படி பேசுறாங்க என்று பார்த்து விட்டுப் போகலாம் என்று சொன்னாங்க. நான் முன்னாடியே உன்னிடம் பேசி இருக்கணும். காலேஜில் தொந்தரவு செய்யக் கூடாது என்று நினைத்தேன். அப்பா வீட்டுக்கு வந்த உடனே பேசுகிறேன். எதுக்கு அழுகிறாய்? சொன்னால் தானே தெரியும்?'' அவன் குரலில் இருந்த பதட்டமும், அன்பும், அக்கறையும், அவளை நெகிழ வைத்து, கண்ணீரை வரவழைத்தது.

''இவன் என்னை மிரட்டுகிறானா? நான் அவனை மிரட்டாமல் இருந்தால் போதாதா? இவன் பணத்துக்கு ஆசைப் படுபவனா? அப்படி ஆசைப்படுபவன்தான், என்னைக் கண்டாலே ஓடி ஒளிந்து கொள்கிறானாக்கும்?

உனக்கு என்னடா தெரியும் தீபக்கை பற்றி? பெரிசா குறை சொல்லக் கிளம்பி விட்டாய்? அவனைப் பார்க்காமல், பழகாமல், நாலு வார்த்தை கூட நல்லபடியாக பேசாமல், எப்படி இந்த மாதிரி ஒரு முடிவிற்கு வந்தாய்?'' என்று கண்ணில் நீர் வழிய மூக்கை உறிஞ்சியபடி, மானசீகமாய் விக்ரமோடு சண்டை போட்டுக் கொண்டு இருந்ததால், தீபக்கிற்கு பதில் சொல்லவில்லை.

பதறிய தீபக், போனை வைத்ததை அறியாதவள் சில நிமிடங்கள் கழித்து போனை பார்க்க அது அமைதியாக இருந்தது. மீண்டும் அதே எண்ணை அழைக்க, அவன் வண்டியில் வந்து கொண்டு இருந்ததால், எடுக்கவில்லை. மனத்தாங்கலுடன், வெளியே வந்த சரண்யாவின் கண்ணில், பைக்கில் தீபக் உள்ளே நுழைவது கண்ணில் பட்டது.

அவன் வண்டியை நிறுத்தி பூட்டும் முன்பே, தாவி அவனைக் கட்டிக் கொண்டவள் சுற்றுப்புறம் மறந்து, அவன் தோளில் சாய்ந்து அழ, ''ஷ்! சரண்யா, என்ன இது. எல்லோரும் சரிதான் சொல்லிட்டாங்களே அப்புறம் என்ன?'' என்று தேற்றினான்.

பல நிமிடங்கள் கழித்தே அவனின் மார்பில் இருந்து சரண்யா நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க, அவன் கனிவாகப் புன்னகை செய்தான். ''என்ன ஆச்சுடா? இப்படி போனில் அழுது என்னை பயமுறுத்திட்ட?'' என்று மென்மையாக விசாரித்தான்.

அவன் கேட்ட வினாடியில், அப்பாவைப் பற்றியோ, அண்ணனைப் பற்றியோ அவனிடம் குறைவாகச்



சொல்ல மனம் வராமல், கண்ணீருடன் புன்னகைத்து, ''ஒன்றும் இல்லை'' என்ற அர்த்தத்தில் மறுப்பாக தலை அசைத்தாள் சரண்யா.

''இப்படி விசும்பி விசும்பி, அழுதுட்டு ஒண்ணும் இல்லை என்றால் என்ன அர்த்தம்?'' என்று வற்புறுத்தினான்.

''அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில், நம் கல்யாணம் தொடர்பா சின்ன வாக்குவாதம். அது மனசுக்குக் கஷ்டமா இருந்தது. அதோட விக்ரம் வேறே... இப்ப உங்களைப் பார்த்த பின்பு பரவாயில்லை...'' என்று உண்மையைச் சொல்ல மனம் வராமல், கண்ணீரோடு புன்னகைக்க அவன் முகம் வருத்தத்தைக் காட்டியது.

''இதுக்கு தான்... நான் முன்பே... யோசித்தேன்...'' என்று சொல்ல முடியாமல் தவித்தான் தீபக். அவளே மனம் நொந்து போய் இருக்கையில் குத்திக் காட்டுவது போல எதையும் சொல்லக்கூடாது.

''குட்டிம்மா! காதல் திருமணத்தில் இந்த அளவு கூட சலசலப்பு இல்லை என்றால் அந்த திருமணத்திற்கே அது கௌரவக் குறைச்சல் இல்லையா? இது எல்லாம் சீக்கிரம் சரியாகி விடும். நேரமாச்சு. நீ உள்ளே போ, நான் அப்புறமா அம்மா அப்பாவோடு வரேன்'' என்று கன்னத்தில் தட்டி விட்டுக் கிளம்பினான் தீபக்.

தீபக் உள்ளே வந்த வினாடியில் இருந்து, அவளின் விசும்பல் நிற்காமல் தொடர்ந்தது. அவளின் முதுகை வருடி, வார்த்தைகள் இன்றியே தேற்ற முயற்சி செய்தது, இரண்டுமே அந்த வீட்டின் வெவ்வேறு அறைகளில் இருந்த ராமலிங்கம், இந்திராணி, விக்ரம். மூவரின்

கண்களிலும் பட்டு மேலும் கோபமூட்டி, அவர்கள் ஏற்கனவே எடுத்து வைத்த முடிவை மீண்டும் உறுதிப் படுத்தியது.

* * *

கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த மகள், தன்னுடைய காதலைத் தன்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள் என்ற ராமலிங்கத்தின் கோபம், அவரை தனி உலகத்தில் நிறுத்தி வைத்தது.

மகளின் வாதத்தைப் புரிந்து கொண்டாலும், அதில் உள்ள நியாயத்தை கணவனிடம் சொல்லிப் புரிய வைக்க முடியாத நிலையில் இருந்த இந்திராணியும், சொந்த வீட்டிலேயே அந்நியமாய் உணர்ந்த சரண்யாவும், தங்களின் நிலையை எண்ணி எண்ணி மனதிற்குள் புழுங்கினர்.

காலம் யாருக்கும் நில்லாமல் ஓடி, அடுத்த பத்தே நாட்களில் எளிமையாய் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம், மாலையில் ஹோட்டலில் இரவு விருந்து என்று ஏற்பாடு செய்து இருந்தாலும், விருந்து முடிந்த பின்னர், உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்ற ரீதியில், அதற்குப் பிறகு நடக்க இருந்த எந்த சடங்குகள் குறித்தும் திட்டவட்டமாகப் பேச மறுத்து விட்டார் ராமலிங்கம்.

மறுவீடு வருவது குறித்து கருணாகரன் நேரில் வந்து கேட்டபோது, ''உங்க வீட்டு பொண்ணு, விருந்து முடிச்சு அழைத்து போவது உங்களின் பொறுப்பு'' என்று முடித்து விட்டார்.



பதிவாளர் அலுவலகத்திற்கு விக்ரம் வரவே இல்லை. அவன் இரவு விருந்து வேலையாக இருப்பதாக அப்பா சொன்னது பொய் என்பது சரண்யாவிற்குத் தெரியும். மாலையில் வந்தவனும், அந்த இடத்தில் இருந்தானே தவிர, தீபக்கிடம் சிரிக்கவோ, பேசவோ இல்லை.

முதலில் உற்சாகமாகவே திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதாக, கருணாகரன் நம்பினாலும், சரண்யாவின் முகத்தில் மலர்ச்சி இல்லாததையும், அவசரமாகப் பதிவு திருமணம் நடைபெறும் அழகையும் வைத்து, அவரால் என்னவோ சரி இல்லை என்பதை உணர முடிந்தது.

அடுத்து கிடைத்த தனிமையில், ''எந்தச் சூழ்நிலையிலும், இந்தக் கல்யாணம் செய்து கொண்டதற்காக சரண்யா வருத்தப்படும் நிலை வந்து விடக்கூடாது. கவனத்துடன், அந்த பொண்ணோட மனசை புரிந்து நடந்துக்கோ. சரண்யா முகத்தில் சந்தோஷம் கம்மியா இருக்கு'' என்று தீபக்கை அழைத்துச் சொன்னார்.

''அவங்களுக்கு இஷ்டம் இல்லாமல் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிச்சாங்களா?'' என்று கவலையோடு கேட்ட தீபக்கால் சரண்யாவின் குடும்பச் சூழலை ஊகிக்க முடிந்தது. சரண்யா உறுதியாக நின்றதால், வேறு வழி இன்றி குடும்ப கௌரவம் காக்க அவசரக் கல்யாணம். சரண்யா தனக்கும் அவர்களுக்கும் இடையே அல்லாடுகிறாள். அவள் மீது ஏற்கனவே இருந்த அன்பு வெள்ளமாய் பல மடங்கு பெருக்கெடுத்து ஓடியது.

''நீங்க கவலைப்படாதீங்கப்பா! பணத்தில் வேண்டும் என்றால் அவர்களை விட நாம் கம்மியா இருக்கலாம். ஆனால் பாசத்தில் நாம் அவங்களை விட பல மடங்கு அதிகம் என்று சரண்யாவிற்கும் அவங்க பெற்றோர்

களுக்கும் நிச்சயம் நிரூபிக்கலாம்'' என்று தீபக் சொல்ல அவர் ஒப்புதலாகத் தலை அசைத்தார்.

''இன்னொரு விஷயம் தீபக், சரண்யா இப்ப போட்டு இருப்பது வைர நகைகள் போல இருக்கு. அதை எல்லாம் பக்குவமா சரண்யாவிடம் சொல்லி, அவங்க வீட்டிலேயே கொடுத்துட்டு வந்துடச் சொல்லு. நமக்கு அந்த நகைகள் வேண்டாம். ஆனால் யார் மனசும் கோணாமல் பார்த்துப் பேசு'' என்று மீண்டும் ஒரு முறை அழுத்திச் சொல்லி விட்டு நகர, அப்பாவின் பெருந்தன்மையைப் பார்த்து பிரமித்து நின்றான் தீபக்.



## 15

வரவேற்பில், வாடிய முகத்துடன் இருந்த சரண்யா வையும், அவளை அவ்வப்போது கவலையுடன் பார்த்துக் கொண்டு இருந்த தீபக்கையும் மதுமதி கேலி செய்து சிரிக்க வைக்க முன்று கொண்டு இருந்தாள்.

''அண்ணி நீங்க பெரிய ஆர்ட்டிஸ்ட் என்று தீபக் அண்ணா சொன்னாங்க. ஆனால் எங்க அண்ணனைப் படம் வரையும்போது படம் சூப்பரா வரைஞ்சு இருக் கீங்க. ஆனால் அண்ணனுக்கு ஒரு நல்ல காஸ்டியூம் போடாமல் வெறும் துண்டோடு நிறுத்திட்டீங்களே? என்ன அண்ணி பைனான்ஸ் ப்ராப்ளமா? முன்னாடியே என்னிடம் கேட்டு இருந்தால் அம்பானியோட பார்ட்னர் நான் தந்து இருக்க மாட்டேனா?'' என்று அவள் சிரிக்க சரண்யாவிற்கு இதே மாதிரி கல்யாணத்தில் தான் தன்னுடைய அண்ணி தர்ஷினியை ஒட்டியது நினைவு வந்து கண்ணில் ஈரம் கசிந்தது.



இந்தக் கல்யாணத்திற்கு தர்ஷினி வரவே இல்லை. அப்படி என் மேல் என்ன கோபம்? அவள் சொன்ன மாப்பிள்ளை வேண்டாம் என்பதற்காகவா? விக்ரம் ஆள் வந்தேன் என்று பேர் பண்ணி இருக்கிறானே தவிர ஒரு வார்த்தை கூடத் தீபக்கிடம் பேசவே இல்லை. இவனுக்கு என்ன கோபம்? என்று மனதிற்குள் புழுங்கிக் கொண்டு இருந்த சரண்யாவின் கைகளைப் பற்றி அழுத்தி, ''சரண்யா, ரிஷப்ஷன் முடிந்ததும், இரவு உங்க வீட்டுக்கு போயிட்டு, அப்புறம் நம்ம வீட்டுக்குப் போகலாமா?'' என்று கேட்டான் தீபக்.

''நானே உங்களிடம் சொல்ல நினைச்சேன் தீபக். அப்பா வீட்டுக்கு வரச் சொல்லி சரியா கூப்பிடலை என்று நீங்க ஃபீல் பண்ணக் கூடாதே என்று கவலைப் பட்டுகிட்டு இருந்தேன்'' என்று முடிக்கும் முன்பே கண்களில் நீர் நிறைந்தது.

''உங்க அப்பாவிற்கு இந்தக் கல்யாணம் நடப்பதில் இஷ்டம் இல்லையா?''

''அப்படி இல்லை. அவருக்கு என்மேலே தான் கோபம். ப்ச்! அப்புறமா சொல்றேன் தீபக். இப்ப அங்கே போய்...'' என்று மேலே பேச முடியாமல் நிறுத்தினாள் சரண்யா.

என் அப்பா உன்னைக் குறை சொன்னார். அதனால் இந்த நகை எல்லாம் வேண்டாம் என்று திருப்பிக் கொடுக்கப் போகிறேன். எப்படி அவர்கள் கௌரவமாக திருமணம் செய்து கொடுப்பதாக நடித்தார்களோ, அதே மாதிரி நானும் அவர்களுக்காக இதைப் போட்டு நடித்து விட்டேன். நாடகம் முடிந்து விட்டது. இனி இது எனக்கு

வேண்டாம். உன் கௌரவம் காக்க திருப்பிக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்ல முடியாமல் பேச்சை நிறுத்தினாள்.

''சரண், நீ என்னைத் தப்பாக நினைக்கா விட்டால், நான் ஒண்ணு சொல்லட்டுமா?'' என்று கேட்டான் தீபக்.

''ம்ம்ம்...''

''உங்க அப்பாவுக்கு என்னை அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லோரும் நம் திருமணத்தை முழுசா சந்தோஷமா ஏற்றுக் கொள்ளும் வரைக்கும்...'' என்று நிறுத்தி தயக்கத்தோடு பார்த்தான் தீபக்.

''சந்தோஷமா ஏற்றுக் கொள்ளும் வரைக்கும்...'' என்று புன்னகையோடு திருப்பிக் கேட்டாள் சரண்யா. அவன் சொல்ல வருவது புரிந்து விட்டதால், அதுவரை இருந்த வருத்தம் காணாமல் போய் முகம் மலர்ந்தது. இவன் என்னுடையவன். தன் எண்ணம், சொல், செயல் எல்லாவற்றிலும், என் எண்ணத்தை அப்படியே பிரதிபலிப்பவன், என்ற பெருமிதம் புன்னகைக்க வைத்தது.

''நீ இப்ப போட்டு இருக்கும் விலை உயர்ந்த நகைகளை...'' மீண்டும் தயங்கி நிறுத்தி அவளைப் பார்த்தான் தீபக்.

''ம்ஹூம்... விலை உயர்ந்த நகைகளை...''

''யாருக்கும் தெரியாமல் அபேஸ் பண்ணிடலாமா?'' என்று கேட்ட தீபக்கின் கேள்வியில் சரண்யாவின் பின்னால் நின்று இருந்த இந்திராணிக்கு அவன் முக பாவனை தெரியாமல் குரல் மட்டும் கேட்டதால் ஒரு நிமிடம் மூச்சு நின்றது.



கடவுளே! இவனை நல்லவன் என்று நினைத்தோமே? நம் கணக்குத் தப்பி விட்டதா என்று தன்னைத் தானே நொந்து கொண்ட தாய்க்கு, அடுத்து வந்த சரண்யாவின் பதில் நெஞ்சில் பால் வார்த்தது. தன்னுடைய முழங்கையால், அவன் விலாவில் குத்திவிட்டு சொன்ன வார்த்தைகளைக் கேட்ட இந்திராணி ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயாக மாறினார்.

''அடுத்தவங்க பொருளுக்கு என்னோட தீபக் ஆசைப்பட மாட்டார்ன்னு எனக்குத் தெரியும். அவருக்குன்னு, நான் கொடுக்கத் தயாராக இருந்த என்னை எடுத்துக்கவே ஆயிரம் வாட்டி யோசிச்ச என் சூரப்புலி, கேவலம் இந்த நகைகளையா அபேஸ் பண்ணப் போகிறார்? இதை எல்லாம் கொண்டு போயி அவங்களிடம் கொடுத்துவிட்டு, வீட்டுக்குப் போகலாம் தீபக். எங்க அப்பா என்னையும் உங்களையும் நல்லா புரிஞ்சுகிட்ட பிறகு, மிச்சத்தைப் பார்த்துக்கலாம்'' என்ற சரண்யாவைப் பெருமையாகப் பார்த்தான் தீபக்.

''ஹய்யோ, என்ன இது இப்படிப் பார்க்கறீங்க. கொஞ்சம் வேற பக்கம் திரும்புங்க தீ...ப...க்... ப்ளீஸ்...'' அவனின் பார்வையில் அவள் மேலும் சிவக்க, அவனின் ஆர்வமும் ரசனையும் இன்னும் கூடியது.

அவளை உரசினாற் போல் நெருங்கி நின்றவன், ''ஹேய் சரண், ஐ லவ் யு பேபி. நான் உன்னை மிஸ் பண்ணி இருந்தால் என்ன ஆகி இருப்பேனோ?'' என்று காதில் கிசுகிசுக்க அவள் மேலும் சிவந்தாள்.

''ஹ...ய்...யோ தீ...ப...க்..! வாயை மூடி மூணு மாசம் நல்லா கும்பகர்ணன் மாதிரி தூங்கிட்டு, 'ஐ லவ் யூ'

சொல்ல நல்ல நேரம் பார்த்தீங்க'' என்று கையால் அவனைத் தள்ளி விட்டாள் சரண்யா.

''ஏண்டா! இந்த நேரத்திற்கு என்ன? வேற எப்போ சொல்லணும் சொல்லு? அப்போ மூணு மாசம் சொல்லாமல் விட்டதற்கும் சேர்த்து ஒரு ஆயிரம் தடவை அபராதம் மாதிரி திருப்பிச் சொல்லிடலாம்'' என்று உல்லாசமாக தீபக் சொல்ல, ''ஆசை தோசை...'' என்று சரண்யா அழகு காட்ட, இருவரும் சந்தோஷமாய் சிரித்தனர்.

அன்று காலையில் இருந்தே திருமணம் என்ற கலப்படமற்ற மகிழ்ச்சி இன்றி, பல்வேறு காரணங்களினால், அழுத்தத்தோடேயே இருந்து வந்த தீபக், சரண்யா, இருவருமே மனம் ஒருமித்து, மற்ற எல்லா கவலைகளையும் பின்னுக்குத் தள்ளி, சந்தோஷமாய் சிரித்த அந்த வினாடி, ஒருவரின் முகம் அடுத்தவர் மனதில் மிக மிக ஆழமாய் பதிந்தது.

வரவேற்பு மேடையில் முடிவு பண்ணியபடி, அவர்களின் வீட்டிற்குச் சென்று, நகைகள் அடங்கிய பையைத் திருப்பிக் கொடுத்து விட்டு, ''எங்களுக்கு உங்களுடைய மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள் மட்டும் போதும். அவசியம் வீட்டுக்கு வாங்க. எங்க வீட்டுக் கதவு உங்களுக்காகத் திறந்தே இருக்கும்'' என்று தீபக் அமைதியாகச் சொன்னான்.

''ரொம்ப நல்லது. பார்க்கலாம்'' என்று ராமலிங்கம் கரம் குவித்த பிறகு, மேலே என்ன செய்வது என்று தெரியாமல் தீபக் விழித்தான். மகளுக்கும் கணவருக்கும் இடையே தவிக்கும் இந்திராணியைப் பார்த்துவிட்டு,



சரண்யாவின் புறம் திரும்பி, ''போகலாமா சரண்'' என்று கேட்டான் தீபக்.

''ஒரே ஒரு நிமிடம் தீபக்...'' என்று அவனிடம் அனுமதி பெற்று, அப்பாவிடம் திரும்பினாள் சரண்யா.

''அப்பா, நான் என்றுமே உங்களையும் உங்க அன்பையும் குறைவாக நினைத்ததில்லை. இனியும் நினைக்கப் போவதில்லை. நீங்க எனக்கு உசத்தி தான். உங்க கோபத்தின் காரணத்தை என்னால் புரிஞ்சுக்க முடியுதுப்பா. ஆ..னா..ல் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான். 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்று என்னைக் கேள்வி கேட்டு, விளக்கம் சொல்ல ஒரு வாய்ப்புக் கொடுத்த பிறகு, நீங்க என்ன தண்டனை கொடுத்து இருந்தாலும் சந்தோஷமா ஏற்றுக் கொண்டு இருப்பேன். ஆனால் அந்த வாய்ப்பை நீங்க எனக்குக் கொடுக்கவில்லை...'' பேச்சைத் தொடர முடியாமல் சரண்யாவிற்கு தொண்டை அடைத்தது.

''சரண்யா போதும், நாம அப்புறமா இன்னொரு நாள் வந்து நிதானமா பேசிக்கலாம்'' என்று சரண்யாவைத் திருப்ப முயற்சி செய்தான் தீபக்.

''இல்லை தீபக், இதை மட்டும் சொல்லிட்டு வந்துடறேன். அடுத்து நான் எப்போ வரப் போறேனோ?'' என்று சொல்லி கண்களைத் துடைத்துக் கொண்டு, அப்பாவைப் பார்த்து பேச்சைத் தொடர்ந்தாள் சரண்யா.

''பரவாயில்லைப்பா. எனக்கு விருப்பமான வாழ்க்கையை உங்க கௌரவத்திற்குக் குறை வராமல் அமைத்துக் கொடுத்து விட்டீர்கள். அதே மாதிரி இனிமேலும் என்னால் உங்க கௌரவத்திற்கு எந்த இழுக்கும் வராது. என்றைக்காவது என்னிடம் விளக்கம் கேட்கலாம் என்று

தோன்றினால், சொல்லி அனுப்புங்கப்பா. ஓடி வந்து சொல்றேன்...'' என்றவள் மீண்டும் கண்ணீரில் தத்தளித்தாள்.

''போகலாம் சரண்யா. சொன்னால் கேளும்மா ப்ளீஸ்...'' என்ற தீபக்கின் குரலை ஒதுக்கி ''நீங்க இதுவரை எனக்கு செஞ்ச எல்லாத்துக்கும் நன்றி வார்த்தையால் சொல்ல முடியாதுப்பா. ஆனால் வேறே எப்படிச் செல்றதுன்னு எனக்குத் தெரியவில்லை. ரொம்ப தேங்க்ஸ்ப்பா. இப்ப கிளம்புறேன். திரும்ப நீங்க எப்போ எங்களை சந்தோஷமா கூப்பிடுறீங்களோ, அப்ப வரோம்பா'' என்று 'எங்களை, வரோம்' என்ற இரண்டு வார்த்தைகளிலும் அழுத்தம் கொடுத்து முடித்தாள் சரண்யா.

பேசி முடித்த பின், தீபக்கின் கையைப் பற்றியபடி கம்பீரமாய் நடந்து சென்ற சரண்யாவை ராமலிங்கம் முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தாலும், இந்திராணியின் கண்களில் கண்ணீர் தாரைத் தாரையாய் வழிந்து கொண்டு இருந்தது.

காரில் தீபக்கின் வீட்டிற்குப் போகும் வழியில், தான் அவ்வளவு பேசியும், அப்பா ஒரு வார்த்தை கூட தன்னிடம் பேசாத வருத்தம் மனதை அழுத்த, சரண்யாவின் கண்களில் இருந்து வழிந்த நீர் துடைக்கத் துடைக்க நிற்காமல் பெருகிக் கொண்டு இருந்தது.

திருமணம் நடந்த தினத்தில், ஆனந்தக் கண்ணீர் வரலாம், மன அழுத்தத்தில் கண்ணீர் வரலாமா? இதில் தவறு செய்தது யாராக இருந்தாலும், இன்மேல் இவள் கண்ணில் இருந்து ஒரு சொட்டு நீர் வடிய விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த தீபக், பல்வேறு விஷயங்களைப் பற்றி கேலியாகப் பேச ஆரம்பித்தான்.



''என்ன சரண், எனக்கு ஐலைனர் பிடிக்காது என்று உனக்கு முன்னாடியே தெரியுமா? கண்ணீரிலேயே அதைக் கரைத்து விட்டாய்?'' என்று பேச்சை ஆரம்பித்தவனைப் பார்த்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். அது போதாதே? சிரிக்கவும் வேண்டுமே?

''சரண்யா, நீ கண்ணைக் கட்டிக் கொண்டு என் நோட்டில் பீச்சில் இருக்கும் போது ஒரு படம் வரைந்தாயே? அந்தப் படத்தில் இருந்தது யார்? அதன் மூலம் நீ என்ன சொல்ல வருகிறாய் என்பதைக் கண்டு பிடிக்க எங்க அப்பா தலைமையில் நான், அம்மா, மது என்று ஒரு கூட்டமே கொண்ட சிறப்பு துப்பறியும் படை தீவிரமா இருபத்தி நாலு மணி நேரம் வேலை செய்தோம் தெரியுமா?'' என்று கேலியாகக் கேட்க, அவளின் முகத்தில் சின்னதாய் முறுவல் மலர்ந்தது.

''கடைசியில் மது தான் கண்டு பிடித்தாள். ஹய்யோ அண்ணா சந்தேகமே இல்லை. இது நீ தான். தலையில எண்ணி நாலே நாலு முடிதான் போட்டு இருக்காங்க பாரு'' என்று கேலியாகச் சொல்ல, அவள் அதற்கு சிரிப்பாள். அல்லது என் தீபக்கிற்கு முடி இல்லையா? கூப்பிடு அவளை என்று செல்லச் சண்டை பிடிப்பாள் என்று எண்ணிய தீபக் ஏமாந்து போனான். அவளிடம் இருந்து சத்தமே இல்லை.

அவளின் கண்களில் புதிதாகக் கண்ணீர் குளம் கட்டி இருக்க, ''மறுபடியும் என்ன ஆச்சு? சந்தோஷமா இருக்கணும் என்று தானே பேச்சை மாற்றினேன்'' என்று அவளை மீண்டும் அணைத்துக் கொண்டான்.

''நானும் அப்பாவை அப்படித்தான் சொல்வேன்'' என்றவள் கண்களில் கண்ணீர் இப்போது வழியவே செய்தது.

கொஞ்ச நேரம் அழட்டும் என்று அமைதியாக வந்த தீபக், ஒரு கட்டத்தில் அவளை இழுத்து தன் தோளில் சாய்த்து, அவளின் தலையை ஆதரவாய் வருடியபடி, ''ஷ்! சரண், ப்ளீஸ், இந்த உலகத்தில் என்ன நடந்தாலும் சரி, நான் உனக்கு என்றென்றும் துணையாக நிச்சயம் இருப்பேன். இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் உன் கண்ணில் கண்ணீரே வரக்கூடாது. அப்படி வந்தால், அது நான் உன்னை நல்லபடியாக வைத்துக் கொள்ள வில்லை என்று இந்த உலகத்திற்குச் சொல்கிற மாதிரி அர்த்தம். அந்த மாதிரி ஒரு பெயரை எனக்குத் தர மாட் டாய் என்று நம்புகிறேன்'' என்று அழுத்தமான குரலில் கண்டிப்பாகச் சொன்னான் தீபக்.

''இல்லை தீபக், இனி நான் அழவில்லை. கவனமாக இருக்கிறேன்'' என்றவள் கண்களில் இருந்து கண்ணீர் அதற்குப் பின் வரவில்லை.

# 16

வீட்டுக்கு வரப் போகும் புது மருமகளை வரவேற்க போலீஸ் குவார்ட்டர்சில் கருணாகரனுக்கு ஒதுக்கப்பட்ட அந்த வீடு. மாவிலைத் தோரணங்கள், தென்னம்பாளை கள், குலையுடன் கூடிய வாழை மரம் என அலங்கரிக் கப்பட்டு புதுப்பொலிவுடன் காத்து இருந்தது.

''அபி, தீபக் வரும் நேரமாச்சு. எல்லாம் ரெடியா?'' என்று வாசலில் காத்திருந்த கருணாகரன் உள்ளே இருந்த மனைவிக்குக் குரல் கொடுத்து விசாரித்தார்.



''ம்ம்ம். ரெடி தான். மது ஆரத்தித் தட்டைக் கொண்டு போய் வாசலில் வச்சுட்டு, பூஜை அறையில் விளக்கில் எண்ணெய் திரி போட்டு ரெடியா இருக்கா பாரும்மா...'' என்று கணவனுக்கு பதில் சொன்னவர் மகளையும் ஏவினார் அபிராமி.

''எத்தனை வாட்டிம்மா ஒரே வேலையைச் சொல் வீங்க? நானே விளக்கையும் ஏத்தி வைத்து விடவா? அண்ணிக்கு அந்த வேலை கூட வேண்டாம்...''

''காய்ச்சிய பால் கொஞ்சம் தனியா எடுத்து வை மது'' என்று சொல்லி விட்டு, கணவனை அழைத்தார்.

''என்னங்க, சரண்யாவோட அம்மா அப்பா, அவங்க சொந்தக்காரங்க யாராவது வந்தால், நீங்க ஒதுங்கிப் போய்டாதீங்க. முக்கியமா அவங்க அம்மா அப்பாவோட நல்லா பேசணும். நம்ம கோப தாபம் எல்லாம் நம்மளோட வச்சுக்கலாம். அவர்களிடம் காண்பிக்க வேண்டாம்...''

''ஹேய்! நீ என்னைக் குறை சொல்லிட்டு இருக்க? எனக்கு அவங்க மேலே கோபம் இல்லை. அவர்களுக்கு தான் என் மேல் என்ன கோபம் என்றே தெரியவில்லை...''

''யார் மேலே என்ன தப்பு என்று ஆராய இது நேரம் இல்லை. நீங்க சம்பந்தி கிட்டே பேசுவதற்கு முன்னால் ஒரு முறை சரண்யாவிடம் பேசி இருக்கலாம். ஆனால் அதைப் பற்றி இப்போது வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை. சொன்னது கவனம். அவர்கள் வந்தால்...''

''மணி பத்தாகப் போகுது. எனக்கென்னவோ அவர்கள் வருவார்கள் என்று தோன்றவில்லை அபி...''

'ப்ச்! வந்தால் விலகி நிற்க வேண்டாம் என்று சொன் னேன். வரவில்லை என்றாலும் அதைக் காட்டி

சரண்யாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம்...'' என்று ஒரு முறை நினைவூட்டி விட்டு வாசலுக்கு சென்று மக னையும் மருமகளையும் வரவேற்கத் தயாரானார் அபி ராமி.

'இனி அழ மாட்டேன்' என்று கணவனிடம் உறுதி அளித்து விட்டுக் கண்களை அழுத்தமாகத் துடைத்துக் கொண்ட சரண்யா அடையாரில் இருந்த தன் வீட்டில் இருந்து, புரசைவாக்கத்தில் இருந்த போலீஸ் குவார்ட் டர்ஸ் வந்து சேர ஆன முப்பத்து நிமிடங்களுக்குள் தன்னைச் சமாளித்து முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண் டாள்.

கார் வந்து நின்ற இடத்தைப் பார்த்த உடனே அவளுக்கு சந்தோஷம் மேலும் பெருகியது. இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டு இருந்த போதும், தன்னை வர வேற்கத் தயாராக இருந்த அறுபதுக்கும் குறையாத ஆண்கள் பெண்கள், குழந்தைகள் என்று அங்கே குழுமி நின்று இருந்தவர்களைப் பார்த்ததும் உற்சாகமாக இருந்தது.

தங்கள் வீடு மாதிரி தனி பங்களாக்கள் இல்லை. அள வில் சிறிய அடுக்கு மாடி குடியிருப்புகள் என்ற போதும், முன்னால் இருந்த கொஞ்ச காலி இடத்தில் பந்தல் போட்டு நாற்காலிகள் போட்டு விழாக் கோலம் பூண்டு இருந்த அந்த வீடு அவளுக்கு நிறைவைத் தந்தது.

''வாம்மா...'' என்று வரவேற்றபடி ஆரத்தித் தட்டுடன் நின்ற அபிராமியைப் பார்த்து அவளுக்கு புன்னகையும் கண்ணீரும் ஒருங்கே தோன்றியது.

தீபக் - சரண்யாவை ஒன்றாக நிற்க வைத்து, ஆரத்தி சுற்றும் போது அங்கே வந்த மதுமதி, 'என்னம்மா சும்மா



சுத்துறீங்க? பாட்டுப் பாடணும் தெரியுமில்ல?'' என்று அம்மாவை விரட்டி, 'கௌரி கல்யாண வைபோகமே' பாட வைத்தாள்.

''அம்மா பாட்டுப் பாடி திருஷ்டி கழிச்சு இருக்காங்க. சும்மா போஸ் கொடுக்காதே! ஆரத்தி எடுத்தால் தட்டில ஏதாவது போடணும். பர்சை எடு...'' என்று அண்ணனை விரட்டி சூழலை கலகலப்பாக்கினாள்.

பூஜை அறைக்கு அழைத்துச் சென்று மருமகளை விளக்கேற்ற வைத்த பின்பு, காலில் விழுந்து வணங்கிய வர்களை, ''நூறு வருஷத்துக்கு. நீயும் தீபக்கும், பதினாறு வகை செல்வங்களையும் பெற்று, சந்தோஷமா சேர்ந்து வாழ வேண்டும்'' என்று நெற்றியில் குங்குமமிட்டு கருணாகரனும் அபிராமியும் மனமார வாழ்த்தினார்கள்.

''மது, அண்ணியை மூணாவது ரூம் அழைச்சுட்டுப் போய் பிரெஷ் ஆகிக்கச் சொல்லு. அலங்காரம் கலைக்க ஏதாவது ஹெல்ப் வேண்டும் என்றால் பண்ணு. நான் அஞ்சு நிமிஷத்துல வரேன்'' என்று இருவரையும் அனுப்பி வைத்தார் அபிராமி.

''வாங்கண்ணி...'' என்று கை பிடித்து அழைத்துச் சென்று பாத்ரூமை காட்டியவள், ''நான் கொஞ்சம் லொடலொடன்னு பேசிட்டே இருப்பேன். உங்களுக்குத் தொந்தரவா இருக்குமா?'' என்று விசாரித்தாள்.

''அதெல்லாம் இல்லை. நானே அப்படித்தான். சொல் லப் போனால் நீங்க ரிசப்ஷனில் என்னைக் கிண்டல்.''

''ஸ்டாப் ஸ்டாப்... இப்ப என்ன சொன்னீங்க?'' என்று கை காட்டி அவசரமாகப் பேச்சை நிறுத்தச் சொன்னாள் மதுமதி.

''ஏன் என்ன ஆச்சு? நீங்க ரிசப்ஷனில்...''

''நீங்க என்னைப் பார்த்து நீங்க நீங்க என்று சொன்னால், எங்க அண்ணனைப் பார்த்து ஏங்க ஏங்க என்றா சொல்லுவது? அது எங்க அம்மாவோடு போகட்டும் என்றால் அப்படியே தொடரும் போல இருக்கே!'' என்று வேகமாகச் சொன்னது முதல் வினாடி சரண்யாவுக்குப் புரியவில்லை.

''என்ன புரியலையா? எனக்கு எதுக்கு மரியாதை? எனக்கு இந்த அளவு என்றால் எங்க அண்ணனுக்கு அதுக்கு ஒரு படி மேலே மரியாதை கொடுக்கணும். அப்புறம் எங்க அம்மாவுக்கு அதுக்கு ஒரு படி மேலே... அப்புறம் அப்பாவுக்கும் அதுக்கு ஒரு படி மேலே...'' என்று கண் சிமிட்டி கேலியாக அடுக்க சரண்யாவிற்குச் சிரிப்பு வந்தது.

''நீ என்று சொல்லு'' என்று நேரே சொல்ல மாட்டாயா? இப்படித்தான் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவாயா? நான் சொல்ல வந்ததையே மறந்து விட்டேன்'' என்று சிரித்தாள் சரண்யா.

''பரவாயில்லை நான் ஞாபகப்படுத்துகிறேன். நான் ரிசப்ஷனில் உங்களைக் கிண்டல் அடித்ததைப் பற்றி ஏதோ பேச ஆரம்பித்தீங்க...''

''ஹா! நீ லொட லொடன்னு பேசுறியா என்று கேட்டாய் இல்லையா? எனக்கே என்னைக் கண்ணாடியில் பார்த்தது போல இருந்தது. மூன்று மாசம் முன்னாடி, எங்க பெரியம்மா பையன் கல்யாணத்தில் நான் பண்ணிய கலாட்டாக்கள் தான் நினைவு வந்தது...''

''ஆஹா! ஞாபகம் வந்துடுச்சு... டிசம்பர் ஏழாம் நாள்... மாலை ஆறரை மணி... ஹோட்டல் சூர்யாஸ்... ரூம் எண்



முன்னூற்றி ஒன்பது... ஒன்பதா ஆஹா? ஆஹா அது மறந்துடுச்சே...'' என்று மதுமதி ராகத்துடன் ஆரம்பிக்க சரண்யாவின் முகம் சிவந்தது.

''ஹய்யோ! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?''

''இந்த பத்து நாளா எனக்கு என்ன வேலை என்று நினைச்சீங்க? எங்க அண்ணன் வாயைப் பிடுங்குவது தான் ஃபுல் டைம் ஜாப். ஆனால் அண்ணி, நீங்க அந்த போடு போடலை என்றாலும் இந்த கல்லுளி மங்கன் வாயில இருந்து ஒரு வார்த்தை வாங்கிட முடியாது. எல்லாமே நல்லதுக்கு தான்...'' என்று சொல்லும்போதே அப்பாவின் பாராமுகம் மனக்கண்ணில் தோன்றி முகம் வாட வைத்தது.

''நீங்க ரொம்ப டயர்டா இருக்கீங்களா? முகம் டல்லா இருக்கே?''

''இல்லை... அப்படி இல்லை... இன்று ஃபுல்லா நின்னுட்டே இருந்தது. காலையில் சீக்கிரம் எழுந்தது... தூங்கி எழுந்தால் சரியா போய்டும்...'' என்று வருத்தத்தை மறைத்து விளக்கம் சொன்னாள் சரண்யா.

''தூக்கமா... அண்ணி... இது நியாயமா? இன்னிக்கு போய் தூங்கப் போறேன் என்று சொல்றீங்க...'' என்று மது கேலியாகக் கேட்கும் போதே உள்ளே வந்த அபிராமி, ''மது... சின்ன பொண்ணா லட்சணமா இரு...'' என்று மெல்லிய குரலில் அடக்க அவள் புன்னகைத்தாள்.

''அண்ணி, வெளியே போ என்பதை எவ்வளவு நாசூக்கா சொல்றாங்க பார்த்தீங்களா? அதான் அபிராமி தி கிரேட் குட்நைட் அண்ணி. ஸ்வீட் ட்ரீம்ஸ்... இன்

னிக்கு என்ன ட்ரீம்ஸ்...'' என்று ஆரம்பித்தவள் அம்மாவின் முறைப்பில் அறையை விட்டு வெளியேறினாள்.

''சரண்யா, நீ தப்பா நினைக்கவில்லை என்றால், நான் ஒண்ணு சொல்லட்டுமா?'' என்று பேச்சை ஆரம்பித்தார் அபிராமி.

''சொல்லுங்கம்மா... உங்களைத் தப்பா நினைக்க என்ன இருக்கு?''

''இன்னிக்கு உன் கல்யாண நாள். இன்று உன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நாள். சந்தோஷமான நாள். இன்னிக்குக் கண்டதையும் நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே...''

''இல்லைம்மா. எனக்கு இப்போ எந்தக் குழப்பமும் இல்லை. நான் சொல்ல வேண்டியதை அப்பாவிடம் சொல்லிட்டு வந்துட்டேன். இனி அவங்கதான் பேசணும். காத்திருப்பேன். தீபக் மாதிரி ஒரு நல்ல மனிதன் கணவனா கிடைக்க சில பிரச்சனைகளை சந்திக்கணும் என்று வச்சுக்கறேன்...''

''கரெக்ட். அது தான் நானும் சொல்ல வந்தேன். எல்லாம் நல்லதுக்கே என்று நினை. இந்த வீட்டுக்கு நீ வந்ததில் எங்க எல்லாருக்குமே ரொம்ப சந்தோஷம். தீபக் பற்றி உனக்கேத் தெரிஞ்சு இருக்கலாம். அவனை மாதிரி குடும்பத்துக்குக் கட்டுப்பட்ட, ஒழுக்கமான பிள்ளை ரொம்ப அபூர்வம். அதிகம் பேச மாட்டான். ஆனால் பாசமானவன். மற்ற எல்லாத்தையும் மறந்துட்டு, தீபக் கூட நீ சந்தோஷமா இருக்கணும். நான் சொல்ல வருவது புரியுதா?'' என்று கேட்டார்.

''ம்ம்... புரியுதும்மா...'' என்று இழுத்தவளின் கன்னம் லேசாகச் சிவந்தது.



''நீங்க ரெண்டு பேரும் ஒருவர் மேலே ஒருவர் ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணி இருக்கீங்க. அந்தக் காதலை எதற்காகவும் தியாகம் பண்ணிடாதீங்க. உங்க வாழ்க்கையில் படிப்பு, தொழில், லட்சியம், சொந்தம், உறவு, நட்பு இது ஒவ்வொன்றும் அஞ்சு வருஷம் கழித்து எப்படி இருக்கணும் என்பதை தீர்மானம் பண்ணுங்க. அதை எப்படி அடையணும் என்று திட்டம் போடுங்க. அதை நடைமுறைப் படுத்த கடுமையான முயற்சிகளை மேற்கெள்ளுங்க. நீங்க ரெண்டு பேரும் ஜெயிக்கணும். இந்த சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்கணும். அதுதான் என் ஆசை. அதுக்கு உங்க காதல் ஒரு தூண்டும் சக்தியா இருக்கணுமே தவிர தடுக்கும் சக்தியா இருக்கக் கூடாது...''

''நிச்சயமா எங்க காதலை நிரூபிப்பதற்காகவே ஜெயிப்போம்மா. அதுல உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம்'' என்று வேகமாக உறுதி அளித்தாள் சரண்யா.

''எங்களைப் பொறுத்த வரை ஆண் பெண் பேதமில்லை. இருவரும் சமம் தான். இரண்டு பேருமே ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுங்க. அதுதான் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கைக்கு அடிப்படை தேவை. இதே வார்த்தைகளை மாமா தீபக்கிற்கு சொல்லிட்டு இருப்பாங்க. இதை உனக்குச் சொல்லணும் என்று தோன்றியது. உன் சொந்த விஷயத்தில் அளவு மீறி தலையிட்டேன் என்று நினைக்காமல் இருந்ததற்கு தேங்க்ஸ். எங்க ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டு. கொஞ்ச நேரத்தில் தீபக் வரச் சொல்றேன். அதுக்குள்ளே நீ குளிச்சு ரெடியாகிடு...'' என்றவர். வாசல் வரை சென்று திரும்பிப் பார்த்தார்.

''என்னம்மா ஏதாவது சொல்ல மறந்துட்டீங்களா...?'' என்று கேட்க அவர் புன்னகையோடு உள்ளே வந்து கட்டிலின் மறுபுறம் இருந்த சின்ன பிளாஸ்டிக் கவரை எடுத்து அவள் கையில் கொடுத்தார். அதில் தொடுத்த மல்லிகை சரம் இருந்தது.

''என்னம்மா... இது... ஸ்பெஷலா? தனியா கொடுக்கிறீங்க?'' என்று புன்னகையோடு விசாரித்தாள்.

''ம்ம்ம்... ரொம்ப ஸ்பெஷல். இது தீபக்கே கட்டியது. உனக்காக. நீ சொன்ன முதல் வேலையை சிரமேற்கொண்டு பூ கட்ட கற்றுக் கொண்டான்'' என்று அவளின் கன்னத்தை வருடி விட்டு அபிராமி வெளியேற, அறைக்குள் இல்லை என்றாலும், அந்த வினாடியில் அணுவளவு கூட இடைவெளியின்றி சரண்யாவின் மனம் முழுக்க தீபக் நிறைந்தான்.

# 17

சரண்யாவின் திருமணம் முடிந்த அன்று இரவு முழுவதும், இந்திராணியின் அழுகை நில்லாமல் தொடர்ந்தது. அதைப் பார்த்தாலும் பார்க்காத மாதிரி இருந்த ராமலிங்கத்தின் மேல் கோபம் வந்தாலும், சரண்யாவின் தேர்வை நினைத்து ஒரு வகையில் அவருக்கு நிம்மதியாகவே இருந்தது. அவரின் நிம்மதி சரி என்பது போல, காலை ஆறு மணி அளவில், அவர்களின் வீட்டு தொலைபேசி அழைத்தது. வந்து எடுத்தவரின் உள்ளுணர்வு பொய்க்கவில்லை.



''குட்மார்னிங் அத்தை. நான் தீபக் பேசுகிறேன். தூக்கத்தில் தொந்தரவு செய்து விட்டேனா?'' என்று ஒலித்த குரலை கேட்டவரின் மனதில் நிம்மதிப் பெருகியது.

''அதெல்லாம் இல்லை. எப்போதும் ஐந்தரைக்கே எழுந்து கொள்வேன். இன்று கொஞ்சம் லேட். இப்பதான் அவர் வாக் கிளம்பினார்...'' என்ற அவரின் தயக்கமான குரலில் அவன் சிரித்தான்.

''மாமா இருக்க மாட்டாங்க என்று தெரியும் அத்தை. அதான் இப்ப பேசினேன். இனிமேல் தினமும் பேசுவேன். சரண்யாவைப் பற்றி கவலைப்படாதீங்க...'' என்று அவன் பேசிக் கொண்டு இருக்கும் போதே மறுமுனையில் தொலைபேசி வைக்கப்பட்டது.

அது சரண்யாவின் வேலையாகத்தான் இருக்கும் என்று புரிந்தது. ரோஷக்காரிதான் அந்த அளவு நெருக்கமும் உரிமையும் இருந்தால் சந்தோஷம் தான். ''கண்டேன் சீதையை'' என்று சொன்ன அனுமன் அளவு இல்லை என்றாலும், இரண்டு வாக்கியங்களில் தன் மனக்குறையை ஓரளவிற்குப் போக்கிய தீபக்கைப் பாராட்டத் தோன்றியது.

தினமும் பேசுகிறானோ இல்லையோ, ''பேசுகிறேன்'' என்று சொன்ன அந்த வாக்கியம், அவருக்கு சந்தோஷம் தந்தது. இனி சரண்யாவைப் பற்றிய கவலையை ஒதுக்கி விடலாம்.

''நீங்க எதுக்கு அவங்களிடம் பேசினீங்க? அவங்க நேற்று ஒரு வார்த்தை கூட நமக்காக பேசவில்லை தானே?'' என்று அதட்டலுடன் போனைப் பிடுங்கி வைத்த சரண்யாவை சிரிப்போடு பார்த்தான் தீபக்.

இவள் எப்போது எழுந்தாள்? நேற்று இரவு, அவள் கண்ணில் இருந்த கண்ணீர் என்ன? இன்று தன்னை அதட்டி உருட்டும் கம்பீரம் என்ன? நடுவில் போனது ஒரே ஒரு இரவு மட்டும்தானா? இமைக்காமல் சிரிப் போடு அவளையே விழுங்குவது மாதிரி பார்க்க, அவளின் கோபமான வார்த்தைகளில் வேகம் குறைந்து, ''என்ன அப்படிப் பார்க்கறீங்க?'' என்ற கிசுகிசுப்பில் வந்து முடிந்தது.

''நேற்று பார்த்த சரண்யாவிற்கும், இன்று பார்க்கும் சரண்யாவிற்கும் ஆறு வித்தியாசம் கண்டுபிடிக்க முயன்று கொண்டு இருக்கிறேன்'' என்று அவளை நெருங்கி வந்தான்.

''எ..ன்..ன..வி..த்..தி..யா..ச..ம்?'' என்று திணறியபடி பின்னே நகர்ந்தவள் முதுகில் சுவர் முட்ட அங்கேயே நின்றாள்.

''மு..த..ல்...வி..த்..தி..யா..சம்..'' என்று சொன்னபடி, அவளை நெருங்கி முகத்தை வருட முயன்ற அவன் கரத்தை தன் வலது கரத்தால் தடுத்து நிறுத்தி, ''தொடா மல் சொல்லுங்க சார்'' என்று சொன்னாள் சரண்யா.

''கையால் தானே தொடக் கூடாது. முதல் வித்தி யாசம். நேற்றைய மிஸ் சரண்யா ராமலிங்கம். இன்று மிசஸ் சரண்யா தீபக்'' என்று சொல்லியபடி குனிந்து அவ ளின் கழுத்தில் இருந்த தாலி சங்கிலியை இதழ்களால் வருடி முத்தமிட்டான்.

அவனின் நெருக்கத்திலும், முத்தத்திலும் கிறங்கி னாலும், ''அடேயப்பா! எவ்வளவு பெரிய கண்டு பிடிப்பு? அப்புறம்...'' என்று கிசுகிசுப்பாய் கேட்டாள் சரண்யா.



''கண்டுபிடிப்பு பெரிசு என்று நீயே ஒத்துக் கொள் கிறாய். பரிசு எல்லாம் கிடையாதா?'' என்று அவள் மேல் சரிந்து சீண்டினான் தீபக்.

''ம்ம்ம்... உங்க ஆராய்ச்சியை முடிச்சுடுங்க. பரிசு மொத்தமா கொடுத்துடலாம்'' என்று மிரட்டியபடி, அவனை ஒரு கையால் தள்ளி விட்டாள் சரண்யா.

''நேற்றைய அப்பாவி ராணி, இன்று அடிதடி ராணி'' என்று கேலியாகச் சொல்லி பெருமூச்சு விட்டான் தீபக்.

''நான் அடிதடி ராணியா? உங்களுக்கு கொழுப்புதானே? நிஜமான அடிதடி என்றால் என்ன என்று மாமாவிடம் சொல்லி உங்களுக்கு செயல் விளக்கம் செஞ்சு காட்டச் சொல்றேன்'' என்று போலியாக மிரட்ட, அவன் பயந் தவன் மாதிரி நடித்தான்.

''அம்மாடியோவ்! நேற்று வரை நான் சொன்னதை அப்படியே ஏற்று, ''சரி தீபக்'' என்று சொன்ன சரண்யா, இன்று எஸ்பி சாரோட சேர்ந்து எனக்கு போலீஸ் அடி பற்றி விளக்கம் சொல்றாங்க. அதுதான் மூணாவது வித்தியாசம்'' என்று சொன்னவன், அவள் எதிர்பாராத நேரத்தில் அவளின் கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்து நிமிர்ந்தான்.

''ம்ம்ம், தொடாமல் பேசுங்க என்று சொன்னேன் இல் லையா? சொன்ன பேச்சைக் கேட்கவே மாட்டீங்களா?'' என்று சிணுங்கியவளை, நெருங்கி இறுக்கமாய் அணைத் துக் கொண்டான் தீபக்.

''சொன்ன பேச்சைக் கேட்டு கையால் நான் தொடா மல் இருந்தாலும், சொன்ன பேச்சை கேட்க மாட்டீங்களா என்று திட்டு விழுது. அதுக்கு கேட்காமலே திட்டு

வாங்கலாமே...'' என்றவனின் வலிய கரங்கள் அவளின் லேசான திமிறலை சுலபமாக அடக்கி, அவள் மேனியில் சுதந்திரமாய் அலை பாய்ந்தது.

அவனின் அணைப்பில் மயங்கி, அவன் மார்பில் துவண்டவளின் காதில், ''நேற்றைய சரண்யாவின் சொல்லுக்கும் செயலுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் இன்றைய சரண்யா சொல்றது ஒண்ணு, செய்றது ஒண்ணு'' என்று ரகசியமாய் ஓதினான்.

அவனின் வார்த்தைகளைக் கேட்டவள், அவன் மார் பில் செல்லமாய் குத்தி, விலக முயல, விடாமல் பற்றி இறுக்கியவன், ''இப்பதானே சொன்னேன். அதை மறுபடியும் நிரூபிக்கிறியா? விட முடியாதுடீ...'' என்று இழுத்து மார்பில் சாய்த்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் அவனின் பின்னந்தலை கேசத்தை வருடி விளையாடியபடி அவன் மார்பில் சாய்ந்து இருந் தவள், பின் நிமிர்ந்து, அவனின் கன்னத்தில் முத்தமிட்டு, ''வித்தியாசம் அவ்வளவுதானா? இன்னமும் இருக்கா?'' என்று கேலியாக விசாரித்தாள்.

''இன்னும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கு'' என்று சொல்லி மண்டியிட்டவன், ''நேற்று இங்கே யாரும் இல்லை. இன்று ஒரு ஜூனியர் சரண்யாவோ, ஜூனியர் தீபக்கோ இருக்கலாம்'' என்று சொல்லி அவளின் வயிற றில் மென்மையாக முத்தமிட்டான் தீபக்.

அவனின் வார்த்தைகளையும், பாவனையையும் பார்த்தவள், அதுவரை இருந்த விளையாட்டுத் தனத் தைத் தூக்கிப் போட்டு, அவனின் முகத்தை அவசரமாக நிமிர்த்தி, ''ஹேய்... என்ன இது? ஒரே நைட்டில்...



அதுக்குள்ளே இப்படி... எல்லாம்?'' என்று வியப்பாக கேட்டாள் சரண்யா.

''உங்க அப்பா அண்ணன் மனசை நல்லபடியா மாற்ற ஒரு ஜூனியர் கட்டாயம் உடனே வேண்டும் சரண்யா'' என்று சொன்ன தீபக்கைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''அவங்க மனசு மாறுமோ இல்லையோ அதைப் பற்றி இப்போதைக்கு எனக்குக் கவலை இல்லை. ஆனால் உங்களோட எல்லா ஆசையையும் உடனே நிறைவேற றணும். அதுக்காக எனக்கும் உடனே ஒரு ஜூனியர் வேண்டும்'' என்று கண் சிமிட்டி, அவனின் நெற்றியில் முட்டிய சரண்யாவை, ஆசையோடு அணைத்துக் கொண்டவன், அதற்கான முயற்சியில் உடனடியாக இறங்கினான்.

* * *

அன்று காலை தீபக் போன் பாதியில் துண்டிக்கப் பட்டது இந்திராணியின் சந்தோஷத்தைக் குறைக்க வில்லை. உற்சாகத்துடன் அடுப்படிக்குச் சென்று காலை வேலைகளை மேற்பார்வை இட்டவர், ஏழரை மணி அளவில் பீச்சில் இருந்து திரும்பி வந்து செய்தித் தாளுடன் அமர்ந்து இருந்த ராமலிங்கத்திற்கு காபி எடுத்து வந்தார்.

இந்திராணியின் முகத்தில் இருந்த புன்னகையைப் பார்த்த ராமலிங்கத்திற்கு மனைவியின் மனநிலை வியப்பளித்தது. நேற்று இரவு முழுவதுமே தூங்கவில்லை. காலையில் வாக்கிங் கிளம்பும் வரை எழுந்திருக்கவே இல்லை. அதன் பிறகு என்ன நடந்தது?

''நான் இல்லாத போது யாராவது வீட்டிற்கு வந்தாங்களா?'' என்று யோசனையுடன் கேட்ட ராமலிங்கத்திற்கு புன்னகையுடன் தலை அசைத்தார்.

''நிறைய பேர் வந்தாங்க. பேப்பர்காரன், பால்காரன், காய்கறிக்காரன். மூன்றாம் தேதி இல்லையா ஏரியா செக்யூரிட்டி வந்து சம்பளம் வாங்கிட்டுப் போனான். என் கேட்கறீங்க?'' என்று நிதானமாக பதில் கேள்வி கேட்டார் இந்திராணி.

''முகத்துல அப்படியே சந்தோஷம் பொங்கி வழியுதே என்ன விஷயம் என்று கேட்டேன். சும்மா இல்லாத பொல்லாத கதை சொல்லாதே! யார் வந்தா?'' என்று மீண்டும் அழுத்தமான குரலில் கேட்டார்.

''நீங்க இவ்வளவு கோபமா கேட்கும் அளவுக்கு, உங்களுக்குப் பிடிக்காத ஆட்கள் யாரும் இங்கே வரவில்லை. ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோங்க. எத்தனை நாள் ஆனாலும் சரி, நீங்க கூப்பிடாமல், அவங்க வீட்டில் இருந்து யாரும், சரண்யா உட்பட யாருமே வரப் போவதும் இல்லை. நீங்க உங்க கொள்கைகளை இறுக்கமா பிடிச்சு வச்சுக்கிட்டு சந்தோஷமா இருங்க'' என்று எரிச்சலை அடக்கிய குரலில் சொல்லிவிட்டு மீண்டும் அடுக்களைக்குள் புகுந்து கொண்டார் இந்திராணி.

''என் சந்தோஷத்தைக் கெடுக்க வெளியே இருந்து வேறே ஆள் வர வேண்டுமா? நீ ஒரு ஆள் போதாது?'' என்று கோபமாக அடுக்களைக்குள் வந்த ராமலிங்கம் எரிச்சலோடு சொல்ல இந்திராணி திரும்பி அவரை முறைத்தார்.



''இப்ப என்ன வேண்டும்? நானும் சரி சரண்யாவும் சரி. இதுவரைக்கும் உங்களுக்குப் பிடிக்காத எதையாவது செய்து இருக்கோமா? ஏன் உங்களுக்கு என் மேலே இவ்வளவு கோபம்? என்னை விடுங்க. அந்தப் பொண்ணு என்ன பண்ணினாள்? அவளுக்குப் பிடிச்ச ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டாள். அது ஒரு தப்பா?''

''நீ என்ன அந்த அதிகப்ரசங்கிக்கு சப்போர்ட்டா?''

''அவள் அதிக பிரசங்கியா? அப்படி அடாவடித்தனம் பண்றவள் தான் கல்யாணம் நடந்த அன்று அர்த்த ராத்திரி இங்கே வந்து கண்ணீர் சிந்தி நியாயம் கேட்டுட்டுப் போறாளா? தெரியாமல் தான் கேட்கிறேன்? அப்படி அவள் என்ன தப்பு பண்ணிட்டாள் என்று இப்படி காயுறீங்க? காதல் கல்யாணம் பிடிக்கலை என்றால் அதை அவளிடம் முகத்துக்கு நேரே மறுத்து இருக்கணும். இல்லை என்றால் கல்யாணம் பண்ணி சந்தோஷமா அனுப்பி வச்சு இருக்கணும். இது இரண்டும் இல்லாமல் நீங்க ஏன் இப்படி நடந்துக்கறீங்க? என்ன அதிசயமான ஜென்மமோ...''

''நான் அதிசயமான ஜென்மம் தான். இல்லை என்றால் பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும் என்ற பழமொழி இருக்கும்போது இருபத்தி ஐந்து வருஷமா உங்க அப்பா உனக்குக் கொடுத்த சொத்தையும் நகைகளையும் கண்டு விரலால் கூடத் தொடாமல் இருப்பேனா? நான் ரோஷக்காரன். அது மாதிரி அவனால் இருக்க முடியுமா?''

''இருப்பான். அதான் நேற்று இரவே. உங்க முகத்தில் விட்டெறியாத குறையா கொண்டு வந்து எல்லா நகை

களையும் கொடுத்து விட்டுப் போயிட்டானே? அதில் இருந்தே தெரியலையா? அவனும் உங்களை மாதிரியே... இல்லை உங்களுக்கு கொஞ்சமும் சளைக்காத. உங்களை விட ஒரு படி மேலே...''

''இதெல்லாம் ஆக்டிங். போகப் போகத் தானே தெரியும்...''

''நீங்களும் தீபக்கோட நல்ல குணத்தை மெதுவா... காலத்தின் உரைகல்லில் உரசியே தெரிஞ்சுக்கோங்க. தப்பில்லை. ஆனால் ஒரு விதத்தில் அவர் உங்களை விட உசத்தி. காசு மேல் ஆசைப் படாதது மட்டும் இல்லை. பிரச்னையில் சம்பந்தப்பட்டவங்களை தவிர மற்றவங்க மனசு காயப்படக்கூடாது என்று நினைக்கும் நல்ல சிந்தனையும் இருக்கிறது. அவரைப் பற்றிய உங்களோட எண்ணம் தப்பு என்பதை சீக்கிரமே நிரூபிப்பார். பார்த்துட்டே இருங்க...''

''பார்ப்போம்... பார்ப்போம்... பார்க்கத்தானே போறோம். பெற்ற பெண் கஷ்டப் படுவாளோ என்று என் வாயால் சொல்ல இஷ்டமில்லை. ஆனால் சிலருக்கு பட்டு தான் தெளியணும் என்று இருந்தால்...''

''போதும்! இனிமேல் இதைப் பற்றி ஒரு வாரத்தை கூடப் பேசாதீங்க. மீறிப் பேசினால் என் வாயில் இருந்தே ஏதாவது ஏடாகூடமா வந்துடும். நீங்க சரண்யாவிடம் இந்த மாதிரி நடந்து கொண்டதற்கு என்ன காரணம் என்று இந்த உலகத்தில் உங்களைத் தவிர வேறு யாராலுமே விளக்கம் சொல்ல முடியாது. ஹூம்! உங்களுக்கும் சேர்த்து நிறைந்த மனதோடு நான் ஆசீர்வாதம் செய்கிறேன். அவள் நல்ல மனசுக்கு அவளுக்கு நல்ல வாழ்க்கை அமையும்'' என்று பொங்கிய கோபத்தை



அடக்கி நல்ல வார்த்தையுடன் பேச்சை நிறைவு செய்தார் இந்திராணி.

# 18

தீபக் - சரண்யா திருமணம் முடிந்த பிறகு. மதுவின் படிப்பு இன்னும் முடியவில்லை என்பதால், அடுத்து வந்த இரண்டு மாதங்கள் தீபக். கருணாகரன் இருவருக்குமே அலுவலக பணி சென்னையில் இருப்பதாலும், சரண்யாவின் படிப்பை எந்தக் காரணம் கொண்டும் இடைவெளி விழக்கூடாது என்பதால் மூவரும் சென்னையில் தங்கி இருந்தாலும், அபிராமியும் மதுமதியும், ஈரோட்டில் இருந்தனர்.

ஏப்ரல் முதல் வாரத்தில் மதுவின் தேர்வுகளை முடித்து விட்டு இருவரும் முதல் தினம் கிளம்பி சென்னைக்கு நிரந்தரமாகக் குடி பெயர்ந்து இருந்தனர். மதுவின் படிப்பை முடித்ததைக் கொண்டாட எல்லோரும் வெளியே சென்று இரவு உணவை முடித்துவிட்டு, பீச்சில் அதற்கு பின்னால் உட்கார்ந்து ஒரு மணி நேரம் அரட்டை அடித்து விட்டு வீடு திரும்பியபோது நள்ளிரவு ஆகி இருந்தது.

'நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தான் சரண்யா. இத்தனை நாள் தனியா அவசரம் அவசரமா எழுந்து வேலை செய்து இருப்பாய். நான் இனிமேல் பார்த்துக் கொள்கிறேன். நீ நிதானமா எழுந்து வந்தால் போதும்'' என்று சொல்லி அனுப்பி இருந்ததால், தீபக்கும் சரண்யாவும் காலை ஏழரை மணி வரை கண் விழிக்கவில்லை.

காலை பதினோரு மணிக்கு நடைபெறும் ஒரு மறியல் குறித்த செய்தி சேகரிக்க போகச் சொல்லி அலுவலகத்தில் இருந்து அலைபேசியில் தகவல் வர, அதில் விழித்த தீபக் அருகில் இருந்த மனைவியைப் பார்த்தான். கவலை எதுவுமின்றி சின்னக் குழந்தை போல கால்களைக் குறுக்கி, கைகளை கன்னத்தில் சேர்த்து வைத்து ஒருக்களித்து படுத்து இருந்த சரண்யாவை அணுஅணுவாக ரசித்தான். நெற்றியை லேசாக வருடி அவளின் உறக்கம் கலையாமல் மென்மையாக முத்த மிட்டு விட்டு, வெளியே வந்தான்.

''குட்மார்னிங், மது எங்கேம்மா?'' என்று விசாரித்த படி அடுக்களைக்குள் வந்தான்.

''மது இன்னமும் எழுந்திரிக்கலை. நல்ல நாளிலேயே கும்பகர்ணன் தங்கச்சி. இப்ப பதினஞ்சு நாளா எக்சா முக்கு ராத்திரி எல்லாம் முழிச்சு படிச்சாள். கேட்க ணுமா?'' என்று அபிராமி சலித்துக் கொள்ளும் போதே மதுமதியின் உற்சாகமான சீண்டல் குரல் கேட்டது.

''தீபக் மேலே கோபம் என்றால் நேரடியா அவனைத் திட்டணும். என்னைத் திட்டுற மாதிரி ஜாடை மாடையா திட்டக்கூடாது. பாவம் எங்க அண்ணா...'' என்று வந்த மது சமையல் அறை மேடை மேல் ஏறி அமர்ந்தாள்.

''ஏய் வாலு, எது மேலே ஏறுகிறாய்? நீ எனக்கு பாவம் பார்த்தேன் என்று சொல்றதை நம்பிட்டேன்'' என்று தீபக் சிரிக்க, ''நான் உன்னைத் தானே...'' என்று ஆரம்பித்த அபிராமி விஷயம் புரிந்து, பாதியிலேயே பேச்சை நிறுத்த மதுவின் புன்னகை மேலும் விரிந்தது.

''என்ன வாய்ப்பா இந்த பொண்ணுக்கு'' என்று செல்ல மாக சலித்துக் கொண்டவர் இருவருக்கும் காபி கலந்து நீட்டினார்.



''அம்மா, எனக்கு டிபன் வேண்டாம். பத்தரை மணிக்கு ஆபீஸ் வேலையா வெளியே போகணும். வர நேரமாகும். சமையல் முடிச்சுட்டால் ஒரேயடியா சாப்பிட்டு றேன். முடியலை என்றால் சிரமப்பட வேண்டாம்'' என்று தீபக் முடிக்கும் முன்பே இடையிட்டார்.

''இதுல என்னடா சிரமம்? ஒரு சாதம் குழம்பு கூட்டு வைக்க அரை மணி நேரம் எனக்குப் போதும். மூணு மணி நேரம் முன்னாடி சொல்லி இருக்கிறாய். நான் வடை பாயசத்தோடு விருந்தே சமைத்து விடுவேன். சாப்பிட்டுட்டே போகலாம். சரண்யாவுக்கு என்ன பாயசம் பிடிக்கும்?'' என்று விசாரித்தார் அபிராமி.

''அவளுக்கு ஸ்வீட்டே பிடிக்காது. கார சாரமா சாப் பிடணும் என்று ஆசைப்படுவாள். மொறு மொறுன்னு வடை சுடச் சுடப் போட்டால் பத்து வடை கூடச் சாப் பிடுவாள்...'' என்று தீபக் சொல்ல.

''அம்மா... தவளை வடை என்ற பேரில் தவளை இல்லாமல் ஒரு வெஜிடேரியன் வடை போடுவீங்களே? அது செய்ங்க'' என்று மதுமதி நாக்கை சப்புகொட்டி ஆலோசனை சொல்ல.

''என்ன காலங்கார்த்தாலே மாநாடு நடக்குது? எங்கே சரண்யாவைக் காணோம்?'' என்று கேட்டபடி ஹாலில் இருந்த கருணாகரனும் அடுக்களைக்குள் எட்டிப் பார்த்தார்.

''இன்னும் எழுந்திரிக்கலைப்பா. படுத்து இருக்கிறாள்'' என்று தீபக் சொல்ல கருணாகரன் முகம் மாறினார்.

''இன்னும் எழுந்திரிக்கலையா? இந்த மூன்று மாதத் தில் ஒரு நாள் கூட இது மாதிரி லேட்டா அவள்

தூங்கியதே இல்லையே? உடம்பு கிடம்பு சரி இல் லையா? பார்த்தாயா?'' என்று கவலையோடு விசாரித் தார்.

''இல்லையே! ஏன்பா அப்படிக் கேட்கறீங்க?'' என்று குழப்பத்தோடு விசாரிக்கும்போதே அறைக்குள் இருந்து 'தீபக்...' என்று மெல்லிய குரலில் சரண்யா அழைக்கும் சத்தம் கேட்டது. உள்ளே சென்று பார்த்தபோது, சரண்யா பாத்ரூமில் வாஷ் பேசினை ஒட்டி சாய்ந்து இருக்க, முகம் வேர்த்து இருந்தது.

''ஹே குட்டிம்மா...! என்ன ஆச்சு?'' என்று கேட்டபடி அருகே வந்து நெற்றியை வருடும் போதே, அம்மாவைச் சத்தமாக அழைத்தான் தீபக்.

தீபக்கின் பதட்டமான குரலில் மூன்று பேருமே வேக மாக உள்ளே ஓடி வந்தாலும், தீபக் - சரண்யா நின்று இருந்த கோலமே அபிராமிக்கு விளக்கம் சொல்லி விட்டது.

சரண்யாவை தீபக்கின் பிடியில் இருந்து மெல்ல விடுவித்து, தண்ணீர் பிடித்து அவளின் முகத்தை மென்மை யாகத் துடைத்தபடி, ''நாள் தள்ளி போய் இருக்கா சரண்யா?'' என்று ஆர்வமாக விசாரித்தார்.

''என்னம்மா கேட்டீங்க?'' என்று யோசனையோடு இழுத்தவள், பின் தயக்கத்தோடு, ''ஆமா... ஆனால்... அதற்குள்...'' என்று கேட்க அபிராமியின் முகம் மலர்ந்தது.

''ராஜாத்தி. இப்பதான் வடை பாயசத்தோடு விருந்து சமைக்கிறேன் என்று சொல்லிவிட்டு இருந்தேன். அதுக்குள்ளே நல்ல செய்தி சொல்லி விட்டாய்'' என்று



அவர் சரண்யாவின் கன்னத்தை வழிக்கும் வரை அங் கிருந்த மூவருக்கும் அவர்கள் என்ன பேசிக் கொள் கிறார்கள் என்பது புரியவில்லை.

அதன் பிறகு, அங்கே வாழ்த்துக்கள், சந்தோஷ சிரிப் புகள், மருத்துவ ஆலோசனைகள். என அவரவருக்குத் தெரிந்த வகையில் அந்த சந்தோஷ செய்தியைக் கொண் டாடினார்கள். அந்த சந்தோஷ ஆரவாரம் கொஞ்சம் குறைந்த பிறகே, இந்த செய்தியை யார் எப்படி சரண்யா வின் வீட்டில் சொல்வது என்ற கேள்வி எழுந்தது.

''நான் இருக்கேனா இல்லையா? என்று கூட இந்த மூன்று மாதத்தில் ஒரு முறை போனில் கூட அம்மா விசாரிக்கவில்லை. அவங்களுக்கு இந்த செய்தி சொன் னாலும் சொல்லா விட்டாலும் ஒன்றுதான்...'' என்று சரண்யா சொன்னதை யாருமே ஒத்துக் கொள்ள வில்லை.

''அப்படிச் சொல்லாதே! உங்க அம்மா இரண்டு முறை பேசினாங்க. நீ தான் போனை எடுக்கவில்லை...'' என்று கருணாகரன் மருமகளை சமாதானம் செய்ய முயன்றார்.

''இல்லை மாமா. அது இரண்டுமே. அப்பா வீட்டில் நிச்சயம் இருக்க மாட்டார் என்பது போன்ற நேரம். அதனால் தான் எனக்கு எடுக்கப் பிடிக்கவில்லை. எங்க அம்மாவுக்கு உண்மையிலேயே என் மேலே அக்கறை இருந்து இருந்தால், அவருக்குத் தெரியாமல், பேசக் கூடாது. அதில் எனக்கு இஷ்டம் இல்லை...'' என்று ரோஷமாகச் சொன்ன சரண்யாவின் பிடிவாதம் அவள் வரையில் நியாயம் தான் என்றாலும் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

''நான் போய் வருகிறேன்'' என்று கிளம்பிய தீபக்கை நிச்சயம் நீங்க போகக்கூடாது எனக்குத் தெரியாமல் அப்பப்போ பேசுறதுக்கே நான் ஒன்றும் சொல்ல வில்லை என்று இப்ப நேரிலேயே கிளம்பிட்டீங்களா? உங்க கௌரவம் எனக்கு முக்கியம். எங்க அப்பா என்னிடம் பேசினால் போதாது. உங்களிடமும் பேச வேண்டும். அப்போது நாம் இருவரும் சேர்ந்து தான் அங்கே போக வேண்டும்...'' என்று உறுதியாக மறுத்து விட்டாள்.

''நானும் மாமாவும் போய் வருகிறோம்'' என்று அபி ராமி சொல்ல அவள் அரைமனதாக ''போனில் சொல்ல லாமே?'' என்று இழுத்தாள்.

''இல்லைம்மா. இந்த ஒரு முறை நேரில் போகிறோம். வரவேற்பு சரியா இல்லை என்றால் அடுத்தடுத்து போவதை நிறுத்திக்கலாம்...'' என்று அபிராமியும் கருணா கரனும் ஒரே குரலில் முடிவாகச் சொல்ல சரண்யாவும் தீபக்கும் ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்தனர்.

கல்லூரி முடிந்து ஐந்து மணிக்குள் ராமலிங்கம் வீட் டுக்குத் திரும்பி வந்து விடுவார் என்பதை எதிர்பார்த்து அந்த நேரத்திற்கு பூ, பழம் இனிப்புகளுடன் அங்கே சென்றனர். அவர்களைப் பார்த்த இந்திராணிக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

''வாங்க. வாங்க. எப்படி இருக்கீங்க? சரண்யா எப்படி இருக்கிறாள்? மாப்பிள்ளை நல்லா இருக்கிறாரா? பொண்ணு படிப்பை முடிச்சுட்டாளா? ஈரோட்டில் இருக் கீங்களா? இங்கே வந்தாச்சா?'' என்று சந்தோஷமாகக் கேள்விகளை அடுக்கினார் இந்திராணி.



''எல்லோரும் ரொம்ப நல்லா இருக்காங்க. எல்லோரும் இங்கேதான் இப்போதைக்கு இருக்கோம். நீங்க எப்படி இருக்கீங்க? அண்ணன் நல்லா இருக்காரா?'' என்று பதிலுக்கு விசாரித்தனர்.

''உங்களிடம் ஒரு நல்ல செய்தி சொல்ல வந்தோம்'' என்று சரண்யாவின் கர்ப்பம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட சந்தோஷ செய்தியை பகிர்ந்து கொண்டனர்.

''மதுவின் லட்சியம் மேற்படிப்பா, வேலையா, திரு மணமா'' என்று ஆராய்ச்சி செய்து அதன் சாதக பாதகங் களை அலசினர்.

இந்திராணி கொடுத்த இனிப்பு காரம், காபி ஆகிய வற்றை ஒரு கை பார்த்தனர். இரண்டு மணி நேரம் அங் கேயே இருந்து பல கதைகளைப் பேசி முடித்து, மணி ஏழரையைத் தொட்ட போது இருவரும் எழுந்தனர்.

''சரிங்கண்ணி, அவர் வர நேரமாகும் போல இருக்கு. நாங்க கிளம்புறோம். அண்ணனிடம் சொல்லுங்க...'' என்று கரம் குவித்து விட்டு அவர்கள் கிளம்பிய அடுத்த மூன்றாவது நிமிடம் உள்ளே வந்த ராமலிங்கத்தின முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''என்னவோ நானா கூப்பிடாத வரை, அந்த வீட்டில் இருந்து சரண்யா உட்பட யாருமே வரமாட்டாங்க என்று கதை அளந்தாய். மூன்றே மாசத்தில் அந்த வைராக்கியம் எங்கே போய் விட்டது? அப்பாவை ஸ்வீட்டோடு அனுப்பி தூது விட்டு இருக்கிறாரா உன் மாப்பிள்ளை?'' என்று உள்ளே நுழைந்ததுமே கிண்டலாகக் கேட்க இந்தி ராணிக்கு சுறுசுறுவென்று எரிச்சல் ஏறியது.

''அப்ப இவ்வளவு நேரம் அவங்க வந்து இருக்காங்க என்று பக்கத்திலேயே ஒளிஞ்சு நின்னு வேவு பார்த்தீங் களா?''

''நான் என் வேவு பார்க்கணும்? அவங்க முன்னாடி வந்து ஏதாவது ஏடா கூடமா சொல்லிடப் போறேன் என்று கௌரவமா ஒதுங்கி இருந்தால் அது உனக்குக் குற்றமாத் தெரியுதா? சரி எதுக்கு வந்தாங்க?''

''உங்களுக்குத் தெரிஞ்சால் என்ன பண்ணப் போறீங்க? அதுக்கும் சேர்த்து ஏதாவது நக்கலடிக்கப் போறீங்க? தெரிஞ்சுக்காமலேயே இருங்க.''

''நீ சொல்லா விட்டால் என்னால் ஊகிக்க முடியாதா? தாத்தாவோட பரம்பரை சொத்து, பேரன் பேத்திக்கு தான் சொந்தம் என்று ஏதாவது வக்கீல் சொல்லி இருப்பான். அதனால் அதற்கு ஆள் ரெடி என்று சொல்ல வந்து இருப்பாங்க. நம்முடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மட்டும் போதும் என்று போனவங்க தானே? இங்கே இருந்து ஒண்ணும் தேறாது என்பதைச் சேர்த்துச் சொல்லு...''

''என்ன பேசுறீங்க? அவங்க வந்து சொத்துல பங்கு கேட்டாங்களா? நீங்க ஏன் இப்படிப் பேசறீங்க என்று எனக்குப் புரியவே இல்லை. அப்படி என்ன அவங்க உங்க சொத்தை இந்த மூன்று மாசத்தில் அடிச்சுப் பிடுங் கிட்டாங்க? ஒரு வாட்டி பெற்ற பெண்ணை போய் பார்க் கணும் என்று கூடத் தோணாதா உங்களுக்கு?'' என்று அதட்டினார் இந்திராணி.

திருமணம் முடித்துக் கொடுத்த பெண்ணை, உள்ளூரி லேயே வசிக்கும் பெண்ணை, கடந்த மூன்று மாதமாகப் பார்க்கவில்லை. இத்தனை நாள் எப்படியோ போகட்டும். இன்று இந்த தகவல் காதில் விழுந்த பிறகு போகாமல் இருக்க முடியுமா என்ற ஆதங்கத்தில் ராமலிங்கம் என்ற கல்லை கரைக்க முயன்றார்.



''தப்பு செய்த சந்தர்ப்பம் கிடைக்காமல் நல்லவனா இருப்பதில் ஆச்சரியம் இல்லை. சந்தர்ப்பம் கிடைத்தும் நல்லவனா இருக்கணும்.''

''அப்படி ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. அதிலும் பணத்தின் மீது எனக்கு ஆசை இல்லை என்று ப்ருவ் பண்ணிட்டார். எனக்கு எங்க அப்பா போட்ட நகை களை சரண்யாவிற்குப் போட்டேன். அவர் நினைத்து இருந்தால் எடுத்துப் போய் இருக்கலாமே? ஏன் அன்றே கொண்டு வந்து திருப்பிக் கொடுக்கணும்?''

''இப்படி நீ அவருக்கு சாதகமாக பேசி மேற்கொண்டு வருமானம் வரும் என்று தான்...'' என்று தன் கருத்தை வலியுறுத்தி மேலும் ஏதோ பேச ஆரம்பிக்க காதுகளை மூடிக் கொண்டு நகர்ந்து விட்டார் இந்திராணி.

''இத்தனை நாளா இருக்காளா இல்லையா என்று கூடப் பார்க்காமல் இருப்பது சரி இல்லை. நாம் பெற்ற பெண் ஒரு தப்பு செஞ்சால் இப்படி ஒரேடியாக வெட்டிவிட வேண்டுமா? அப்படி என்ன பெரிசா செஞ்சு விட்டாள்? நம்மிடம் சொல்லவில்லை. அது ஒரு பெரிய தப்பா?'' என்று இரவு மீண்டும் பேச்சை ஆரம்பித்தவரின் ஆதங்க மான குரலை இடை வெட்டினார் ராமலிங்கம்.

''இவள் மேல் நான் எவ்வளவு நம்பிக்கை வைத்து இருந்தேன்? எவ்வளவு செல்லமாய் வளர்த்தேன்? அவ ளுக்கு எப்படி இருக்கும் என்று யோசிக்கிறாயே? எனக்கு எப்படி இருக்கும் என்று கொஞ்சம் யோசிச்சாயா?'' என்று சொல்ல, இந்திராணிக்கு வருத்தமாக இருந்தது.

மனம் கேளாமல், மறுநாள் பிற்பகலில், கணவன் வரும் ஆறு மணிக்குள் திரும்பி வந்து விடலாம் என்று

முடிவு பண்ணி, வாடகை கார் வரவழைத்து தீபக்கின் வீட்டிற்கு வந்து அழைப்பு மணியை அழுத்த கையைத் தூக்கும்போதே கதவு திறந்தது.

## 19

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதும், சென்னை பல்கலைக் கழகத்திற்கு, மதுவின் மேல் படிப்பு தொடர்பாக அழைத்துச் சென்று இருந்த அபிராமி தான் திரும்பி வந்து விட்டார் என்ற எண்ணத்தில் வேகமாக ஓடி வந்து கதவைத் திறந்த தீபக்கின் கண்கள், வாடகைக் காரில் இருந்து இறங்கிய இந்திராணியைக் கண்டதும் விரிந்தது.

''அத்தை வாங்க, வாங்க. நீங்க எங்க வீட்டுக்கு வந்ததில ரொம்ப சந்தோஷம். நீங்க மட்டும்தான் வந்தீங்களா?'' என்று வரவேற்றவனின் பார்வை பின்னால் அலைந்தது.

''ஆமா...'' என்ற அவரின் தயக்கமான வார்த்தைகளும், வந்த வாடகைக் காரும் உண்மையைச் சொல்ல, அவன் முகம் வினாடி நேரம் வாடியது.

''பரவாயில்லை உள்ளே வாங்க அத்தை. மாமா எப்படி இருக்காங்க? மதுரையில் விக்ரம் தர்ஷினி எல்லாரும் நல்லா இருக்காங்களா? வந்தாங்களா?'' என்று விசாரித்தான் தீபக்.

''எல்லோரும் நல்லா இருக்காங்க. நீங்க எப்படி இருக்கீங்க? சரண்யா எப்படி இருக்கா?'' என்று விசாரித்தபடி



அவனைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றார் இந்திராணி.

''பரவாயில்லை அத்தை. இப்பதான் ரசம் சாதம் கொடுத்தேன். அதை அப்படியே வாமிட் பண்ணிட்டா. கொஞ்ச நேரம் படுக்கச் சொன்னேன். நீங்க உட்காருங்க. கூட்டிட்டு வரேன்'' என்று உள்ளே சென்றான் தீபக்.

உள்ளே மெல்லிய குரலில் வாக்குவாதம் நடப்பது கேட்டது. மகள் ரோஷக்காரி. கண்கள் அந்த வரவேற்பறையை அளவிட்டது. பதினைந்துக்கு பத்து இருக்கலாம். ஒரு ஓரமாய் சாப்பாட்டு மேஜை. அதில் ஒரு கிண்ணத்தில் ஸ்பூன் போட்டு ரசம் சாதம் இருந்தது. தீபக் பிசைந்து ஊட்டி விட்டு இருக்க வேண்டும். அவளாகச் சாப்பிடுவது என்றால் இப்படி குழைவாக இருக்காது.

மேஜையின் ஓரத்திலேயே, வரிசையாய் சின்னச் சின்ன பாத்திரங்கள் மூடி வைத்து இருக்க அருகில் சென்று பார்த்தார். ஒரு தட்டில், கொஞ்சம் லெமன் ரைஸ். கொஞ்சம் தயிர் சாதம், கொஞ்சம் பூண்டுக் குழம்பு, சாதம், மாங்காய் தொக்கு, என்று கர்ப்பிணியின் உடல்நலை, மனநிலை புரிந்து உணவு வகைகள் வரிசையாகத் தட்டில் இருந்தது.

தீபக் ஒவ்வொன்றாக அவளைச் சாப்பிட வைக்க முயற்சி செய்து இருக்க வேண்டும். வசதி குறைச்சல் இருந்தாலும் கவனிப்பிற்கோ அக்கறைக்கோ நிச்சயம் குறை இருக்காது என்று தோன்றியது.

கொஞ்ச நேரம் கழித்து தீபக் மட்டும் வெளியே வர, ''வீட்டுல வேறே யாரும் இல்லையா?'' அம்மா அப்பா...'' என்று தயக்கமாக இழுத்தார்.

''அப்பா ஆபீசில் இருப்பாங்க. மதுவை யுனிவர் சிட்டிக்கு அம்மா அழைத்துக் கொண்டு போனாங்க. ரெண்டு பேரும் வரும் நேரம் தான். சரண்யா தனியா இருப்பாளே என்று நான் நடுவில் சாப்பிட வீட்டுக்கு வந்தேன். அவள் தூங்குகிறாள். சாப்பிடுவதற்குள் எழுந்து விடுவாள். வாங்க அத்தை சாப்பிடலாம்...'' என்று அழைத்தான்.

''நான் சாப்பிட்டு தான் வந்தேன் நீங்க சாப்பிடுங்க. நான் ஏதாவது செய்து தரட்டுமா?''

''அம்மா எல்லோருக்குமே செஞ்சு வச்சுட்டு தான் போய் இருக்காங்க. சாப்பாடு வேண்டாம் என்றால், காபி எடுத்துட்டு வரேன்'' என்று உள்ளே திரும்பும்போதே, ''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? அதெல்லாம் வேண் டாம்...'' என்று பதற அவன் திரும்பி நின்று புன் னகைத்தான்.

''எதுக்கு அத்தை இப்படி அதிர்ச்சி ஆகிறீங்க? பொண்ணு பையன் என்று வித்தியாசம் இல்லாமல் எங்க அம்மா எங்க இரண்டு பேருக்குமே சாதம் வைக்க, காபி, டீ, போட கலந்த சாதம் செய்ய. உருளைக்கிழங்கு கறி பண்ண, சொல்லிக் கொடுத்து இருக்காங்க. விருந்து சமைக்கத் தெரியாது என்றாலும் நான் நல்லாவே காபி போடுவேன். குடிச்சுப் பார்த்துட்டு சொல்லுங்க...'' என்று சிரிப்போடு சொல்ல அவருக்கு லேசாக கண் கலங் கியது.

சில நிமிடங்களில் காபியோடு தீபக் வர, அதை அருந்தியவருக்கு அவன் சொன்னதில் இருந்த உண்மை புரிந்தது. காபி நன்றாக இருந்தது. சரண்யா போடும்



காபியை விட மிக நன்றாக இருந்தது. அதை வாய் விட்டுச் சொல்லவும் செய்தார்.

''அத்தை, ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை. சரண்யா போடும் டீ சூப்பரா இருக்கும். கிராண்டா விருந்து சாப் பிட்டு, அவள் தரும் மசாலா டீ சாப்பிட்டால், அடுத்த மூன்று மணி நேரத்தில் உணவு ஜீரணமாகி பசி எடுக்க ஆரம்பித்து விடும்...'' என்று மனைவியைத் தாங்கி பேச, அவருக்குப் புன்னகை மலர்ந்தது.

இவன் இங்கே தன் மகளைத் தாங்கோ தாங்கென்று தாங்க. தான் பெற்றதை கண்ணிலேயே காணோமே? அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்த வாரிசு. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லா?

''சரண்யாவைக் காணோமே? நான் உள்ளே போய் பார்க்கட்டுமா?''

''அவளுக்கு உடம்பு சரி இல்லை... டயர்டா தூங்கு கிறாள்...'' என்று தயக்கமாக இழுத்தான் தீபக்.

''பரவாயில்லை தூங்கட்டும். நான் அவளை எழுப்ப வில்லை. சும்மா பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்...''

''அவள் கோபத்தில் ஏதாவது சொல்லி விட்டால்...'' என்று மேலும் தயங்கினான்.

''என் பெண்ணை எனக்குத் தெரியாதா?'' என்ற பாவனையில் அவனைப் பார்த்து அவன் கை காட்டிய அறைக்குள் சென்ற இந்திராணி, கட்டிலில் கண் மூடிப் படுத்து இருந்த மகளைக் கண்டதும் லேசாய் கண் கலங்கினார்.

அவளின் நெற்றியை லேசாக வருடி, ''குட்டி, எப் படிம்மா இருக்கிற?'' என்று கேட்டபோது அவரின்

வார்த்தைகள் தெளிவாக வெளி வரவில்லை. அவள் கண்களிலும் கண்ணீர் துளிர்ப்பது தெரிந்தது. ஆனாலும் அவள் கண்களைத் திறக்கவில்லை. அவர் வந்து இருப்பதை உணர்ந்ததாகவோ, கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதாகவோ இல்லை. அசையாமல் படுத்து இருந்தாள்.

''உன்னை இந்த மாதிரி பார்ப்பதில் ரொம்ப சந்தோஷம் சரண்யா...''

''...''

''வாந்தி வருதே என்று சாப்பிடாமல் இருக்க வேண்டாம். கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்டுட்டே இரு. என்ன?''

''....''

''நீ தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையும் சரி, அவரோட குடும்பமும் சரி, உன்னை நல்லா வச்சுக்க நினைக்கிறாங்க. நீயும் அனுசரிச்சு போ...''

''.....''

''நீ தூங்கவில்லை என்று எனக்குத் தெரியும். நீ ஏன் என்னிடம் பேச மறுக்கிறாய் என்றும் புரியும். உங்க அப்பா என்ன செய்யணும் என்று நான் முடிவு பண்ண முடியாது. ஆனால் நான் என்ன செய்யணும் என்று நினைப்பதை உங்க அப்பாவால் தடுக்க முடியாது. அதனால் தான் வந்தேன். இனியும் வருவேன்...'' என்று தீர்மானமாகச் சொன்ன வினாடியில் கண் திறந்தாள் சரண்யா.

''அம்மா... ப்ளீஸ்...'' என்று கண்ணீரோடு கை உயர்த்தி அவரின் பேச்சை நிறுத்தினாள் சரண்யா.



''உங்களுக்கு என் மேலே எவ்வளவு அன்பும் அக்கறையும் இருக்கிறது என்பதை நீங்க நேரில் வந்து எனக்கு பழங்கள் வாங்கிக் கொடுத்துதான் நிரூபிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லைம்மா. நான் சந்தோஷமா இருக்கணும் என்று நீங்க நிஜமாவே நினைத்தால். இந்த மாதிரி அப்பாவிற்குத் தெரியாமல் தனியாக வந்து எங்களுக்கு தர்மசங்கடத்தை உண்டு பண்ணாதீங்க. அதோடு இந்த மாதிரி எதுவும் வாங்கிட்டும் வராதீங்க...''

''என் பெண்ணுக்கு இருநூறு ரூபாய்க்குப் பழம் வாங்கி தரக்கூட நான் அப்பாவின் சம்பாத்தியத்தை எதிர்பார்க்கிறேன் என்று நினைத்தாயா? எனக்கென்று சுயமாய் சொத்தும் சம்பாத்தியமும் இருப்பது உனக்குத் தெரியாதா? இது அவர் காசு இல்லை...''

''அம்மா... உங்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கு என்றும் எனக்குத் தெரியும். அதை அவர் விரலால் கூட சீண்டவில்லை என்றும் எனக்குத் தெரியும். அவரை மாதிரியே இன்னும் நிறைய ஆட்கள் இருக்காங்க என்பதை அப்பா புரிந்து கொள்ள வேண்டாமா? நான் சொல்ல வருவதை சரியாகப் புரிந்து கொண்டு, எனக்காக இந்த உதவியைச் செய்து கொடுங்க...''

''உன்னை நான் பார்க்க வரக்கூடாது என்று சொல்கிறாயா சரண்யா...''

''இல்லைம்மா. அப்படிச் சொல்லலை. என்னிக்கு அப்பாவுக்கு கோபம் தீருதோ. என்னைப் பார்க்கணும் என்று நினைக்கிறாரோ, அன்று இரண்டு பேரும் சேர்ந்து வாங்க என்று சொல்றேன்...''

''இதுதான் உன் முடிவா சரண்யா?''

''ஆமாம்மா!'' என்று தீர்மனமாகச் சொன்னவள், கண்களை மூடி மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

''சரிம்மா உன் இஷ்டம் போலவே எல்லாம் நல்ல படியா நடக்கட்டும். நல்லா சாப்பிடு. உடம்பைப் பார்த்துக்கோ'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார்.

* * *

சென்னை ஏர்போர்ட்டில், சர்வதேச விமான நிலையத்தின் அருகே காரை நிறுத்தி விட்டு இறங்கிய விக்ரமிற்கு ஆச்சரியமாக இருந்தது. சித்தப்பா போன் பண்ணி அழைத்ததனால் சென்னை வந்து இருக்கிறான்.

சித்தப்பா இந்த பல்கலைக் கழகத்தில் வேலைக்கு சேர்ந்து முப்பது ஆண்டுகள் இருக்கும். துறைத் தலைவராக பொறுப்பேற்று ஆறு ஆண்டுகள் இருக்கும். இது வரை ஒரு ஆண்டில் கூட மாணவர்களுடன் செல்லாதவர், இப்போது திடீரென்று பாரீன் போக வேண்டும். எனக்கு பத்து நாளில் பாஸ்போர்ட் விசா எல்லாம் ஏற்பாடு பண்ணிக் கொடு என்று சொன்னதை அவனால் நம்பவே முடியவில்லை.

எல்லாம் ரெடி பண்ணியாகி விட்டது. ட்ராவல் ஏஜன்ட் இங்கே வரச் சொல்லி இருந்தான். போக்குவரத்து நெரிசலுக்கு பயந்து விரைவாகக் கிளம்பினால், எதிர்பார்த்ததை விட இருபது நிமிடம் முன்பே வந்தாகி விட்டது. கோல்ட் காபி ஒன்றை வாங்கி உறிஞ்சியபடி நடந்த விக்ரமின் காதுகளில் பரிச்சயமான அந்த குதூகல குரல் கேட்டது.

''அப்பா, சைனாவில் சூப்பில் ஆரம்பித்து, எல்லாமே நான்-வெஜ் ஆகவே இருந்து இருக்குமே? பதினஞ்சு நாள் எப்படிச் சமாளிச்சீங்க?'' என்று விசாரித்த அந்தக் குரல் சரண்யாவினுடையது அல்லவா?



''யார் அந்த அப்பா?'' என்று திரும்பிப் பார்த்தவனின் புன்னகை உறைந்தது. இது தீபக்கின் அப்பா அல்லவா? அப்பா என்று அழைத்துப் பேசிச் சிரித்தது சரண்யாவா? அவ்வளவு ஒட்டுதலா?

''பால், பழம், முட்டை, இதை வச்சுத்தான் சமாளித்தேன். உன்னை யார் ஏர்போர்ட்டுக்கு வரச் சொன்னா? உடம்பைப் பார்த்துக்க வேண்டாமா? ஏண்டா இந்த வெயிலில் அழைத்து வந்தாய்?'' என்று மருமகளுக்குப் பதில் சொன்ன அதே நேரம் மகனை மிரட்டியது. அவளின் மாமனாரா? வெளிநாட்டுப் பயணம் முடித்து வந்து இருக்க வேண்டும்.

''இது நல்ல கதையா இருக்கே? முட்டை எப்போ வெஜ் ஆனது?''

''வெஜிடேரியன் என்று அப்பா சொன்னாங்களா? நீயா நினைத்துக் கொண்டால் அதற்கு அவரா பொறுப்பு?'' என்று மடக்கியது தீபக்.

''சரண்யாவுக்கு ஏதாவது குடிக்க வாங்கிக் கொடுத்துக் கூட்டிட்டு வா. வீட்டுக்குப் போக இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்'' என்று கருணாகரன் சொல்ல, ''நீங்களும் வாங்கப்பா'' என்று அழைத்தது சரண்யாதான்.

''நான் லக்கேஜ் எடுக்க பதினஞ்சு நிமிஷமாவது ஆகும். அதுவரையில் நீங்க இங்கே நின்று என்ன பண்ணப் போறீங்க? போய் ஏதாவது ஜில்லுன்னு குடிச்சுட்டு வந்தால் உடனே கிளம்ப சரியா இருக்கும்?'' என்று மறுக்க, தீபக் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

தோளைச் சுற்றி வளைத்த கரம், சரண்யாவின் களைத்த முகத்திலும் பூரித்த சந்தோஷம், அப்பா மகன் இருவரின் வார்த்தைகளிலும் தெரிந்த அக்கறை, கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுத் தேடினாலும் இதில் குறை கண்டு பிடிக்க முடியவில்லை. நன்றாக மேடிட்ட வயிறு. சரண்யாவை உள்ளங்கையில் வைத்து தாங்குவேன் என்பது போன்ற இவனின் பாவனை பொய்யாக இருக்க முடியுமா? இங்கே தான் வருவது அவனுக்குத் தெரிய வாய்ப்பு கம்மி. நடிக்கிறான் என்று சொல்ல முடியாது.

சரண்யாவிடமும் பேச வேண்டும் போலத் தோன்றியது. ஆனால் அவனைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவனுடைய எண்ணம் அவளைத் தொட்டு இருக்க வேண்டும். திரும்பிப் பார்த்தவள் முகம் மலர்ந்து வாடியது.

இந்த நிலையில் கூட அருகில் வந்து பேசத் தோன்றவில்லையா? சரண்யாவின் முக பாவனையைக் கவனித்து, அவன் புறம் திரும்பிய தீபக் புன்னகை செய்தான். விக்ரமின் அருகில் வர திரும்பி நடந்தவனை சரண்யாவின் கரம் பற்றித் தடுத்தது. இவன் கண்ணிலும் பட்டது. வருபவனைக் கையைப் பிடித்து இழுக்கிறாயா? மனம் மீண்டும் கூடினப்பட, அவனும் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

## 20

விமான நிலையத்தில் வேலையை முடித்துக் கொண்டு சித்தி வீட்டிற்கு வந்த விக்ரமிற்கு ஒரே



குழப்பமாக இருந்தது. சரண்யா கர்ப்பமாக இருப்பது சித்திக்குத் தெரியுமா? தெரியாதா? இவர்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்பது அவனுக்குத் தெரியும். தெரிந்தால் சித்தப்பா மனம் மாறி ராசியாகலாம். சொல்லிப் பார்த்தால் என்ன என்று எண்ணியபடி சோபாவில் அமர்ந்தான் விக்ரம்.

''வா விக்ரம் போன வேலை முடிஞ்சதா? சரியான வெயில் போல இருக்கே? சாத்துக்குடி ஜூஸ் தரட்டுமா?'' என்று வெயிலில் வந்தவனை உபசரித்தார் இந்திராணி.

''ஜூஸ் இருக்கட்டும் சித்தி. நான் ஏர்போர்ட்டில் யாரைப் பார்த்தேன் தெரியுமா?''

''யாரை'' என்று கேட்டவரின் குரலில் எந்த ஆர்வமும் இல்லை. இவனை மதுரையில் இருந்து வேலை மெனக்கெட்டு வரவழைத்து வெளிநாடு செல்லத் திட்டமிடும் தன் கணவரின் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை என்பதால், வந்த எரிச்சல் அவரின் குரலில் தெரிந்தது.

சிறிது இடைவெளி விட்டு, 'சரண்யா...' என்று ஒவ்வொரு எழுத்தாக உச்சரிக்க அவரின் தேகம் ஒரு கணம் சிலிர்த்து அடங்கியது. சில கணங்கள் எடுத்துத் தன்னை சமப்படுத்திக் கொண்ட பின்பு, ''எப்படி இருக்கா? நல்லா இருக்காளா? வயிறு தெரியுதா? கூட யார் இருந்தா? உன்னைப் பார்த்தாளா? பேசினாளா?'' என்று அடுக்கடுக்காக இந்திராணி கேட்க அவனின் புருவம் மேலேறியது.

மற்ற கேள்விகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு, ''வயிறு தெரிகிறதா?'' என்ற ஒரு விஷயத்தை மட்டும்

பிடித்து, ''உங்களுக்குத் தெரியுமா சித்தி...?'' என்று வியப்புடன் கேட்டான் விக்ரம்.

''சம்பந்தி ரெண்டு பேரும் வீடு தேடி வந்து கர்ப்பம் உறுதியான உடனே சொல்லிட்டுப் போய் இருக்காங்க. இப்பக்கூட, சம்பந்தி ஏதோ பயிற்சிக்கு சீனா போய் இருப்பதாகவும் ஊரில் இருந்து வந்ததும், வளைகாப்பு நடத்தணும் என்று போன் பண்ணினாங்க. வந்துட்டாரா? அவரைக் கூப்பிட விமான நிலையத்துக்கு வந்து இருந்தாளா? அங்கே தான் பார்த்தாயா?'' என்று ஆர்வமாகக் கேட்டார் இந்திராணி.

''ஆமா சித்தி...'' என்றவனின் குரல் உள்ளே போய் இருந்தது. விமான நிலையத்தில் பார்த்த கணவன் - மனைவிக்கு இடையேயான அன்னியோன்யம் மட்டும் இன்றி, மாமனாருடன் கலகலப்பாகப் பேசிய அந்தக் காட்சியும் அவன் மனதில் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி இருந்தது.

தன் திருமணத்திற்கு வந்த இடத்தில் சந்தித்து, தன் திருமணம் முடிந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு திருமணம் ஏனோ தானோ வென்று நடந்து, இப்போது தங்கை ஆறு மாதம் கர்ப்பிணியாக இருக்கிறாள். ஆனால் தனக்கு வாய்த்த பெண், தன்னோடு சேர்ந்தே இருக்கவில்லை.

''விக்ரம்... விக்கி... என்னடா சத்தமே காணோம்? என்ன ஆச்சு?'' என்று இந்திராணி உலுக்கிய பின்பே இந்த உலகுக்கு வந்தான் விக்ரம்.

''ப்ச்!'' என்று அவன் பெருமூச்சு விட, ''என்ன விக்ரம், தர்ஷினியை நேரில் போய் பார்த்துப் பேசு என்று எத்தனை தடவை சொன்னேன்? போய் கூப்பிட்டாயா இல்லையா?'' என்று அவனின் மனம் புரிந்து விசாரித்தார் இந்திராணி.



''இல்லை சித்தி நான் போகலை. அம்மாவுக்கும் அவளுக்கும் அடிப்படை விஷயங்களிலேயே ஒத்து வரவில்லை என்றால் என்ன செய்வது? சரண்யா அவளோட புகுந்த வீட்டுல இவ்வளவு ஒட்டுதலா இருக்கும் போது நம்ம வீட்டுக்கு வந்த பொண்ணுக்கு மட்டும் அது ஏன் சித்தி இல்லாமல் போய்டுச்சு?'' என்று கேட்டவனை முறைத்தார்.

''சரண்யா புகுந்த வீட்டுல ஒட்டுதலா இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?''

''இப்ப கொஞ்ச முன்னாடி ஏர்போர்ட்டில பார்த்தேனே...''

''இப்பவாவது உனக்கும் உங்க சித்தப்பாவுக்கும் புரிஞ்சால் சரி. முடிஞ்சால் இதை உங்க சித்தப்பா காதில் போட்டு வை. ஆனால் உனக்கு நான் இன்னொரு முக்கியமான விஷயும் சொல்லணுமே! ஒட்டுதல் என்பது இரண்டு பக்கத்தில் இருந்தும் வரணும்...''

''உண்மை தான் இங்கே இல்லையே...''

''ஒண்ணு தெரியுமா விக்ரம்? பசங்க அவங்க பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு வெளியேறுவதில்லை. பொண்ணுங்க திருமணமானதும் புது கலாச்சாரம் பழக்க வழக்கம் இருக்க வேறே வீட்டுக்குப் போறாங்க. அந்த சூழலில் அந்தப் பொண்ணு பழக, புகுந்த வீட்டினருடன் ஒன்ற, பையன் மனைவிக்கு உறுதுணையா இருக்கணும். நீ உன் நெஞ்சை தொட்டுச் சொல்லு. நீ அப்படி இருந்தாயா?''

''நான் வீட்டில் இருக்கும் நேரமே கம்மி சித்தி. நான் எப்படி எந்நேரமும் வீட்டில் எந்த விஷயத்தைத் தேடிப் பிடித்துச் சண்டை போடலாம் என்று காத்து இருக்கும் இவங்களை சமாதானப்படுத்துவது. சொல்லுங்க?''

''டேய்! இந்த கதை எல்லாம் என்னிடம் விடாதே. நீ ஈசியா ஒதுங்கிப் போய்ட்ட. அதுதான் விஷயம். நான் ஆண்பிள்ளை என்ற ஈகோவை தள்ளி வச்சுட்டுப் பார்த்தால் நிறைய விஷயம் சரியா தெரியும். உங்க சித்தப்பா மாதிரி பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் பிடிச்சு வாழ்க்கையை வீணாக்கிக் கொள் ளாதே. சொல்லிட்டேன்...''

''சித்தப்பா என்ன பண்ணினார்? எதுக்கு அவரை குறை சொல்றீங்க?''

''அவர் எதுக்கு இவ்வளவு அவசரமா எம்.எஸ்.சி. படிக்கும் மாணவர்களோடு, இரண்டு வார சிங்கப்பூர் டூர் மாணவர்களின் பாதுகாவலர் என்ற போர்வையில் கிளம்புகிறார் என்று உனக்குத் தெரியுமா?'' என்று எரிச்ச லோடு கேட்க முன்பு இதே கேள்வி தனக்குத் தோன் றியது நினைவு வர மறுப்பாகத் தலை அசைத்தான்.

''நாலு நாள் கழிச்சு சரண்யாவிற்கு வளைகாப்பு நடத்தப் போகிறோம் என்று பத்திரிகை அனுப்பி இருக் காங்க. இங்கே இருந்தால் போகாமல் இருக்க முடியாது. பலர் பல விதமா பேசுவாங்க என்பதற்காக இந்த வெளி நாட்டுப் பயணம். அங்கே அவங்க வீட்டில், அவர் வந்த உடனே விழா வைக்கணும் என்று நினைக்கறாங்க. இங்கே இவர் விழா வச்ச உடனே வெளிநாடு கிளம்பு கிறார். இது தான் ரெண்டு பேருக்கும் இடையே



வித்தியாசம்'' என்று சொன்ன இந்திராணியின் குரலில் எரிச்சல் நிரம்பி வழிய, விக்ரமின் கண்களில் யோசனை படர்ந்தது.

''என்ன சத்தமே காணோம்! அதை விட்டு தள்ளு. உங்க சித்தப்பா என்ன பண்ணினாலும், பண்ணா விட்டாலும் அவங்க ரெண்டு பேரும் சந்தோஷமா தான் இருக்காங்க. நீ ஏன் இப்படி இருக்கிறாய்? தர்ஷனியை எப்போ பார்க்கப் போகிறாய்? அவள் இங்கே வந்து ஆறு மாசம் ஆகி விட்டது என்று அம்மா சொன்னாளே? என்ன பிரச்னை?''

''பிரச்னை என்று ஒன்றுமே இல்லை சித்தி. சின்ன விஷயத்தை எல்லாம் பூதக்கண்ணாடி வச்சுப் பார்த்தால் பெரிசா தான் தெரியும். ரெண்டு பேருமே அனுசரிக்க மாட்டேன் என்கிறாங்க. எனக்கு தான் மண்டை காயுது. இப்ப தான் கொஞ்ச நாளா வீடு வாக்குவாதம் இல்லாமல் இருக்கு. நான் நிம்மதியா இருக்கேன்...''

''நிம்மதியா இருக்கே சரி. சந்தோஷமா இருக்கியா?''

''ஏன்! என் சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்?'' என்ற விக்ரமின் குரலில் உற்சாகம் குறைவாகவே இருந்தது.

''விக்ரம், நீ இங்கே வருகிறாய் என்றதுமே, எப்படி யாவது தர்ஷினி வீட்டுக்கு உன்னை கூட்டிட்டுப் போகச் சொல்லி அம்மா நேற்றே போன் பண்ணினாள். நாளைக்கு சித்தப்பா ஊருக்குக் கிளம்பியதும், நம்ம தர்ஷினி வீட்டுக்குப் போறோம். மதுரையில் இருக்கும் பிளாட்டில் உடனே தனிக் குடித்தனம் வைக்க உங்க அம்மா ஏற்பாடு செய்ய சொல்லிட்டாள். இதைச் சொன்னாலே தர்ஷினி

சந்தோஷமா கிளம்பி விடுவாள். அம்மா அப்பா எப் படியோ பார்த்துப்பாங்க. நீ உன் பொண்டாட்டியை சந்தோஷமா பார்த்துக்கோ...''

''என்னிடம் சொல்லிச் சொல்லி அலுத்துப் போய், இப்போ உங்களிடம் ஆரம்பிச்சுட்டாங்களா? பெண்டாட் டியை சந்தோஷமா பார்த்துக் கொண்டால் போதுமா சித்தி? அம்மா அப்பாவை மறந்து விடலாமா?''

''அம்மா அப்பாவை மட்டும் பார்த்துக் கொண்டால் போதுமா? பெண்டாட்டியை மறந்து விடலாமா என்று உன்னை அவளும் கேட்கலாம் விக்கி. அதை மறந் துடாதே!''

''கேட்கலாம் இல்லை... கேட்டாச்சு...''

''பரவாயில்லை விக்கி, சின்ன பொண்ணு, என்று நினைத்துக் கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம். நாளைக்கு தர்ஷினியைப் பார்க்க நானும் வரேன். நானே பேசி அவளை உன்னுடன் கிளம்ப வைக்கிறேன். நீ பிடிச்ச பிடியிலேயே இருக்காமல் கொஞ்சம் அனுசரிச்சு நடக்கப் பழகு. புரிந்ததா?'' என்று தீர்மானமாகக் கேட்ட இந்தி ராணியைப் பார்த்து 'முயற்சி செய்கிறேன்.' என்று தலை அசைத்தான் விக்ரம்.

* * *

'கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வா...' என்று எம்.எஸ். அம்மாவின் குரலில் வேங்கடேச சுப்ரபாதம் ஒலித்துக் கொண்டு இருக்க, அந்த அதிகாலை நேரத்திலும் அந்த வீடு பரபரப்பாக விருந்தினர்களின் வருகையால் நிறைந்து பரபரப்பாகக் காணப்பட்டது.



''மது வாசலை தெளிச்சுக் கோலம் போட்டு செம்மண் போடு என்று சொன்னேனே'' என்று மகளை.

''சரண்யா இன்னும் எழுந்திரிக்கலையா? மணி அஞ்சரை ஆகுதே? அய்யா ஏழு மணிக்கு வந்து விடு வார். அவள் தலைக்குக் குளிச்சு தலை காய வேண் டாமா? எழுப்பி விடு தீபக்..'' என்று மகனை,

''என்னங்க, பசும்பாலுக்கும் கோமியத்திற்கும் வேல் முருகனிடம் சொல்லி இருந்தேன். இன்னும் ஆளைக் காணோம். கொஞ்சம் போன் போட்டு எங்கே இருக்கிறான் என்று கேளுங்க'' என்று ஒரே நேரத்தில் வீட்டில் இருந்த அனைவரையும் விரட்டி வேலை வாங்கியபடி பம்பரமாகச் சுழன்று கொண்டு இருந்தார் அபிராமி. ஆளுக்கு ஒரு வேலையை பகிர்ந்து கொடுத்தவர், தானும், விளக்கைத் துடைத்துப் பொட்டு வைத்துக் கொண்டு இருந்தார்.

''சரண்யா... எழுந்திரி...'' என்று ஒரு முறை, ''சரண், என்னம்மா ஏன் இன்னும் எழுந்திரிக்கலை? உடம்பு சரி இல்லையா?'' என்று ஒரு முறை, ''சாரும்மா, டைம் ஆகுது'' என்று ஒருமுறை அவளை எழுப்ப முயற்சி செய்தவன், அவள் அசையாமல் படுக்கையில் படுத்துக் கொண்டு இருக்க கண்டு, அருகே வந்து கட்டிலில் அமர்ந்தான் தீபக்.

''குட்டி, குட்டி என்று கூப்பிட்டு உங்க அப்பா உன்னைக் கெடுத்து வச்சு இருக்கார். குட்டிக்கே குட்டி வர போகும் வேளையில் என்ன இது சின்னக் குழந்தை மாதிரி...'' என்று மிரட்டியபடி அவளை தன் புறம் திருப்பி எழுப்பி உட்கார வைக்க முயற்சி செய்தவன், அவள் கன்னங்களில் இருந்த ஈரத்தைக் கண்டு திடுக்கிட்டான்.

''ஹேய்! சாரும்மா என்ன இது? எதுக்குடா அழற? நீ தூங்கிட்டு இருக்கிறாய் என்று நான் நினைத்து எழுப்பி

னால் அழுது கொண்டு இருக்கிறாய்? என்ன ஆச்சுடா?'' என்று பதறியபடி அவளை தன் மார்போடு சேர்த்து அணைத்து முதுகை வருடினான் தீபக்.

''சாரும்மா, நல்ல நாளும் அதுவுமே விருந்தினர்கள் எல்லாம் வந்து இருக்கும் நேரத்தில் எதுக்குடா இப்படி அழுகிறாய்?'' என்று கனிவாகப் பேசினான். ''என்ன பிரச்னை என்று சொன்னால் தானே சரண்யா புரியும்? அதைத் தீர்க்க ஏதாவது ஏற்பாடு பண்ணலாம்...'' என்று தேறுதலான வார்த்தைகள் சொல்லிப் பார்த்தான். எதற்கும் மசியவில்லை என்றதும் பாணியை மாற்றினான்.

''அதிகாலையில் படுக்கையில் அமர்ந்து அழுதால் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்து விடும் என்றால் நானும் உன்னுடன் சேர்ந்து அழத் தயாரா இருக்கேன். பிரச்னை என்ன என்று சொல்லு...'' என்று அதட்டலாகச் சொன்னதும் கண்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''அழுதால் எந்தப் பிரச்னைக்கும், தீர்வு கிடைக்காது என்று அதட்டிச் சொல்லாமல், நானும் சேர்ந்து அழுகிறேன் என்று சொல்வதைப் பார். லூசு...'' என்று அவனையே அதட்டி விட்டு. கட்டிலில் இருந்து இறங்க முயன்றவளை தடுத்து நிறுத்தினான்.

''யார், நான் லூசா? அஞ்சு மணியில் இருந்து அம்மா, மது, நான் என்று மூன்று பேரும் மாறி மாறி எழுப்பியும் எழுந்திரிக்காமல் கண்ணை மூடி அழுது விட்டு இப்ப என்னை லூசு என்கிறாயா? இப்ப எதுக்கு அழுகை என்று காரணத்தைச் சொல்லிட்டுப் போ...'' என்று கை பிடித்து இழுத்துத் தடுத்தான்.

''அம்மா, இன்னிக்கு தலைக்குத் தானே குளிக்கணும். தீபக் வேண்டாம் என்று சொல்றார் பாருங்கம்மா...'' என்று கொளுத்திப் போட்ட அடுத்த வினாடி அபிராமி



அங்கே மகனுக்கு விளக்கம் சொல்ல ஆஜராக, அவன் பிடியில் இருந்து தப்பித்து, சுலபமாகக் குளியல் அறைக்குள் சென்று விட்டாள் சரண்யா.

தீபக்கை ஏதோ பேசி கழட்டி விட்டு, குளியல் அறைக்குள் வந்த சரண்யாவின் மனசு, உடம்பு இரண்டுமே அம்மாவை வெகுவாகத் தேடியது. இந்த வீட்டில் எல்லோரும் தங்கத் தட்டில் வைத்துத் தாங்கினாலும், இன்னும் ஏதோ ஒன்று குறைவதை அவளால் உணர முடிந்தது. இந்த விழா, தன் வீட்டில் பெற்றோர்கள் முன்னிலையில் நடக்க வேண்டியது இல்லையா என்று மனம் ஏங்கியது.

இன்று இந்த விழா இருப்பதாலேயே அப்பா வெளிநாடு கிளம்பி விட்டார் என்று தகவல் நேற்று இரவு அவளின் காதில் விழுந்தது. கவனத்தில் கொள்ளக் கூடாது என்று படித்துப் படித்துச் சொல்லியும் மனம் அதை இரவு முழுவதும் மறக்கவே இல்லை. ஒரு பலவீனமான தருணத்தில் கண்ணீர் வந்து அதை தீபக்கும் பார்த்து விட்டான். அவனுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று மனம் குட்டியது.

இனி இது மாதிரி நடந்து கொள்ளக்கூடாது என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு குளித்து வெளியே வந்தவளுக்கு கட்டிலின் மேல் இருந்த பட்டுப் புடவையைப் பார்த்ததும் விழிகள் வியப்பில் விரிந்தது.

இது தீபக் மதுவுடன் தான் சென்று எடுத்த புடவை இல்லையே? ஆனால் தான் எடுத்ததைவிட மிக அழகாய் இருந்தது. வாடாமல்லி கலரில், அழுத்தமான தங்க

ஜரிகைகளில், முந்தானையில் மூன்று கிருஷ்ணர்கள் சிரித்தார்கள்.

கால் கட்டை விரலை சப்பும் குழந்தை நவநீதகிருஷ்ணன், தவழும் கோகுல கிருஷ்ணன், வெண்ணெய் திருட உறியை எட்டிப் பிடிக்க முயலும், நின்ற நிலையில் இருந்த மாயகிருஷ்ணன், என்று மூன்று உருவங்களும் தெரியும் வகையில் முந்தானையை விரித்து அந்தப் புடவை வைக்கப்பட்டு இருந்த கோலமே அவளின் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது.

# 21

முன்தினம் அப்பா வெளிநாடு சென்று விட்டார் என்று கிடைத்த தகவலினால், இரவு அலைபாய்ந்த மனதை அடக்கி, குளித்து விட்டு வெளியே வந்த சரண்யாவிற்கு கட்டிலில் விரித்து வைத்து இருந்த அந்தப் புடவையைப் பார்த்ததும் மனம் உற்சாகமானது.

''வாவ்! எவ்வளவு அழகான புடவை. அதுவும் இந்த சமயத்திற்கேற்ற புடவை. கலர் கொஞ்சம் காடியோ? இல்லை. இந்த அழுத்தமான வண்ணம் இல்லை என்றால் ஜரிகை வேலைப்பாடு பளிச் என்று தெரியாது. அவசரமாகப் புடவையை ஆராய்ந்தவள், இதை யார் எடுத்து இருப்பா என்ற கேள்வி வந்ததும் அவசரமாக கணவனை அழைத்தாள்.

''தீபக்...'' என்ற சரண்யாவின் சத்தமான குரல் கேட்டு அறைக்குள் எட்டிப் பார்த்தவன் ஏற்கனவே குளித்து இருந்தான்.

''என்ன சரண்! என்ன வேண்டும்?''



''இந்தப் புடவை யார் இங்கே வச்சது? ரொம்ப அழகா இருக்கு'' என்றவளின் கண்களில் ஆர்வம் மின்னியது.

''நல்லா இருந்தால் கட்டிக்கோ. நம் ரூமில் உனக்கு வேறே யார் புடவை எடுத்து வந்து வைக்க இருப்பாங்க? அம்மாவாதான் இருக்கும். நான் கவனிக்கலையே'' என்று பட்டும் படாமல் சொல்லி விட்டு அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விட்டான்.

ப்ளவுஸ் இருக்குமா என்று யோசனையோடு பிரித்துப் பார்த்தவளுக்கு உள்ளே ப்ளவுசும் இருந்தது சந்தோஷத்தை ஏற்படுத்தியது. தலையைப் பின்னி விட்டு புடவை கட்டலாம். என்று தலையைக் காய வைக்கத் துண்டுடன் வெளியே வந்தாள் சரண்யா. வாசலில் இருந்த அந்தத் தேர் கோலமும், அதில் கரை கட்டி நின்ற செம்மண் குழம்பு பட்டையும் அவளுக்கு மீண்டும் அம்மாவை நினைவு படுத்தியது.

பாட்டி வீட்டுக்குப் போனால், கோவிலில் பூஜை போடப் போகும் போது அம்மா இந்தக் கோலம் போடுவாங்க. சாணம் தெளித்துப் பூசி மெழுகிய அந்த கிராமத்து மண் தரையில் இந்தக் கோலம் அப்படியே ஒட்ட வைத்த சித்திரம் போல கண்களைப் பறிக்கும் அம்மா வர வாய்ப்பு இருக்கா?'' என்று ஆவலாக அலைந்த கண்களில் கருணாகரன் தென்பட்டார்.

''சரண்யா, கோலம் எப்படி இருக்கு? நம்ம மது கை வண்ணம் தான்...'' என்று பெருமையாகச் சொல்ல அவளுக்கு சப்பென்று ஆனது.

''ரொம்ப நல்லா இருக்குப்பா. கோலம் போட்ட கைக்கு வைர வளையல் போடுறேன் என்று சொல்லிடுங்க...'' என்று சிரித்துச் சமாளித்து விட்டுத் தோட்டத்திற்கு நகர்ந்தாள். தலையைக் காய வைத்த பின்பு, சிக்கெடுத்து

சீவியவள் பின்னலிட ஆரம்பித்தபோது மது அவசரமாக ஓடி வந்தாள்.

''அண்ணி, உங்களுக்கு இன்று ஸ்பெஷல் தலை அலங்காரம் செய்ய அண்ணன் ஆள் வரச் சொல்லி இருக் காங்க. கொஞ்ச நேரத்தில் வந்துடுவாங்க'' என்று சொன் னவள், ''பேச்சுக் கொடுத்தபடி அவளை நிலைக்கண் ணாடியில் இருந்து நகர்த்தி கட்டிலில் அமர வைத்தாள்.

''அப்பா சொன்னாங்க மது. நீ வாசலில் போட்ட கோலம் சூப்பர். கோலம் போட்ட கைக்கு வைர வளையல் போடணும்'' என்று சரண்யா சிரித்தாள்.

''கோலம் போட்ட கைக்கு நீங்க எப்போ போடுவீங்களோ தெரியாது. ஆனால் கோலம் போட்ட கை, உங்களுக்கு இன்றே வைர வளையல் போடத் தயார்...'' என்று சிரித்தவள் அந்த இடத்தில் இருந்து பறந்து விட்டாள்.

அபிராமி அம்மாவுடன் உறவினர்கள் சிலர் உள்ளே வந்து அவளைப் பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டுப் போக, அவர்களின் பின்னாலேயே, கையில் ஒரு கிண் ணத்துடன் வந்து எதிரே அமர்ந்த தீபக்கைப் பார்த்ததும் அவள் கண்கள் விரிந்தது.

''ஹேய்! தீபக். என்ன வெளியில் ஒன்றும் வேலை இல்லையா? இங்க வந்துட்டீங்க?'' என்று கேலியாகக் கேட்டாள் சரண்யா.

''என் பெண்டாட்டிக்கு இன்று வளைகாப்பு. அவ ளுக்கு ஸ்பெஷலா சிகை அலங்காரம் பண்ண நிபுணர் வரச் சொல்லி இருக்கிறேன். அதற்குப் பிறகு, அந்த அலங்காரத்திற்கே அழகு செய்யும் வேலையை நான் செய்யப் போகிறேன்...'' என்று அவளின் அருகே அமர்ந்



தவன் முன்னால், ஒரு பாத்திரத்தில், பொறுக்கி எடுத்த பெரிய பெரிய வாசனையான குண்டு மல்லிப் பூக்கள் இருந்தது.

''ஓஹோ! சார் தன் கையால் எனக்கு பூ கட்டித் தரப் போகிறாராக்கும்?'' என்று ரசனையோடு அவனை விழுங்கும் பார்வையால் தடவி, பேசியவள், தன் பின் னால் வந்து நின்ற சிகை அலங்கார நிபுணரைக் கவனிக்க வில்லை.

''பின்னே, மேடம் எனக்கு சொன்ன முதல் வேலை. முக்கியமான வேலை. அதை மறக்க முடியுமா? குண்டு மல்லிகைப் பூவில் பெரிசா இருப்பதைப் பொறுக்கி எடுத்து, நல்லா உருண்டையா கட்டி, உச்சியில் சிறு கொண்டை போட்டு, அதைச் சுற்றி அந்த மல்லிகைச் சரத்தை வச்சு...'' என்று ரசனையோடு அவன் வாய் பேசிக் கொண்டு இருந்தாலும், அவனின் கைகள் வேக மாக வாழை நாரில் அந்த மல்லிகையை மாலையாக தொடுத்துக் கொண்டு இருந்தது.

''ஹேய்! தீபக், நான் கூட என்னவோ உங்களை லேசா நினைத்து விட்டேன். மல்லிகை பூ இவ்வளவு அழகா தொடுக்க உங்களுக்குத் தெரியுமா?'' என்றவளின் கண்கள் விரிந்தது.

''இது எவ்வளவு காம்ப்ளிகேடட் வேலை தெரியுமா? முதலில் நீளமாக வெட்டப்பட்ட பேப்பர் துண்டில் கட்ட பழகி, அப்புறம் சாமந்தி பூ. அப்புறம் கனகாம்பரம். அதன் பிறகு மல்லிகை என்று நான்கு நிலை பயிற்சி எடுத்து இருக்கிறேன் தெரியுமா? சரண்யாவுக்கான ஸ்பெஷல் பயிற்சி...'' என்று ரசனையோடு சொன்ன கணவனின் பிரதாபத்தில் சுற்றுப் புறம் மறந்து மூழ்கிப் போன

சரண்யா பின்னால் நின்று பதினைந்து நிமிடம் செலவு பண்ணி அவளுக்கு உச்சியில் சிறு கொண்டையும், அதன் கீழே சவுரி முடி வைத்து நீண்ட பின்னலையும் போட்டு விட்டுப் போன இந்திராணியை கவனிக்கவில்லை.

''தலை அலங்காரம் ஓவர், பூ வைத்து விடட்டுமா?'' என்று கேட்டபடி அவளை நிலைக்கண்ணாடி முன் அமர வைத்தான் தீபக்.

''ஹேய்! தீபக்! நான் உங்களை முதன் முதலா பார்த்தபோது இதே கொண்டைக்கு பூ கட்டித் தரத்தான் உங்களிடம் சொன்னேன். ஞாபகம் இருக்கா?'' என்று கண்ணில் கனவுடன் கேட்ட சரண்யாவுக்கு மறக்குமா செல்லம்?'' என்று கொஞ்சலாகக் கேட்டபடி புன்னகையோடு அவளின் கொண்டையைச் சுற்றி மல்லிகைச் சரத்தை வைத்தான்.

''தீபக், இந்த ஹேர் ஸ்டைலும், உங்க கையால் கட்டித் தந்த பூவும் வைத்து இருக்கும்போது, இந்த உலகமே காலடியில் என்ற பாவனையில் அப்படியே வானத்தில் மிதக்கிற மாதிரி இருக்கு...'' என்று சொல்ல, அவளின் கன்னத்தை வருடியவன் குனிந்து கழுத்தில் வாசனை பிடித்தான்.

''வெளியே எல்லாரும் காத்து இருக்காங்க என்று கஷ்டப்பட்டு நானே என்னைக் கண்ட்ரோல் பண்ணி, கிளம்பலாம் என்று நினைத்தாலும் நீ இந்த மாதிரி பேசினால் எப்படிக் கிளம்புவது?'' என்ற தீபக்கின் இதழ்கள் கழுத்தில் இருந்து கன்னத்திற்கு நகர்ந்து முத்திரை பதித்தது.

''நானாவது பேசிட்டு இருக்கேன். நீங்க என்ன பண்றீங்க?'' என்றவள் குரல் கிசுகிசுப்புக்கு மாற, கைகள் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தது.



''நான் என்ன பண்றேன் என்று எனக்கேத் தெரியலை'' என்றவன் கைகள் அவளை எழுப்பி நிறுத்தி இன்னும் நெருக்கமாக இழுத்து அணைக்க அவள் பதறினாள்.

''ஹையோ... டைம் ஆச்சு... யாராவது வந்துடப் போறாங்க... விடுங்க.. தீபக்... ப்ளீஸ்...'' என்று திணறியவள் கன்னத்தில் மேலும் ஒரு முத்தம் வைத்து விட்டு விடுவித்தான்.

''இவ்வளவு அழகா இருந்தால் நான் என்ன செய்வது? சும்மாவே அழகு. இப்போ குட்டி பொண்ணுக்கு ஒரு குட்டி வந்து கூடுதல் அழகா ஆக்கிடுச்சு...'' என்று ரசனையோடு சொன்னவன் டிரேசிங் டேபிள் ட்ராயரை திறந்து, கண்மை எடுத்து, அவளின் கன்னத்தில் ஒரு புள்ளி வைத்ததை இமைக்காமல் பார்த்தவள் மேலும் நெகிழ்ந்தாள்.

''தீபக்... ஐ லவ் யு...'', என்று சொன்னவளின் வாயில் இருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. ஆனாலும் அந்த பாவனை புரிந்தது. அவளின் நெகிழ்ச்சியை சரிக்கட்ட, ''என்ன சாரும்மா, வெறும் காத்து தான் வருதா?'', என்று கேலியாக சிரித்தான்.

''ஷு! கேலி பண்ணாதீங்க...'', என்று அவன் முதுகில் அடித்து செல்லமாக சிணுங்கி திரும்ப, கண்ணாடியில் அவளின் சிகை அலங்காரம் கண்ணில் பட்டது.

''இந்த மாதிரி கொண்டையும் பின்னலுமா போட சொல்லி நீங்க சொன்னீங்களா?'', என்று கேட்டவளின் கண்களில் சந்தோஷமும் ஏக்கமும் சேர்ந்து இருந்தது.

''நான் ஏன் சொல்லணும்? உன் முகத்துக்கு எது பொருத்தமா இருக்கும் என்று அவங்களுக்கு தெரியாதா

சரண்யா?'', என்று கேட்டவனின் பதில் மழுப்பலாக இருந்ததை அவள் கவனிக்கவில்லை.

''அழகான புடவை அருமையான தலை அலங்காரம், அளவான நகைகள், மிதமாக ஒப்பனை, நலம் நாடும் உறவினர்களின் அருகாமை தந்த சந்தோஷம் என்று அழகு தேவதையாக வந்து நாற்காலியில் அமர்ந்த சரண்யாவை பார்த்து ரசிக்காதவர்களே இருக்க முடியாது.

அபிராமி அம்மா பிழிந்த மூலிகை சாறு கொடுத்து, சடங்குகளை முடித்து பின்பு ''பொண்ணுக்கு வேண்டியவங்க எல்லோரும் வந்து வளையல் போடுங்க. முதலில் பொண்ணோட அம்மாவை வரச்சொல்லுங்கோ...'' என்று அய்யர் சொல்ல, ''வாங்கம்மா...'' என்று தீபக் தன் அருகில் நின்ற அபிராமியை தாண்டி கை காட்டி அழைப்பது புரிந்து வியப்புடன் திரும்பியவளின் கண்களில் பட்டது இந்திராணி.

''ஷ்! சரண்யா எதுவும் சொல்லிடாதே! எதுவா இருந்தாலும், அப்புறம் பங்ஷன் முடிந்த பிறகு பேசிக்கலாம்'', என்று அவசரமாக அருகில் வந்து கைகளை அழுத்தி பிடித்த தீபக் அதை சொல்லி இருக்க தேவையே இல்லை.

''அ... ம்... மா...'', என்ற அந்த மூன்றெழுத்து வார்த்தையை இதழ்கள் உச்சரிக்கும் போது அவளின் தொண்டையில் இருந்து சத்தம் வெளியே வரவில்லை. ஆனால் முன்தினம் இரவில் இருந்து மனதை அழுத்தி கொண்டு இருந்த பாரம் இறங்கியதில் மனம் நெகிழ்ந்து கண்ணில் இருந்து நீர் வெளியேறியது.

அருகே வந்து மகளுக்கு கன்னத்தில் சந்தனத்தை தடவி, நெற்றியில் குங்குமம் வைத்து, உச்சி வகிட்டில்



அட்சதை தூவி, தலையில் உள்ளங்கையை வைத்து நல்லபடியாக பிரசவம் நடந்து தாயும் சேயும் நலமாக இருக்க வேண்டும் என்று மனமார ப்ரார்த்தனை செய்த இந்திராணிக்கும் அது வரை ஒரு வார்த்தை கூட வெளி வரவில்லை.

''வளையல் போடுங்கம்மா...'', என்று தீபக் எடுத்து கொடுத்த நான்கு கண்ணாடி வளையல்களுடன், தன் கையில் இருந்த இரண்டு வைர வளையல்களையும் சேர்த்து சரண்யாவின் கையில் நுழைத்த போது சரண்யா என்ற சிலைக்கு உயிர் வந்தது.

சுற்றுப் புறத்தில் உறவும் நட்பும் சூழ இருக்க, எதிர்ப்பை வெளிப்படையாக காட்ட முடியாமல் ''வைர வளையலை இதோடு போட வேண்டாம்மா. தனியா தட்டில் வச்சு கொடுத்திடுங்க'', என்று நாசூக்காக மகள் மறுத்தது புரிய, வருத்தமும் பெருமிதமும் ஒருங்கே தோன்ற, அதை முன்னால் இருந்த தேங்காய் பழ தட்டில் வைத்தார் இந்திராணி. மதிய உணவு முடிந்து பெரும்பாலான விருந்தினர்கள் கிளம்பிய பின்பு, இந்திராணியிடம் வந்தாள்.

''அம்மா நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்...'', என்று ஆரம்பிக்க, ''வளையலை திருப்பி கொடுப்பதை தவிர வேறு ஏதாவது பேசு சரண்யா...'', என்று அவசரமாக சொன்னார் இந்திரணி.

''நான் வளையலை திருப்பி கொடுக்க போகிறேன் என்று யார் சொன்னது? நான் கேட்கும் கேள்விகளுக்கு நீங்க மனசாட்சி படி சரி என்று படுவதை மட்டும் பதிலா சொல்லுங்க, அது போதும்'', என்று சொல்ல இந்திராணி மட்டுமின்றி அங்கே இருந்த அனைவருமே ஆசுவாச பெருமூச்சை வெளியிட்டனர்.

இந்த நகை வந்து இங்கு நிறைய போவதில்லை என்றாலும் மகளுக்கு செய்து பார்க்க வேண்டும் என்ற ஆவல் பெற்ற தாய்க்கு இருப்பதை மறுக்க முடியாதே? மேலும் அவளின் வசதிக்கு அவளுக்கு கிடைக்கக் கூடிய சலுகைகளை தட்டி பறிப்பதும் நியாம் ஆகாதே?

''என்னம்மா கேளு...'', என்றார் இந்திராணி.

''வைர வளையலை எனக்கு இதை கொடுத்து விட்டதால், இது என்னுடைய பொருள் தானே? இதை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் தானே?''

''ஆமா...'', என்று சொன்னார். வளையலை திருப்பி கொடுக்க என்னவோ கதை சொல்கிறாள் என்ற வரை புரிந்தது. எப்படி செய்ய போகிறாள்?

''ஒருத்தருக்கு ஒன்று செய்வேன் என்று வாக்கு கொடுத்து விட்டால் அதை நிறைவேற்ற வேண்டும் தானே?'', என்று கேட்டாள் சரண்யா.

இவள் எங்கே சுற்றி வருகிறாள்? பழத்தையே வாங்கி கொள்ள மாட்டேன் என்று அடம் பிடித்தவள் வளையலை வேண்டாம் என்று சொல்ல என்ன புது கதை சொல்கிறாள் என்று திகைப்புடன் பார்த்தவர், வேறு வழி இன்று, 'ஆம்...', என்று தலை அசைத்தார்.

''நான் இன்று காலை மாமாவிடமும், மதுவிடமும், எங்க வீட்டு வாசலில் அந்த தேர் கோலம் போட்ட கைகளுக்கு வைர வளையல் போடுகிறேன் என்று வாக்களித்தேன், அதை நிறைவேற்றும் சந்தர்ப்பம் இவ்வளவு சீக்கிரம் எனக்கு கிடைக்கும் என்று நானே எதிர்பார்க்க வில்லை. தேங்க்ஸ்மா...'' என்று அவரை கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டவளை திகைப்புடன் பார்த்தார் இந்திராணி.



''இப்ப மறுக்க மாட்டீங்க என்று நினைக்கிறேன்', என்று சில மணி நேரத்திற்கு முன்னால் அவர் தனக்கு பரிசாக அளித்த அந்த இரண்டு வைர வளையல் களையும் அவரின் கையில் திரும்ப மாட்டியதை பார்த்த இந்திராணி உள்பட அங்கிருந்த அனைவரின் மனதிலும், சரண்யா உயர்ந்ததோர் இடத்தில் வீற்று இருந்தாள்.



# 22

சரண்யாவிற்கு நடந்த வளைகாப்பு நிகழ்ச்சியிலும், மருத்துவமனையில் நிகழ்ந்த பிரசவத்திலும், தீபக்கின் தொலைபேசி தகவல் மட்டுமல்லாது வீட்டுக்கு முறை யாக அழைப்பு அனுப்பிய கருணாகரனின் நடத்தை யிலும் யாரும் குறை சொல்ல முடியாது. இங்கே யாரும் நேரில் வரவில்லை. அதற்கு காரணம் சரண்யா என் பதும் இந்திராணிக்கும் ராமலிங்கத்திற்கும் நன்றாகவே தெரியும்.

குழந்தைக்கு பேர் சூட்டும் விழாவை முன்னிட்டு அனுப்பப்பட்டு இருந்த மஞ்சள் தடவிய அழைப்பிதல் ஹால் டீபாயில் இருந்தது. அதை பார்த்த ராமலிங்கத்தின் முகம் யோசனையில் சுருங்கியது. ஒரு மனிதன் இவ் வளவு பொறுமையாக நடிக்க முடியுமா? ஒருவேளை இவன் உண்மையிலேயே நல்லவனா?

கையில் அழைப்பிதழுடன் நின்று இருந்த ராமலிங் கத்திற்கு காபி எடுத்து வந்த இந்திராணி அவரின் முகத் தில் இருந்த யோசனையை பார்த்தார். இந்த விழாவிற்

காவது வருவாரா பார்க்கலாம் என்று விக்ரமாதித்தனை போல மீண்டும் ஆயிரமாவது முறையாக தன் முயற்சியை துவக்கினார்.

''நாம் ஒண்ணுக்கும் போகவில்லை. ஆனால் நம் பெண்ணை அவர்கள் எந்த குறையும் இல்லாமல் தங்க தட்டில் வைத்து தாங்கத்தான் செய்கிறார்கள். இதுக்காவது போக உங்களுக்கு மனம் வருகிறதா என்று பார்க்கிறேன்'' என்று எரிச்சலோடு சொன்னார்.

''நான் வரலை என்று வேண்டுமானால் சொல்லு. ஏன் நாம் என்று உன்னையும் சேர்த்து சொல்கிறாய்? போக வேண்டிய எல்லாத்துக்கும் நீ போய் வருகிறாய் என்பது எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா?'' என்று கேட்ட ராமலிங்கத்தின் குரலில் கோபம் இருந்தது.

''நான் உங்களிடம் அனுமதி கேட்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் உங்களுக்குத் தெரியாமல் மறைத்துச் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அந்த நாளில் நீங்க இங்கே இல்லை அவ்வளவுதான். இருந்தால் சொல்லி விட்டுத் தான் போய் இருப்பேன்'' என்று பட்டென்று சொன்ன இந்திராணியை முறைத்தார்.

''இந்தப் பேச்சு, இந்த திமிர்தான் அப்படியே அவளிடம் இருக்கு. அவளுக்கு இவ்வளவு அழுத்தம்? உள்ளூரில் இருக்கா? நேரில் ஒரு முறை வந்து பார்க்கக் கூடாதா? அப்பா ஒரு கோபத்தில் இருந்தால், இவள் அதுக்கு மேலே உச்சாணி கொம்பில் ஏறி உட்கார்ந்தால் என்ன அர்த்தம்? நாலு முறை பார்த்த ஒருவனை கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லி கேட்கிறோமே? அவன் நல்லவனா கெட்டவனா என்று அப்பா விசாரிக்கட்டும்...''



என்று ராமலிங்கம் பேசும்போதே அவசரமாக இடையிட்டார் இந்திராணி.

''விசாரிக்க வேண்டாம் என்று அவள் எப்போது உங்களிடம் சொன்னாள்? எனக்குக் கல்யாணத்திற்கு அவசரம் இல்லை என்று தான் உங்களிடம் நூறு முறையாவது சொல்லி இருப்பாள்... இல்லை இல்லை... சொல்ல முயன்றாள் என்பது தான் சரி. அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதைக் கேட்கக் கூட நமக்கு மனசும் நேரமும் இல்லையே? நீங்க என்ன செய்வீங்க பாவம்?''

''என்ன கிண்டலா? அவன் நல்லவனா கெட்டவனா என்று எனக்குத் தெரிய வேண்டாமா?''

''அதை தெரிஞ்சுகிட்டு இனிமேல் என்ன செய்யப் போறீங்க? அவள் என்னை மாதிரி என்று சொல்றீங்களே? அது தப்பு. என்னை மாதிரி இருந்தால் அனுசரிச்சு போவாளே? அவள் உங்களை மாதிரி. பிடித்த முயலுக்கு கால் மூன்று என்று பிடிவாதம் பிடிக்கும் ரகம்...''

''நான் என்ன பிடிவாதமா பிடிக்கிறேன்? என் கோபத்தில் நியாயம் இல்லையா?''

''பிடிவாதம் பிடிக்கிறேனா என்று என்ன கேள்வி? மனசில் அவள் மீது உண்மையிலேயே கோபம் இல்லை என்றாலும், அவளைப் பார்க்க வேண்டும் என்று மனசு துடித்தாலும், அதை அடக்கி ஒதுக்கி வைத்து விட்டு, தப்பித் தவறி இங்கே இருந்தால் எங்கே விழாவிற்கு போய் விடுவோமோ என்பதற்காக வெளிநாட்டுக்கே ஓடிப் போறீங்க. அவள் உங்களைத் தேடி வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நீங்க காத்து இருக்கலையா? அதுக்கு பேர் என்னவாம்?''

''நான் அவளை விட வயசில், அனுபவத்தில் பெரிய வண்டீ. எல்லாத்துக்கும் மேலே அவளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவன்...''

''இருக்கட்டுமே. அவள் என்ன நினைக்கிறாள் என்று நிக்க வச்சுட்டு சொல்லிட்டுத்தான் போனாள்? உங்க பொண்ணு தானே? உங்க ரத்தம் தானே அவள் உடம்பில் ஓடுது? உங்களுக்கு இருக்கும் ரோஷத்தில் பாதி அவளுக்கு இருக்காதா? ஆனால் ஒண்ணு எத்தனை வருஷம் ஆனாலும் சரி. நீங்க பேசாமல், அவள் வீட்டுக்கு போகாமல் அவள் இங்கே வரப் போவது இல்லை. அதை மட்டும் ஞாகபம் வச்சுக்கோங்க...'', என்று பொரிந்து தள்ளிய இந்திராணியை பார்த்துத் திகைத்து போய் பேச்சிழந்து நின்றனர்.

* * *

அப்பா வெளிநாடு சென்று விட்டாலும் விட்டு கொடுக்காமல் தன்னை வந்து பார்த்து விழாவில் கலந்து கொண்ட இந்திராணி, இன்றைய பெயர் சூட்டு விழாவிற்கு வருவாரா என்று வழி மேல் விழி வைத்து காத்திருந்த சரண்யாவைப் பார்க்க தீபக்கிற்கு மனம் வாடியது.

என்னதான் வராதீங்க. எனக்குப் பரிசு தராதீங்க. என்று அவ்வப்போது வாயால் சொல்லிக் கொண்டாலும், இன்றைய பெயர் சூட்டும் விழாவிற்கு அம்மா வாங்கி வந்த அந்த கிருஷ்ணன் படம் போட்ட பட்டு புடவையை எடுத்ததிலேயே அவள் மனம் புரிந்தது. அத்தையின் இக்கட்டான நிலையும் புரிந்தது.

கணவன் வீட்டு உறவு வழியில் ஒரு நூறு வயதை தாண்டிய பாட்டி ஒருவர் தவறி இருக்க, தவிர்க்க



முடியாமல் அங்கே சென்று விட்டவரின் மனம் முழுக்க இங்கே தான் இருக்கும்.

''டேய் அண்ணா! எத்தனை வாட்டி கூப்பிடுறேன்? என்ன நின்று கொண்டே தூங்குகிறாயா? அப்பா கூப்பிடுறாங்க வா'', என்று அதட்டிய மதுவை பின் தொடர்ந்து உள்ளே சென்றான் தீபக்.

''வா தீபக். அய்யர் வருவதற்கு முன்னால், குழந்தைக்கு ஒரு நல்ல பேர் தேர்ந்தெடுத்து விடுவோமா? எல்லோரும் என்ன நினைக்கறீங்க என்று அவங்கவங்க விருப்பத்தை சொல்லுங்க. சரண்யா நீ முதலில் சொல்லும்மா...'' என்று பேச்சை ஆரம்பித்தார் கருணாகரன்.

தன்னுடைய தாய் வழி தாத்தா பெயர் சரவணன். அப்பா பெயரை வைக்க அம்மா விரும்பியதால், அவரின் விருப்பத்தை நிறைவேற்ற ராமலிங்கம் செய்த ஒரே ஒரு காரியம். இதுதான். தனக்கு அந்த பெயரில் பாதியை சூட்டினார். அவரே மனசு வந்து அந்த காரியம் செய்து இருக்கும்போது அப்பா பெயரை வைக்கச் சொல்ல வேண்டும் போல ஆசை தோன்றியது.

ஆனால் இந்த ஒன்றரை ஆண்டுகளில் தான் இருக்கிறேனா இல்லையா என்று கூடப் பார்க்காதவர் பெயரை என் பையனுக்கு வை என்று சொல்வது, தன்னையும் தன் குழந்தையையும் கண்ணும் கருத்துமாக பார்த்து கொள்ளும் இவர்களுக்கு செய்யும் அநியாயம் என்று அந்த எண்ணத்தை அழித்தாள்.

''உங்க குடும்பத்துக்கு என்று பெயர் வைக்க ஏதாவது வழக்கம் இருக்கும் இல்லையா மாமா? அப்படியே வைங்க. நான் என்ன சொல்லப் போகிறேன்...'' என்று

முடித்தாள். அவளின் சுருக்கமான பேச்சையும், அதற்கு முன் வந்த சிறு இடைவெளியையும் தீபக் கவனிக்கத் தவறவில்லை.

''வழக்கம் என்னம்மா வழக்கம்? சாதாரணமா தாத்தா பெயரை பேரனுக்கு வைப்பாங்க. ஆனால் அந்த சம்பிரதாயத்தை நானே கடைப்பிடிக்கலை. தீபக் என்னுடைய விருப்பம் மதுமதி மாமாவுடைய விருப்பம். இது பையன் இல்லையா? அதனால் இந்த குழந்தைக்கு பெயர் வைக்கும் உரிமை முழுக்க முழுக்க உனக்கு தான்...'' என்று அபிராமி சொல்ல மது கை தட்டி தன் சந்தோஷத்தை தெரிவித்தாள்.

''சூப்பர்ம்மா, இப்படித் தான் இருக்கணும். சும்மா நூறு கண்டிஷன் போடாமல் மருமகளுக்கு உரிமை கொடுக்கணும்'' என்று சிரித்த மதுவை, 'ஷ்! சும்மா இரு மது' என்று தோளில் தட்டினாள் சரண்யா.

''அண்ணி என்ன பேர் வேண்டுமானால் வைங்க, ஆனால் அல்ட்ரா மாடர்னா தஷ் புஷ்ன்னு முடியுற மாதிரி வேண்டாம் ஓகே?'' என்று வேண்டுகோள் வைத்தாள் மது.

''நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை மது. அம்மா எனக்கு கொடுத்த உரிமையை நான் தீபக்கிற்கு கொடுத்து விட்டேன். அவர் என்ன சொல்றாரோ அதுதான்...'', என்று சொல்ல தீபக் அவளைச் சில வினாடிகள் கூர்மையாகப் பார்த்தான்.

''ஆண்களுக்கு உதாரண புருஷனா சொல்லணும் என்றால் யாரை சொல்வாய் மது?'', என்று கேள்வியை தங்கையிடம் கேட்டவன் பார்வையை மனைவியிடம் வைத்து இருந்தான்.



''இதென்ன கேள்வி? ஏக பத்தினி விரதன் ஸ்ரீ ராமரைத்தான் சொல்லணும். ஆனால் என்ன அவர் கொஞ்சம் சீரியஸ் டைப். கிருஷ்ணன் மாதிரி கலகலப்பா இருந்தால் நல்லா இருக்கும்...'', என்று மது சொல்லும் முன்பே இடையிட்டான் தீபக்.

''கிருஷ்ணர் மாதிரி இருந்தால் டேஞ்சர் ஆச்சே? என் பையன்... என்னை மாதிரி... ராமராகவே இருக்கட்டும்... அதனால் ஸ்ரீராம் என்று பெயர் வைத்து விடலாம். ஓகேயா சரண்யா? உனக்கு பேர் பிடித்து இருக்கா?'', என்று அவன் சொல்லி முடிக்கும் முன்பே வந்து, ''ரொம்ப பிடிச்சு இருக்கு'', என்று சொல்லி அவனின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டவளின் கண்களில் ஒரு துளி நீர் இருந்ததை தீபக்கினால் உணர முடிந்தது.

''உன்னை நான் அறிவேன்... என்னை அல்லால் வேறு யாரறிவார்...'', என்ற பழைய பாடல் வரிகள் எங்கோ தூரத்தில் ஒலித்து இருவரின் மன நிலையையும் துல்லியமாக பிரதிபலித்தது.

✸ ஒரு ஆண்டிற்குப் பிறகு... ✸

அந்தி மாலை நேரத்தில் இந்திராணி பூஜை அறையில் விளக்கேற்றி கொண்டு இருந்த போது, வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, இந்த நேரத்தில் யார் என்று யோசனையுடன் வந்த இந்திராணி வாசலில் நின்ற விக்ரமை பார்த்து திகைத்தார்.

''என்னடா இந்த நேரத்துல? வரதா ஒரு போன் கூட பண்ணலை? அம்மா கூட சொல்லலை'' என்று கேட்டார்.

''ஒரு காபி கொடுங்க சித்தி...'' என்று கேட்டவன் முகமே சரி இல்லை. அதை பார்த்த உடனே கொஞ்சம்

கவலை வந்தது. மறுபடியும் தர்ஷினிக்கும் இவனுக்கும் பிரச்னையோ? காபி கொண்டு வர இந்திராணி செல்ல, பேச்சுக்குரல் கேட்டு அறையில் இருந்து வெளி வந்த ராமலிங்கம், ''ஹேய் விக்ரம்? நீயா? எப்போ மதுரையில் இருந்து கிளம்பினாய்? எப்படி வந்தாய்? ஏன் போன் பண்ணலை...'' என்று அக்கறையாக விசாரித்தார்.

பதில் சொல்லாமல் வெறுமனே உச்சு கொட்டினான். காபியோடு வந்த இந்திராணியின் விசாரணைக்கும் அவனிடம் பதில் இல்லை. முகமும் தெளிவாக இல்லை.

''வரியா விக்ரம் பீச் வரை போய் வரலம்?'' என்று அழைத்த ராமலிங்கத்திற்கு ஒப்புதலாக தலை அசைத்தான். காரிலேயே அவரையும் அழைத்து சென்றான். காரில் போகும்போது பேச்சு வார்த்தை எதுவுமின்றி அமைதியாகவே கழிந்தது.

பீச்சில் அமர்ந்த பின்பு, சற்று நேரம் அமைதியில் கழிய, ''என்ன விக்ரம் ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

''ப்ச்!'' என்பதுடன் அவனின் பிரதிபலிப்பு நின்று விட்டது.

''என்ன விக்ரம்? உங்க பெண்ணே உங்க பேச்சை கேட்கலை. நீங்க என் சொந்த விஷயத்தில் என்ன தலையிடுவது என்று நினைக்கிறாயா?''

''ச்சே ச்சே... நான் அப்படி எல்லாம் நினைக்கவில்லை சித்தப்பா. அம்மா அப்பாவை விட எனக்கு அதிக செல்லம் கொடுத்தது நீங்க தான்...''

''இந்துக்கு பையன் இல்லை என்று ஒரு குறை உண்டு. அதை சரிக்கட்ட தான் அப்பப்போ உன்னை



இங்கே வரவைத்தது. நீ அந்த கிராமத்தில் இருந்து சரியா படிக்காமல் இருந்து விட கூடாதே என்று ஆறில் இருந்து பனிரெண்டு வரை உன்னை இங்கே படிக்க வைத்தோம்...''

''நானும் அதை மறக்கவில்லை சித்தப்பா. அந்த நன்றி இன்னும் இருக்கிறது...'' என்றவன் கரங்கள் மணலில் கோலம் போட்டது.

''உனக்கும் தர்ஷினிக்கும் ஏதோ சின்னப் பிரச்னை. தனியா மதுரையில் வீடு பார்த்து வச்ச பிறகு பரவாயில்லை என்று இந்து சொன்னாளே! இப்ப பரவாயில்லையா?''

''அதான் சித்தப்பா இப்ப பிரச்னை. தனி குடித்தனம் வைக்க ஒத்து கொண்டதும் இப்போ அடுத்த கோரிக்கைக்கு போய் மறுபடியும் சண்டை போட்டு கிளம்பி விட்டாள். இப்ப அவள் கேட்பதை என்னால் செய்ய முடியாத சூழல்...''

''இப்ப என்ன பிரச்னை?''

''இப்ப சொத்தை பிரிச்சு வாங்கி, சென்னையில் பிசினஸ் ஆரம்பிக்கணுமாம். அண்ணன் சோழவந்தானில் செய்ற விவசாயம், அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை எல்லாம் என்ன ஆறது? முடியாது என்று சொன்னேன். அங்கே இருக்க முடியாது என்றாள். நானே கூட்டி வந்து மதியம் அவங்க அம்மா வீட்டில் விட்டு விட்டேன்...''

''என்னடா எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இப்படி சொல்கிறாய்? பெண்டாட்டியை அம்மா வீட்டில் கொண்டு போய் விட்டேன் என்று சொல்வது பெருமையான விஷயமா?''

"இல்லை தான். அது உங்களுக்கும் எனக்கும் மட்டும் புரிஞ்சால் போதுமா? இங்கே ஆறு வருடம் இருந்ததால், அம்மாவிடம் சொல்லாத விஷயங்கள் கூட உங்களிடம் சொல்கிறேன். அவளோட சமாளித்து வாழ நிஜமா என்னால் முடியலை. பொறுமையே இல்லை. எனக்கும் கம்பி தான். ஆனால் ரொம்ப அடம் பிடிக்கிறாள். அதை விட மோசம். யார் என்ன சொன்னாலும் நம்பி விடுகிறாள். இப்ப அந்த லக்ஷ்மிகாந்தன் சென்னையில் பிசினஸ் ஆரம்பிக்கப் போறானாம். அதுல பார்ட்னர்ஷிப் போட சொத்தை பிரிக்கச் சொல்லிக் கேட்டாள். நான் எங்க அம்மாவுடன் இருந்து கொள்கிறேன். நீ உங்க அம்மாவுடன் இருந்துக்கோ என்று கொண்டுவந்து விட்டுட்டேன். என்ன செய்ய சொல்றீங்க?"

"யோசிச்சு முடிவெடு விக்ரம். ஆனால் நல்லதோ கெட்டதோ ஒரே வீட்டில் அனுசரிச்சு இருக்க வேண்டாமா? பொசுக் பொசுக் என்று வீட்டை விட்டு கிளம்புவது என்ன குணம்? சரி இல்லையே? ரெண்டு வருஷத்துல இது மூன்றாவது முறை. செய்வது பிடிக்கலை என்றாலும் உள்ளிருந்தே போராட்டம் நடத்த வேண்டும். அந்த விஷயத்தில் இந்திராணியை நான் பாராட்டுவேன். சரண்யா கூட இந்த விஷயத்தில் அவங்க அம்மா மாதிரி தான்" என்று பெருமையாகச் சொன்ன ராமலிங்கத்தை வியப்பாகப் பார்த்தான். அவனும் அன்று ஏர்போர்ட்டில் ஒப்பிட்டு பார்த்தது தானே?

"நான் செய்வது சரி தான் என்று ஒன்னுக்கு நாலு தடவை யோசித்தாச்சு. இப்ப நான் தெளிவா இருக்கேன். நான் இனிமேல் அவளை கூப்பிடப் போவதில்லை. அவளாக என் அருமை உணர்ந்து, என் குடும்பத்தின்



அவசியம் உணர்ந்து வருவதாக இருந்தால் வரட்டும். இல்லை என்றால்..." என்று பேசிய விக்ரமின் கண்களில் சாலையின் எதிர்புறத்தில், சென்னை பல்கலைக் கழக வளாக வாகலில் அந்த காட்சி பட்டது.

அது சரண்யாதானே? பட்டமளிப்பு விழா ஸ்பெஷல் உடையில், தன் கழுத்தில் இருந்த அந்த பதக்கத்தை, தீபக்கின் கையில் இருந்த குழந்தையின் கழுத்தில் அணிவித்து, அதன் கன்னத்தில் முத்தமிட, அவள் நிமிரும் முன்பே அவசரமாக அவளின் கன்னத்தில் தீபக் இதழ் பதித்தானா என்ன?

வாவ்! என்ன டைமிங் மேன்!? வாழ்த்துக்கு வாழ்த்து அப்படியே...

அந்த காட்சி மனதில் ஏற்படுத்திய இதத்தில் தன்னை மறந்து அவன் அவர்களையே பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, கையில் இருந்த சுருட்டி வைக்கப் பட்டு இருந்த சான்றிதழால், அவனின் தோளில் செல்லமாக ஒரு அடி கொடுத்து, தலையை கலைத்து விட்ட சரண்யாவின் முகத்தில் இருந்த பெருமிதத்தையும் சந்தோஷத்தையும் காண விக்ரமிற்கு கண்கள் இரண்டு போதவில்லை.

## 23

தீபக் - சரண்யா திருமணம் இரண்டு வீட்டினரின் சம்மதத்தோடு நடந்ததாக வெளிப்பார்வைக்கு காண்பிக்கப் பட்டாலும் உண்மையில் ராமலிங்கத்திற்கு நூறு சத

விகிதம் சம்மதம் இல்லை என்பதும், இன்று வரை அவர் தன் பெண்ணைப் பார்க்கவோ பேசவோ இல்லை என்பதும் விக்ரமிற்கு தெரியும் என்பதாலேயே அவன் வியப்பு மேலும் கூடியது.

இவள் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாள்? கல்யாணம் ஆகி விட்டது. குழந்தை வந்தாச்சு. இனி என்ன படிப்பு என்று நிறுத்தி விடாமல் பட்டம் வாங்க வைத்து விட்டானா? படிப்பு எப்போதோ முடிந்து இருக்க வேண்டுமே? பட்டமளிப்பு விழா இப்போதுதான் நடக்குதா? வேகமாக பேசிக்கொண்டு இருந்த விக்ரமின் பேச்சு நின்றதன் காரணத்தை அறிய அடுத்த வினாடியே திரும்பிய ராமலிங்கத்தின் கண்களிலும் அந்த காட்சி பட்டது.

இவளை பார்த்து இரண்டு ஆண்டுகள் இருக்குமே? இரண்டு வினாடிகளுக்கு முன்பு இவளைப் பற்றிப் பேசினார். உடனே கண் எதிரே தோன்றி விட்டாளா? 'நூறாண்டு காலம் வாழ்க...', என்று மனம் அனிச்சையாய் வாழ்த்த, ராமலிங்கத்தின் கண்கள் கசிந்தது.

அவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே பைக்கில் அவர்கள் மூவரும் பறந்து விட அவளைப் பற்றி பேசினால் அடுத்தவர் தன்னை தப்பாக நினைப்பார்களோ என்ற எண்ணத்திலேயே இருவரும் மௌனமாக வீடு வந்து சேர்ந்தனர்.

கணவரிடம் இருந்து விபரம் அறிந்த இந்திராணி, மறுநாள் காலையில் விக்ரமை தனியாக அழைத்து, விபரமாகப் பேசினார்.

''விக்ரம், தர்ஷினி சொன்னாள் என்பதனாலேயே ஒரு காரியம் செய்யக் கூடாது என்பதில்லை. அவள்



உண்மையிலேயே என்ன நினைத்தாள், அதை எப்படி உன்னிடம் சொன்னாள் என்பது எனக்குத் தெரியாது. அவள் உன் வளர்ச்சியை மனதில் வைத்து கூட சொல்லி இருக்கலாம் என்று திறந்த மனதோடு கேட்க முயற்சி செய்...''

''சித்தி, அவள் சுயமாக யோசித்து முடிவெடுத்தால் பரவாயில்லை. எடுப்பார் கைப்பிள்ளையாக யார் என்ன சொன்னாலும்...''

''மற்றவர் சொல்வதை கேட்கக் கூடாது என்று எந்த சட்டமும் இல்லை. எதற்கு வீண் விவாதம்? அவள் என்ன பிசினஸ் செய்யலாம் என்று சொன்னாள்? அதை முதலில் சொல்லு...''

''மதுராந்தகம் பக்கத்துல பழைய சர்க்கரை ஆலை ஒன்று விலைக்கு வருது. அதை வாங்கலாம் என்று சொன்னாள்...''

''சரி நீ ஏன் அதை வேண்டாம் என்று சொல்கிறாய்?''

''நீங்க புரியாமல் பேசுறீங்க சித்தி. அவள் மதுரையில் இருக்கக் கூடாது என்பதற்காகவே இங்கே தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறாள். இதுக்கு அவங்க மாமா குடும்பமும் சப்போர்ட்...''

''நீதான் புரியாமல் பேசுகிறாய். அவள் சொல்லும் தொழில் உனக்கு ஏற்கனவே பழக்கமான தொழில். அதை எடுத்து செய்வதை குடும்பத்தில் பிரிவினை என்று ஏன் நினைக்கிறாய். தொழில் விரிவாக்கம் என்று நினைக்கலாம் இல்லையா?''

''அவள் அப்படிச் சொல்லவில்லை...''

''நீ எப்படி பேசுவாய் என்று எனக்குத் தெரியாதாடா! ஒழுங்கா அவங்க வீட்டுக்கு போ. ஒரு வாரம் கழித்து மனம் சந்தோஷமான நிலையில் இருக்கும்போது இதைப் பற்றிப் பேசுங்க. சும்மா உங்க அம்மா வயித்துல புளியை கரைப்பதே உன் வேலையா போச்சு. பத்து நாள் இங்கே தங்கு. பேசி முடிச்சு நல்லதா ஒரு முடிவு எடுத்த பிறகு அப்புறமா மதுரைக்கு போகலாம்'', என்று முடித்த இந்தி ராணியை புதிராக பார்த்தாலும், மறுக்க மனம் வர வில்லை.

* * *

அன்று பீச்சில் அவர்களிடம் பேச முயற்சி செய்ய வில்லை என்றாலும், பார்த்த போது தான், 'தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும்' என்ற பழமொழியின் அர்த்தம் ராமலிங்கத்திற்கு புரிந்தது. இவளை பார்க்காமல் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் இருந்த போது வராத அவளின் நினைவுகள் பீச்சில் அவளை தீபக், குழந்தை யோடு பார்த்த பிறகு இந்த இரண்டு நாட்கள் அதிகம் வந்தது.

ஜாடை மாடையாக குழந்தை பற்றிய விபரம் கேட் டால், இந்திராணி வாயைத் திறக்கவே இல்லை. தெரிந்தே செய்தாளோ! புரியாமல் தவிர்த்தாளோ! ஆனால் மேலும் மேலும் சரண்யாவிடம் பேச வேண்டும் என்ற ஆசை பெருக, அவளின் அலைபேசிக்கு அழைத்தார் ராமலிங்கம். அவள் எடுக்கவில்லை.

தீபக்கிடம் நேரிடையாக பேச இன்னும் மனம் வர வில்லை. அதனால் சரண்யாவின் எண்ணுக்கு மீண்டும் மீண்டும் முயற்சி செய்த போது முதல் முறை எடுக்கப் படவில்லை. இரண்டாவது முறை வாய்ஸ் மெயில்



போனது. மூன்றாவது முறை போன் அணைத்து வைக்கப் பட்டு இருந்தது. மூன்று முறை முயன்றும் அவள் எடுக்கவில்லை என்பதில் சற்றே இளகி வந்த அவரின் மனம் மீண்டும் கடினப்பட்டது.

* * *

தீபக்கிடம் எதையும் மறைக்கும் பழக்கம் இல்லாத தால், அன்று மூன்றாவது முறையாக அழைப்பு வந்த உடனே, அவனிடம் சொல்லி விட வேண்டும் என்று காத்து இருந்தாள் சரண்யா. அலுவலகத்தில் கூடுதல் வேலை வந்து படுத்த அவன் வீடு வந்து சேர்ந்த போதே மணி பத்தை தொட்டு இருந்தது.

''ஏன் இவ்வளவு நேரம்? உங்களுக்காக எவ்வளவு நேரமா காத்திருக்கிறேன் தெரியுமா? ஒரு போன் பண்ணி வர நேரமாகும் என்று சொல்லக் கூட முடியாதா?'' என்று அதட்டினாள் சரண்யா.

''நான் ஏழு மணிக்கு போன் பண்ணினேனே. அம்மா எடுத்தாங்க. நீ ஸ்ரீராம்க்கு சாப்பாடு கொடுக்கிறாய் என்று சொன்னதால் உன்னைத் தொந்தரவு செய்யவில்லை. ஏன் என்ன ஆச்சு?'' என்று அக்கறையாக விசாரித்தான் தீபக்.

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல ணும் என்று நாலு மணியில் இருந்து காத்து இருக் கிறேன்...''

''முக்கியமான விஷயமா? அர்ஜென்டான விஷயமா? நீ சொல்வதை கேட்கத்தானே நான் இருக்கிறேன் சரண்'' என்றவன் எல்லோரும் உறங்கி இருந்ததால் அவளை தன் அருகே இழுத்தான்.

''ஷூ! விடுங்க. இந்த வார்த்தை ஜாலத்துக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. ஜர்னலிஸ்ட் என்று என்னிடமே நிரூபிக்கிறீங்களாக்கும்? முக்கியம், அர்ஜெண்ட் ரெண்டும் தான்...'', என்று விலக முயன்றவளின் திமிறல் கணவனிடம் செல்லுபடி ஆகவில்லை.

''சான்சே இல்லை மேடம். நீங்க தான் எல்லாரையும் விட பெரிய ஜர்னலிஸ்ட்...'' என்று மேலும் தொடர்ந்தவன், அவளின் முறைப்பை கண்டதும், விளையாட்டை கை விட்டு, அப்படி அர்ஜெண்ட் என்றால் நீ எனக்கு போன் பண்ணிச் சொல்லி இருக்கலாமே?'' என்றவன் கைகள் அவளின் கன்னத்தை வருட அவன் கையை தட்டி விட்டாள்.

''இது போனில் சொல்லும் விஷயம் இல்லை. ஆபீசில் உங்க வேலையை கெடுக்கக் கூடாதே என்று கஷ்டப்பட்டு பல்லை கடித்து கொண்டு காத்திருந்தேன் தெரியுமா?''

''ஓகே... சாரி. இப்ப சொல்லு. அதென்ன நீ என்னிடம் சொல்ல துடிக்கும் அந்த முக்கியமான அவசரமான விஷயம்?'' என்று கேட்டவன் கைகள் அவளை மீண்டும் தன் அணைப்புக்குள் கொண்டு வந்து தன் தோளில் சாய்த்து கன்னத்தை வருடியது.

''அப்பா இன்று எனக்கு மூன்று முறை போன் பண்ணினார்'' என்று அண்ணாந்து அவனின் முகத்தை பார்த்தபடி சொல்லி முடிக்கும் முன்பே அவளை அணைப்பில் இருந்து விலக்கி எதிரே நிறுத்தி, அவளின் தோளை பற்றி உலுக்கினான்.

''எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம்? இவ்வளவு சாவகாசமா சொல்கிறாய்? அம்மா கூட சொல்லலை. அவங்களுக்குத் தெரியாதா? என்ன பேசினார்? நீ என்ன சொன்னாய்? ஒழுங்கா பேசினாயா? நல்லா இருக்காரா? வீட்டுக்கு கூப்பிட்டாயா?'' என்று மூச்சு விடாமல் கேள்விகளை அடுக்க, கைகளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு அவனையும் அவன் பரபரப்பையும் வேடிக்கை பார்த்தாள் சரண்யா.



''ஹேய்! என்ன நான் பாட்டுக்கு பேசிட்டே இருக்கேன். நீ கை கட்டி வேடிக்கை பார்த்தால் என்ன அர்த்தம்? பதில் சொல்லும்மா. மாமா பேசிய போது போனில் நீ பேசினாயா இல்லையா?'' என்று மீண்டும் அதட்ட அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''ஏன் சரண்யா...?'', என்று கேட்ட தீபக்கின் குரலில் அளவு மிஞ்சிய வருத்தம் இருந்தது.

''எனக்குப் பேச பிடிக்கலை தீபக்...'', என்று அவள் விளக்கம் சொல்ல ஆரம்பிக்க, வருத்தத்துடன் சோபாவில் சரிந்து அமர்ந்தான். அதன் பின் தன்னிலை விளக்கமாக அவள் சொன்னது எதுவுமே அவன் காதுகளை தாண்டி உள்ளே போனதாகத் தெரியவில்லை. இருபது நிமிடமாக தீபக் ஒன்றுமே பேசவில்லை.

''என்ன தீபக், நான் சொன்னது உங்கள் காதில் விழுதா இல்லையா? நான் செய்ததில் உங்களுக்கு உடன்பாடு இல்லையா? சொல்றது பிடிக்கலையா? அதையாவது வாயைத் திறந்து சொல்லுங்களேன்...'', என்று சொல்லியும் அவனிடம் இருந்து எந்த பிரதிபலிப்பும் இல்லை.

''என்ன தீபக், உடம்பு சரி இல்லையா?'' என்று சோபாவில் சாய்ந்து இருந்த தீபக்கின் அருகில் வந்து கேட்டாள் சரண்யா.

''தலைவலிக்குது சரண். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தால் சரியாய் போய் விடும். எனக்கு சாப்பாடு வேண்டாம். ஸ்ரீராம் தூங்கிவிட்டானா?''

''தூங்கிட்டான். ஆபீசில் இருந்து வரும் போதெல்லாம் நல்லா தானே இருந்தீங்க? அதென்ன திடீர் தலைவலி? சாப்பிடாமல் படுத்தால் தலைவலி எப்படி போகும்? வாங்க நானே தரேன்'' என்று அவன் கை பற்றி எழுப்பினாள்.

''சொன்னால் கேளு சரண். வேண்டாம்னா விடேன்.''

''சாப்பிட மாட்டேன் என்று நீங்க அடம் பிடிப்பீங்க, அதை நான் ஏன் என்று கேட்கக் கூடாதா? என்னமோ பெரிசா கதை அளந்தீங்க. இதான் நான் சொல்வதை கேட்கும் அழகா? நீங்க சாப்பிடாமல் வருவீங்க என்று நானும் உங்களுக்காக காத்து இருக்கிறேன். நான் சாப்பிட்டேனா என்று கூட விசாரிக்காமல் சாப்பாடு வேண்டாம் என்றால் என்ன அர்த்தம்?'' என்று அவள் கோபத்தில் பொறும, அவன் எழுந்தான்.

''சரி வா, சாப்பிடலாம்...'' என்று டேபிளுக்கு நடந்தான்.

''நான் சாப்பிடுவது இருக்கட்டும். நீங்க ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? ஆபீஸில் ஏதாவது பிரச்னையா?'', என்று விசாரித்தபடி அருகில் அமர்ந்து உணவு பரிமாறினாள்.

''ஆபீஸில் ஒண்ணும் பிரச்னை இல்லை சரண். நீ சொல்வதை கேட்கணும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் மனசில் என்ன நினைக்கிறேன் என்று எப்



போதாவது நீ நினைத்துப் பார்ப்பாயா?'' என்று மெல்ல கேட்டான் தீபக்.

''இத்தனை நாள் இல்லாமல் இன்று புதுசா உங்களுக்கு சந்தேகம் வருகிறது? என்ன விஷயம் தீபக்?''

''ஏற்கனவே நீ உங்க அம்மா உன்னை பார்க்க இரண்டு முறை வந்த போது நடந்து கொண்டதே எனக்குப் பிடிக்கவில்லை. அப்படி இருக்கும் போது, இப்போது மாமா உன்னைப் பார்க்கப் பேச விரும்புகிறேன் என்று கோடி காட்டும் போது நீ தவிர்க்க நினைப்பதில் எனக்கு சம்மதம் இல்லை'' என்று அழுத்தமான குரலில் சொன்னான் தீபக்.

''நான் நினைப்பது எல்லாம் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும் என்று பீற்றி கொள்வீர்களே? அப்பாவை நான் ஏன் தவிர்க்கிறேன் என்றும் உங்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டுமே?'' என்று கோபமாக கேட்டாள்.

''முன்பு என்னைப் பற்றி ஏதாவது தவறாக சொல்லி இருக்கலாம். அதற்காக அவரை நீ இப்போது தவிர்ப்பது சரி இல்லை என்பது தான் என் வாதம்'' என்று தன் கருத்தை தெளிவாக வலியுறுத்தினான்.

''இதே போன் காலை அவர் உங்களுக்கு பண்ணி இருந்தால், அவருடைய மனம் மாறி இருக்கிறதோ என்ற எண்ணம் எனக்கு வந்து இருக்கலாம். அன்றே, அந்த வீட்டில் இருந்து கிளம்பும் போதே, எங்களை சந்தோஷமாக அழைத்தால் வருகிறோம் என்று தான் சொன்னேன். அந்த 'எங்களை-யை' அவர் கவனிக்கவில்லை என்றால் நான் ஒன்றும் செய்ய முடியாது'' என்று அவனுக்கு மேல் அழுத்தமாக பதில் சொன்னாள் சரண்யா.

''இது விதண்டாவாதம். அப்படியே வாதத்திற்காக நீ சொல்வதை ஒத்து கொண்டாலும், அது மாமாவிற்கு மட்டும் தான் பொருந்தும். உங்க அம்மாவை போட்டு ஏன் வதைக்கிறாய்? அவங்க என்ன பண்ணினாங்க?'' என்று கேட்டான்.

''அவங்க ஒண்ணுமே பண்ணவில்லை. அதுதான் என்னுடைய வாதமும். அவங்க ஏதாவது பண்ணி இருக்க வேண்டும்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு சொன்னாள் சரண்யா.

''எங்கே என்னைப் பார்த்து இதே பதிலைத் திருப்பிச் சொல்லு. உங்க அம்மா மேலே உனக்கு கோபமா?'' என்று அவளின் முகவாயை பற்றி திருப்பி சந்தேகமாக கேட்டான் தீபக்.

அவனின் நேர் பார்வையை சந்திக்க முடியாமல் தவித்தவள், ''இல்லை, வருத்தம் மட்டும்தான்'' என்று மெல்ல முணுமுணுத்தாள்.

''ஏற்கனவே இருபத்தி ஐந்து ஆண்டுகளாக உங்க தாத்தாவுக்கும் அப்பாவுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் அலைக்கழிக்கப் பட்டு இருக்காங்க. இப்ப இரண்டு வருஷமா உனக்கும் மாமாவுக்கும் இடையில் அல்லாடுறாங்க. அவங்களை பார்த்தால் உனக்கு பாவமா இல்லையா? ஏண்டா அப்படி பண்ணினாய்? அவங்க மனசு எவ்வளவு கஷ்டப்படும்? அதை கொஞ்சம் நினைத்துப் பார்த்தாயா?'' என்று வருத்தமான குரலில் கேட்டான் தீபக்.

''நீங்க அவங்க இங்கே அஞ்சு நிமிஷம் மனசு கஷ்டப் படுவதை மட்டும் பார்க்கறீங்க தீபக். நான் அவங்க கிட்ட



சந்தோஷமா பேசினால், அதற்குப் பிறகு திரும்பி போய் அதே வீட்டில், அப்பா மேல் கோபத்தோடு, அவர்கள் இருக்க வேண்டிய கூடுதல் நேரத்தை பார்க்கிறேன். அப்ப அப்பாவின் செயல்கள் நியாயமற்றதாகத் தெரியும். இப்போ அவங்களுக்கு என் மேலும் வருத்தம் இருக்கும். ரெண்டு பேருக்கும் அவங்கவங்க கொள்கை என்று இருப்பாங்க. அவங்க மனசு கஷ்டம் இதுல தான் கம்மியா இருக்கும் தீபக். நான் அவங்களுக்காக தான் அப்படி செய்தேன்'' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவள் கண்ணில் நீர் வழிந்தது.

அவளின் கண்ணீரை துடைத்து தன் தோளில் சாய்த்து கொண்டவன், ''வருத்தப்படாதே! பொறுத்தது பொறுத்தாச்சு இன்னும் கொஞ்ச நாள், எல்லாம் சரியாகி விடும். சீக்கிரமே உங்க அப்பாவும் நம்மளை புரிஞ்சுப் பாங்க'' என்று சொன்ன தீபக்கின் விழிகளில் ஈரம் கோர்க்க, அவள் பதறினாள்.

''ஹேய், இதென்ன இதுக்கு போய் கண்ணில் தண்ணி? இனிமேல் அப்பா என்னிடம் பேச முயன்றால், நான் தவிர்க்கவில்லை. ஆனால் உங்களைப் பற்றித் தரக் குறைவாகப் பேசினால், அப்புறம் பேச்சை தொடர்வது சாத்தியம் இல்லை சொல்லிட்டேன்'' என்று அவன் கன்னத்தில் தட்டினாள் சரண்யா.

அவளின் வார்த்தையும், அந்த தொடுகையும் அவனை இளக்கியது. தன் மேல் சாய்ந்தவளை மென்மையாய் அணைத்து, ''சரி சரண் என்னோட டென்ஷனை உன் மேல் ஏற்றி விட்டேனா?'' என்று கேட்டான் தீபக்.

''அதெல்லாம் இல்லை. நீங்க அப்செட் ஆனால், நான் என்ன ஆவேன் என்று நினைத்துப் பார்த்தேன்.

பயம் வந்து விட்டது. நீங்க சந்தோஷமா இருந்தால் தானே நான் சிரிக்க முடியும்'' என்று கவலையோடு இழுத்தவளை கன்னத்தில் முத்தமிட்டு, ''ஐ லவ் யு சாரும்மா'' என்று அணைத்து கொண்டான்.

''ஹேய் உங்க சாரும்மாவை நான் கேட்டு வருஷம் ஆக போகிறது தெரியுமா? வளைகாப்பு அன்னிக்கு சொன்னீங்க என்று நினைக்கிறேன்...'' என்று காதில் கிசுகிசுத்தாள் சரண்யா.

''நான் எப்ப சந்தோஷமா இருக்கேனோ அப்போதெல்லாம் அது வரும்'' என்று அவளின் கன்னத்தை மெல்ல கடித்தபடி கொஞ்சினான் தீபக்.

''ம்கூம், உங்க மாமியார் மேலே வச்ச பாசத்தில் பாதியை மனைவி மேல் வச்சு இருந்தால் இந்த இடைவேளை விழுந்து இருக்குமா?'' என்று ஊடினாள் சரண்யா.

''இடைவெளி வேண்டாம் என்று சொல்லிக்கொண்டே தள்ளி போனால் எப்படி? கல்யாணம் முடிந்த மறுநாள் நான் சொன்னது சரிதானே? சரண்யா மேடம் சொல்வது ஒண்ணு, செய்வது ஒண்ணு... ஆஆஆ... கிள்ளாதேடீ... வலிக்குது'' என்று அலறியவன், மனைவியின் குறும்பிற்கு ஏற்ற தண்டனையை கொடுக்கவும் மறக்கவில்லை.

## 24

தன்னை சொந்த பிள்ளை போல எண்ணி, அவ்வப்போது தன்னுடைய நல வாழ்க்கைக்கான யோசனை சொல்லும் சித்தி சித்தப்பாவின் கருத்தினை ஏற்று அந்த



மூன்று தினங்கள், தர்ஷினியிடம் பேசியதில், அவளுடைய பேச்சில் முதிர்ச்சியின்மை தெரிந்தது. ஆனால் விகல்பமோ, தன்னைக் குடும்பத்தில் இருந்து பிரிக்க வேண்டும் என்ற சுயநலமோ பெரிதாகத் தெரியவில்லை என்பதால், சித்தி சொன்னது சரியாக இருக்குமோ என்ற எண்ணம் தோன்றி மெல்ல வலுப்பட்டது.

அது பற்றி தனியாக தொந்திரவின்றி ஆலோசனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், பீச்சில் கண்மூடி படுத்து இருந்த விக்ரமை, ''மாமா...'' என்று அவனின் சிகையை வருடிய இளம் கரத்தை உணர்ந்து கண் விழித்தவன் எழுந்து அமர்ந்தான்.

அருகில் சின்ன குழந்தை. ஒரு வயது இருக்கலாம். ''ஹேய், யாருடா குட்டி நீ? உன் பேரு என்ன?'' என்று சிரிப்போடு விசாரித்தான்.

''ஸ்ரீராம்...'', என்ற அவனின் பதிலில் ஒரு கணம் தூக்கி வாரி போட்டது. குடும்பத்தில் மூத்த குழந்தைக்கு தாத்தா பெயர் வைக்கும் பழக்கம்... ஸ்ரீராம் என்றால் சரண்யாவின் பையன்தானா? ப்ச்! உடனே சமாளித்து, மறுப்பாக தலையை உலுக்கி விட்டு கொண்டான்.

''யார் கூட வந்தீங்க...'' என்று கேட்டபடி அவனை தூக்கிக் கொண்டு எழுந்தவன் சுற்றிலும் பார்த்தான். நூறு மீட்டர் சுற்றளவில் யாரும் அவனைத் தேடுவது மாதிரித் தோன்றவில்லை.

''ஸ்ரீராமோட அம்மா பேர் என்ன?'' என்று கேட்டு முடிக்கும் முன்பு 'அ.. ம்.. மா...'', என்று அழைத்த அவன் குரல் அழுகைக்கு மாறத் தொடங்கியது. இருட்டில் அம்மா இருக்கும் திசையை அனுமானிக்க முடியவில்லை என்பதால், அழுகை பெரியதாக மாறியது.

''ஹே... ய்! நீ செல்லக் குட்டி இல்ல? அழக்கூடாது தங்கம். மாமா உன் அம்மாவிடம் கொண்டு போய் விடுறேன். அம்மா பேர் சொல்லு'' என்று கன்னத்தில் தட்டி சமாதானப் படுத்தியபடி விசாரித்தான் விக்ரம்.

''ச... யா...'' என்று அவன் அழுகையோடு உச்சரித்த விதம் சாயா என்று அவனுக்கு தோன்ற, உதட்டு பிதுக்கலுடன் சுற்றிலும் பார்வையை ஓட விட்டான். சற்று தூரத்தில், குழந்தையின் அழுகை சத்தம் கேட்டு ஐஸ்க்ரீம் வண்டியின் அருகில் நின்று இருந்த சரண்யா ஓடி வந்தாள்.

''டேய் ஸ்ரீராம், அழதே கண்ணு, அம்மா வந்துட்டேன் பாரு. அப்பா எங்கேடா...'' என்று கேட்டபடி, அவனை தூக்கி நின்ற மனிதனுக்கு நன்றி சொல்ல நிமிர்ந்தவள், ஒரு கணம் திகைத்து போனாள்.

''வி... க்... ர... ம்...'' என்று மலர்ந்த முகத்துடன் பேச வந்தவளை அவனின் கடுமையான குரல் தடுத்து நிறுத்தியது.

''கொஞ்சமாவது அறிவிருக்கா உனக்கு? இருட்டில் சின்ன குழந்தையை தனியா விட்டுட்டு எங்கே போயிட்ட. குழந்தையை பத்திரமா பார்த்துக் கொள்ள முடியாவிட்டால், எதுக்கு உங்களுக்கு குழந்தை...?''

''போதும் வாயை மூடு. யாரும் உன்னிடம் வந்து என்னோட குழந்தையை பார்த்துக் கொள்ளச் சொல்லி கெஞ்சவில்லை. தீபக் எங்கே போயிட்டீங்க?'' என்று அவள் போட்ட அதட்டலில் சற்று தொலைவில் இருந்து ஓடி வந்தவன் முகத்தில் வருத்தமிருந்தது.

இவன் தனியாக படுத்து இருப்பதை பார்த்து அவன் தான் விக்ரமிடம் சென்று பேச சொல்லி குழந்தையை



அனுப்பினான். அதை இருவருமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இவ்வளவு கோபமாக பேசுகிறார்களே என்று எண்ணியபடி ஓடி வந்து சரண்யாவின் தோளில் கை வைத்து அழுத்தினான்.

''ஷ்! சரண்யா விடு, நான்தான் குழந்தை இங்கே தனியாக வந்ததை கவனிக்கலை. சாரி, அவருடன் சண்டை போடாதே'' என்று அவளை இழுக்க முயன்றான். மேலும் கடுமையான வார்த்தைகள் இருவரும் பிரயோகித்து விடக் கூடாதே என்ற பயம் இருந்தது.

தோளிலிருந்த ஸ்ரீராமின் முதுகை வருடியபடி, தீபக்கின் கையை உதறியவள், விக்ரமை முறைத்தபடி தீபக்கிடம் பேச ஆரம்பித்தாள்.

''நீங்க கவனிக்கலையா? இதை என்னை நம்ப சொல்றீங்களா? குழந்தை இங்கே வந்ததை பார்த்து கொண்டே இருந்தேன் என்று சொல்லுங்க, நம்புகிறேன். இல்லை நானே மாமாவிடம் போய் பேசு என்று அனுப்பி வைத்தேன் என்று சொல்லுங்க, நம்புகிறேன். அதை விட்டுட்டு கவனிக்கலை என்று சொல்லி , இவனிடம் நீங்க திட்டு வாங்குவதை என்னால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. நீங்க சொல்றதை, உங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் தப்புத் தப்பாக அபிப்ராயம் வளர்த்து வச்சு இருக்கும் இந்த பெரிய மனுஷன் வேண்டுமானால் நம்பலாம். என்னால் நம்ப முடியாது'' என்று அழுத்தமாக சொல்லி விட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்த சரண்யாவை வாய் மூடாமல் பார்த்து கொண்டு நின்றான் விக்ரம்.

''சாரி விக்ரம், நான் இதை எதிர் பார்க்கவில்லை, நான் ஒன்று நினைத்தால் அது ஒண்ணு நடக்குது. சாரி...''

என்று சொல்லிவிட்டு வேகமாய் முன்னால் சென்று கொண்டு இருந்த சரண்யாவை பிடிக்க ஓட்டமும் நடையுமாக சென்றான் தீபக்.

''அடேயப்பா! கணவன் மேல் எவ்வளவு நம்பிக்கை? அவனே சொன்னாலும் இவள் ஒத்து கொள்ள மாட்டேன் என்கிறாள்'' என்று விக்ரமிற்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் சொன்ன இரண்டு வாக்கியங்கள் அவனின் காதில் ஒலித்தது.

''..... குழந்தை இங்கே வந்ததை பார்த்துக் கொண்டே இருந்தேன் என்று சொல்லுங்க நம்புகிறேன். இல்லை நானே மாமாவிடம் போய் பேசு என்று அனுப்பி வைத்தேன் என்று சொல்லுங்க, நம்புகிறேன்...''

ஒருவேளை அப்படி இருக்குமோ? அவனைப் பார்த்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலத்திற்கு பிறகு, முதன் முறையாக அவனிடம் பேச வேண்டும் போல தோன்றியது. எப்படி இந்த அதட்டல் ராணியை, சமாளிக்கிறாய் என்று கேட்க வேண்டும் போல இருந்தது. எப்படி அவனால் இரண்டே மாதத்தில் சரண்யாவின் மனதில் தனி இடம் பிடித்து, திருமணம் செய்து கொள்ள முடிந்தது?

பிறந்த வீட்டில் எல்லோரும் கோபமாக இருக்கிறார்கள் என்ற வருத்தம் சரண்யாவிற்கு இன்று வரை இருக்கும்போதும், அதை ஒதுக்கி, ''எல்லாம் உன்னால் தானே?'' என்று அவனைத் திட்டத் தோன்றாமல், அவனை இந்த நிமிடம் கூட தாங்கிப் பேசுகிறாள் என்றால், அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

சரண்யா தீபக்கின் மேல் வைத்த அந்த ஆழமான அழுத்தமான நம்பிக்கையை எண்ணி வியந்தபடியே



காருக்கு வந்த விக்ரமின் கண்ணில், சற்று தொலைவில், பைக்கில் தீபக் அமர்ந்து இருக்க, கையில் குழந்தையை வைத்து கொண்டு சரண்யா அவனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருந்தது பட்டது.

அவர்களின் வார்த்தைகள் காதில் விழவில்லை என்றாலும், பார்த்து கொண்டு இருக்கும்போதே, அவன் சொன்ன ஒரே வார்த்தையில், அவள் அவனின் முதுகில் ஒரு அடி வைத்து விட்டு, குழந்தையை அவனுக்கு முன்னால் அமரவைத்து விட்டு பின்னால் ஏறியவள், அவனை நெருங்கி அமர்ந்து, இடுப்பை சுற்றி வளைத்து முதுகில் சாய்ந்து கொள்ள, அவர்கள் போன காட்சி அவனின் முகத்தில் புன்னகை பூக்க வைத்தது.

சில வினாடிகள் முன்பு பார்த்த போது கூட சரண்யாவின் முகத்தில் கோபம் கொப்பளித்தது. ஆனால், அதற்குள் சிரிக்க வைத்து விட்டானே என்று எண்ணியபடி, காரில் ஏறி கிளம்பினான்.

இதுவரை இவனைப் பற்றி தான் எண்ணி இருந்தது சரி இல்லையோ என்ற சந்தேகம் முதன் முறையாக தோன்றியது. சித்தி சொல்வது மாதிரி ஒவ்வொரு நாணயத்துக்கு மறுபக்கம் உள்ளது என்பதை பல சமயங்களில் உணரவில்லை.

இவனின் மறுபக்கத்தை அறிந்து கொண்டால் என்ன என்ற எண்ணம் தோன்றி மெல்ல மெல்ல வலுவடைந்தது. மறுநாள் காலை அவனை ஹிந்து பத்திரிகை அலுவலகத்தில் கொண்டு வந்து நிறுத்தியது.

அலுவலகத்திற்கு வந்து விட்டாலும், அங்கே அவனை என்ன என்று கேட்டு விசாரிப்பது என்று தெரியவில்லை.

அவன் இங்கே வேலை செய்கிறான் என்று தெரிந்ததே தவிர, என்னவாக இருக்கிறான் என்பது தெரியவில்லை.

போட்டோக்ராபரா? நிருபரா? சப் எடிட்டரா? ப்ரீலான்ஸ் ரைட்டரா? தினமும் அலுவலகம் வருவானா? வெளி வேலையா? அவனுடைய வேலை நேரம் என்ன? ஒன்றுமே தெரியவில்லை. அவன் காரில் இருந்து இறங்கி நின்று சுற்றிலும் பார்த்து கொண்டு இருக்கும்போதே, ராஜேந்திரன் அருகில் வந்தார்.

''ஹேய் விக்ரம், நீ இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க? உள்ளே வர வேண்டியதுதானே? வா...'', என்று அழைத்தார்.

''ஹலோ அங்கிள், எப்படி இருக்கீங்க? தீபக்கை பார்க்க வந்தேன்'' என்று சரளமாகப் பேசியபடி, அவரைப் பின் தொடர்ந்து சென்றாலும், அவரிடம், தீபக் வருவானா'' என்று விசாரிக்க முடியவில்லை.

அங்கிளின் அறையில் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கும் போது, கதவை தட்டி அனுமதி கேட்டு உள்ளே வந்த தீபக், அவனின் தோளை லேசாக தட்டி, ''சாரி விக்ரம் ரொம்ப நேரமா காத்து இருக்கிறாயா? ஒரு நியூஸ் கவரேஜ் அவசரமா வந்து விட்டது. கொஞ்சம் லேட் ஆகி விட்டது'' என்று இயல்பாக சொல்லியபடி, கையோடு கொண்டு வந்த கவரை எடிட்டரிடம் கொடுத்தான்.

தீபக்கின் பேச்சை கவனித்த விக்ரமிற்கே சிரிப்பு வந்து விட்டது. நானே நடிகன், இவன் மகா நடிகனா? இவனைப் பார்க்க நான் வருகிறேன் என்று எப்போது இவனிடம் சொன்னேன்? நல்லா நடிக்கிறானே? சிரிப்பை அடக்கிய படி எழுந்தான்.



''சரி அங்கிள் நான் கிளம்புகிறேன். அப்புறம் பார்க்கலாம்'' என்று சொல்லி விடைபெற்று தீபக்கிடம் திரும்ப, ''வெளியே போய் பேசலாம்'' என்று அவசரமாக சொன்ன தீபக், அவனை முதுகில் கை வைத்து தள்ளாத குறையாக வெளியே அழைத்து வந்தான்.

''ஐ ஆம் சாரி, சாருக்கு நம்ம கோப தாபம் தெரியாது. நான் சொல்லவில்லை. சரண்யாவும் வந்தால் சாதாரணமா பேசி விட்டு போய் விடுவாள். அதுதான் அப்படி பேசி விட்டேன். உள்ளே வந்த பிறகு உங்களிடம் பேசாமலும் இருக்க முடியாது. தப்பா எடுத்துக்காதீங்க...'' என்று மன்னிப்பு கோரும் பாவனையில் பேச, தீபக் கையே பார்த்தான்.

''என்ன அப்படி பார்க்கறீங்க? நீங்க என்னை பார்க்க வந்ததா சொன்னீங்க என்று எடிட்டர் சொன்னாராம். அதனால் தான் வந்த உடனே தேடி வந்தேன். என்ன விஷயமா பார்க்க வந்தீங்க? நிக்க வச்சே பேசிட்டு இருக்கேன் பாருங்க. உட்காரலாமா? என்ன சாப்பிடுறீங்க?'' என்று கேள்விகளை அடுக்க விக்ரம் புன்னகை செய்தான்.

''யு ஆர் அமேசிங் மேன்'' என்று புன்னகையோடு சொல்ல தீபக்கிற்கு தன் கண்களையும் காதுகளையும் நம்புவதற்குச் சிரமமாக இருந்தது.

அவனின் பாவனையில் இருந்து அவனின் எண்ணத்தை ஊகித்தவன், லேசாக அவன் கைகளில் கிள்ளி, ''வலிக்குதா?'' என்று சிரிப்போடு கேட்டான் விக்ரம்.

''இல்லை, ஆனாலும் சந்தேகம் தீர்ந்து விட்டது. சொல்லுங்க. நான் என்ன செய்யணும்?''

''நீங்க எப்போது ப்ரீ என்று சொல்லுங்க, வெளியே போய் பேசலாம்.''

''விக்ரம் கேட்டால் எப்போதும் ப்ரீதான். இப்போதே அனுமதி கேட்டு வருகிறேன்'' என்று திரும்பியவனை தடுத்து நிறுத்தினான் விக்ரம்.

''அவசரம் ஒண்ணும் இல்லை. மதியமோ, இரவோ, உங்க வேலையை முடித்து விட்டுப் போகலாம். சில மணி நேரங்கள் காத்து இருப்பதில் எனக்குப் பிரச்னை இல்லை.''

''எனது குடும்பமும், அதன் சந்தோஷமும் என் வேலையை விட எனக்கு முக்கியமானது. வாழ்க்கைக்கு தேவையான பணத்தை இருந்த இடத்தில் இருந்தே என்னால் சம்பாதிக்க முடியும். அதற்கு இந்த வேலை அத்தியாவசியம் இல்லை. இந்த வேலையில் இருந்து வரும் சம்பளத்தை போல மூன்று மடங்கு. நான் ஓய்வு நேரத்தில் செய்யும் என்னுடைய போட்டோக்ராபி தொழிலில் சம்பாதிக்கிறேன். இன்றைய சூழலில், உங்களுடன் பேசுவதை விட முக்கியமா எந்த வேலையும் எனக்கு இல்லை. இரண்டே நிமிடத்தில் வருகிறேன்'' என்று அவன் கையை அழுத்தி விட்டு போனான் தீபக்.

தீபக் சொன்ன வார்த்தைகள் விக்ரமை தாக்கியது. உண்மை தான் அடையாரில் மூன்று கோடி பெறுமானமுள்ள நான்கு படுக்கை அறைகளை கொண்ட தனி பங்களா அவனுக்கு சொந்தமாக இல்லை. நுங்கம்பாக்கத்தில், அவர்களுக்கு உரிமை இல்லாத, அப்பாவுக்காக அரசாங்கம் கொடுத்த ஆயிரத்தி ஐநூறு நூறு சதுர அடி பரப்பளவுள்ள வீட்டில், மனசுக்கு பிடித்த மனைவி, குழந்தையோடு, நினைத்ததை எல்லாம் செய்து, பெற்றோர்களுடன் சந்தோஷமாக இருக்கிறான்.



பெருமூச்சோடு காத்து இருக்கும் போது வந்த தீபக், ''போகலாமா?'' என்று கேட்டபடி வந்தான். தீபக்குடன் வெளியே வரும் போது, ''நீங்க வண்டியில் வரீங்களா? அல்லது என்னுடன் காரில்...'' என்று நிறுத்தினான் விக்ரம்.

''காரிலேயே போகலாம். நீங்க என்னை திருப்பி இங்கே விட வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. நான் பார்த்து கொள்கிறேன். எங்கே போக போகிறோம்?'' என்று விசாரித்தான் தீபக்.

''ஏதாவது காபி ஷாப் போகலாம். கொஞ்சம் பேசணும். இரண்டு மணி நேரத்துல திரும்பி வந்து விடலாம். ஒண்ணும் பிரச்னை இருக்காதே?'' என்று கேட்டான் விக்ரம்.

''முழு நாளும் அனுமதி சொல்லியாச்சு. உங்க வேலை முடிந்தால், நேரே வீடு தான். அண்ணன் தங்கை ரெண்டு பேருமே ஒரே மாதிரி இருக்கீங்க. ஒரு முடிவு எடுப்பதற்குள், ஆயிரம் கேள்வி கேட்கறீங்க? நாங்க எல்லாம் ஆண்டவன் விட்ட வழின்னு போயிட்ட இருப்போம்'' என்று மெல்லச் சிரித்தான்.

அதுவரை எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தயங்கி கொண்டு இருந்த விக்ரம் காரை ஓரமாக நிறுத்தி அவன் புறம் நன்றாக திரும்பி அமர்ந்து, ''சரண்யா சந்தோஷமாக இருக்கிறாளா?'' என்று விசாரித்தான்.

அவன் என்ன கேட்கிறான் என்று பதட்டத்துடன் காத்து இருந்தவனுக்கு, அவன் சரண்யாவின் சந்தோஷம் பற்றி விசாரித்த உடனே, சிரிப்பு வந்தது. அவன் சீரியஸாக பேசிக் கொண்டு இருக்கும் போது சிரிப்பது

நன்றாக இருக்காது என்பதால், அவசரமாக பார்வையை வெளிப்புறம் திரும்பினான்.

அவன் முகத்தில் பொங்கி வழிந்த சிரிப்பை பார்த்த உடனே, காரணம் புரியா விட்டாலும், அழுத்தம் குறைந்து புன்னகை அரும்பியது. ''என்ன இவ்வளவு சீக்கிரம் விசாரித்து விட்டேனே என்று சிரிக்கிறீங்களா?'', என்று புன்னகையோடு கேட்டான் விக்ரம்.

''இதை நீங்க சரண்யாவிடம் அல்லவா கேட்க வேண்டும் என்று யோசித்தேன். நீங்க என்னவோ சொல்லப் போறீங்க என்று நான் டென்ஷனோட இருந்தேன். இதை கேட்டதும் சிரிப்பு வந்து விட்டது அவ்வளவு தான்.''

''சரி அதை அவளிடம் கேட்டுக் கொள்கிறேன். நீங்க சந்தோஷமா இருக்கீங்களா? இதுக்கு பதில் நீங்க தான் சொல்லணும்'', என்று அடுத்த கேள்வியை கேட்டான்.

''நீங்க எங்க வீட்டுக்கு வந்து போவதில்லை என்ற ஒரு வருத்தத்தை தவிர வேறு எந்த சங்கடமும் இல்லை. சின்னச் சின்ன சண்டைகளோடும் உடனடி சமாதானங்களுடனும் நாங்க இரண்டு பேருமே சந்தோஷமா இருக்கிறோம். நீங்க எப்படி இருக்கீங்க? தர்ஷினி நல்லா இருக்காங்களா? குழந்தை ஏதாவது...'', என்று இயல்பாக தீபக் விசாரிக்க, விக்ரமின் இதழ்களில் இருந்த புன்னகை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, முகம் இறுக்கத்திற்கு போனது.

## 25

விக்ரமின் முகம் இறுகிய விதத்தை பார்த்த தீபக்கிற்கு குழப்பமாக இருந்தது. தான் ஏதாவது தப்பாகத்



கேட்டு விட்டோமா? எந்த ஒரு உறவினரையும் ஒரு இடைவெளிக்குப் பிறகு பார்க்கும் போது கேட்க கூடிய சாதாரண கேள்விகளை தானே கேட்டோம்? இவ்வளவு நேரம் நன்றாகத் தானே பேசிக்கொண்டு இருந்தான்? என்ன ஆச்சு?

''நான் உங்க மனசு காயப்படும்படி ஏதாவது தப்பா கேட்டு இருந்தால் சாரி..'' என்று வருத்தமான குரலில் சொன்னான் தீபக்.

''அப்படி எல்லாம் இல்லை. நீங்க சாரி சொல்ல வேண்டியதில்லை'', என்று நிமிர்ந்து அமர்ந்தான்.

''வீட்டில் எல்லாரும் நல்லா இருக்காங்க தானே? ஏதாவது பிரச்னையா? நான் ஏதாவது செய்ய முடியுமா?''

''எல்லோரும் நல்லா தான் இருக்காங்க'', என்றவன், ஸ்டியரிங் வீலில் விரல்களால் தாளமிட்டபடி அமைதியாக இருந்தான். அவன் சொன்ன விதத்திலேயே ஏதோ பிரச்னை இருப்பதை உணர முடிந்தது. ஆனால் அவனாகச் சொல்லாத போது அதை கிளறவும் தீபக்கிற்கு விருப்பம் இல்லை.

''எந்தப் பிரச்னையுமே நாம் நினைக்கிற அளவுக்கு பெரிசு இல்லை மிஸ்டர் விக்ரம். இன்னொரு விஷயம். எல்லாப் பிரச்னைக்குமே நிச்சயமா ஒரு தீர்வு இருக்கும். நீங்களே ஏதோ பிரச்னையில மனசு குழம்பிட்டு இருக்கும் போது நான் நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டு நேற்று குழந்தையை உங்களிடம் அனுப்பி சரண்யாவுடன் வாதம் செய்ய வைத்து விட்டேன் சாரி'', என்று வருத்தமாகச் சொன்னான் தீபக்.

"இதென்ன பொசுக்கு பொசுக்குன்னு வாக்கியத்துக்கு மூணு சாரி சொல்றீங்க? இப்படிதான் எல்லோரிடமும் பேசுவீங்களா?"

"ஒவ்வொருத்தருக்கும் ஒரு கொள்கை. அவங்கவங் களுக்கு ஒரு நியாயம். நமக்கு சரி என்று படுவதே அடுத்தவங்களுக்கு சரி என்று பட வேண்டிய அவசியம் இல்லை. அதனால் எதிரே இருப்பவங்க மனசு காயப் படாமல் பேசணும் என்று நினைக்கும் ஆள் நான். முடிந்த வரை அதைக் கடைப்பிடிக்க முயற்சி செய்கிறேன்.

"எவ்வளவு பெரிய விளக்கம்? நல்ல பாலிசிதான். குடும் பத்தில் இந்த பாலிசியை கடைபிடித்தால் சுமுகமாக ஓடுமே?", என்றவன் குரலில் யோசனை இருந்தது.

"தர்ஷினி... உங்களோடு..." என்று சந்தேகமாக இழுத் தான்.

"என்னோடுதான் இருக்கா ஏன்?" என்று அவசரமாக இடை மறித்தான் விக்ரம். தன் குடும்ப விஷயத்தை வெளியே சொல்ல அவனுக்கு விருப்பமில்லை.

"நீங்க கொஞ்சம் வருத்தம் பேசிய மாதிரி... ப்ச்! அதை விடுங்க. நாம் வேறே ஏதாவது நல்ல விஷயமா பேச லாம்..." என்று உடனடியாக அதை அப்படியே விட்டு விட்டு வேறு விஷயத்திற்கு தீபக் வந்ததும் விக்ரமின் மனதை கவரவே செய்தது.

"பையனுக்கு ஸ்ரீராம் என்று பேர் வைத்து இருக் கிறீங்க. சித்தப்பாக்குத் தெரியுமா?" என்று குறுகுறுப் புடன் கேட்டான் விக்ரம்.

"அத்தைக்குத் தெரியும்..." என்று அவன் சொன்ன விதம் அவன் புருவத்தை உயர்த்தியது. யாரையும் குறை சொல்ல மாட்டானா?



"நேற்று அவன் என்னை மாமா என்று அழைத்தது பொதுவாகவா... அல்லது..." என்று இழுத்து நிறுத்தினான்.

"நான் தான் சொல்லி கொடுத்தேன்" என்று தீபக் புன்னகை செய்ய அவனுக்கு கன்னத்தில் ஓங்கி அறைந் தது போல இருந்தது. இவனை ஏர்போர்ட்டில் பார்த்து விட்டு அலட்சியப்படுத்தி நகர்ந்ததென்ன? இவன் குழந்தைக்குத் தன்னை மாமா என்று அறிமுகப்படுத்தி அனுப்பி பேச வைப்பதென்ன?

"தீபக், ஐ ஆம் சாரி. உங்களை ஆரம்பத்துல சரியா புரிஞ்சுக்காமல் இத்தனை நாளா உங்களை தள்ளி வச்சு அலட்சியப்படுத்தி விட்டேன். உங்களை மாதிரி ஒரு நல்ல மனிதர் கணவனா கிடைக்க சரண்யா ரொம்ப லக்கி..."

"இல்லை விக்ரம். சரண்யா மாதிரி எங்க வீட்டோடு ஒன்றி உறவாடும் ஒரு நல்ல மனைவி கிடைக்க நான் தான் போன ஜென்மத்துல நிறைய புண்ணியம் பண்ணி இருக்கணும்" என்று பெருமை முகத்தில் பொங்கி வழிய சொன்னான் தீபக்.

"மேட் பார் ஈச் அதர். விட்டு கொடுக்கணும் என்று இரண்டு பேருமே நினைக்கும் போது, பிரச்னை வரவே வாய்ப்பு இல்லை. சரண்யா உங்களை விட்டு கொடுக் காமல் நேற்று அந்த கோபத்திலும் தாங்கியதை பார்த்த பின்பு, இப்ப நீங்க சரண்யாவைப் பற்றிப் பேசியதை கேட்ட பின்பு, வாழ்க்கை பாடம் படித்த அனுபவம் கிடைத்தது. தேங்க்ஸ்..."

"விக்ரம் என்ன இது? என்னை போய்..."

"இல்லை தீபக். இதே வாசகங்களை பல தடவை, எங்க அம்மா அப்பா, சித்தி, யாராவது சொல்லி

இருக்கலாம். ஆனால் வயசுல பெரியவங்க சொல்லும் போது, இவங்களுக்கு வேறே வேலை இல்லை. நம்ம பீலிங்க்ஸ் புரிஞ்சுக்கவே மாட்டாங்க என்ற எண்ணம் வந்தது. இப்ப நீங்க சொல்லும் போது, இவனால் முடியும் என்றால் நம்மால் முடியாதா என்ற வேகம் வருது. இதை நம்ப சிரமமா இருக்கலாம். ஆனால் உண்மை இதுதான். நான் உங்களுக்கு ஏதாவது செய்யணுமே? பணத்திமிரா என்று நினைக்க வேண்டாம். பொருளாகத்தான் கொடுக்கணும் என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. வேறென்ன செய்வது என்றும் புரியவில்லை...'' என்று தீவிரமான குரலில் சொன்னான் விக்ரம்.

''நான் கேட்பதை கட்டாயம் கொடுப்பீங்களா?''

''இந்திரன் மாதிரி ஏமாற்றி வாங்க என்னிடம் கவச குண்டலமா இருக்கு? என்னிடம் இருப்பதை கேட்டால் கட்டாயம் தருகிறேன்...''

''இந்த வாங்க, போங்க ரொம்ப தள்ளி வைக்குது. அதை கட் பண்ண முடியுமா? ஏற்கனவே ரொம்ப பெரிய இடைவெளி விழுந்து இருக்கு. அதைக் குறைக்க முயற்சி செய்யணுமே தவிர கூட்டக் கூடாது...'' என்ற தீபக்கின் வார்த்தைகள் விக்ரமை பிரமிக்க வைத்தது.

''உன்னுடைய வேண்டுகோள் உடனடியாக நிறைவேற்றப்படுகிறது'' என்று விக்ரம் சிரிக்க, அந்த சிரிப்பில் இணைந்தான் தீபக். தீபக்கை மீண்டும் அவன் அலுவலகத்திலேயே இறக்கி விட்ட விக்ரமன் மனம் தர்ஷினியை தேடியது. இப்போது தர்ஷினி எங்கே இருப்பாள் என்று எண்ணிபடி கடிகாரத்தை பார்த்தான். பனிரெண்டரையா?



ஸ்டார் ஹோட்டலில் லஞ்ச் சாப்பிடவே பிறவி எடுத்த மாதிரி, அரை இருட்டில் நண்பர்களோட அரட்டை அடித்த படி எங்கேயாவது ஹோட்டலில் இருப்பாள். வீட்டுக்கு போனாலும் பார்க்க முடியுமோ என்னவோ? சென்னையில் இருக்கும் இந்த வசதி மதுரையில் இல்லை என்று தானே பொருமுகிறாள்? ஆனால் ஒரு வேளை அவள் வீட்டில் இருந்தால், அவளின் ஆசைப்படி தானே இன்று அவளை வெளியே அழைத்து செல்லலாம், என்று எண்ணி, அவளின் அலைபேசியில் அழைத்தான் விக்ரம்.

அவனின் அலைபேசி அடித்த முதல் மணியிலேயே எடுக்கப்பட்டு விட்டாலும் தர்ஷினியிடம் இருந்து சத்தமே வரவில்லை.

''ஹலோ... தர்ஷினி... தரு... கேட்குதா? லைனில் இருக்கிறாயா? ஹலோ... கேட்குதா?'' என்று குரல் உயர்த்தியவன் போனை வைத்து விடலாமா என்று யோசிக்கும்போது தர்ஷினியின் மெல்லிய, 'ம்' என்ற குரல் கேட்க அவன் வியப்படைந்தான்.

அவனுக்கு தெரிந்து தர்ஷினி வாய் ஓயாமல் பேசுபவள். தனக்கு எல்லாமே தெரியும் என்ற அதீத நம்பிக்கையில் இருப்பவள். அடுத்தவர்களை மிரட்டி உருட்டியே காரியம் சாதிக்க வேண்டும் என்று நினைப்பவள். அவள் இப்படி மெல்லிய குரலில் முனகுவதா?

''தர்ஷினி ஆர் யு ஓகே?'', என்ற பதட்டமான விக்ரமின் குரல் கேட்டதும் தர்ஷினியின் உள்ளே ஏதோ உடைந்தது.

''ம்ம்...'' என்ற முனகலில் இப்போது கண்ணீரும் சேர்ந்து இருக்க அவன் மேலும் பதறினான்.

''ஏன் இப்படி ஒரு ஒரு வார்த்தையில் பேசுகிறாய்? நீ இது மாதிரி பேசி நான் பார்த்ததே இல்லையே? என்ன ஆச்சு?'' என்றவன் குரலில் இருந்த கனிவு அவளை உடைய வைத்தது.

''ஒண்ணுமில்லை விக்கி...'' என்றவன் குரலே அது பொய் என்றது.

''நீ எங்கே இருக்க?''

''வீட்டுலதான்...''

''சரி பதினைந்து நிமிஷத்துல நான் அங்கே வரேன். நாம் வெளியே போய் சாப்பிடலாம்...''

''வெளியே வேண்டாம்... விக்கி... நான் வரலை...''

''ஏண்டா. லஞ்ச் வெளியே சாப்பிட பிடிக்கும்தானே? போகலாம்...''

''இல்லை வேண்டாம்...''

''வீட்டில் யார் இருக்கா?''

''யாரும் இல்லை. நான் மட்டும் தான் இருக்கேன். நீங்க சீக்கிரம் வரீங்களா?'' என்றவளின் குரலில் இருந்த இனம் புரியாத... பயம்... கலக்கம்... இறுக்கம்... ஏக்கம் அவனை என்னவோ செய்தது.

சொன்ன நேரத்தை விட விரைவாகவே அங்கே சென்றவன் காரை நிறுத்தும் முன்பே கதவு திறந்தவளை பார்த்தவன் பதறினான். அவனுக்கு தெரிந்து இந்த இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக தர்ஷினியின் கண்களில் நீர் இருந்தது.

''தர்ஷினி, என்ன ஆச்சு...?'' என்று கேட்டு அணைத்த வினாடியில் அவன் மார்பில் சாய்ந்தவள் விம்மி அழ தொடங்கினாள்.



''எதுக்கு அழற? யார் என்ன சொன்னா?'' என்று விதம் விதமாக கேள்வி கேட்டாலும் அவளிடம் இருந்து கண்ணீரும் விசும்பலும் மட்டுமே பதிலாக கிடைக்க, முதுகை வருடி, ஆறுதல் படுத்த முயன்றவன் மனம் வேகமாகச் சிந்தித்தது. நேற்று அந்த லக்ஷ்மிகாந்தன் வந்து இருந்தான். தர்ஷினியின் பெற்றோர் எங்கே? அவன் எங்கே? என்ன நடந்து இருக்கும்?

பல நிமிடங்கள் கழித்து அவனின் மார்பில் இருந்து நிமிர்ந்தவள் 'சாரி... விக்ரம்... ஷர்ட் கசங்கிடுச்சு...'' என்று விலக வியப்பு கூடியது.

''வீட்டுல தானே இருக்கேன். வெளியே எங்கேயும் போகப் போறதில்லை. அப்புறம் என்ன? அது சரி ஏன் அப்படி அழுதாய்?''

''ஒண்ணுமில்லை...''

''ஒண்ணுமில்லாம அழறதுக்கு நீ என்ன லூசா? அத்தை மாமா எங்கே?''

''அவங்க ஒரு கல்யாணத்துக்கு போய் இருக்காங்க...''

''ஓ! உன்னோட கசின் இருந்தாரே அவர் எங்கே?''

''அவனை பத்தி பேசாதீங்க விக்ரம்'', என்றவளின் குரல் நடுங்கியது.

''சரி! பேசலை விடு. நான் ஊரில் இருந்து வந்து பத்து நாள் ஆகிறது. கிளம்பலாம் என்று நினைத்தேன். நீ எப்படி...'' என்று இழுத்தான்.

''நானும் வரேன். இதென்ன கேள்வி?''

''இல்லை தனியா தொழில்... இங்கே மதுராந்தகம் சர்க்கரை ஆலை வாங்குவது...''

''அது உங்களால் சமாளிக்க முடியும், லாபம் தரும் என்றால் வாங்குங்க. நான் சொல்வதற்காக என்று வாங்கத் தேவை இல்லை.''

''இதென்ன... பூமி தலை கீழா மாற்றி சுத்துதா? என் காதையே என்னால் நம்ப முடியலை...'' என்று வியப்பாக சொன்னான் விக்ரம்.

''இல்லை விக்ரம். நான்தான் இத்தனை நாளா தலை கால் புரியாமல் இருந்தேன். நல்லா என் உச்சி மண்டையில் ஓங்கி அடிச்ச மாதிரி ஒரு கேள்வி கேட்டு என்னை எனக்கே புரியவச்சுட்டான். நல்ல பாடம் ஒன்று படிக்க வச்சான்...''

''யார் என்ன சொன்னா என்பதை சொல்லாமல் நீ இப்படி பூடகமா பேசினால் எனக்கு ஒன்றுமே புரியலை...''

''விக்ரம், நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். நீங்க என்னை நம்புவீங்க தானே?'' என்று கேட்டதும் நிமிர்ந்து அவளை பார்த்தான். தனக்கு அவளை பிடிக்கும் என்பதை அவள் மேல் தனக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை அவளுக்கே தெரியப் படுத்தாமல் இருந்தால் தாம்பத்யம் எப்படி சிறக்கும்?

''இந்த கேள்வியை நீ இரண்டு வருடம் கழித்து கேட்கிறாய் என்பதை நினைக்கும் போதே சங்கடமா இருக்கு. உன்னை நான் நம்புகிறேன். இன்று மட்டுமில்லை இனி வரும் காலத்திலும் அப்படித்தான் நீ சொல்ல வந்ததை சொல்லு'' என்று தைரியமளிக்க, அவள் கண்களை துடைத்து கொண்டு நிமிர்ந்தாள்.

''நான்... லக்ஷ்மிகாந்தனை, கத்தியால் குத்தி விட்டேன்...''



''ஹய்யோ... என்ன ஆச்சு? ஏன்மா எங்கே இருக்கான்?''

''இங்கே தான் மாடியில் என் ரூமில் இருக்கான்...'' என்றவளின் தேகம் பயத்தில் மேலும் நடுங்க அவளை அணைத்து கொண்டான்.

''ஓகே... ஓகே... ரிலாக்ஸ்... ஒண்ணும் ஆகாதுடா... நான் இருக்கேன்... பயப்படாதே.... அழாதே... விடும்மா... பார்த்துக்கலாம்... ஆனால் ஏன் அப்படி செய்தாய்...?'' என்று கேட்கும் போதே அவளின் குழப்பம் பயத்தை வைத்து என்ன நடந்து இருக்கும் என்பதை ஊகிக்க முடிந்தது.

''எனக்கு இரண்டு வருஷமா குழந்தை இல்லாததற்கு நீங்க தான் காரணம் என்று கன்னாபின்னாவென்று உளறி... அதை நான் சரி செய்கிறேன் என்று... அவன்... அவன்...'', என்று ஆரம்பித்தவளால் மேற்கொண்டு தொடர முடியவில்லை. தோளில் சாய்ந்து விம்ம ஆரம்பித்தவளின் முதுகை வருடி கொடுத்தான்.

''அவன் கிடக்கிறான். கணவன் மனைவிக்கு இடையே பரஸ்பர நம்பிக்கை இருக்கும்போது அந்த மாதிரி விஷமிகளால் ஒன்றும் செய்ய முடியாது. நான் உன்னை நம்புகிறேன். கவலைப்படாதே. சரண்யா மாமா கூட போலீஸ் ஆபீசர் தான். அவரிடம் சொல்லி...''

''நான்... வேண்டும் என்று... எதுவும் செய்யலை...'' என்று மேலும் திணறி நடுங்கியவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

''தெரியும் தரு. சட்டப்படி தற்காப்புக்காக எதிரியை தாக்கலாம் என்று இருக்கு. பெரிசா ப்ரச்னை வராதும்மா. நான் இருக்கேன் இல்லையா? என்ன வந்தாலும்

பார்த்துக்கலாம். நான் எப்பவும் உன்னுடன் இருப்பேன்...'' என்று முதுகை வருடி, ஆறுதல் சொன்னவன், அவளை அணைப்பில் இருந்து விலக்காமலேயே தொலைபேசியில் தீபக்கிடம் தகவல் தெரிவித்தான்.

அடுத்த சில நிமிடங்களில் அவன் கருணாகரனிடம் சொல்லி, உயர் அலுவலர்கள் வந்து லக்ஷ்மிகாந்தனை மருத்துவமனைக்கு எடுத்து சென்றதோடு, அவன் தங்கி இருந்த ஹோட்டலில் இருந்த போதை மாத்திரைகள், போலி பாஸ்போர்ட் என்று கைப்பற்ற, மேற்கொண்டு நடவடிக்கையில் தர்ஷினியின் பேர் அடிபடாமல் இருக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடிக்க, அன்று இரவு பனிரெண்டு மணிக்கு மேல் விக்ரமை ஒண்டியபடி அவனின் சித்தி வீட்டுக்கு வந்த தர்ஷினிக்கு, இனி இவனை கணம் கூட விட்டு பிரியக் கூடாது என்ற உறுதி ஏற்பட்டு இருந்தது.



## 26

பீச்சில் காலை நேரத்தில் நடை பயிற்சி முடித்து வந்த ராமலிங்கம், காபியோடு செய்தித் தாளை எடுத்து சென்னை பீட் என்று இருக்கும் அந்த இரண்டாம் பக்கத்தில் இருக்கும் சென்னை செய்திகளை படிக்க ஆரம்பித்தவரின் கண்கள் விரிந்தது.

குழந்தை தொழிலாளர் ஒழிப்பு நாள் அனுசரிப்பு தொடர்பாக அரசு சார்பில் நடத்தப்பட்ட போட்டியில், வரி விளம்பரத்திற்கான சிறப்பான வாசகங்களை எழுதி, அரசின் முதல் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாயை சரண்யா பெற்றதற்கான செய்தி இருந்தது.



இது நம்ம சரண்யாவா என்று வந்த சின்ன சந்தேகத்தை அடுத்த வந்த பத்தியில் இருந்த இவரின் கணவன் ஹிந்து பத்திரிகையில் வேலை செய்கிறார் என்று நிர்வாகமே பெருமையாக அறிவித்து இருக்க அவர் திகைத்து போய் அந்த செய்தியைப் பார்த்து கொண்டு இருக்கையில் ''குட்மார்னிங் சித்தப்பா...'' என்ற வார்த்தையோடு வந்தான் விக்ரம்.

''வா... வா... விக்ரம்... என்ன நேற்று நைட் தர்ஷினியோடு வரேன் என்ற சொன்னாய். பத்து மணி வரை காத்து இருந்தேன். வரலையே என்ன ஆச்சு? எப்போ வந்தாய்?'', என்று விசாரித்தார்.

''நேற்று ஒரு கேஸ் விஷயமா, தர்ஷினியோட போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டியதாகி விட்டது. நைட் வர லேட் ஆகிடுச்சு. பனிரெண்டு மணி இருக்கும். சித்தி தான் கதவு திறந்தாங்க...'' என்று சொன்னவன் பேப்பரை பிரித்து லக்ஷ்மிகாந்தன் கைது செய்த வழக்கு குறித்த செய்தி இருந்த பக்கத்தை பிரித்து அவரிடம் காட்டினான்.

''நான் உனக்கு ஒரு நியூஸ் காட்டலாமா என்று யோசித்து கொண்டு இருக்கும்போது நீ ஒன்றை காட்டுகிறாய். இங்கிலீஷ் பேப்பர் படிப்பதை விட்டுட்டு, லோக்கல் தமிழ் பேப்பர், அதிலும் க்ரைம் நியூஸ் படிக்க சொல்றியா? உனக்கு என்ன ஆச்சுடா?'' என்று கேட்டபடி பேப்பரை வாங்கியவரின் கண்கள் மேலோட்டமாக செய்தியை படிக்க, அவரின் தேகம் முழுவதும் எதிர்பாராத அதிர்ச்சியில் நடுங்கியது.

சில நிமிடங்களுக்கு முன்பு பார்த்த செய்திக்கும் இந்த செய்திக்கும் எவ்வளவு வித்தியாசம்? இரண்டுமே தன்

மகளின் வாழ்க்கையை பாதித்த செய்திகள் ஆனால் எப்படி? கடவுளே!

''டேய்... இது...'' என்று திணறலாக அவர் கேட்க அவன் மௌனமாக தலை அசைத்தான் விக்ரம்.

''மை... காட்... இது தர்ஷினிக்குத் தெரியுமா?''

''நேற்று அவன் போலீசில் மாட்டியதே அவளால் தான் சித்தப்பா. இந்த கேஸ் விஷயமா நேற்று அலைந்தேன். அவளுக்கு உங்க முகத்தை பார்க்கச் சங்கடமா இருக்கு என்று அழுகை. நான் தான் சமாதானப்படுத்தி நேரில் அழைத்து வந்தேன்...'' என்று அவரிடம் சொன்னவன் பின்னால் திரும்பி கை காட்ட தர்ஷினி மெல்ல நடந்து வந்தாள்.

''சாரி மாமா! எனக்கு இவன் இப்படி பட்டவன் என்று சத்தியமா முன்னால் தெரியாது. தெரிந்தால் சரண்யாவுக்கு மாப்பிள்ளையாக சொல்லி இருக்க மாட்டேன். என்னை மன்னிச்சுடுங்க மாமா. உங்களிடம் மன்னிப்பு கேட்கக் கூட எனக்கு ரொம்ப அசிங்கமா இருந்தது...'', என்றவளின் கண்ணில் நீர் வழிய, அவர் பெருமூச்செறிந்தார்.

''நீ என்னம்மா செய்வாய்? வயசும் அனுபவமும் இருக்கும் நாங்களே தடுமாறும் போது உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. என்றைக்கு இருந்தாலும் கடவுள் போட்ட முடிச்சு தான் செல்லுபடி ஆகும். எனக்கு உன் மேல் தனிப்பட்ட முறையில் வருத்தம் இல்லை. கண்டதை குழப்பிக் கொள்ளாதே. நீ சந்தோஷமா இரு...'' என்று சொல்லி விட்டு தன் அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்தவரின் கன்னங்களில் நீர் கோடாக இறங்கியது.



கருணாகரன் ஏற்கனவே இதே லக்ஷ்மிகாந்தனிடம் இருந்து தன் பெண்ணை காப்பாற்றி இருக்கிறார். அது மட்டுமில்லை தன் பையனுக்கே மணமுடித்து இன்று வரை அந்த வீட்டின் முடிசூடா ராணியாக வைத்து இருக்கிறார்.

அவர் மேல் உள்ள கோபத்தை... இல்லை... மூன்றாம் மனிதர் மீது கோபப்பட தனக்கென்ன உரிமை இருக்கிறது?

தன் மகள் மேல் உள்ள கோபத்தை... அவளின் மேலும் தான் என்ன கோபம்? தன் காதலை தன்னிடம் சொல்லவில்லை என்பதா? அதற்காக எத்தனை நாள் அவளை தள்ளி வைப்பது? இல்லை அவள் மேல் தப்பில்லை. அப்படி என்றால் அவன் மேல் தப்பா? அவன் என்ன செய்தான்? அவனுக்கு என்ன குறை?

அவன் கோடீஸ்வரன் இல்லை தான். ஆனால் தன் மாமனாருக்கு இரண்டு பெண்கள் மட்டுமே என்பதால் வந்த பரம்பரை சொத்து இல்லாமல், அவரின் தனிப்பட்ட வருமானம் என்று பார்த்தால், அவரும் கோடீஸ்வரன் இல்லை தானே?

படித்து இருக்கிறான். பார்க்க நன்றாக இருக்கிறான். கௌரவமான ஒரு வேலை பார்க்கிறான். இந்த இரண்டு வருடத்தில் ஒரு நாள் கூட மகள் கண்ணைக் கசக்கிக் கொண்டு இங்கே வந்து நிற்கவில்லை. அது மட்டுமில்லை. அவளை நன்றாக படிக்க வைத்து இருக்கிறான்.

அவளின் ஆர்வம் புரிந்து, அதை வளர்த்து, அரசளவில் அங்கீகாரம் கிடைக்க செய்து இருக்கிறான். இந்திராணி, கையில் ஒரு தட்டில் வைத்து இருந்த இனிப்பை, தன் மகனுக்கும் மருமகளுக்கும் ஊட்டிக் கொண்டு இருந்தார்.

''இந்து, என்ன விசேஷம்?'' என்றவரின் குரலில் சந்தோஷமே மிஞ்சி இருந்தது.

''ஒண்ணு இல்லை இரண்டு இல்லை. மூணு சந்தோஷ மான செய்தி. வாங்க வந்து ஸ்வீட் எடுத்துக்கோங்க...'' என்று உற்சாகமாக அழைத்தார் இந்திராணி.

''என்ன விஷயம் சொல்லு...'' என்று கணவர் கேட்ட பின்பே, 'அந்த மூன்றில் இரண்டு செய்தி கணவருக்கு பிடிக்காதே' என்ற விஷயம் இந்திராணிக்கு உறைத்தது.

''தர்ஷினிக்கு... நாள் தள்ளி போய் இருக்கு. இப்ப தான் சொன்னாள். அதான்... உடனே ஸ்வீட் எடுத்துட்டு வந்தேன்...'' நிறுத்தினார்.

''வாழ்த்துக்கள் விக்ரம். எங்கே அதுக்குள்ளே காணா மல் போய்ட்டான்?'', என்று தேட, அவனுக்கு வேண்டிய வங்களுக்கு செய்தி சொல்ல போய் இருப்பாங்க'' என்று பதில் சொன்னார் இந்திராணி.

''இன்னும் இரண்டு செய்தி இருக்கு என்றாயே? அது என்ன?''

''அது... வந்து...'' என்று இந்திராணி தடுமாறும் போதே, 'ஒண்ணு என்னால் ஊகிக்க முடிகிறது. இன் னொண்ணு என்ன?' என்று கேட்ட குரலில் கோபம் இல்லை என்பதை உணர்ந்த இந்திராணி வேகமாக, ''உங்களின் ஊகத்தை சொன்னால் தானே அடுத்தது என்ன என்று நான் சொல்ல முடியும்?'' என்று திருப்பினார்.

''பேப்பர் படித்தால் தானே புரியும். என் பொண்ணு, மாநில அளவில் தமிழக அரசால் நடத்தப்பட்ட குழந்தை தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வுக்கான வரி



விளம்பர வாசகம் எழுதி, ஐம்பதாயிரம் ரூபாய் முதல் பரிசு பெற்று இருக்கிறாள் என்று ஹிந்து பத்திரிகையில் செய்தி வந்து இருக்கு'' என்று அவர் முடிக்க, ''உங்க பெண்ணா? இது எப்போல இருந்து?'' என்று மூச்சு விட மறந்தார் இந்திராணி.

''அவள் என்னை மாதிரி என்று நீதானே சொன்னாய். இப்ப நீயே அதை மறுப்பாயா? வாய்க்குள் யானையே போகலாம் போல இருக்கு. மூன்றாவது சந்தோஷ செய் தியை நீ சொன்னால் நாலாவது சந்தோஷ செய்தியை நான் சொல்வேன்'' என்று கம்பீரமாக சொன்ன ராம லிங்கத்தை வியப்புடன் பார்த்தார் இந்திராணி.

''அப்ப சரி, மூன்றாவது செய்தி. இன்று உங்க பொண்ணுக்கு பிறந்த அவளோட பையனுக்கு, முதல் பிறந்த நாள். அதனால் ஸ்வீட் கொடுத்தேன். நீங்க உங்க நாலாவது செய்தியை சொல்லுங்க கேட்போம்...'' என்று சவால் விட்டவரின் கண்களில் ஆர்வம் இருந்தது.

''நான் என்ன சொல்லப் போகிறேன் என்று ஏற்கனவே இந்திராணி மேடத்திற்கு தெரியும் போல இருக்கே?'' என்று சாவகாசமாக கேட்டவர், அவரின் கையில் இருந்த தட்டில் இருந்து ஒரு ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டு கொண்டார்.

''எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்களின் வாயில் இருந்து வந்தால் தானே அந்த வார்த்தைக்கே மரி யாதை...'' என்று அவரையே பார்த்தார்.

'இன்று நாம் இருவரும் சரண்யாவைப் பார்க்க அவங்க வீட்டுக்குப் போகிறோம்' என்ற ராமலிங்கத்தின் வார்த்தைகள் அவரின் காதுகளை சென்றடைந்த அடுத்த வினாடி

அவரின் கண்களில் ஆனந்த கண்ணீரை வரவழைத்த, அவரை உற்சாக வெள்ளத்தில் மூழ்கடித்தது.

* * *

அபிராமி. தன் உறவினர் திருமணத்தை முன்னிட்டு, ஈரோட்டிற்கு சென்று இருந்தார். இன்று ஸ்ரீராமின் பிறந்த நாள் என்பதால் பிற்பகலுக்குள் வந்து விடுவதாக சொல்லி சென்று இருக்க, தேர்வு நடக்கும் சமயத்தில் மதுமதி எழுப்பாமல் தனியே அடுக்களையில் காலை அவசர பணிகளுக்கிடையே அல்லாடி கொண்டு, கேள்வி கேட்கும் மகன் ஸ்ரீராமை சமாளிக்க வேண்டி இருந்தது சரண்யாவிற்கு.

''தீபக், என்ன பண்றீங்க? இவனைப் பார்த்துக்கக் கூடாதா?'' எனக்கு சமையல் தவிர, சாயங்காலம் பிறந்த நாள் பார்ட்டி வேலை வேறு இருக்கு'' என்று காலை நேர அவசரத்தில் விளைந்த எரிச்சலோடு அழைக்க, வெளியில் இருந்து பதில் வந்தது.

''என்னால் இப்போ முடியாது சரண். நிதானமா சமையல் பண்ணு. எனக்கு மதிய சாப்பாடு வேண்டாம். நான் வெளியே பார்த்துக்கறேன்'' என்று கனிவு மாறாமல் சொன்னான் தீபக்.

அந்த குரலில், சரண்யாவிற்கு லேசாக மூண்ட எரிச்சலும் காணாமல் போனது. இந்த குணம் தானே, அவளை இந்த வாழ்க்கையை தேர்ந்தெடுக்க வைத்தது. அதன் பிறகும், அவ்வப்போது பிறந்த வீட்டினர் நினைவு வரும்போது சரி, உடல் நிலை சரி இல்லாமல் போனாலும் சரி, சரண்யா அவனை கடித்து குதறி விடுவாள். ஆனால் அதே சமயம் வெளி ஆட்கள் யாரும், மாமியார்



உட்பட, யாரும் அவனைப் பற்றி அவளிடம் ஒரு வார்த்தை குறைவாகச் சொல்லி விட முடியாது.

கணினியில் தன் வேலையில் மூழ்கி இருந்த தீபக்கின் கவனத்தை அலைபேசி ஈர்த்தது. ''ஹலோ விக்ரம். என்ன காலங்கார்த்தால? நேற்று எல்லா வேலையும் முடிஞ்சுதா? ஒன்றும் பிரச்னை இல்லையே? தர்ஷினி எப்படி இருக்காங்க'' என்று குரலை தணித்து விசாரித் தான் தீபக்.

''அப்பா தலையிட்டதுல நேற்று சுமுகமா எல்லா விஷயமும் முடிந்து விட்டது. நானும் தர்ஷினியும் பெர்சனலா வந்து அப்பாவை பார்க்கலாம் என்று நினைத் தோம். எப்போ வரலாம் என்று கேட்க போன் பண்ண ணும் என்று நினைத்தேன். ஹிண்டுல நியூஸ் பார்த்த உடனே அழைத்து விட்டேன். சரண் பக்கத்தில் இருக் காளா?''

''இல்லை விக்ரம் கிச்சனில் இருக்கிறாள். இன்னிக்கு ஸ்ரீராம்க்கு பெர்த்டே. சாயங்காலம் வாயேன்'' என்று அழைப்பு விடுத்தான்.

''வாவ்! அப்ப சரி. பார்ட்டி வச்சு அழைக்கிறாய்? வர கசக்குதா? கட்டாயம் வருகிறோம்'', என்று போனை வைத்தான் விக்ரம். பேசி விட்டுத் திரும்பியவனுக்கு, மிக அருகில் சரண்யா குழந்தையோடு நிற்பதை பார்த்ததும், ஒரு வினாடி மூச்சு நின்றது.

''இவனை கொஞ்சம் பார்த்துக்கோங்க, எனக்கு வேலை இருக்கு'' என்று சரண்யா நகர்ந்த பின்னரே மூச்சு வந்தது. குழந்தையை தோளில் தூக்கி, அடுப் படிக்கு வந்தவன், மனைவியை அணைத்து கன்னத்தில்

சின்னதாய் முத்தம் வைத்து, ''நான் சாரும்மாவிடம் ஒரு விஷயம் சொல்லணுமே?'' என்று ஆரம்பித்தான் தீபக்.

''சாரும்மாவா? என்னவோ திருட்டுத்தனம் செய்து விட்டு வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பது மாதிரி இருக்கே? என்ன விஷயம்? கொஞ்சம் முன்னால் போனில் யார்?'' என்று விசாரித்தாள் சரண்யா.

''அதெல்லாம் கரெக்டா நோட் பண்ணுவியே?'', என்று மீண்டும் கன்னத்தை வருட வந்தவனின் கையை தட்டி விட்டு, ''இந்த ஐஸ் எல்லாம் வேண்டாம். என்ன விஷயம் சொல்லுங்க, போனில் விக்ரமா?'' என்று அதட்டலாக கேட்டாள்.

''சரண்யாக்குத் தெரியாமல் வீட்டில் ஒரு விஷயமும் நடக்க முடியாது.''

''.....''

என்ன சரண் சைலெண்டா ஆயிட்ட? ஈவினிங் பார்ட்டிக்கு, விக்ரமை வரச் சொல்லி இருக்கேன். வீட்டுக்கு வரும் கெஸ்ட்டை, நல்ல படியா கவனிச்சு அனுப்பணும். ஒகே?'' என்று கேட்க முறைத்தாள்.

''உனக்கு உங்க அண்ணன் மேல் என்ன கோபம்? விக்ரம் என்னை மதிக்கவில்லை என்று கதை சொன்னாய். இப்ப அவன் எனக்கு நல்ல பிரெண்ட். இன்னும் என்ன கோபம்?'' என்று கேட்டான்.

''கோபம் இல்லை தீபக். வீண் மனகஷ்டம், ப்ளீஸ் வேண்டாமே...'' என்று கெஞ்சலாக முடித்து அவன் தோளில் முகத்தை புதைத்து கொண்டாள்.

அவள் நிறுத்தியது என்ன என்று அவனுக்கும் புரிந்தது. ஏதாவது செய்து, மாமாவை இங்கே வர வைக்க



முயற்சி எடுக்க வேண்டும். ''சரண்யா, நான் உன்னிடம் இருந்து எனக்கு ஒரு வரம் ஸ்பெஷலா வேண்டும் என்று கேட்டால் என்ன செய்வாய்?'' என்று ஆரம்பித்தான்.

''இதென்ன கேள்வி? என்கிட்டே இருப்பதை கேட்டால், என்னால் செய்ய முடிந்ததை கேட்டால் நிச்சயம் தரேன் என்று சொல்வேன்...''

''உன்னால் முடிய கூடியதுதான். நிச்சயமா தருவியா? அப்புறம் பேச்சை மாற்றக் கூடாது...'' என்று அவன் தூண்டில் போட்டதும் தான் அவளுக்கு என்ன கேட்க போகிறான் என்ற விஷயம் புரிந்தது.

''இது சீட்டிங் தீபக். விஷயம் சொல்லாமல் வாக்குறுதி வாங்குவது செல்லாது...''

''எனக்காக சரண்... ப்ளீஸ்... ஒரே ஒரு முறை...''

''என்னை ரொம்ப கடன்காரி ஆக்காதீங்க தீபக் வேண்டாமே... ப்ளீஸ். நான் உங்க கௌரவத்திற்காக பார்க்கும் போது, நீங்க என்னை கார்னர் பண்ணுவது சரி இல்லை...''

''என் கௌரவம் பற்றி நானே கவலைப்படாத போது...''

''அதனால் தான் நான் அதிகம் கவலைப்பட வேண்டும் தீபக். ஏன் புரிஞ்சுக்க மாட்டேன் என்கிறீங்க?''

''நான் சொல்றேன் இல்லையா? இன்னிக்கு குழந்தைக்கு பெர்த்டே. அதோட நீயும் ஒரு போட்டியில் அரசிடம் இருந்து பரிசு பெற போகிறாய். இந்த ஒரு முறை போவோம். அங்கே கௌரவ குறைச்சலா வார்த்தை இல்லை, ஒரு பார்வை வந்தால் கூட அடுத்த வினாடி அங்கே இருந்து கிளம்பிடுவோம். ப்ராமிஸ்... ப்ளீஸ்...

சாரும்மா... எனக்காக... ப்ளீஸ்...'', என்று கெஞ்சலாக கேட்டவனை மறுக்க முடியாமல், தலை அசைத்தாள் சரண்யா.

''சரி. போகலாம். ஆனால் இன்னிக்கு இல்லை. நாளைக்குப் போகலாம். நான் உங்களுக்காக வர சம்மதித்த மாதிரி, இந்த ஒரு நாளை தள்ளிப் போட நீங்க எனக்காக சம்மதிக்க வேண்டும். இன்று ஒரு வார்த்தை கூட என் காதில் வித்தியாசமா விழக் கூடாது என்று ஆசைப்படு கிறேன் தீபக். புரிஞ்சுப்பீங்க என்று நினைக்கிறேன்'', என்று சொல்ல சந்தோஷமாக தலை அசைத்தவன், ''தாங்க்ஸ் செல்லம்'' என்று சொல்லி அவளின் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டான்.



# 27

ஸ்ரீராமின் பிறந்த நாள் விழாவிற்கு என்று தீபக் அழைத்து இருந்தாலும், முந்தைய தினம் கருணாகரன் செய்த அலுவலக ரீதியிலான உதவிகள் மட்டுமின்றி, அதை தாண்டி மனிதாபிமான அடிப்படையிலும் செய்த பல உதவிகளுக்கு, மனைவியோடு சென்று தனிப் பட்ட முறையில் தன் நன்றியை தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தார்ஷினியுடன் கிளம்பினான் விக்ரம்.

சரண்யாவை பற்றி, தீபக் பற்றி, கருணாகரன் பற்றி தனக்கு தெரிந்த விபரங்களை அவளுக்குச் சொல்லிக் கொண்டே வர, அவள் வெறுமனே 'உம்' கொட்டி கொண்டு வந்தாள்.



''என்ன தார்ஷினி, டல்லா இருக்க? ஒன்றுமே சரியா பேசமாட்டேன் என்கிறாயே? நீ அமைதியா இருந்தால் எனக்கு போர் அடிக்குமில்ல? நம்ம கல்யாணத்தில் நீ தீபக்கை பார்த்து இருக்கிறாயா?'' என்று கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''நீ வாயை திறந்து பேசினால் தான் இனி கார் நகரும்'' என்று மிரட்டியபடி காரை ஓரம் கட்டி நிறுத்த அவள் பதறினாள்.

''ஹய்யோ! விக்ரம். நடுரோட்டில் இதென்ன வம்பு?''

''தார்ஷினி, உன் இயல்பு அமைதியாக இருப்பது என்றால் நான் விட்டு விடுவேன். ஆனால் நீ அப்படி இல்லை எனக்கும் தெரியும். உனக்கும் தெரியும். நேற் றைய சம்பவம் ஒரு விபத்து. அதை மறந்து நீ சகஜமா இருக்கணும் என்பதற்காக தான் சொல்றேன் புரிஞ் சுக்கோ...'' என்று மென்மையாக விளக்கினான் விக்ரம்.

''அவனை... நான் குத்தி... வயிற்றில் இருந்து அவ் வளவு ரத்தம் வந்ததை... பார்த்தது... இன்னும் என் கண்ணில்... சாரி... விக்ரம்... அந்த ஷாக் விலக கொஞ்சம் டைம் கொடுங்க. சீக்கிரம் சரியாகிவிடும்...'' என்று தலையை குனிந்து கொண்டு முணுமுணுத்தாள்.

''சீக்கிரம் எல்லாம் இல்லை. இப்பவே சரியாகணும்...'' என்று அவன் மிரட்ட, அவள் திகைத்து நிமிர்ந்தாள்.

ஒற்றை விரலால் அவளின் மோவாயை பற்றி நிமிர்த்தி, ''கண்ணை பாத்து பேசாமல், இதென்ன கார் மேட்டை பார்த்து பேசுறது? எதுவா இருந்தாலும் என்னைப் பார்த்துப் பேசு'' என்று அவன் சொன்ன தொனியில் லேசாக புன் னகை மலர்ந்தது.

''இப்ப முகம் பார்க்க பரவாயில்லாமல் இருக்கு. நல்லா இப்படி சிரிச்சால் இன்னும் அழகா இருக்கும்'' என்று விரல்களால் அவளின் இதழ்களை பிடித்து இழுக்க, அவளுக்கு நன்றாகவே சிரிப்பு வந்தது.

''ஹையோ! போதும் விக்ரம் கேலி, போகலாம்...'' என்று சொல்ல ஒரு கையால் அவளின் தோளை வளைத்து லேசாக இறுக்கி, ''அவன் உயிருக்கு ஆபத்தில்லை என்று டாக்டர் சொல்லியாச்சு. இனி அதை பற்றி நினைத்து நீ குழம்ப வேண்டிய அவசியமில்லை. இதை உனக்காக மட்டும் சொல்லலை. உன் வயிற்றில் வளரும் நம் குழந்தையின் நலத்துக்காகவும் சேர்த்துச் சொல்கிறேன். ப்ளீஸ் புரிஞ்சுக்கோ. மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. ரிலாக்ஸ்டா இரு...'' என்று தைரியமூட்டி விட்டு காரை கிளம்பினான்.

ஏற்கனவே மனசு லேசாகி இருக்கையில், அவன் கடைசியாக சொன்ன குழந்தை என்ற வார்த்தை பிரம்மாஸ்திரமாக பாய்ந்து அவளை உற்சாகமாக நிமிர வைத்தது.

''உங்க ஆசையை ஏன் நான் கெடுக்கிறேன்? இனி மேல் நீங்க போதும் என்று சொல்லும் வரைக்கும் பேசுவேன். நீங்களே இவள் எப்படா வாயை மூடுவாள் என்று நினைக்க வச்சுடுவேன். பார்த்துக்கோங்க...'' என்று கேலியாகப் பேசியவளைப் பார்த்து விசில் அடித்தான்.

''வாவ்! இது. இதை தான் எதிர்பார்த்தேன். இப்ப சொல்லு நீ தீபக்கை இதற்கு முன்னால் பார்த்து இருக்கிறாயா?''

''ம்ம், சரண்யா பிறந்த நாள் அன்று பார்த்து இருக்கிறேனே? நான் கல்யாணத்திற்கு வரலை. பார்த்தும் ரொம்ப நாளாச்சு இல்லையா? அதனால் முகம் சரியா ஞாபகம் இல்லை. சரண்யா ரொம்ப பப்ளி காரக்டர் இல்லையா? தீபக் எப்படி?''



''சரண்யா இங்கே இருந்த வரைக்கும் வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டுவாள். இப்போது தீபக்குடன் அதே கதை தொடர்கிறது! அவன் ரொம்ப அமைதி. விட்டு கொடுத்து போகும் சுபாவம். தனியாக அவளின் தாக்குதலை சமாளித்து இரண்டு வருடம் ஓட்டி விட்டானே?'' என்று பெருமையாகச் சொல்ல, அவள் புன்னகை செய்தாள்.

''நாம் இப்போது போற மாதிரி உங்க சித்தி சித்தப்பாவும் வந்தால் அவங்களுக்கு ரொம்ப சந்ததோஷமா இருக்கும் இல்லையா?''

''முன்னாடி அவர் பார்த்த மாப்பிள்ளையைப் பற்றியும் தெரிஞ்சுடுச்சு. சரண்யா இங்கே எப்படி இருக்கிறாள் என்பதும் தெரிஞ்சுடுச்சு. இன்னும் எத்தனை நாள் கோபத்தை இழுத்து பிடித்து வைத்து இருப்பார். சீக்கிரம் மனசு மாறி தான் ஆகணும்...''

''ஏன் மாமாக்கு தீபக் மேலே அவ்வளவு சந்தேகம்! வெறுப்பு? லக்ஷ்மிகாந்தன் பற்றி நான் சொன்னதை அப்படியே ஒத்து கொண்டாங்க தானே? அவர் ஒன்றும் தோண்டித் துருவுவது மாதிரி தெரியலையே?''

''ஒரு விதத்தில் பார்த்தால் சித்தப்பாவின் கோபத்துக்கு நானும் ஒரு காரணம். நான் சொல்லி தான் அவர்கள் பாராமுகம் காட்டினார்கள். தீபக் நம்ம கல்யாணத்தில் ஒளிஞ்சு நின்னு அவளை பல தடவை சைட் அடித்ததை பார்த்தேன். அதனால் முதலில் சரண்யாவின் அழகை

பார்த்து, அவளின் பணத்தை பார்த்து வந்த காதல் என்று அலட்சியமாக நினைத்தேன். இவர்கள் பணம் அவர்களுக்கு கிடையாது என்று புரிந்துவிட்டால், அவனின் காதல் காணாமல் போய் விடும் என்று தப்புக் கணக்குப் போட்டேன். ஆனால் தீபக், 'நான் தனி! என்னுடைய காதல் சத்தியம்! இன்பத்திலும், துன்பத்திலும், இறுதி வரை அவளுடன் இருப்பேன', என்று நிருபித்து விட்டான். சூப்பர் மேன்...'' என்று சிலாகித்தபடி வீடு வந்து சேர்ந்த விக்ரமை வாசலில் எதிர்கொண்டு வரவேற்றாள் சரண்யா.

''வா விக்ரம்! வா தர்ஷினி குழந்தையை பார்க்கலாம்'', என்று அழைத்துச் சென்றாலும், ''இத்தனை நாள் கழித்து தம்பதி சமேதராக வந்த உங்களைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு. எங்க ஞாபகம் வர உனக்கு இரண்டு வருஷம் ஆகி இருக்கா?'' என்று அவன் கன்னத்தில் செல்ல கோபத்துடன் இடிக்கவும் தவறவில்லை சரண்யா.

''அது என்ன தர்ஷினி? அண்ணி என்று சொல்'' என்று அதட்டிய தீபக்கை கண்டு கொள்ளாமல், ஸ்ரீராமின் அருகில் சென்று விக்ரமை காட்டி, ''இது என் அண்ணன், உனக்கு மாமா'' என்று அறிமுகம் படுத்தினாள் சரண்யா.

''ஸ்ரீராம், என்கிட்டே வருவீங்களா?'' என்று விக்ரம் புன்னகையோடு கை நீட்ட, அவளை பார்த்தான் ஸ்ரீராம். ''போடா கண்ணு! மாமாதான்'' என்று சொல்லியபடி அவனை விக்ரமிடம் தந்தாள்.

அடுத்து வந்த பதினைந்து நிமிடங்கள் அன்பான விசாரணையிலும், அக்கறையான உபசரிப்பிலும் கழிந்தது.



''வாங்க தம்பி, வாம்மா...'' என்ற கருணாகரன் - அபிராமி தம்பதியினரின் அக்கறையான அன்பான வரவேற்பு இருந்தது. 'நேற்று நீங்க செய்த உதவியை மறக்கவே முடியாது அங்கிள்' என்ற தர்ஷினியின் உணர்ச்சி பூர்வமான நன்றி அறிவிப்பு இருந்தது.

மதுமதி M.B.A. ஃபைனான்ஸ் முடிக்கப் போகிறாள் என்ற தகவல் அறிந்ததும், ''மது, இங்கே மதுராந்தகம் பக்கத்தில் ஒரு சர்க்கரை ஆலை விலைக்கு வருகிறது. வாங்கலாமா என்று விசாரிக்கத்தான் நான் மதுரையில் இருந்து வந்தேன். நீ பொறுப்பேற்று கொள்கிறாய் என்றால் அதை வாங்குவதை பற்றி தீவிரமாக யோசிக்கலாம். நான் வாரம் ஒரு முறை வந்து கணக்கு வழக்கு பார்க்கிறேன். என்ன சொல்கிறாய்?'' என்று விக்ரம் விசாரிக்க அனைவரும் திகைப்புடன் பார்த்தனர்.

''ஏன் அண்ணா சந்தேகமா கேட்கறீங்க? என்னை நம்பி விட்டு பாருங்க. அஞ்சு வருஷத்துல புரொடக்ஷனை டபிள் ஆக்கி காட்டுகிறேன்'' என்று நம்பிக்கையோடு மதுமதி சொல்ல அவன் புன்னகைத்தான்.

''இந்த நம்பிக்கை இருந்தால் வானத்தையே வளைக்கலாம் மது. ஜெனரல் மேனேஜர் ஃபைனான்ஸ் என்று போஸ்டிங் ஏற்றுக் கொள்ள, ரெடியா இரு...'' என்று உறுதி அளித்தான் விக்ரம்.

''அடேங்கப்பா! படிப்பை முடிக்கும் முன்பே, வீடு தேடி வந்து போஸ்டிங் கொடுக்க ஆள் ரெடியா கைவசம் வெச்சு இருக்காங்கப்பா. மதுமதி பெரிய ஆளுதான்...'' என்று தீபக் சிரிக்க, ''அதுல இன்னுமா உனக்கு சந்தேகம்?'' என்று மது மடக்க, கலகலப்பாக இருந்தது.

''இந்த மாதிரி எல்லோரும் சேர்ந்து பேசி சிரிக்கணும் என்று தான் இத்தனை நாளா ஆசைப்பட்டேன். அப்படியே சரண்யாவோட அம்மாவும் அப்பாவும் வந்துட்டா, இன்னும் மனசுக்கு நிறைவா இருக்கும்...'' என்று அபிராமி, நிறைய சந்தோஷத்தோடும், கொஞ்சம் கவலையோடும் சொல்ல கருணாகரன் பேச்சை மாற்றினார்.

''ஆறு மணிக்கு சிறப்பு பூஜை, வடபழனி கோவிலில் சொல்லி இருக்கு. கிளம்பலாமா? கார் வந்தாச்சு...'' என்று கருணாகரன் எழுந்தார்.

''போ... க... லா... ம். அண்ணி மட்டுமாவது வரேன் என்று நேற்று சொல்லி இருந்தாங்க. இன்னும் காணோம். ஒரு வாட்டி போன் பண்ணி பார்க்கலாமே?'' என்று அபிராமி இன்னும் தயங்க, தீபக்கும் சரண்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

''என்னங்க, சித்தி வராங்களா என்று நீங்களாவது போன் பண்ணி கேளுங்களேன். அவங்க போன் பண்ண யோசிக்கிறாங்க பாருங்க...'' என்று தர்ஷினி விக்ரமை தூண்ட.... அவன் வீட்டு நம்பருக்கு அழைத்தான். மணி அடித்து கொண்டே இருந்தது.

''யாரும் எடுக்கலை. ஒருவேளை சித்தி இங்கே தான் வந்துட்டு இருக்காங்களோ என்னவோ? ஒரு பதினஞ்சு நிமிஷம் பார்க்கலாமா? இங்கே இருந்து வடபழனி, இருபது நிமிஷத்துல போயிடலாமே?'' என்று விக்ரம் சொல்ல எல்லோரும் மீண்டும் அமர்ந்தனர்.

''சரண்யா, ஒரு நிமிஷம் உள்ள வரியா?'' என்று தீபக் கண் ஜாடை காட்ட, ''ப்ளாஸ்க்-ல கொஞ்சம் வெந்நீர் எடுத்து வச்சுடு மது. நேரமாகிட போகுது'' என்று சொல்லி விட்டு அறைக்கு செல்லும் போதே தீபக் என்ன கேட்க கூடும் என்ற யோசனையும் ஓடியது.



''என்ன இந்நேரத்துல உள்ளே கூப்பிட்டு ரகசியம் பேசப் போறீங்க?'' என்று கேட்ட தொனியிலேயே, சின்ன எரிச்சல் இருந்தது.

''நேரில் போக நாளைக்கு கெடு வச்சு இருக்க. நானும் சரி என்று சொல்லிட்டேன். அம்மா சொன்னதை கேட்டாய் இல்லையா?'' என்று இடைவெளி விட்டான்.

''ம்ம்ம்... அதுக்கென்ன?''

''அத்தை வரணும் என்று அம்மா எதிர்பார்க்கிறாங்க...''

''சரி...''

''அத்தை வீட்டில் இல்லை...''

''ம்ம்ம்... அதுக்கு...''

''இப்படி பட்டும் படாமல் ஒரு வார்த்தையில் பேசினால் நான் மேலே எப்படி தொடர்வது சரண்யா?'', என்று சலிப்பாகக் கேட்டான்.

''ப்ச்! நீங்க என்ன சொல்ல வரீங்க என்று எனக்கு புரியாமல் இருக்க நான் முட்டாள் இல்லை தீபக். பட்டுன்னு உடைச்சுச் சொல்லுங்க. சுத்தி வளைக்க வேண்டாம். என்ன நான் போனில் அப்பாவிடம் பேசணுமா?''

''இல்லை... நான் பேசுகிறேன் என்று சொல்ல வந்தேன்...''

''வேண்டாம். நீங்க பேச வேண்டாம். அவர் உங்களிடம் இதுவரை நேரடியாக பேச முயற்சி செய்ததில்லை. உங்க நம்பர் கூட தெரியுமோ தெரியாதோ? அவர் எனக்கு மூன்று முறை பேசி நான் போனை எடுக்கவில்லை என்று அன்றே சண்டை போட்டீங்களே? அதுக்கு இன்று பரிகாரம் பண்ணி விடுகிறேன். மேக்சிமம் மூன்று முறை நான் முயற்சி செய்வேன். அதில் எடுத்தால் பேசு

வேன். எடுக்கவில்லை என்றால் அதுக்கு மேலே என்னை கம்பெல் பண்ணக் கூடாது. ஓகே?''

''டபிள் ஓகே. ஆனால் அதில் இரண்டு திருத்தம். ஒன்று பேசுவேன் மட்டும் போதாது. நல்லபடியா பேசணும். இரண்டாவது, இதுக்கும் நாம் காலையில் போட்ட ஒப்பந்தத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நாளைக்கு காலை அங்கே போகும் ப்ரோக்ராம் அப்படியே தான் இருக்கும்'' என்று அழுத்தம் திருத்தமாக தீபக் சொன்னதும், அவன் முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்தாள்.

''நீங்க அமைதியாம்... மனைவிக்கு விட்டுக் கொடுப்பவராம்.. ரொம்ப நல்லவராம்... ஊரே சொல்லுது. ஆனால் நீங்க என்னை விட ரொம்ப மோசம். பிடிச்ச முயலுக்கு மூன்று கூட இல்ல மூன்றரை கால் என்று சாதிக்கும் அடாவடியான பிடிவாதக்காரன் என்று எனக்குத் தானே தெரியும் ஹூம்!'' என்று தன் முகவாயை தோள் பட்டையில் இடித்துக் கொண்டு என்று சொல்லி விட்டு, முதலாம் மாடியில் இருந்த அந்த வீட்டின் படுக்கை அறையின் பால்கனிக்கு போனாள் சரண்யா.

அப்பா போனை எடுக்க வேண்டும் என்ற பிரார்த்தனை ஒரு பக்கம் நடக்க, எடுத்தால் என்ன பேசுவது என்ற யோசனை ஒரு பக்கம் ஓட, ஒருவேளை எடுக்காமல் விட்டு விட்டால், அதன் பிறகு அந்த மன கஷ்டத்தை வெளிக்காட்டாமல் மறைத்து சாதாரணமாக இன்றைய மிச்ச பொழுதை ஓட்ட வேண்டும் என்ற கவலை ஒரு புறம் தடுக்க, கலவையான உணர்வுகளோடு, தடதடக்கும் நெஞ்சத்தோடு, அப்பாவின் எண்ணை தொலைபேசியில் அழுத்தினாள் சரண்யா.

அவளின் தயக்கத்திற்கும் படபடப்பிற்கும் தேவையே இல்லாமல், முதல் அழைப்பின் முதல் மணி ஓசையி



லேயே, போன் எடுக்கப்பட்டு, ''ஹேய்... குட்டிம்மா... நீயாடா!'' என்ற ராமலிங்கத்தின குரல் காதோரம், கிசுகிசுப்பாக கேட்டது.

# 28

அன்று காலை, ஸ்வீட் சாப்பிடுவதற்கான நாலாவது சந்தோஷச் செய்தியாக, 'இன்று சரண்யாவின் வீட்டிற்கு போவோம்', என்று ராமலிங்கம் உறுதி அளித்த அடுத்த வினாடி உலகின் உச்சியில் இருப்பதாக உணர்ந்தார் இந்திராணி. அந்த சந்தோஷச் செய்தியை மகளிடம் பகிர்ந்து கொள்ள தொலைபேசியை நோக்கி நகர்ந்த மனைவியை இழுத்துப் பிடித்தார்.

''ஹலோ... மேடம்... எக்ஸ்கியூஸ் மீ... இந்தத் தகவலை சரண்யாவிடம் சொல்ல உங்களுக்கு அதிகாரம் இல்லை. இது ரகசியம். அவளின் முகத்தில் இன்று மாலை வரும் சர்ப்ரைஸ் சந்தோஷத்தைப் பார்க்க எனக்கு ஆசையா இருக்கு. அதை கெடுக்காதே'' என்று மனைவியை கட்டுப்படுத்தியவருக்கும், அந்த சந்தோஷச் செய்தியை ஆறு மணி நேரம் ரகசியமாக வைத்து இருப்பது சிரமமாகத் தான் இருந்தது.

காலையில் சீக்கிரமாக தர்ஷினியுடன் கிளம்பிய விக்ரமிடம் கூட எதுவும் கேட்கவில்லை. கல்லூரிக்கு விடுப்பு எடுத்து கொண்டு, மனைவியோடு அடையாரில் இருந்து கிளம்பியவர் பிற்பகல் மூன்று மணி வரை மதிய உணவை மறந்து தன் மகளுக்கு, மருமகனுக்கும், பேரனுக்கு என்று கண்ணில் பட்டதை எல்லாம் வாங்கிக் குவித்தார்.

வீட்டில் இருக்கும்போது போடக்கூடிய சாதாரண உடைகள், வெளியே செல்லும் போது போடக்கூடிய பார்மல் உடைகள், விழா காலத்தில் போடக்கூடிய க்ராண்டான உடைகள், என்று ஜவுளிக்கடையில் அவர் வாங்கிய வேகத்தை பார்த்தே வியப்பின் எல்லைக்கு போன இந்திராணி, அடுத்து அவர் நுழைந்த நகை கடையை பார்த்த போது மயங்கி விழாத குறைதான்.

''நகை வாங்க போறீங்களா? அவங்களையும் கூட்டிட்டு வந்து பிடிச்சதை பார்த்து வாங்கலாமே? நம் ஆசையை அவர்கள் மேல் திணித்ததாக இருக்க வேண்டாமே?'', என்று சொல்லிப் பார்த்தார்.

''அவளுக்கு நகை பிடிக்காது என்று உனக்குத் தெரியாதா? சிம்பிளான தினமும் பயன்படுத்தக் கூடிய சின்ன நகைகள் தான் வாங்கப் போறேன். கல்யாணத்திற்கு என்று நான் ஒன்றுமே வாங்கவில்லை. சும்மா அது வேண்டாம் இது வேண்டாம் என்று அஸ்து போடாமல் வா...'', என்ற ராமலிங்கத்தின் பதில் அவர் புன்னகையை விரிய வைத்தது.

மூன்று பேருக்குமே தினமும் பயன்படுத்தக்கூடிய சின்ன சின்ன நகைகள், வாங்கி முடிக்கும்போதே இரண்டு மணி ஆகி இருக்க அடுத்து ஹோட்டலுக்கு போவார் என்று எதிர்பார்த்த இந்திராணிக்கு மீண்டும் ஏமாற்றமே!

இப்போது அவர் நுழைந்தது மம்மி டாடி என்ற பொம்மை கடை குழந்தைக்கான விளையாட்டு பொருட்கள், உணவு பொருட்கள், மட்டுமில்லாமல், பேரனின் முதல் பிறந்த நாளுக்கு என்று, சுமார் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பிலான கார் ஒன்றையும் முன்பதிவு செய்து,



தன் வங்கி கணக்கில் பணமாக இருந்த சுமார் எட்டு லட்சம் ரூபாயை அரை நாளில் கரைத்தார் ராமலிங்கம்.

அதன் பிறகே அவருக்கு வயிறு என்ற ஒன்று இருந்தது ஞாபகம் வர, மணியை பார்த்தார். நாலை நெருங்கி கொண்டு இருக்க, இனி ஹோட்டலுக்கு போனால் நேரமாகும் என்று சாலையோர கடையில், ஒரு வடை, காபியுடன் தன் மதிய உணவை முடித்ததைப் பார்க்க இந்திராணிக்கு தன் கண்களை நம்பவே முடியவில்லை.

சில சமயத்தில் சரண்யா கேட்டாள் என்று சாலையோர உணவகத்தில் வாங்கி கொடுத்தாலும் அவர் சாப்பிட்டு இன்று வரை அவர் பார்த்ததே இல்லை. புலி பசித்தாலும் புல்லை தின்னாது என்ற கொள்கையில் பிடிவாதமாக இருப்பவர்.

மறுவீடு வந்து இருந்த அன்று, தன் தந்தையின் சகோதரி, ஏதோ சொல்லி விட்டார் என்ற ஒரே காரணத்திற்காக, அப்பா திருமணத்திற்கு போட்ட சங்கிலியை அன்று கழட்டி வைத்தவர், தன் பிறந்த வீட்டு சீதனமாக வந்த எதையுமே இதுவரை விரலால் கூடத் தொட்டதில்லை.

அப்பா தனக்கு கொடுத்த சொத்துக்களை விக்ரமின் அம்மாவிடமே ஒப்படைத்து விட்டார். அவர்கள் அதை சும்மா வாங்கிக் கொள்ள மனம் இல்லாமல் கொடுத்த பணத்தையும் விரலால் தொடவில்லை. அது தன் பெயரிலேயே வங்கி கணக்கில் ஒரு கோடிக்கு மேல் வைப்பு தொகையாக இருக்கிறது. அதன் வட்டி தொகையில் அவ்வப்போது சரண்யாவிற்கு வாங்கி சேர்த்தவை தான் அந்த வைர நகைகள். அதை அவளும் தொட்டு பார்க்கவில்லை. தந்தைக்கு தப்பாமல் பிறந்தவள்.

ஆனால் இன்று, இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் திருமணமான அடுத்த நாள் அவர் கழட்டி வைத்த அந்த சங்கிலியை இன்று எடுத்து அணிந்து கொண்டதை காலையில் பார்த்தார். கல் கரைந்து விட்டதா? கரைத்தது யார்? தீபக்கா? சரண்யாவா?

கார் நிறைய பரிசு பொருட்களுடன், கருணாகரன் குடியிருப்புக்குள் அவர்கள் நுழைந்த போது அவரின் அலைபேசி அடிக்க, அதை எடுத்து பார்த்தவர் 'சரண்யா...' என்று தன்னையும் அறியாமல் சின்ன குழந்தை போல கூவினார்.

அவசரமாக போனை எடுத்து பேசியவரின் 'ஹேய் குட்டிம்மா... நீயாடா'' என்ற குரல் அவருக்கே கேட்கவில்லை. எதிர்முனையில் இருந்த சரண்யாவிற்கு கேட்டு இருக்குமா? அன்று தான் பேசிய போது அவள் எடுக்காத மாதிரி தான் எடுக்கவில்லை, பேசவில்லை என்று தப்பாக நினைத்து கொள்வாளோ என்ற பதட்டம் வந்தது.

''அப்பா... எங்கேப்பா இருக்கீங்க'' என்ற கண்ணீரில் தத்தளித்த உணர்ச்சி பூர்வமான குரல் காதில் கேட்டதும் கண்களில் யாரையும் கேட்காமல் கண்ணீர் நிரம்பியது.

நூறு பேர் வரை இருக்கும் கல்லூரி ஹாலில், ட்ரிக்னாமெட்ரியையும், இன்டக்ரல் மாக்சையும் கணீர் குரலில், கணக்கு பிடிக்காதவர்களுக்கும் புரிய வைக்கும் வகையில் விளக்க உரை ஆற்றும் திறமை வாய்ந்த ஒரு பிரபல பல்கலைக் கழகத்தின் தலைமை பொறுப்பில் இருப்பவர், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மகளிடம் இருந்து வந்த 'அப்பா...' என்ற உணர்வு பூர்வமான ஒற்றை வார்த்தை அழைப்பில் நெகிழ்ந்து போய் பேச்சின்றி திணறிக் கொண்டு இருந்தார்.



''இங்கே தான்... உங்க வீட்டுல தாண்டா இருக்கேன்...'' என்று தடுமாறிய குரலை சீர் செய்து சொல்லு முன்பே, அவரை பார்த்து விட்ட சரண்யா, புயலாக வாசலுக்குப் பறந்து ஓடி வந்து அவரை இறுக அணைத்து கொண்டாள். 'அப்பா...' என்ற ஒற்றை வார்த்தையை தவிர அவள் வேறு எதுவுமே பேசவும் இல்லை.

''சரண்... சரண்... குட்டி... குட்டிம்மா...'' என்ற கொஞ்சல்களுடன் கூடிய வருடல்களும் மட்டுமே அங்கே பல நிமிடங்களுக்கு இருந்தது. வீடு தேடி வந்தவரை கண்டதும், அவளே எதிர்பாராத ஒரு பலவீனமான தருணத்தில், அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிய, சரண்யாவின் கண்ணீர் அவரை நெகிழ வைத்தது. அவர் அதை எதிர்பார்க்கவே இல்லை.

அவரின் தோளில் சாய்ந்து விசும்பி அழும் சரண்யா, ''ஐ ஆம் சாரிடா. நான் உங்க அப்பா தானே? உன்னை விட வயசுல பெரியவன் இல்லையா? உனக்கு இருக்கும் ரோஷம் எனக்கு இருக்காதா?...'' என்று சமாதானப்படுத்தும் ராமலிங்கம், இருவருக்கும் இடையே நிகழ்ந்த அந்த அபூர்வ அன்பு சங்கமத்தில் இடையிட விருப்பம் இல்லாமல், வரவேற்க வந்த அனைவரும் காத்திருந்தனர்.

தன்னை வரவேற்க, கருணாகரன், அபிராமி மட்டுமில்லாமல், விக்ரம் தர்ஷினியும் தீபக்கோடு வந்து விட, சில நிமிடங்கள் கழித்தே தன்னை சமபடுத்தி கொண்டவர், ''ஹேய்! சரண்! என்ன இது? எதற்கு அழுகிறாய்? அதான் அப்பாவே உன்னை தேடி வந்து விட்டேன் இல்லையா? இன்னும் என்ன அழுகை?'' என்று அவள் கண்களை துடைத்து விட்டார்.

''எனக்கு புரிஞ்சுடுச்சு. சரண்யாவுக்கு பெர்த்டே கேக் ஸ்ரீராம் தர மாட்டேன் என்று சொல்லி விட்டானா? அவன்

தராட்டா போறான் விடு. நான் உனக்கு வேற கேக் வாங்கி தரேன்...'' என்று கேலியாக விக்ரம் சொல்ல அங்கே ஒரு பெரிய சிரிப்பலை எழுந்தது.

''அம்மாவிற்கும், பையனுக்கும் சண்டை மூட்டி விட, கிளம்பி வந்துட்டாங்கப்பா நீ இப்படி செய்வாய் என்று சரணுக்கு ஏற்கனவே தெரியும் போல. அதான், இத்தனை நாள் உன்னை வீட்டிற்குள் விடவே கூடாது என்ற உறுதியான முடிவில் இருந்து இருக்கிறாள். நானே, என் தலையில் மண்ணை வாரிப் போட்டு கொண்டேன்'', என்று அலுத்துக் கொள்வது போல பேசி சிரித்தான் தீபக்.

விக்ரமின் கிண்டலிலேயே குறைய ஆரம்பித்த கண்ணீர், தீபக்கின் பேச்சில், முழுமையாய் நின்று, இவன் எப்படி எங்க அண்ணனை குறை சொல்லலாம் என்று, சரண்யாவிற்கு கோபம் வந்து விட்டது.

''வீட்டுக்கு வந்த எங்க அப்பாவை வாசலிலேயே நிற்க வச்சு, வம்பு வளர்த்துட்டு இருக்கீங்க?'' என்று தீபக்கிடம் மிரட்டலாக சொல்லி விட்டு, ''வாங்கப்பா...'' என்று அவரின் கை பற்றி சரண்யா அழைத்த பின்பே ராமலிங்கத்திற்கு தீபக் அங்கே இருப்பது உறைத்தது. அவர் சுதாரித்து பேச ஆரம்பிக்கும் முன்பே அவன் வரவேற்பு வந்து விட்டது.

''வாங்க மாமா, உங்களின் வருகைக்காக இத்தனை நாளா காத்திருந்தோம். இன்னிக்கு நீங்க வந்ததுல... ரொம்ப சந்தோஷம். வாங்க அத்தை...'' என்று வரவேற்ற வனிடம் லேசான தயக்கத்தோடு கை நீட்டினார்.

''என்ன மாமா, வெளி ஆள் மாதிரி கை நீட்டிகிட்டு இருக்கீங்க? இன்னிக்கு என் பையனோட முதல் பிறந்த நாள். பெரியவங்க மனபூர்வமா எங்களை ஆசீர்வாதம்



பண்ணுங்க'' என்று தன் தோளில் இருந்த ஸ்ரீராம்-ஐ இறக்கி அவர் கால்களில் சாஷ்டாங்கமாக விழ, அவனை தொடர்ந்து ஸ்ரீராமும் நமஸ்காரம் செய்து கொண்டான்.

''ஹேய்... நல்லா இருங்க... நல்லா இருங்க... உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது...'' என்று கனி வான குரலில் நிறைந்த மனதுடன் ஆசீர்வாதம் செய்தவர், 'இந்து... எங்கே போய்ட்ட? குழந்தைக்கு வாங்கியதை எடுத்துட்டு வா'' என்று அவசரமாக அழைத்தார்.

வெள்ளை நிற காட்டன் பைஜாமாவில் குட்டி கிருஷ்ண ராக ஜொலித்த குழந்தையின் கழுத்தில் இந்திராணி கொடுத்த தங்க சங்கிலியை போட்டு விட்டவர், அவனின் கன்னத்தை வருட, ''உன்னோட பேர் என்ன கண்ணா?'' என்று உணர்ச்சி பெருக்கில் அவனை தழுவி, தழுதழுத்த குரலில் விசாரித்தார்.

''ஸ்ரீ... ரா... ம்'', என்று மழலையில் சொல்ல, அவர் அவசரமாக சரண்யாவை பார்த்தார். ''மாப்பிள்ளை தான்பா பேர் செலக்ஷன்'' என்று புன்னகையோடு சொல்ல தீபக்கின் புறம் திரும்பினார்.

''ஹையோ! உன்னையா இத்தனை நாள் தள்ளி வைத்து இருந்தேன்?'' என்ற தன்னைத் தானே நொந்து கொள்ளும் ராமலிங்கத்தின் குற்ற உணர்வைப் போக்கும் வகையில் அவரை அணைத்து கொள்ள, அவர் பெருமை யில் பூரித்து போனார்.

''தாத்தா உங்களுக்காக ஸ்வீட் பொம்மை எல்லாம் வாங்கிட்டு வந்தேன்'' என்று பேரனை கொஞ்ச, கண்கள் விரிய கேட்டு கொண்டவன், ''நான் கேக் தரேன்'' என்று பதிலுக்கு கொஞ்சி பேச, 'யாழ் இனிது, குழல் இனிது என்போர் மழலை சொல் கேளாதோர்' என்ற வள்ளுவரின் வாக்கினை உணர்ந்த ராமலிங்கம் உருகிப் போனார்.

''ஆறு மணிக்கு வடபழனி கோவிலில் ஸ்பெஷல் பூஜை இருக்கு. அப்படியே தங்கரதம் இழுக்கிறோம். அங்கே போயிட்டு எட்டு மணிக்கு வந்து விட்டால் அப்புறம் விடிய விடிய கூட பேசிட்டு இருக்கலாம். மணி யாச்சு கிளம்பலாமா?'' என்று அழைப்பு விடுத்தார் கருணா கரன்.

''ஓ, போகலாமே. சரண்யா நீ குழந்தையோட என் காரில் வரியா?'' என்று கேட்டு முடிக்கும் முன்பே, 'தீபக் கோட சேர்ந்து வரேன்பா' என்று முடித்த மகளை பெருமையாக பார்த்தார் ராமலிங்கம்.

ஸ்ரீராமின் பிறந்த நாள் அன்று உறவும், நட்பும், சூழ்ந்து நிற்க, இதுவரை அவர்களுக்கு இடையே இருந்த மன சங்கடங்களை தெய்வ சந்நிதியில் கைவிட்டு, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுவதே அல்லாமல் வேறெதுவும் வேண்டேன் பராபரமே! என்ற வள்ளலாரின் கூற்று படி கலந்து கொண்டது சரண்யா-தீபக் இருவரின் மனதை யும் நெகிழ செய்தது.



## 29

கோவிலில் பூஜை முடித்து, ஹோட்டலில் உண வருந்த செல்லலாம் என்று கருணாகரன் அழைக்க, ராமலிங்கம் மறுத்து பேசினார்.

''இல்லை சம்பந்தி, எல்லோருக்கும் வீட்டில் விருந் திற்கு ஏற்பாடு பண்ணி இருக்கேன். முன்னாடியே சொல் லலை என்று தப்பா நினைத்து கொள்ள வேண்டாம். வெளியில் சாப்பிடும் ஐடியாவில் இருக்கீங்க என்று



இந்து சொன்ன உடனே ஏற்பாடு பண்ணிவிட்டேன். எல் லோரும் அங்கே வந்து சாப்பிடணும்'' என்று அன்பாக வேண்டுகோள் விடுக்க எல்லோர் முகமும் மலர்ந்தது.

''கல்யாணமான அன்று உங்களை சரியா கவனிக்கல. அதை மனசுல வச்சுக்காமல் சரண்யா குழந்தையோடு, அம்மா அப்பாவையும் அழைத்து கொண்டு வரணும்'' என்று தீபக்கின் அருகில் வந்து, தனியாக அழைப்பு விடுக்க, முதலில் சம்பிரதாயமான அழைப்பு என்று எண்ணி தவிர்க்க நினைத்த அபிராமி- கருணாகரன், ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து கொண்டனர்.

இரண்டு ஆண்டுகளாக சிரிப்பு சத்தமின்றி இருந்த அந்த பெரிய பங்களா, எல்லா இடத்திலும் ஒளிர்ந்த கூடுதல் மின்விளக்குகள், கேலி பேச்சுக்கள் சிரிப்புகள், குழந்தையின் கால் கொலுசொலி சிணுங்கல்கள், மழலை பேச்சுக்கள், என்று ஜொலித்தது.

விருந்தினை முடித்து விக்ரமும் தர்ஷினியும் கிளம்பி ''உங்களை பார்த்தால் ரொம்ப சந்தோஷமா இருக்கு. மதுவுக்கு ஜாப் ரெடி. பிரமாதமா வருவா. ரெண்டு பிள்ளைகளையும் அம்சமா வளர்த்து வச்சு இருக்கீங்க. மனமார்ந்த பாராட்டுக்கள்'' என்று கருணாகரன்- அபிராமி தம்பதியினரிடம் வாழ்த்து சொல்லி விடை பெற்றனர்.

''நாலு மணி நேரம் இப்படி பேசி சிரிச்சது சந்தோஷமா இருக்கு சித்தப்பா. நானும் தர்ஷினியும் மதுரைக்கு காலை விமானத்தில் கிளம்பறோம். அவளுக்கு பேக்கிங் இருக்கு. அத்தை வீட்டுக்கு போறோம் சித்தி'' என்று சித்தி சித்தப்பாவிடம் விடை பெற்றனர்.

''வாழ்க்கையில நான் பார்த்து பொறாமைப்பட்ட ஒரே ஆளும் நீதான். பெருமைப்பட்ட ஒரே ஆளும் நீதான்.

ஹேட்ஸ் ஆஃப் மேன்'' என்று தீபக்கிடம் கைகுலுக்கி கட்டி அணைத்தும், ''சரண்யாவை சும்மாவே கையில பிடிக்க முடியாது. அப்பா சப்போர்ட் வேற கிடைச்சுடுச்சு. இனி ஒண்ணும் பண்ண முடியாது தீபக்....'' என்று சரண்யாவை சீண்டி இரண்டு அடி பெற்றும் விடை பெற்றான்.

வண்ண வண்ண கார், பைக் பொம்மைகளுடன், சில ஆடைகளையும் பரிசாக கொடுத்து, ''இப்போதைக்கு இதை வச்சுக்க மருமகனே, சீக்கிரமே ஒரு அழகான பொண்ணு பெற்று தரேன்'' என்று சொல்லி ஸ்ரீராமின் கன்னத்தில் முத்தமிட, ஏற்கனவே இருந்த கலகலப்பான சூழல் மேலும் இனிமை கூடி சந்தோஷ சிரிப்பலை ஓய வெகு நேரமானது.

விக்ரம்-தர்ஷினி விடை பெற்றுச் சென்ற பின்னர், ராமலிங்கம், கருணாகரனின் கை பற்றி, ''பழசை எல்லாம் மனசுல வைச்சுக்காதீங்க சம்பந்தி. உங்களுக்கு உரிய மரியாதை நான் கொடுக்கவில்லை. என் பொண்ணுக்கு மட்டுமின்றி தர்ஷினிக்கு கூட நிறைய ஹெல்ப் பண்ணி இருக்கீங்க. மேன்மக்கள் என்றும் மேன்மக்கள் என்று நீங்க மட்டுமில்லை உங்க பையனும் நிரூபித்து விட்டார். இந்த வீடு இரண்டு வருடங்களுக்கு பிறகு இப்பதான் பேச்சும் சிரிப்புமா இருக்கு. நீங்க எல்லோரும் இங்கேயே இன்னும் ரெண்டு நாள் தங்கி போனால் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்'' என்று வேண்டினார் ராமலிங்கம்.

''நேற்று என்பது முடிந்த கதை. அதை நினைத்தால், நாளை என்ற எதிர்காலத்தைச் சிறப்பாக நடத்து முடியாது என்பது எங்க வீட்டின் பாலிசி. இத்தனை நாளாவது நீங்க வரலை என்ற வருத்தம் இருந்தது. இப்ப அதுவும் தீர்ந்து



விட்டது. அவங்க மூன்று பேரையும் ரெண்டு மூணு நாள் ஆசை தீர வச்சு இருந்து அனுப்புங்க. நாங்க சனி ஞாயிறுல வரோம். என்ன அபி சொல்கிறாய்?'' என்று மனைவியை கேட்க அவரும் ஒப்புதல் கொடுத்தார்.

குழந்தைகள் யாரைப் பார்த்து வளர்கிறார்களோ, அவர்களுடைய குணாதிசயம்தான் படியும். இந்த மாதிரி மனைவியின் அபிப்ராயம் கேட்டு அதன் படி முடிவெடுப்பவரை பார்த்து வளர்ந்ததால் தான் தீபக் விட்டு கொடுக்கத் தயாராக இருக்கிறான். தன்னை பார்த்து வளர்ந்ததால் தான் சரண்யாவுக்கு இத்தனை பிடிவாதம் வந்து இருக்க வேண்டும். இந்திராணி சொன்னதில் தப்பில்லை. அவள் தன்னை மாதிரி தான்.

''ரொம்ப சந்தோஷம், அபிம்மா. நீங்க என் பெண்ணை உங்க பொண்ணு மாதிரி பார்த்துக் கொண்டீங்க என்று இந்திராணி சொல்லி இருக்கிறாள். பெற்ற அம்மாவையே தேவை இல்லை என்று சொல்லும் அளவுக்கு அவளுக்கு நீங்க இருந்து இருக்கீங்க'' என்று நன்றி சொல்ல அவர் புன்னகை செய்தார்.

''என்ன அண்ணா நமக்குள்ளே நன்றி சொல்லிட்டு இருக்கீங்க? கோபதாபம் வரும். அப்பப்போ சண்டை போட்டு, உடனே அதை அட்ஜஸ்ட் பண்ணி போனால் வாழ்க்கை அமோகமா இருக்கும்...'' என்று சொல்ல அவர் ஒப்புதலாகத் தலை அசைத்தார்.

''ஒவ்வொருவரும் வாழ்க்கையில் விடாமல் கடைபிடிக்க வேண்டிய சத்தியமான வார்த்தை அபிம்மா. மது, இந்த வார்த்தையை மிஸ் பண்ணிவிடாதே! குடும்ப வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் பிரமாதமா வரணும்'' என்று தலையை வருடி ஆசீர்வாதம் செய்ய அதை பார்த்த சரண்யாவுக்கே மனம் நெகிழ்ந்தது.

ஸ்ரீராமை பகலில் தூங்க வைத்து இருந்ததாலும், விருந்து நடை பெற்ற நேரத்திலும் ஒரு மணி நேரம் குட்டி தூக்கம் போட்டு இருந்ததாலும், அவன் உற்சாகத்துடன் அந்த பெரிய தோட்டத்தில் இருந்த செடிகளை, பூக்களை, தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்ச பயன்படுத்தும் ரப்பர் குழாயை என்று ஒவ்வொன்றாக தொட்டு பார்த்து ஆராய்ச்சி செய்த படி, தன் மழலை பேச்சில் கேள்விகள் கேட்டு கொண்டு இருந்தான். அவனது பேச்சை ரசித்து சிரிக்கும் இருவரையும். தீபக்கும் சரண்யாவும் ரசித்து கொண்டு இருந்தனர்.

''என்ன தீபக்! உங்களை ஏற்று கொள்வதற்கு முன்பு உங்க பையனை ஏற்று கொண்டார்கள் போல'' என்று சிரிப்போடு கேட்டாள் சரண்யா.

''அதென்ன என் பையன்? உனக்கு அவன் பையன் இல்லையா?''

''அதில் என்ன உங்களுக்கு சந்தேகம்? அவனோட பேரை சொன்னதுமே அப்பா கவிழ்ந்து விட்டார் என்று நினைக்கிறேன்...''

''உங்க அப்பாவிடம் குழந்தைக்கு பேர் வைப்பதை பற்றி சொல்லும் போது பையனுக்கு பேர் நான் முன்னாடியே செலக்ட் பண்ணிட்டேன் என்று சொன்னாய். முதலில் பையன் என்று எப்படித் தெரியும்?''

''பேர் செலக்ட் பண்ணியது நீங்க என்று தானே சொன்னேன். நான் என்று எப்போ சொன்னேன்...?''

''பேச்சை மாற்றாதே, நான் கேட்ட கேள்வி, முதலில் பையன் என்று எப்படித் தெரியும்? ஜோசியமா?'' என்று கேலியாக விசாரித்தான் தீபக்.



''எனக்கு பர்ஸ்ட் உங்களை மாதிரி பையன் வேண்டும் என்ற ஆசை. அது நடந்தது. கடவுள் என்னை இதுவரை எந்த விஷயத்திலும் ஏமாற்றியதே இல்லை. ஒண்ணே ஒண்ணைத் தவிர....'' என்று குறும்பாய் அவனின் புறம்கை காட்டினாள்.

''ஓஹோ! அப்படியா விஷயம்? ஆனால் இப்படி ஒரு கணவன் கிடைத்த பின் எப்படி சரண் ஒரு பையனுக்கு ஆசை பட்டாய். எனக்குப் புரியலியே?'' என்று மேலும் கிண்டினான் தீபக்.

''புருஷன் சரியா அமையலியே? பையன் காம்பன்செட் பண்ணட்டும் என்று செல்லம்'' என்று சிரித்தபடி அவனை வாரினாலும் அவளுடன் சிரிப்பில் இணைந்தான்.

''சரண்யா, குழந்தைக்கு ராத்திரி பால் ஏதாவது கொடுக்கிறாயா? ஹோட்டலில் இருந்து வந்த சாப்பாடு குழந்தை வயிறு நிறைய சாப்பிட்டானோ என்னவோ?'' என்று இந்திராணி மகளை அழைக்க அவள் எழுந்தாள்.

''ஏன்மா, பேர பிள்ளையை கொஞ்சி கொண்டே இருந்ததில் உங்க இரண்டு பேருக்குமே நாங்க ரெண்டு பேர் இருக்கோம் என்பதே மறந்து போச்சு பார்த்தீங்களா?'' என்று கேலியாக சொன்னபடி தீபக்குடன் அவர்கள் இருந்த இடத்தில் வந்து அமர்ந்தாள்.

''அச்சோ அப்படி எல்லாம் இல்லைம்மா. மாப்பிள்ளை தப்பா நினைச்சுக்காதீங்க...'' என்று இடையிட்டார் ராமலிங்கம்.

''மாமா, சும்மா சும்மா மாப்பிள்ளை என்று சொல்ல வேண்டாம். எனக்கு ஒரு மாதிரி இருக்கு. விக்ரமை கூப்பிடுற மாதிரி பேர் சொல்லி வா போ என்றே பேசுங்க...''

என்று சொல்ல, அவன் இருக்கைக்கு வந்து அவனை எழுப்பி அணைத்து கொண்டார்.

''இன்று மாலையில் இருந்து என்னிடம் இதுவரை நேரடியா பேசலை என்பதால், உங்களுக்கு என் மேலே கோபம் இருக்குமோ என்று சந்தேகப் பட்டேன் மாப்பிள்ளை. ஆனால் மறுபடியும் நான் சரியா யோசிக்கலை என்று ப்ரூவ் பண்ணிட்டீங்க....''

''மாமா, ஒரு தப்பை ஒரு தடவை செஞ்சால் பரவாயில்லை. திருப்பித் திருப்பி செய்தால் என்ன தண்டனை கொடுப்பது?'' என்று சீரியசான குரலில் சொன்ன பால் எடுத்து வந்த இந்திராணியும், ராமலிங்கமும் அதிர்ந்தனர். இவன் என்ன சொல்ல வருகிறான்?

''என்னப்பா அப்படி பார்க்கறீங்க? தீபக் சொல்றதே புரியலை இல்லை. பல நேரம் அப்படித்தான் நேரடியா எதையும் சொல்ல மாட்டார். தலையை சுத்தி மூக்கை தொடுவார். அவரை பேர் சொல்லி கூப்பிடு என்று சொன்ன பிறகும் மாப்பிள்ளை என்று தூரத்தில் நிறுத்தி வைக்கறீங்க. அதுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கேட்கிறார். அதான் ஸ்ரீராம் இருக்கானே, அவனை விட்டு கவனிக்க சொல்லலாம் தீபக்'' என்று சரண்யா முடிக்க அங்கே சிரிப்பலை எழுந்தது.

''குழந்தைக்கு ஸ்ரீராம் என்று பேர் வச்சது நீங்க என்று சரண்யா சொன்னாள். நீங்க எப்படி இவர் பேரை....'' என்று அடி மனதில் குறுகுறுத்த கேள்வியை தீபக்கிடம் கேட்டார் இந்திராணி.

''சரண்யா மனசுல என்ன நினைக்கிறாள் என்பதை ஊகிக்க முடியும். அவளுக்கு உங்க அப்பா பேர் வைத்ததா ஏற்கனவே சொல்லி இருக்கா. எங்க வீட்டுல அந்த



மாதிரி சென்டிமென்ட் கிடையாது. மாடர்னாவும் இருக்கணும். மாமா பேரும் வரணும். பெரிசா யோசிக்கலை அத்தை'' என்று விளக்கம் சொல்ல பாதியிலேயே கை காட்டி நிறுத்தினாள் சரண்யா.

''அப்பா, தீபக்கை பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க என்று ரெண்டு வரியில சொல்லணும் என்றால் என்ன சொல்வீங்க? குவிக்...''

''இதென்னம்மா இப்படி திடீர் என்று கேட்டால்...''

''கணித துறையின் தலைவர் இப்படி எல்லாம் யோசிக்கக் கூடாது. சொல்லுங்கப்பா... சீக்கிரம்....''

''குடும்பத்தை நேசிக்கும் பொறுமைசாலி. அமைதியாக இருப்பவர். கோபமே வராது என்று நினைக்கிறேன்...''

''நம்மளை மாதிரி தாம் தூம் என்று கத்திப் பேச மாட்டார் என்று சொல்லுங்க. ஆனால் கோபமே வராது என்று தப்புக் கணக்கு போடாதீங்க'' என்றவள் தீபக்கை பார்த்து கண் சிமிட்டினாள்.

''உனக்கும் உங்க அப்பாவுக்கும் வரும் அளவுக்கு கோபம் இந்த உலகத்தில் யாருக்குமே வராது....'' என்று இந்திராணி இடையிட சரண்யா புன்னகைத்தாள்.

''பேச்சை மாத்தாதீங்கம்மா. அவருக்கு எப்போ கோபம் வந்தது என்று கேட்கணும் நீங்க....'' என்று அம்மாவை அவள் திருத்த இந்திராணியும் ராமலிங்கமும் அவளை வியப்பாகப் பார்த்தனர்.

''என்னப்பா ஏதாவது ஊகம் இருக்கா?''

''அவங்க பெற்றோருக்கும் உனக்கும் ஏதாவது வாக்கு வாதம்....'' என்று ஆரம்பிக்கையிலேயே மறுப்பாக தலை அசைத்தாள்.

''இல்லைப்பா, உங்க போனை நான் அட்டென்ட் பண்ணலை என்று சொன்ன போது தான் என் மேலே கோபப் பட்டு அரை மணி நேரம் பேசாமல் இருந்தார். முன்னாடி அம்மா வந்த போது அவங்களோடு ஏன் சரியா பேசலை என்று கூட அன்று தான் கேட்டார். உங்க மேலே அவருக்கு அவ்வளவு மரியாதைப்பா....'' என்று சரண்யா சொல்லும்போதே அவளின் குரல் தழுதழுத்தது.

''புரியுதும்மா... எல்லாமே ரொம்ப லேட்டா புரியுது....'' என்று சொன்ன ராமலிங்கத்தின் குரலும் கலங்கி இருந்தது.

''அத்தை குழந்தைக்கு மட்டும் என்னென்னவோ பரிசுகள் வாங்கி தந்தீங்க, அவளுக்கு மட்டும் ஒண்ணுமே தரலை என்று அழுகிறாள் பாருங்க. சீக்கிரம் எதையாவது கொடுத்து கண்ணீரை நிறுத்துங்க. இல்லை என்றால் நாம் வெளியே போக அடையாறு ஃபயர் ஸ்டேஷன் போன் பண்ணி படகு எடுத்துட்டு வர சொல்லணும் போல...'' என்று கேலியாகப் பேச்சை மாற்றினான் தீபக்.

தீபக்கோ, சரண்யாவோ நகைக்கு ஆசைப் படுபவர்கள் இல்லை என்பதை இந்த இரண்டு ஆண்டுகளில் நன்றாகவே புரிந்து இருந்தாலும், அவன் சொன்னதற்காக, உள்ளே சென்று தான் அவளுக்கு முன்பே போட்டு அவள் திருப்பி தந்த இரண்டு வளையல்களை எடுத்து வந்தார் இந்திராணி.

''உங்க பொண்ணுக்கு ரோஷம் ஜாஸ்திங்க. உங்களை மாதிரியே தான். வளைகாப்புக்கு பிறந்த வீட்டு சீதனம் என்று இரண்டு வளையலை எடுத்து போனேன். கையில் போட்டு விட்டால் பின்னால் பிரசவம் வரை கழட்டக் கூடாதே என்று தட்டில் வச்சு கொடுத்தேன் பாருங்க.



அந்த வளையலை, அன்னிக்கே, திரும்ப மரியாதை செலுத்துகிறேன் என்று புது பட்டு புடவையோட திருப்பி கொடுத்துட்டா. அதுக்கு ஒரு விளக்கம் வேற. நான் வாசலில் போட்ட கோலத்துக்கு பரிசாம். இதை எடுத்துட்டு போ சரண்யா. இது உனக்காக நான் வாங்கினது....''

''வேண்டாம்மா. இந்த நகை பணம் வேண்டும் என்பதற்காக....''

''வாங்கிக்க சொல்லுங்க மாப்பிள்ளை. நீங்க சொன்னால் கேட்பாள்'' என்று ராமலிங்கம் சொல்ல தீபக்கிற்கு சிரிப்பு வந்தது.

''நீங்க அப்படியா நினைத்து கொண்டே இருக்கீங்க? காதலை சொன்னது முதல், கல்யாணம் பண்ணி கொண்டது உட்பட, அவள் சொன்னதைத்தான் இதுவரை நான் செய்து கொண்டு இருக்கிறேன்'' என்று சொல்லியபடி சரண்யாவை பார்த்து, ''வாங்கிக்க'' என்று சமிக்ஞை செய்தான்.

''அங்கே பாருங்கம்மா! ஓகே சொல்லு என்று என்னிடம் கண் காட்டிவிட்டு வார்த்தைகளை பார்த்தாயா? என்னவோ எல்லாம் நான் சொல்வதை செய்வது மாதிரி. பயங்கரமான ஆளுப்பா. உங்களை....'' என்று தீபக்கை மிரட்ட, மூவருக்கும் சிரிப்பு வந்தது.

''சரண்யா. உங்களுக்கு பணத்தின் மேல் ஆசை இல்லை என்று எங்களுக்கு நல்லாவே தெரியும். இருபத்தி அஞ்சு வருஷ வீராப்பை விட்டுட்டு அப்பவே தாத்தா கொடுத்த செயின் போட்டுட்டார். நீ என்னவோ....'' என்று இந்திராணி சொல்ல, சரண்யாவின் கண்கள் அவசரமாக அப்பாவின் கழுத்தை ஆராய்ந்தது.

''ம்ம்ம், இப்ப முட்டை கண்ணை விரிச்சு பாரு. உங்க வீட்டுக்காரர் எதிரில் இருந்தால் வேறே யார் என்ன செய்

றாங்க என்றே கண்ணில் படாதே'' என்று கேலியாக கேட்க ராமலிங்கம் சிரித்தார்.

''அவளாவது அப்படி இருக்கட்டுமே இந்து...''

''வளைகாப்பில் இவளுக்கு பின்னால் நின்று இவளுக்கு தலை பின்னுகிறேன். என்னை கண்டு கொள்ளாமல், தீபக் பூ கட்டுவதை அப்படி கண்ணை விரிச்சு பார்த்தாள் தெரியுமா? நீங்க அந்தக் காட்சி எல்லாம் மிஸ் பண்ணிட்டீங்க'' என்று இந்திராணி சொல்ல இருவருமே புன்னகைத்தனர்.

''அப்பா! அப்படி கேலியா சிரிக்காதீங்க. நான் ஏன் தீபக் மேலே இவ்வளவு உயிரா இருக்கேன் தெரியுமா?''

'இதென்ன கேள்வி சரண்யா, ஒரு நல்ல மனுஷன் கணவனா கிடைக்கும்போது இப்படி இருப்பதில் என்ன தப்பு? என்று உடனே கேட்டார் ராமலிங்கம்.

''இவர் நல்ல மனுஷன் என்று நீங்க இப்ப உணர்ந்து இருக்கலாம் அப்பா. ஆனால் எனக்கு இரண்டு வருஷம் முன்னாடியே அது தெரியும். நீங்க உங்க பொண்ணு மேலே நிறைய அன்பு வச்சு இருக்கீங்க. நான் இல்லை என்று சொல்லவில்லை. நீங்க இந்தக் காதலை நான் ஏற்று கொள்ளாவிட்டால் நானும் தீபக்கும் என்ன செய்வோம் என்று யோசிக்கலைப்பா....'' ஏதோ சொல்ல முயன்றவரை கை காட்டி நிறுத்தினாள்.

''இப்பவாவது என்னை பேச விடுங்கப்பா. யோசிக்கலை என்று எனக்குத் தெரியும். ஆனால் தீபக், என் மேலே அன்பு வச்சது மட்டுமில்லைப்பா, அந்த அன்பை வெளியே சொல்ல எவ்வளவு யோசித்தார் தெரியுமா....?'' என்று கேட்டவளுக்கு அன்று பீச்சில் நடந்த வாக்குவாதத்தை எண்ணி குரல் தடுமாறியது.



''ஷ்! சாரும்மா.... எதுக்கு இப்ப எல்லாம் முடிஞ்ச பிறகு....'' என்று கை பற்றி அழுத்திய தீபக்கை பார்த்து புன்னகை செய்தாள்.

''இதான்பா தீபக். யார் மனசும் கஷ்டப்படக்கூடாது என்று பார்த்துப் பார்த்து ஒவ்வொரு வார்த்தையும் பேசுவார். என் காதலை நீங்க ஏற்றுக் கொள்ளாமல் நாம் பிரிய நேர்ந்தால், உங்களுக்கு எப்படி இருக்கும் என்று பெற்றோரின் நிலையில் இருந்து யோசித்தார்ப்பா'', என்று சொல்ல மீண்டும் கண்கள் கலங்கி குரல் தடுமாற, தீபக் அவளை தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''அந்த விஷயத்துல தான் அவரோட அன்பு எனக்கு உங்களை விட உசத்தியா தோணுச்சு. இந்த மாதிரி ஒரு கணவன் கிடைத்தால், அவனுக்காக பெற்றோரை மட்டுமில்லை, எதை வேண்டுமானாலும் விட்டுட்டு இவன் பின்னால போகலாம் என்று எனக்குத் தோன்றியது. இப்ப நீங்களும் ஒத்துகொள்வீங்க என்று நம்புகிறேன்'' என்று முடித்த சில வினாடிகள் அங்கே அமைதி நிலவியது.

''உண்மை தான் சரண்யா. நீ செய்தது சரி. என்னை மன்னிச்சுடு தீபக். உங்கள் ரெண்டு பேரையும் புரிஞ்சுக்காமல்'' என்று வருத்தமான குரலில் சொல்லி சரண்யாவை அணைத்துக் கொண்டார்.

''அப்பா நீங்க மன்னிப்பு கேட்கணும் என்பதற்காக நான் இதை சொல்லவில்லை....'' என்று அவரின் கன்னத்தை வருடி விளக்கம் சொல்ல முயன்ற சரண்யாவை தீபக் இடையிட்டான்.

''ஸ்ரீராம் தூங்கி வழியுறான் பாரு. மிச்சம் காலையில் பேசிக்கலாம்'' என்று எழுப்ப எல்லோரும் எழுந்தனர்.

''ஆமாம்மா, காலையில் பேசலாம் லேட் ஆகிடுச்சு. மாப்பிள்ளையை ரூமுக்கு அழைச்சுட்டு போ'' என்று கன்னத்தை வருடினார்.

''ஸ்ரீராம் நைட் உன்னை தேட மாட்டான் என்றால் எங்களோடு படுத்து கொள்ளட்டுமே சரண்யா'' என்று கேட்டார் இந்திராணி.

''தேட மாட்டான்மா. பாதி நாள் அவன் மதுவோடு தான் தூங்குவான். அழைச்சுட்டு போங்க...'' என்று மகனை அனுப்பி விட்டு கணவனோடு தான் அறைக்கு வந்தாள் சரண்யா. கட்டிலில் சரிந்து படுத்த தீபக் தன் வாழ்க்கையில் ரொம்ப நாளைக்குப் பிறகு இன்று சந்தோஷமாக இருப்பதை உணர்ந்தான். மனம் நிறைந்து இருந்தது.

''என்ன தீபக், முகம் எல்லாம் அவ்வளவு சந்தோஷமா இருக்கு? என்ன விசேஷம்?'' என்று கேட்டவளை இழுத்து தன் அருகே படுக்கையில் கிடத்தினான்.

''ஏன் உனக்கு சந்தோஷமா இல்லையா?''

''எனக்கு எப்பவுமே சந்தோஷம் தான்.....'' என்று தோளை குலுக்கி, உதட்டை பிதுக்கி சொல்ல சுழித்த அந்த உதடுகளை செல்லமாக நிமிண்டினான்.

''இரண்டு வீட்டு மகாராணிக்கு என்றும் சந்தோஷம் தான். எனக்கு சின்ன மனக்குறை இருந்தது. அம்மா வீட்டிற்கு வந்த போது அந்த வருத்தம் கொஞ்சம் குறைந்தது. விக்ரம் வந்த போது இன்னும் கொஞ்சம் குறைந்தது. இன்று அப்பா வந்ததில் முற்றிலும் மறைந்து விட்டது.....'' என்று சொன்ன தீபக்கை அணைத்து கொண்டாள்.



''நான் ரெண்டு வீட்டு மகாராணி என்றால் நீங்க தான் இந்த மகாராணியின் மனம் கவர்ந்த மகாராஜா. அப்புறம் என்ன கவலை உங்களுக்கு?'' என்று கேட்டபடி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''என்ன கடைசியில் படுக்க வருவதற்கு முன்பு அப்பாவும் மகளும் ஒரே உருக்கமா இருந்தது. என்ன விஷயம்?'' என்று கேலியாக கேட்டான் தீபக்.

''தன்னுடைய மனைவியை அம்மா அப்பா கொஞ்சுவதை பொறாமையோடு பார்க்கும் ஆள், உலகத்திலேயே நீங்கதான் போல'' என்று சிரிப்போடு தன் கன்னத்தை தடவி கொண்டாள்.

''பொறாமைக்கு காரணம் அது தான். அது கூட தெரியாமல் நீ என்ன பெண்டாட்டி?'' என்று சலித்து முடிக்கும் முன், அவன் முகத்தை பற்றி இரண்டு கன்னத்திலும் மாறி மாறி முத்தமழை பொழிந்தாள்.

''ஹேய் இதென்ன, எனக்கும் கொஞ்சம் சான்ஸ் கொடுக்கிறது?'' என்று காதுகளில் கிசுகிசுத்தவன், அவளின் இதழ்களில் அழுத்தமாக முத்திரை பதித்து விலக, ''என்ன இது'' என்று சிணுங்கினாலும், அவள் ரசித்ததை அந்த சிணுங்கல் சொல்லியது.

''முதலில் பையன் வேண்டும் என்று ஆசை பட்டாய். அதை நிறைவேற்றி வைத்தேனே? எனக்கு என்ன ஆசை என்று கேட்டாயா நீ?'' என்று செல்லம் கொஞ்சியவன் கரங்களும் இதழ்களும் அவளின் தேகத்தில் சுதந்திரமாக விளையாட ஆரம்பித்து இருந்தது.

''நான் நினைப்பது உங்களுக்கு தெரியும் என்று பீற்றி கொண்டீர்களே? அந்த வித்தை உங்களுக்கு மட்டும்

தான் தெரியுமா? நாங்களும் கண்டு பிடிப்போமில்ல?'' என்று கொஞ்சியவளும் அவன் ஆசை வேகத்திற்கு ஈடு கொடுத்தாள்.

''உனக்குத் தெரியுமா? சொல்லு பார்ப்போம்....'' என்று நிமிர்ந்தவனை தன் மேல் சாய்த்தவள், காது மடல்களை வருடியபடி ''அடுத்து ஒரு பொண்ணு வேண்டும். அதானே?'' என்று கிசுகிசுத்தாள்.

''கள்ளி! கரெக்டா சொல்றியே? ஏற்பாடு பண்ணிட லாமா?''

''அந்த குழந்தைக்கு பேர் என்ன என்று நான் முடிவு பண்ணுவேன்...''

''நீ என்ன பேர் வைப்பாய் என்று எனக்குத் தெரியா தாக்கும்?''

''சொல்லுங்க பார்ப்போம்.....'' என்று கேலியாக கேட்ட படி அவனின் இதழ்களை நிமிண்டியவளின் விரலை மென்மையாக வலிக்காமல் கடித்து, ''அபி....'' என்று சொல்ல அவள் மீண்டும் அவனை சேர்த்து அணைத்து கொண்டாள்.

**ஆணும் பெண்ணும் சமம் என்ற அர்த்தநாரீஸ்வரர் தத்துவத்தை செயல்படுத்தும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அடுத்தவர் என்ன நினைக்கக் கூடும் என்பதை ஊகித்து செயல்படுத்தும் கணவன் மனைவியாக இருக்கும் தீபக்-சரண்யாவின் வாழ்க்கை அன்பில் விளைந்த ராகம் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த சங்கீதத்தின் இனிமை அவர்கள் வாழ்வின் எல்லை வரை தொடரும்.**

**இனி எல்லாம் சுகமே!**

★